M.L.A. Debates

Official Report

1965 · March

Vol. 27, No. [illegible]

V211, 31 N65 D

N65 . 27.5

64894

*Issued* 16—6—1965]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

SATURDAY, 13TH MARCH 1965

**VOLUME XXVII—No. 5**

204

*CONTENTS*



| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. | 333-344 |
| II Voting on Demands for Grants for 1965-66—*cont.* | 431-432 |
| Demand No. XII—Police | 344-429 |
| III Papers laid on the table of the House | 430 |



©
GOVERNMENT OF MADRAS
1965

V211,31 N65
N65.27.5
64894

*Legislative Assembly Department*
*Madras*

PRICE 50 *Paise.*]

V211,31 N65
N65. 27-5

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 13th March 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George at half past eight of the clock, Mr. Speaker (The Hon. Sri S. CHELLAPANDIAN in the Chair).

64894

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Police firing in Sathankulam*

* 223 *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Police opened fire in a village near Sathankulam in Tiruchendur taluk during the last week of July 1964 ; and

(*b*) if so, the reasons therefor?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The matter is pending before a Court and is therefore ' subjudice '.

*Loss of lives due to consuming arishtom*

* 224 *Q.*—Sri A. KUNJAN NADAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that three persons including a police constable have lost their lives on account of taking arishtom at Thuckalay ; and

(*b*) the number of persons arrested in connection with the incident ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Six persons including the proprietor of the pharmacy which sold the arishtom, were arrested.

Sri V. KRISHNAMOORTHY : What is the cause of death ? Is it due to mixture of poison or consumption of overdose of arishtom?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The particulars would be revealed in the course of the trial. Evidently there was poison in the arishtom.

**திரு. ஜே. மாதா கவுடர் :** அரிஷ்டம் உட்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி அனுமதித்திருந்தால் அதைக் கொடுக்க வேண்டாமென்று தடை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டாக்டர்கள் கொடுக்கக்கூடிய மருந்துகளில் கூட பாய்ஸன் இருக்கும். அதை எந்த அளவு சாப்பிடுகிறோமோ அந்த அளவைப் பொறுத்து இருக்கும். அளவிற்கு மேல் சாப்பிட்டால் விஷமாக இருக்கும். அரிஷ்டத்தில் வேறு விஷம் இருக்கிறதா என்பது அப்போதைக்கப்போது பரிசீலிக்கப்படும்.

## *Starting of Engineering College at Salem*

* 225 *Q*.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) with reterence to the answer given to question No. 121 on 2—3—1964, whether the proposed Engineering College at Salem will be started in the academic year 1965–66 ; and

(*b*) the number of students likely to be admitted in the proposed College ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) 120.

**திரு. ஜே. மாதா கவுடர் :** சேலத்தில் பொறியியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட பிறகாவது பிற்பட்ட மாவட்டமாகிய நீலகிரி மாவட்டத்திற்கு அதிகமாக மாணவர்களை ஒதுக்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஜில்லாவாரியாக எத்தனை மாணவர்கள் இருக்க வேண்டுமென்று ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போல் நீலகிரி ஜில்லாவிற்கும் இவ்வளவு மாணவர்கள் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. துரையரசன் :** தஞ்சையில் பொறியியல் கல்லூரி எப்பொழுது துவக்கப்படும் என்பதை அறியலாமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே யோசிக்கப்படும்.

## ஸ்கூட்டரில் இரண்டுபேர் செல்லுதல்

* 226 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

சென்னை மாநகரில் ஸ்கூட்டரில் இரண்டு பேர் உட்கார்ந்து செல்லத் தடை விதிக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சென்னை நகரத்தில் ஸ்கூட்டரில் செல்கிறவர்கள் சில சமயத்தில் கணவனுக்குப் பின்னால் மனைவி உட்கார்ந்துகொண்டும், சில சமயத்தில் மனைவியை ஓட்டச் சொல்லி கணவன் பின்னால் உட்கார்ந்துகொண்டு, குழந்தையையும் வைத்துக்கொண்டும் செல்வதனால் ட்ராபிக் கன்ஜஷன் ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தினால் ஸ்கூட்டரில் இருவர் போகக் கூடாது, ஒருவர் மட்டும்தான் செல்ல வேண்டும் என்று அரசாங்கம் தடை விதிக்குமா ? (சிரிப்பு).

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஸ்கூட்டரில் இரண்டு பேர்கள் ஏறிச் செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி ட்ரைவிங் சீட்டும், பிலியன் சீட்டும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இரண்டு பேர்கள் போவதில் தவறில்லை.





**திரு. க. ர. நல்லசிவம் :** ஸ்கூட்டர்களில் அநேகமாகப் பின் சீட்டில் பெண்கள் உட்கார்ந்துகொண்டு போகிறார்கள். அவர்கள் இரண்டு பக்கமும் காலை வைத்துக்கொண்டு போனால் ஆபத்திருக்காது. ஆனால், பின்னால் ஒரு பக்கத்திலேயே இரண்டு கால்களையும் வைத்துக்கொண்டு, அதை ஒரு பேஷனாக நினைத்துக்கொண்டு போகிறார்கள். அதனால்தான் இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன என்ற காரணத்தால் இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? (சிரிப்பு).

204

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த விதமான ஆராய்ச்சி ட்ராபிக் டிபார்ட்மெண்டில் செய்யப்படவில்லை. அந்த மாதிரி ஏதாவது விபத்துக்கள் ஏதாவது வந்திருக்கிறதா என்று பார்த்தால் அந்த மாதிரித் தகவல் ஒன்றும் சர்க்காருக்கு வரவில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஸ்கூட்டர்களால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை அரசாங்கம் கண்டுபிடித்திருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சாதாரணமாக ஸ்கூட்டரில் விபத்து ஏற்படுவதற்குத் திடீர்திடீரென்று அவர்கள் திருப்புவதுதான் காரணம். அந்த ஸ்கூட்டரில் அப்படித் திருப்புவதற்கும் வசதி இருக்கிறது. போய்க்கொண்டிருக்கும்பொழுது சிக்னல் காட்டிவிட்டுத் திரும்ப வேண்டும். அப்படிச் செய்யாமல் திடீர் திடீரென்று திரும்புவதால்தான் இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன. கார் என்று சொன்னால் திரும்பும்போது சிக்னல் கொடுக்கிறார்கள். ஆனால் ஸ்கூட்டர் திடீர் திடீர் என்று திரும்புகிறது. ஆகவே, சிக்னல் கொடுத்துத் திரும்பினால் விபத்துகளைத் தவிர்க்க முடியும் என்று நினைக்கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இந்த ஸ்கூட்டர்களில் உட்கார்ந்துகொண்டு போகிற பெண்கள் சாரி கட்டிக்கொண்டு போவதால் சக்கரத்தில் சிக்கி விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகையால் ஸ்கூட்டரில் போகக்கூடிய பெண்கள் சாரிக்குப் பதிலாக பாண்ட் போட்டுக்கொண்டு போனால்தான் ஸ்கூட்டரில் போக அனுமதிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவிக்குமா ? (சிரிப்பு).

**கனம் சபாநாயகர் :** அது அவர்களுடைய பண்டமண்டல் ரைட்.

(பதில் இல்லை.)

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஸ்கூட்டரில் விபத்துக்கள் ஏற்படுவது பற்றிப் போலீஸ் இலாகா ஆராய்ந்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அதைப் பற்றிய அப்ஜக்ஷன் அரசாங்கத்திற்கு அனுப்பி இருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது விபத்துக்கள் நடக்கிற போதெல்லாம் விசாரணை நடக்கிறது. அந்த அனுபவத்தை எல்லாம் தொகுத்து வைத்துக்கொள்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு எந்த விதமான டிராபிக் ரெகுலேஷன் செய்ய வேண்டுமோ அதைச் செய்து வருகிறார்கள். இந்த மாதிரி விபத்துக்கள் சைக்கிள்களிலும் ஏற்படுகிறது. ஏனென்றால் சைக்கிள்களும் திடீர் திடீர் என்று திரும்ப முடியும். உதாரணமாகத் திடீரென்று திரும்புகிற ரிக்ஷாக்களிலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்கூட்டர்களில் திடீர் திடீர் என்று திரும்புவதற்கான வசதிகள் இருப்பதால்தான் இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று தெரிவதால் இந்தத் திருப்புவதற்கான அளவைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது மெக்கானிக்கலாக முடியாது. ஒரு வழி டிராபிக்கில் காலம் கொடுத்துத் திரும்ப வேண்டும். பின்னால் வரும் வண்டிகளுக்கு சிக்னல் கொடுக்கும் மூலமாகத்தான் விபத்துக்களைத் தவிர்க்க முடியும்.

[13th March 1965

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சாதாரணமாக சைக்கிள்களில் காரியர் இருக்கிறது. அதைத் தடை செய்திருக்கிறார்கள். அதே போல் ஸ்கூட்டரில் பின்னால் சீட் இருக்கிறது. ஆனால் இதில் பெண்களும், குழந்தைகளும் உட்கார்ந்துகொண்டு போகிற காரணத்தினால், விபத்துக்கள் ஏற்படுகிற காரணத்தினால், ஒருவர் மட்டுந்தான் உட்கார்ந்து செல்லலாம் என்று ரூலை அமெண்ட் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சைக்கிள்களில் காரியர் இருப்பது கூட்சை ஏற்றிச் செல்வதற்காகத்தான். ஆனால் ஸ்கூட்டரில் பின்னால் உட்கார்ந்து போகக்கூடிய வசதி செய்யப்பட்டிருக்கிறது. இதில் ஒருவர் மட்டும் போக வேண்டுமென்று சொன்னால் பல கஷ்டங்கள் ஏற்படும். இதனால் பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் என்ற காரணத்தினால் இதை மாற்றாமல் இருக்கிறோம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இப்போது ஸ்கூட்டரில் பின்னால் பெண்களை உட்கார வைத்துக்கொண்டும், குழந்தைகளை நிற்க வைத்துக்கொண்டும் போகிறார்கள். இம்மாதிரி குழந்தைகளை ஏற்றிக் கொண்டு போகாமல் இருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அப்படித்தான் விதிகள் இருக்கின்றன. இரண்டு பேருக்கு மேல் யாரையும் ஏற்றிக்கொண்டு போகக் கூடாது.

### *Licences for sugar and cement mills during 1963–64*

* 227 *Q*.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to grant licences for sugar and cement mills in co-operative sector during the year 1963–64 ?

THE HON. SRI R. VENKATARAMAN : There is no proposal to establish a cement factory in the State on co-operative basis. During 1963–64 this Government requested the Government of India to grant licences for the establishment of 3 new co-operative sugar mills in the Thanjavur, Tirunelveli and Ramanathapuram districts.

**திரு. க. ர. நல்லசிவம் :** இந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைப்பதற்கு வேறு ஜில்லாக்களிலிருந்து விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா ? அப்படியிருந்தால் அவைகள் பரிசீலனையில் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவ்வாறு வேறு ஜில்லாக்களில் இருந்து விண்ணப்பங்கள் வரவில்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** சர்க்காரின் தேவைக்கு வேண்டிய சிமெண்ட் உற்பத்தி செய்வதற்கு சர்க்காரே ஒரு தொழிற்சாலையை அமைக்கலாம் என்று முன்பு சொல்லப்பட்டது. அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்கான டெண்டர் எல்லாம் இப்போது நாம் தயாரித்துக்கொண்டு இருக்கிறோம். இதைச் சர்க்கார் துறையில் நடத்தப் போகிறார்கள்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, is there any proposal to start a co-operative cement factory in North Chingleput district ?



13th March 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : There is no such proposal.

**திரு. ஜே. மாதா கவுடர் :** சர்க்கார் துறையிலே ஆரம்பிக்கப்படும் சிமெண்ட் தொழிற்சாலை எந்த மாவட்டத்தில் துவக்கப்படும் என்பது பரிசீலனை செய்யப்பட்டதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இராமநாதபுரம் மாவட்டத்திலே.

### *Housing Units in district centres*

* 228 *Q*.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the district centres in which the Madras Housing Board has opened its housing units?

THE HON. SRI R. VENKATARAMAN : Housing Units have been established at Madras, Madurai, Coimbatore and Tiruchirappalli.

**திரு. இராம. அரங்கண்ணல்:** ஸ்லம் க்ளியரன்ஸுக்காகத் தனியாக ஒரு போர்டு அமைக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சும்மா போர்டு வைக்கிறதினால் காரியம் நடக்கிறது இல்லை. தனித்தனியாக ஒரு போர்டு இருந்தால் அதிகமாக அட்மினிஸ்ட்ரேடிவ் எக்ஸ்பெண்டிசர் ஆகிறதே தவிர வேலைகள் துரிதமாக நடப்பதில்லை. புதிதாக இதற்குத் தனியாக போர்டு அமைக்கிற உத்தேசம் இல்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அப்படியானால் இப்போது இருக்கிற ஹௌசிங் போர்டை எடுத்துவிட்டு, அதைத் தொழில் அமைச்சர் இலாகாவோடு சேர்த்துவிடச் சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, சட்டசபையிலே இதற்கு முன்பு நடந்த விவாதத்திலே ஹௌசிங்குக்கு என்று தனியாக ஒரு போர்டு இருந்தால் நலம், அந்த போர்டு ஆடானமஸ் ஆக இருக்க வேண்டும், சர்க்கார் ரெட் டேப் இல்லாத முறையில் நடக்க வேண்டும், அப்போதுதான் அதிகமாக, துரிதமாக வேலைகள் நடக்க முடியும் என்று பெருவாரியான அபிப்பிராயம் சொல்லப்பட்டது. அதை ஒட்டித்தான் போர்டு அமைத்தோம். இப்போது போர்டு வேண்டாம், சர்க்கார் இலாகாவோடு சேர்த்துவிடலாம் என்றால், அதற்கு வேண்டிய ஆதரவு இருக்கிறதா என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதிக்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு ஒதுக்க எண்ணி இருக்கிறது என்பதை அறியலாமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இன்னும் கணக்கு பைனலைஸ் ஆகவில்லை. ஆனபிறகு கொடுக்கலாம்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** இத்தகைய யூனிட் ஒன்றைச் சேலத்தில் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா ? இனியாவது அதை ஆரம்பிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கோயம்புத்தூரில் இருக்கிற யூனிட் சேலத்தையும் சேர்த்துத்தான் வேலை செய்யும். தனித்தனியாக ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு யூனிட் அவசியம் இல்லை. மூன்று அல்லது நாலு ஜில்லாக்களுக்கு ஒரு யூனிட் என்று வைத்து இருக்கிறோம். மதுரையில் இருக்கிற யூனிட் ராமனாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி

[13th March 1965

ஜில்லாக்களேயும் கவனித்துக்கொள்ளும். இது போல கோயம்புத்தூர் யூனிட் சேலம், நீலகிரி ஜில்லாக்களில் நடக்கிற வேலைகளைச் சேர்த்துப் பார்த்துக் கொள்ளும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்த போர்டுக்கு அதிகாரப்பற்றற்ற உறுப்பினர்களை நியமனம் செய்கிற நேரத்தில் அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற கொள்கை என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்கெல்லாம் சட்டத்திலே ஷரத்துக்கள் இருக்கின்றன. அதைப் பொறுத்துத்தான் நாலு உத்தியோகப் பற்றற்றவர்கள் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அதே மாதிரி நாலு பேர்களைப் போட்டிருக்கிறோம்.

### ஆரணித் தாலுகாவில் இரண்டாவது நூற்பு ஆலே

*** 229 கேள்வி.—திரு. சி. கோதண்டராமபாகவதர் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

வடஆற்காடு ஜில்லா ஆரணித் தாலுகாவில் தனியார் துறையில் இரண்டாவது நூற்பு ஆலே ஒன்று அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இல்லே.

**திரு. கே. பி. பழனி :** மாயூரத்தில் கூட்டுறவு நூற்பு ஆலே எப்போது வேலே துவங்கும் என்று அமைச்சர் அறிவிப்பாரா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** 1965-ஆம் வருஷத்திற்குள்ளாக நூற்க ஆரம்பித்துவிடும்.

### மாநிலத்தில் காய்கறி உற்பத்தியை அதிகரித்தல்

*** 230 கேள்வி.—திரு. மு. கருணாநிதி:** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா :

(அ) காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் ஏதேனும் தமிழக அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அந்தத் திட்டத்தின் விவரமென்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) & (இ) இது குறித்துச் சபை முன் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

(*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

**திரு. க. ர. நல்லசிவம் :** இந்தத் திட்டத்தின்கீழ் எத்தனே ஏகர் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்று சர்க்காருக்குத் தகவல் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : Area brought under improved methods is as follows :—

1963–64—16,536 acres. 1964–65 (up to Novermber 1964)—9,567.72 acres.

New area brought under vegetables is as follows :—

**1963–64—4,874 acres. 1964–65 (up to November 1964)—3,458.28 acres.**

இந்தத் தகவல் மட்டும்தான் இப்போது சொல்லமுடியும்.

---

[a] 431–432-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



13th March 1965]

**திரு. இராம. அரங்கண்ணல் :** அடையாறில் உள்ள நம் அமைச்சர் மாளிகைகளிலே காய்கறிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்த மாளிகைகளிலே மரங்களும், புதர்களும் அதிகமாக இருக்கிற காரணத்தால், பாம்பு போன்ற கொடிய ஜந்துக்கள் உலவி வருகின்றதாகக் கேள்விப்பட்டேன். அப்படி இருக்காத முறையில் புதர்கள், மரங்களே நீக்கி விட்டு உற்பத்தி செய்தால், காய்கறி விளைச்சல் நன்ருக இருக்காதா ? அப்படிச் செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பாம்புதான் சபாநாயகர் தோட்டப் பகுதியிலிருந்து என் தோட்டத்திற்கும், என் தோட்டத்திலிருந்து சபாநாயகர் தோட்டத்திற்கும் முன்பு வந்து போய்க்கொண்டிருந்தன. காய்கறி அபிவிருத்தியை நல்ல முறையிலே செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்னே நகரத்திலே தேவைக்கு வேண்டிய காய்கறிகளேப் பெருக்குகிற வகையிலே, கழிவு நீரைப் பயன்படுத்தி, அதிகமாகக் காய்கறி உற்பத்தி செய்யச் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறதா ? அப்படி இல்லே என்ருல் திட்டமிடுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கழிவு நீரைப் பொறுத்தவரையில் கனம் நகராட்சி மந்திரி அவர்களுக்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்ல முடியும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ப்ளேன்விலே உற்பத்தி செய்கிற காய்கறி, புடலங்காய், கத்தரிக்காய் போன்ற காய்கறிகளில் எந்த விதமான வைட்டமின் சத்துக்களும் கிடையாது. இதைக் காட்டிலும் நீலகிரியில் சத்துள்ள உருளேக்கிழங்கு அதிகமாக விளேகிறது. அதை விஸ்தரிப்பதற்கு என்ன ஏற்பாடுகள் அரசாங்கம் செய்திருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நீலகிரியில் காய்கறி உற்பத்தி செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. என்ன ஏற்பாடுகள் என்பதைப் பற்றி முழு விவரம் வேண்டுமென்ருல் தனிக் கேள்வி வேண்டும்.

**கனம் சபாநாயகர் :** கத்தரிக்காயில் சத்து இல்லே என்பதைக் கனம் அங்கத்தினர் தக்ஷிணமூர்த்தி கவுண்டர் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் !

**திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் :** சட்ட மன்றத் தலேவர் அவர்களே, நீலகிரியில் உண்டாகுகிற உருளேக்கிழங்கு வாயுப் பண்டமாக இருக்கிறது. ஆனல் நம்முடைய நிலப்பரப்பிலே விளேயக்கூடிய காய்கறிகளிலே சத்து இருக்கத்தான் இருக்கிறது. ஆகவே கத்தரிக்காய் போன்ற காய்கறிகளே அதிகமாகத் தயாரிப்பதற்கு அரசாங்கம் தக்க ஏற்பாடுகள் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** தோட்டங்களில் பூமிக்குக் கீழே கிழங்கு வகைகளேயும், பூமிக்கு மேலே காய்கறிகளேயும் நாம் பெறுகிருேம். பூமிக்குக் கீழே உற்பத்தி செய்யும் உருளேக் கிழங்கை கொஞ்சம் சாப்பிட்டால் வாயு இல்லே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** காய்கறி உற்பத்திக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 120 கடன் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. இதுவரையில் எவ்வளவு ரூபாய் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடம் இல்லே. 120 ரூ. அரசாங்கம் கடன் கொடுக்க முன்வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதரச் சலுகைகள், பூச்சி மருந்துகள் கொடுத்தல், உரம் கொடுத்தல் முதலிய சலுகைகள் இருக்கின்றன.

**திரு. அ. ராகவ ரெட்டி :** சார், சென்னேக்குத் தினந்தோறும் வரும் காய்கறிகள், பஸ்களில், லாரிகளில் வரும்போது, ஸேல்ஸ்டாக்ஸ் அதிகாரிகள் அவைகளே நிறுத்தி சோதனே போட்டு விவசாயிகளே வரி செலுத்த வேண்டும் என்று தொந்தரவு செய்கிருர்கள்.

விவசாயிகளைக் காய்கறிகள் உற்பத்தி செய்வதில் உற்சாகப்படுத்தும் வகையில், அவர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகளைச் சென்னையில் கொண்டு வந்து விற்பனை செய்ய சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** சென்னையைச் சுற்றி 30 மைல் அளவுக்குக் காய்கறி உற்பத்தி செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டு அதன்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், காய்கறிகளைக் கொண்டு வரும் போது எந்த விதக் காரணத்திற்காகவும், அவர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது. ஆனால் காய்கறி என்று வேறு பொருள்களைக் கொண்டு வருகிறார்களோ என்று சோதனை செய்கிறார்களோ என்னவோ.

**திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வரக் கவுண்டர் :** சார், சென்னைக்கு வரும் நாலில் ஒரு பங்குக் காய்கறிகள் மேட்டூர் சாகரத்திலிருந்து வருகிறது. ஆகவே, மேட்டூர் சாகரத்திலிருக்கும் விவசாயிகள் அந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில், அந்தப் பகுதியை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** முதலிலே பரீட்சார்த்தமாக சென்னையில் திட்டம் அமுலாக்கப்படுகிறது. அதன் பிறகு அந்தத் திட்டத்தை கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களில் விஸ்தரிக்கப் போகிறோம். பிற்பாடு, தஞ்சாவூர், கும்பகோணம் முதலிய இடங்களில் விஸ்தரிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. மேட்டூர் பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பற்றித் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலுள்ள மாளிகைகள் பக்கத்திலே வெற்றிடங்கள் இருக்கின்றன. அந்த இடங்களிலே காய்கறிகள் விளைவிக்க வாய்ப்புகளும், வசதிகளும் இருப்பதால், அதை ஊக்குவிக்க உதவி அளிப்பதன் மூலம் காய்கறிகளை விளைவிக்கத் திட்டம் இருக்கிறதா, இல்லையென்றால், திட்டம் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** திட்டம் உண்டு. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் ஒரு அட்வைசரி குழுக்கூட, தோட்டம் அதிகமாக உள்ளவர்களைக்கொண்டு சேர்த்து ஏற்பாடு செய்திருக்கிறோம். பாதி விலையில் பூச்சி, புழு மருந்துகளும் விதைகளும் கொடுக்கப்படுகின்றன. உரம் வாங்கக் கடன் உதவியும் கொடுக்கப்படுகிறது.

**திரு. சி. பொன்னுசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, காய்கறிகளை அமைச்சர் அவர்கள் தங்கள் தங்கள் தோட்டங்களில் விவசாயம் செய்வதாகச் சொன்னார்கள். அவர்களுடைய அனுபவம் என்ன என்பதைச் சொல்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** தோட்டங்கள் நன்றாக இருக்கின்றன. போட்டிபோடும் அளவுக்குக்கூட நல்ல முறையில் வைத்திருக்கிறார்கள் என்று தெரிவிக்கிறேன்.

**திரு. ஆ. துரையரசன் :** தலைவர் அவர்களே, அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, ஆலங்குடிப் பகுதிகளில், கிட்டத்தட்ட 80 சத விகிதம் நிலங்களில் புஞ்சை தானியங்கள் விளைவிக்கப்படுகின்றன. அதாவது, சத்துள்ள காய்கறிகள், விவசாயம் செய்யும் ஒரு தனிச் சமுதாயமே இருக்கிறது. அவர்களுக்கு உதவி செய்ய என்று ஒரு தனித் திட்டம் வகுத்து அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க உத்தேசமுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** நான்காவது திட்டத்தில் தஞ்சாவூர், கும்பகோணம முதலிய இடங்களுக்கு விஸ்தரிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மதிப்பிற்குரிய அங்கத்தினர் சொல்வதைப் பற்றி அந்தச் சமயத்தில் சிந்திப்பார்கள் என்று நினைக்கிறேன்.





**திரு. வி. எஸ். எஸ். மணி :** சார், கீரையில், அதிகமாக அய சத்து இருக்கிறது. கீரை வகைகளை அதிகப்படுத்த ஏதாவது திட்டம் உண்டா ? எந்த எந்தக் கீரையில் அதிகமான சத்து இருக்கிறது என்று கண்டுபிடிக்க ஆராய்ச்சி பண்ணி, அந்த வகைக் கீரையை அதிகமாகப் பயிரிடத் திட்டம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கீரையில் பல வகை உண்டு. விதைகள் கொடுத்து உற்பத்தி செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. எந்த வகைக் கீரையில் அதிகமான சத்து இருக்கிறது என்பதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கப்படும்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, கோவையில் உள்ள திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் காய்கறிச் செடிகளுக்கு ஊசி மூலம் மருந்து உள்ளே செலுத்தி நல்ல பலனை அடைந்திருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அதை மக்களுக்குப் பரப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அவர்களுடைய ஆலோசனையைக் கேட்க வேண்டியதில்லை. மத்திய சர்க்காரே சிறந்த ஆலோசனைகள் கொடுக்கிறார்கள். அதுவே போதும்.

**திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் :** சார், காய்கறிகள், உற்பத்தியில், திண்டுக்கல் வட்டாரத்தில் தமிழ்நாட்டில் சத்துள்ள காய்கறிகளான, கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய் முதலியவைகள் விளைகின்றன. அவைகளுக்கு என்று தனி ஸ்கீம் போட சர்க்கார் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** தனி ஸ்கீம் போடுவதற்கில்லை. மதுரை டவுனை ஒட்டி 30 மைல் சுற்றளவுக்கு உற்பத்தியைப் பெருக்கத் திட்டம் இருக்கிறது. காலப் போக்கில் விஸ்தரிக்கும்போது, ஓரளவுக்கு திண்டுக்கல் வட்டாரமும் சேர்க்கப்படலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, காய்கறிகளைப் பார்த்து அதற்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லை, வேறு பொருள்கள் இருந்தால் தடுப்பார்கள் என்று சொன்னார்கள். சென்னை நகரத்திற்கு வரும் கத்தரிக்காய், வெண்டக்காய், போன்ற காய்கறிகளுக்கு சேல்ஸ் டாக்ஸ் வழியில் அங்கே அங்கே பிடித்து வாங்குகிறார்கள். அதைத் தடுத்து விவசாயிகளுக்கு உதவியாக ஏதாவது ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** சேல்ஸ் டாக்ஸ் பொறுத்தமட்டில் என் சகா கனம் தொழில் அமைச்சருக்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுவார்கள். விவசாயிகள் காய்கறி உற்பத்தி செய்து கொண்டு வரும்போது எந்தவிதமான இடையூறும் இருக்காது என்று தெரிவிக்கிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, காய்கறி உற்பத்திக்காக இரண்டு திட்டங்களை டெல்லிக்கு அனுப்பியிருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறதே. காய்கறிக்குக்கூட டெல்லிக்குப் போக வேண்டுமா அதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** "கிராஷ் ப்ரோக்ராம்" அடிப்படையில் அவர்கள் பணம் கொடுக்கிறார்கள். ஆகவே, அவர்கள் திட்டத்தைக் கேட்கிறார்கள். அதற்காக அனுப்பி இருக்கிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, டவுனைச் சுற்றி 30 மைலுக்கு உற்பத்தித் திட்டம் இருக்கிறது. காலப்போக்கில் மற்ற இடங்களுக்குப்

[13th March 1965

திரு. இராம. அரங்கண்ணல் : தமிழகப் போலீசாருடைய உடைகளை மாற்றியமைக்கின்ற உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது அவ்வித உத்தேசம் ஒன்றும் இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : போலீஸ் அதிகாரிகளுடைய ஷோல்டரில் ஒரு ரிப்பன் போடப்பட்டிருக்கிறது. அதிலே கறுப்பு-சிவப்பு வண்ணம் தீட்டப்பட்டிருக்கிறது. அது எதைக் குறிக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர்கள் எதைக் குறிப்பதாக வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். அவர்கள் வைத்துக்கொள்வதிலே நமக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, போலீசார்கள் தங்களுடைய பணியில் ஈடுபடும்போது, ஓடும்போது, குல்லாய் பயன்படுவதில்லை. அது அவர்களுக்கு இடையூறாக இருக்கும் என்ற கருத்தைப் போலீஸ் இலாகா நம்முடைய அரசாங்கத்திற்கு வலியுறுத்தியதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் அவர்கள் கஷ்டங்களைத் தெரிவிக்கவில்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, போலீசார் அணியும்படியான குல்லாயை மாற்றவேண்டும் என்ற எண்ணம் ஏன் ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். கறுப்பு-சிவப்பு எதைக் குறிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவும் விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மிரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பயம் என்பது போல, சில பேருக்கு கறுப்பு என்றால் ஒரு எண்ணம். கறுப்பு என்பதும் ஒரு நிறம் என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. இதைவிடச் சௌகரியமாக வேறொரு உடையை மாற்றலாமா என்று சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. ஆகையால், இது ஆராயப்பட்டது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஓடும்போது குல்லாய் விழுந்துவிடுகிறது. ஆக, இந்தக் குல்லாய் போலீசாருக்குச் சிரமமாகத்தான் இருக்கிறது. அதைப்பற்றி அமைச்சர்களுக்கும் நன்றாகத் தெரியும். அதனால் கார்டுகள், ஸ்டேஷன்-மாஸ்டர்கள் போட்டுக்கொள்கிறார்களே, அவை போல வளைவான தொப்பிகளாக இவர்களுக்கும் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே கூறினேன். இதை மாற்றுவதாக இப்பொழுது உத்தேசம் இல்லை.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, போலீஸ் இலாகா தன்னுடைய கருத்துக்களை அரசாங்கத்திற்குத் தெரிவித்ததா ? அந்தக் கருத்து அரசாங்கத்தால் பரிசீலிக்கப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதையெல்லாம் ஆராய்ந்துதான் அரசாங்கம் ஒரு முடிவு செய்தது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1965-66—*cont.*

### DEMAND NO. XII—POLICE.

MR. SPEAKER : Let us take up Demand No. XII.

திரு. செ. மாதவன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார். நான் ஒரு உரிமைப் பிரச்சினைக்கு நோட்டீஸ் கொடுத்திருந்தேன். அது என்ன ஆனது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



13th March 1965]

கனம் சபாநாயகர் : அதுபற்றி கனம் அங்கத்தினர் என்னுடைய சேம்பரில் வந்து கேட்டுக்கொள்ளலாம். I am not taking it up here.

SRI V. KRISHNAMOORTHY : I want to know what the point of order raised by hon. Member Sri Madhavan is.

MR. SPEAKER : There is no point of order. The hon. Member may want to know so many things. But, this is not the place for me to explain all those things to him. He need not act as an Advocate for the hon. Member Sri S. Madhavan. The hon. Member Sri Madhavan is himself an Advocate.

SRI V. KRISHNAMOORTHY : What is the point of order raised by the hon. Member Sri Madhavan ? That is what I would like to know.

MR. SPEAKER : The hon. Member may please resume his seat. I am not going to answer him.

SRI S. MADHAVAN : Sir, on a point of order . . .

MR. SPEAKER : There is no point of orded. The Hon. Minister for Home may move Demand No. XII.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 8,76,19,800 under Demand No. XII—Police."

SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I move the following cut motion to discuss the Police actions in the form of Police firings, lathi charges, use of tear gas shells and promulgation of prohibitory orders and the arrests of Dravida Munnetra Kazhagam leaders during the anti-Hindi agitation :—

" That the allotment of Rs. 8,76,19,800 under Demand No. XII—Police—be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

*கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸ் இலாகாவின் வேலைத் திட்டங்கள் பற்றி விளக்கமாகக் கனம் அங்கத்தினர்களுக்கு அச்சிட்டுப் புத்தக வடிவில் வழங்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், தங்களுடைய அனுமதியின் பேரில், முன்னுரையாகச் சில கருத்துக்களைத் தெரிவிக்க நான் விரும்புகின்றேன்.

1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் தேதி தனுஷ்கோடி, இராமேஸ்வரம் பகுதிகளில் சமுத்திரக் கொந்தளிப்பாலும், புயலாலும் சேதம் ஏற்பட்டபொழுது, காவல் துறையினர் எவ்வாறு தங்கள் உயிரையும்

பொருட்படுத்தாது, இரவு பகல் என்று பாராது, அங்கேயே தங்கியிருந்து தத்தளித்தவர்களை மீட்டு உயிர் பிழைக்கச் செய்தார்கள் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் நன்கு அறிவார்கள். அங்கிருந்து கம்பியில்லாத்தந்தி வாயிலாக மாநிலத் தலைமைப் போலீஸ் அதிகாரி அவர்களுக்கும், தலைமைக் காரியதரிசி அவர்களுக்கும் அவ்வப்போது நிலைமையைத் தெரிவித்து அவர்கள் செய்த சேவை மிகவும் போற்றுதற்குரியதாகும். இரயில்வே போலீசாரும், வருவாய்த் துறை, மருத்துவத் துறை அதிகாரிகளும், சிப்பந்திகளும், மற்றைய இலாகாவினரும் தக்க தருணத்தில் செய்த உதவியை நாம் என்றென்றும் மறக்க முடியாது. காவல் துறையினருடன் ஊர்க்காவல் படையினரும் இருந்து ஒத்துழைத்தது போற்றுதற்குரியது. அவர்கள் யாவருக்கும் இம்மன்றத்தின் வாயிலாக என்னுடைய நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அண்மையில் உணவு நெருக்கடி ஏற்பட்டபொழுதும் காவல் துறையினர், குறிப்பாக ஊர்க்காவல் படையினர், கார்டுகளை வழங்குவதிலும், எல்லோருக்கும் தானியங்கள் கிடைக்கின்ற வகையிலும் சிறந்த ஏற்பாடு செய்துள்ளார்கள். அவர்கள் எல்லோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து நாட்டில் எத்தனை திட்டங்களை நிறைவேற்றினாலும், சமுதாயம்—சமூக விரோதிகளை—வன்முறைச் செயல்களில் ஈடுபடுகிறவர்களை எதிர்த்து நிற்காவிட்டால், கண்டிக்காவிட்டால், நாட்டில் எத்தகைய கேடுகள் விளையும் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் நன்கு அறிவார்கள். சமீபத்தில் தமிழகத்தில் சமூக விரோத சக்திகளால் ஏற்பட்ட இன்னல்களை நாம் நன்கு அறிவோம். அதற்காக நாம் அனைவரும் ஆழ்ந்த வருத்தம் அடைகின்றோம். சமூக விரோத சக்திகளை எதிர்த்து நின்று, மக்கள் தங்களது கடமையைச் செவ்வனே செய்வதற்கு முன்வந்தால்தான் நாட்டில் போட்டுள்ள பல்வேறு திட்டங்களை உறுதியோடும், விரைவாகவும் நாம் நிறைவேற்றுவதற்கு இயலும். நாடு உயர்ந்தால்தான், நாம் உயர்வோம் என்கின்ற கருத்தினை எல்லோரும் உணர்ந்து செயல்படுதல் வேண்டும் என்று இம்மன்றத்தின் வாயிலாகத் தமிழக மக்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

* **திரு. செ. மாதவன்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, போலீஸ் இலாகாவிற்கு நம்முடைய மாநிலத்தில் சில லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கின நிலை போக, இப்போது கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கும் நிலைக்கு வளர்ந்து இருக்கிறோம். நமது போலீஸ் இலாகாவுக்கு பிரிட்டிஷ் பாரம்பரியம் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்படுத்தியிருந்த விதிகளின் பிரகாரம்தான் இன்றைக்கும் போலீஸ் இலாகாவில் உள்ளவர்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறார்கள் என்பதை நாம் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது உள்துறை அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் போலீஸ் இலாகா அமைச்சராக இருக்கிறார்கள். உண்மையிலேயே முதல் அமைச்சர் அவர்கள் கையில்தான் அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது—அவர் கையில்தான் அதிகாரம் குவிந்து இருக்கிறது என்பதை உள்துறை அமைச்சர் அவர்களே உணர்ந்து இருக்கிறார்கள். ஏழை மக்களுடைய வருத்தத்தை நன்றாக உணர்ந்துள்ள உள்துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் போலீஸ் இலாகாவில் பிரிட்டிஷ் பாரம்பரியத்தில் ஏற்பட்ட தவறுகளை இவர்களுடைய காலத்திலாவது நிவர்த்தி செய்யவேண்டும் என்பதுதான். உதாரணத்திற்காக நான் ஒன்று சொல்கிறேன். இன்றைக்கும் போலீஸ் இலாகாவில் உள்ளவர்கள் தங்களுக்கு மேலே உள்ள அதிகாரிகளை எஜமான் என்றும், துரை என்றும்தான் அழைக்கின்ற அளவில் இருக்கிறார்கள். இந்தப் பாரம்பரியம்தான் விடுதலைக்குப் பின்னும் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இங்கே கேள்விக்குப் பதில் சொல்லும் போது ஒன்று சொன்னார்கள். அந்தக் காலத்தில் இருந்ததைவிட இன்று போலீஸ்காரர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கிறோம் என்றார்கள்.





நான் நிச்சயமாகச் சொல்வேன், வெள்ளைக்காரன் காலத்தில் ஷேவிங், டிரஸ் ஆகியவற்றுக்காகக் கொடுக்கப்பட்ட அலவன்சுதான் இன்றைக்குச் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. பிராவிடெண்டு பண்டு நிதியில் இருந்து எந்த அடிப்படையில் அவர்களுக்குக் கடன் வழங்கப்பட்டதோ அதே அடிப்படையில்தான் இன்றைக்கும் வழங்கப்படுகிறது. இந்த முறையை மாற்றி அமைக்கவேண்டும் என்ற கருத்தை நமது அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். வெள்ளைக்காரன் 1801-ஆம் ஆண்டு போலீஸ் கமிஷன் ஒன்றை நிறுவி போலீஸ் இலாகா முழுவதையுமே பரிசீலனை செய்து அதனுடைய சிபார்சுகளை அமல் செய்தான். அதற்குப் பின்னால் லார்டு கர்சன் காலத்தில் மறுபடியும் இன்னொரு போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டது. வெள்ளைக்காரன் காலத்திலேயே இப்படிச் செய்தார்கள் என்றால், விடுதலைக்குப் பின்னால் இந்த அரசாங்கம் இதுவரை ஒரு கமிஷனை நியமித்து அவர்களுடைய நிலையைப் பரிசீலனை செய்தார்களா என்றால் இல்லை. விடுதலைக்குப் பின்னால் மத்தியப் பிரதேசத்தில் செய்திருக்கிறார்கள். உத்தரப் பிரதேசத்தில் செய்திருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது நம் மாநிலத்தில் மட்டும் அத்தகைய ஒரு கமிஷனை நியமித்து, போலீஸ் இலாகாவையே மாற்றி அமைக்க என் தயங்கவேண்டும் என்பது புரியவில்லை. அதை நிச்சயம் நம் அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த முறைகள் தான் இன்றைக்கும் போலீஸ் இலாகாவில் அமுலில் இருக்கின்றன. மக்களுடைய கருத்துக்களை ஒடுக்குவதற்கு அவர்கள் சில முறைகளைப் பின்பற்றினார்கள். அதேமுறைகள் இன்றைக்கும் பின்பற்றப்படுகின்றன. உதாரணமாக கிரிமினல் ப்ரொஸீஜர் கோட் 55 ஆவது செக்ஷன்படி சந்தேகாஸ்பதமான கேஸ்—முக்காடு கேஸ்—என்பதாகப் பலரைக் கைது செய்தான். அவன் வெளிநாட்டான். இங்குள்ளவர்களைச் சந்தேகப்பட்டான். அதில் நியாயம் உண்டு. ஆனால் இந்த நாட்டு மக்களுடைய வோட்டுக்களைப் பெற்று இங்கே வந்து அமர்ந்துள்ளவர்கள் எதற்காக இந்த நாட்டு மக்களையே சந்தேகிக்கவேண்டும்? வெள்ளைக்காரன் காலத்தில் கையாண்டது போல இன்றைக்கும் போலீஸ்காரர்கள் முக்காடு கேஸ் போடுகிறார்கள். இது மிகமிக வருந்தத்தக்கது என்பதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஆவடி சோஷலிசம், புவனேஸ்வர சோஷலிசம், ஜனநாயக சோஷலிசம்—ஆகிய இவ்வளவுக்கும் முரண்பட்ட விதிமுறைகளை இன்னமும் பின்பற்றுகிறார்கள் என்பதை நாம் உணர்ந்து. கொள்ள வேண்டும். அதில் குறிப்பிட்டு இருக்கிறபடி யாருக்காவது சொத்து சுதந்திரம் இல்லாவிட்டால் அவர்மீது ஜாமீன் கேஸ் போடலாம் என்ற நிலை இன்றைக்கும் நம் அரசாங்கத்தில் இருக்கிறதோ என்று சந்தேகப்படுகிறேன். அதுவும் ஸ்டாஸ்டிகல் பர்பஸ்சாக அதிகமாக வழக்குகள் போட்டு வருகிறவர்களுக்கு டிபார்ட்மெண்டில் பதவிப் பிரமோஷன் கொடுப்பது என்பது வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த முறை. அதுவேதான் இப்போதும் பின்பற்றப்படுவது மிகவும் வருந்தத்தக்கதாகும். ஒருவருடைய திறமையை வைத்து பதவி உயர்வு கொடுப்பதைவிட்டு வழக்குகள் அதிகமாகப் போடுகிறவர்களுக்குக் கொடுப்பது என்ற நிலைமை சுதந்திர சர்க்கார் ஆளுகின்ற நாட்டில் இருக்கக் கூடாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இன்னொன்றையும் சொல்ல ஆசைப்படுகிறேன். நீதி மன்றங்களிலேயே வழக்குகளை ஜோடனை செய்வது பிரிட்டிஷ் பாரம்பரியத்தில் இருந்தது. உண்மை கொஞ்சமாக இருந்தாலும்கூட நீதிமன்றங்களிலேயே தண்டனையை வாங்கிக் கொடுத்தாகவேண்டும் என்ற காரணத்தால் வழக்குகளை ஜோடனை செய்து (எக்ஸ்சாஜரேட்) அதற்காக உண்மைக்குப் புறம்பான சாட்சிகளை விட்டு தண்டனை வாங்கிக் கொடுக்கிற பழக்கம் நீடித்தாகவேண்டுமா என்பதை நமது அரசாங்கம் ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்காகச் சொல்கிறேன். கார்மோகினி வழக்கு பத்திரிகைகளில் பிரபலமாக வந்தது. அவள் திருடுவதற்கு எப்படி எப்படி எல்லாம் முயன்றாள் என்பதைப் படம் எடுத்து காங்கிரஸ் கட்சி நடத்திய கண்காட்சியில் வைக்கப்பட்டது. பலரும் அதைப் பார்த்து இருக்கிறார்கள். இருந்தாலும் வழக்கு நடந்தபோது அம்மாதிரி செய்யப்படவே இல்லை என்பதாக உண்மைக்குப் புறம்பான தகவல் கொடுக்கப்பட்டது. போலீஸ்காரர்கள் எப்படியோ தாங்கள் வழக்கு மன்றங்களுக்குக்

கொண்டு போகிற கேஸ்கள் ஜெயிக்க வேண்டும் என்பதற்காகப் பொய்யான சாட்சிகளைத் திரட்டிக் கொண்டு போகின்ற நிலை நமது நாட்டில் இனிமேல் இருக்கக் கூடாது. இது போலீஸ்காரர்களிடத்தில் பொதுமக்களுக்குள்ள நம்பிக்கையைத்தான் குலைக்கும்.

கனம் அமைச்சர் அவர்கள் அண்மையில் நடைபெற்ற கலவரங்கள் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்தக் கலவரங்களுக்கு யார் பொறுப்பு என்று பேச அவசியம் இல்லை. போலீஸ் இலாகாவுக்கும், மக்களுக்கும் உள்ள தொடர்பை இந்த அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். போலீஸ் இலாகா எங்களுக்கும் தேவை, உங்களுக்கும் தேவை, மக்களுடைய நன்மைக்கும் தேவை. ஆனால் போலீஸ் இலாகாவை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தவறான முறையில் பயன்படுத்தினால் இதன் விளைவு என்ன ஆகும் ? உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இந்த மன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ராஜேந்திரன் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றி இங்கே பேசப்பட்டது. அதைப் பற்றி விளக்கம் தெரிவித்தார்கள். அவர் உதவி கோரிய அன்று போலீஸ் இலாகாவினர் என்ன சொன்னார்கள். தனிப்பட்டவர்களின் வீடுகளில் தாக்குதல் ஏற்பட்டால் அதைத் தடுக்க போலீஸ் இலாகாவினருக்கு அதிகாரம் இல்லை. இல்லை என்றால் அதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே அன்றைக்கு போலீஸ் இலாகா அதைத் தடுக்கவில்லை. அதற்குப் பின்னால்—மறுநாள் ஒரு அறிக்கைவிடுகிறார்கள். தனிப்பட்டவர்களுடைய வீடுகளை யார் தாக்குதல் நடத்தினாலும் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும், அது பற்றி இப்பொழுதே எச்சரிக்கை செய்கிறேன் என்பதாக ஐ.ஜி. அறிவித்தார்கள். ஏன் முதல் நாள் அப்படிச் சொல்லவில்லை ? ஆகவே ஆளும் கட்சியினர் தங்களுடைய நன்மைக்காக—தங்கள் கட்சியின் நன்மைக்காக—போலீஸ் இலாகாவைப் பயன்படுத்துகிறார்கள். ஆளும் கட்சியினர் ஆட்டிவைக்கிறபடி போலீஸ் இலாகா செயல்படுகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

போலீஸ் இலாகாவுக்கும், பொதுமக்களுக்கும் இருக்க வேண்டிய உறவை முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அவர்களுடைய வார்த்தைகளிலேயே சொல்ல வேண்டுமானால் சாண்டு வித்அவுட் லைன் (Sand without line) பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இல்லையென்றால் அவர்களால் செயல்பட முடியாது என்பதைத் தெளிவாக்கி இருக்கிறார்கள். பொதுமக்களுடைய ஒத்துழைப்பை அவர்கள் ஏன் இழக்கிறார்கள். ஆளும் கட்சியினரால் தூண்டப்பட்டு அவர்களுடைய அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதனால் தான் மக்களிடத்தில் அவர்கள் நம்பிக்கையை இழக்கிறார்கள். இதை இல்லையென்று யாராலும் மறுக்க முடியாது. இந்த நேரத்தில் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒன்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியின் வரலாற்றைக் கொஞ்சம் புரட்டிப் பார்க்க வேண்டும். 1942-இல் சுதந்திரப் போராட்டப் புரட்சி நடந்தது. அப்போது பண்டித நேரு அவர்கள் கைது செய்யப்பட்டு உள்ளே வைக்கப்பட்டார்கள். அதைப் பற்றி அவர் தம்முடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். சிறையில் தம்மைப் போலீஸ்காரர்கள் மிகவும் அடித்தார்கள். உடல் முழுவதும் அடிக்கப்பட்டது. "என்னுடன் வல்லப பந்த் இருந்தார். முதியவர். அவரும் அடிக்கப்பட்டார். அவர்கள் அடித்த அடி அவரால் நடக்க முடியாதபடியே செய்துவிட்டது" என்பதாக எல்லாம் சுட்டிக் காட்டியிருக்கிறார். மேலும் அவர் சொல்லியிருக்கிறார். "இன்றைக்கு நடப்பது போல போலீஸ் இலாகாவினர் பொதுமக்களைக் கொடுமைப்படுத்தக் கூடாது. பொதுமக்களை அணுகும் போது போலீஸ்காரர்கள் புன்னகையுடன் அணுக வேண்டும்" என்பதாக எல்லாம் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இன்றைய தினம் நடைபெறுகிற சுதந்திர சர்க்கார் ஆட்சியிலே அப்படி நடைபெறுகிறதா என்று கேட்கவிரும்புகிறேன். கூட்டத்தைக் கலைப்பது என்றால் தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் நடத்த வேண்டியிருக்கிறது. சிறையில் அடைத்தவர்களைப் பலமாக அடிக்கும் பழக்கம் இருக்கிறது. இப்படி நடைபெறுகிற செயல்களைப் பார்க்கும்போது, இது சர்வாதிகார ஆட்சியாக மாறி வருகிறதே





தவிர ஜனநாயக ஆட்சியாகச் செயல்படவில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். போலீஸ்காரர்கள் தாக்குதலில் ஈடுபட்டார்கள் ; பலாத்காரத்தில் இறங்கினார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்? அருமையாகப் பணியாற்றினார்கள், நல்ல முறையில் அடக்கினார்கள் என்று போலீஸ்காரர்களுக்குப் புகழ்மாலை சூட்டுகிறார்.

1930-ஆம் ஆண்டிலே காங்கிரஸ் தலைவர்களைப் போலீஸார் அடித்த பொழுது வெள்ளைக்காரத் துரை லார்டு கன்னிங்ஹாம் கூறியிருக்கிறார் : "போலீஸ்காரர்களே பிரமாதம், காங்கிரஸ்காரர்களைப் பிரமாதமாக அடித்தீர்கள்" என்று அன்றைக்கு வெள்ளைக்காரத் துரை கூறியமாதிரி, இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர் லார்டு கன்னிங்ஹாம் அல்ல, லார்டு ஆகவில்லை. கனம் அங்கத்தினருக்கு அவர்மேல் பிரியமிருந்தால் அவ்வாறு சொல்லிக்கொள்ளலாம்.

**திரு. செ. மாதவன் :** ஆனால் என்னுடைய கருத்தும் முதலமைச்சர் கருத்தும் ஒன்றுதான். வெள்ளைக்காரன் அன்று எவ்வாறு பேசினானோ அதைப்போல்தான் இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களும் பேசியிருக்கிறார்கள் என்பதை மறுக்கமுடியாது. போலீஸ்காரர்கள் அடக்குமுறையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று எதிர்க்கட்சியில் உள்ளவர்கள்கூட விளக்கம் கேட்டதற்கு இதுவரை விளக்கம் தரப்பட்டதா ? மோகன் குமாரமங்கலம்கூடப் பாராட்டினார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் அன்று ஒரு கடிதத்தைப் படித்தார்கள். ஆனால், அதை திரு. மோகன் குமாரமங்கலம் கூறவில்லை என்று மறுத்திருக்கிறார்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை கனம் அங்கத்தினர் சரியாகப் படிக்கவில்லை. நான் குறிப்பிட்டது "சோபர்" ஆகப் பாராட்டினார் என்பது. அதை திரு. மோகன் குமாரமங்கலம் மறுக்கவில்லை. அதை அங்கத்தினர் நன்றாகப் படித்தால் புரிந்துகொள்ளமுடியும்.

**திரு. செ. மாதவன் :** அன்று முதலமைச்சர் அவர்கள் படித்த பொழுது, திரு. மோகன் குமாரமங்கலம் கலெக்டர் அவர்களைப் பாராட்டுவதற்காகச் சென்றார், ஆனால் அவர் இல்லாததால் எஸ். பி. அவர்களைப் பார்த்து கைகுலுக்கிப் பாராட்டினார், மேலும் என்னுடைய பாராட்டுதலை கலெக்டர் அவர்களுக்குத் தெரிவியுங்கள் என்று சொல்லியிருக்கிறார், என்றும் இது தான் பர்ப்பஸ் என்றும் முதலமைச்சர் அவர்கள் அன்று வாதிட்டார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உறுப்பினர் அதைச் சரியாகப் படிக்கவில்லை. இப்பொழுதும் நான் அதையே தான் சொல்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் புரியாமல் பேசுகிறார்கள்.

**திரு. செ. மாதவன் :** புரியவில்லை, படிக்கவில்லை என்று சொல்வது இயற்கையாகிவிட்டது, முதலமைச்சர் அவர்களுக்கு. நான் கேட்டுக்கொள்வது போலீஸ்காரர்கள் செய்கின்ற சில தவறுகளைக் கண்டிப்பதற்கு இந்த அரசாங்கம் முன் வரவேண்டும் என்பது தான். மக்களுடைய முதலமைச்சர் அவர்கள், இதை நியாயம் என்று வாதிடுவது நியாயமல்ல என்பது தான் என்னுடைய வாதம். உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன்.

பச்சையப்பன் கல்லூரியில் நடந்தது என்ன ? அதைப்பற்றி முதலமைச்சர் அவர்களும் அறிக்கை விட்டார்கள். கல்லூரி முதல்வரும் அறிக்கை விட்டார்கள். உள்ளே தவறு நடந்தால், உள்ளே சட்டவிரோதமாக நடந்தால் போலீஸ்காரர்கள் போகக்கூடாது என்று சொல்வது என்ன ஜனநாயகமோ என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அன்று கல்லூரி முதல்வர் அறிக்கை விட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே அவர் கூறியிருப்பது என்னவென்றால் காலை 4 மணிக்கு

[திரு. செ. மாதவன்] [13th March 1965

மாணவர்கள் தூங்கிக்கொண்டிருந்தபோது, போலீஸார் கதவை உடைத்துக்கொண்டு வந்தார்கள். மாணவர்களை அடித்தார்கள் என்று அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மறுக்க முடிந்ததா ?

வெங்கடேஸ்வரா ஹாஸ்டலில் என்ன நடந்தது? அதைப்பற்றி பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களுக்கும் தகவல் வந்திருக்கும். அங்கே அறைகளிலே உள்ள மாணவர்களை, உள்ளே நுழைந்து தாக்கியிருக்கிறார்கள். லத்தியால் அடித்திருக்கிறார்கள் என்று செய்திகள் வந்திருக்கின்றனவே அதை மறுக்க முடியுமா ?

மவுண்ட் ரோடிலே உள்ள முரசொலி அலுவலகத்திலே தங்களுடைய கட்டிடத்திலே கொடியை ஏற்றியபொழுது, பிற கட்சியினர் கட்டிடத்தின் மேலே ஏறிக் கொடியை அறுக்க முனைந்தார்கள். அதைத் தடுப்பதற்கு வந்த பத்திரிகை நிருபர் அடியார் என்பவர் தடியால் தாக்கப்பட்டார். பக்கத்திலே இருந்த போலீஸ் அதிகாரிகளும் பார்த்துக்கொண்டிருந்தனர். இந்தத் தகவல் முதலமைச்சர் அவர்களுக்கு வரவில்லையா. இதைத் தடுக்க அரசாங்கம் என்ன செய்தது ? அது மட்டுமா ?

மதுரையிலே காங்கிரஸ் கட்சி அலுவலகத்திற்கு முன்னால் மாணவர்கள் தாக்கப்பட்டார்கள். அது பற்றி முதலமைச்சர் அவர்கள் "ஸ்கஃபில்" என்று ஸ்டேட்மெண்டு கொடுத்திருக்கிறார்கள். " **There was a scuffle between the Congressman and students** என்று கொடுத்திருக்கிறார். "ஸ்கஃபில்" என்ற வார்த்தையைக் கொடுத்து இருக்கிறார். என்ன ஆனது அந்த வழக்கு ? ஏன் தாக்கப்பட்டார்கள் என்பதற்கு விளக்கம் இதுவரை கொடுக்கப்படவில்லை. மாணவர்கள் தாக்கப்பட்டார்கள் : ஆஸ்பத்திரியில் அவர்கள் இருந்தார்கள். மறுநாள் அந்த டி.ஐ.ஜி. அவர்கள் அறிக்கை விட்டார்கள். ஆஸ்பத்திரியில் மாணவர்கள் யாரும் சாகவில்லை. அவர்களுக்கு டிரீட்மெண்ட் கொடுக்கப்பட்டு வருகிறது என்று அறிக்கை விட்டார்கள். அதைப் பற்றி ஏதாவது வழக்குப் பதிவு செய்யப்பட்டதா ? என்ன ஆயிற்று என்றே இதுவரை தெளிவாக்கப்படவில்லை.

மதுரைப் பொறியியல் கல்லூரியில் நிகழ்ச்சிகள் நடந்தன. கண்ணீர்ப் புகை பிரயோகிப்பது கூட்டத்தைக் கலைப்பதற்குத் தான் என்று சட்டத்தில் விதி இருக்கிறது. அதை நமது முதலமைச்சர் அவர்கள் மறுக்கமாட்டார்கள். கூட்டம் எங்கே இருக்கும் ? நான்கு பேர்கள் இருக்கின்ற அறையிலா இருக்கும் ? கதவுகளை உடைத்துக்கொண்டு அறைகளுக்குள்ளே கண்ணீர்ப் புகை செலுத்தப்பட்டிருக்கிறது. ஜன்னலை உடைத்துக்கொண்டு ஜன்னல் வழியாகக் கண்ணீர்ப் புகை செலுத்தப்பட்டிருக்கிறது. மாணவர்கள் படுத்திருக்கின்ற படுக்கைகளின்மீது கண்ணீர்ப்புகை செலுத்தப்பட்டிருக்கிறது. இந்த மூன்று நிகழ்ச்சிகளையும் தமிழ்நாடு படம் போட்டுக் காண்பித்திருக்கிறது. இது நியாயம் தானா ? இது சட்டத்தை மீறியது ஆகாதா ? இந்த நிகழ்ச்சியில் போலீசார் மீது இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது ?

மதுரைக் கல்லூரியின் முதல்வர் தாக்கப்பட்டார். முதலமைச்சர் அவர்கள் அறிக்கை விட்டார்கள். அந்த பிரின்ஸ்பாலும் அறிக்கை விட்டு இருக்கிறார். அந்த அறிக்கையில், "நான் மாணவர்களைத் தடுத்துவிட்டு வந்தேன். அப்பொழுது ஒரு போலீஸ் பட்டாளம் வந்து என்னைத் தாக்கியது. நான் "இந்தக் கல்லூரியின் பிரின்ஸ்பால் என்றேன் ' நீ யாராய் இருந்தால் என்ன என்று தாக்கியிருக்கிறார்கள். பின்பு நான் அறைக்கு வந்து விட்டேன். பின்பு இரண்டாவது முறையாக வந்து தாக்கினார்கள்," என்று அறிக்கை விட்டிருக்கிறார். இதை முதலமைச்சர் அவர்கள் மறுக்க முடியுமா ? அந்தக் கல்லூரி முதல்வர் சட்டத்தைக் தாண்டினாரா ? அவரைத் தாக்கிய போலீஸார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? அந்த டி.ஐ.ஜி., எஸ்.பி. அவர்கள் அவர் வீட்டுக்குச் சென்று மன்னிப்புக் கேட்டார்கள் என்று தெரிகிறது. இது நியாயம் தானா ? ஏன் இதைக் கண்டிக்கவில்லை.?



13th March 1965]

**Mr. SPEAKER** : The hon. Member can take three or four minutes more.

**திரு. செ. மாதவன் :** பாதுகாப்புச் சட்டத்தைக் கட்சி நலனுக்குப் பயன்படுத்தக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாதுகாப்புச் சட்ட விதி 40 என்ன சொல்லியிருக்கிறது, அரசாங்கத்தின் மீது யாராவது தவறாகக் கருத்துக்களைப் பரப்பினால் "டிஸ்அஃபெக்ஷன் அகென்ஸ்ட் தி கவர்ன்மென்ட்" என்று சொல்லி நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் "கனம் பக்தவத்சலம் இன்னும் பதவியில் இருப்பது தப்பு. அவர் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டார். காங்கிரஸ் தலைவர்களுக்கு அவர்மேல் வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது" என்று சொன்னால் இது அரசாங்கத்தைப் பாதிக்காது. ஆனால் தனிப்பட்ட அமைச்சரைப் பற்றிச் சொன்னால்கூட பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்ஸ்பெக்டர் ஜெனரல் பெரிய பொறுப்புள்ள நிலையில் இருக்கிறார்கள். அவர் "நான் ராஜினாமா செய்யவில்லை ; பதவியில் இருக்கிறேன்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு..............

**கனம் திரு. பூ. கக்கன் :** பத்திரிகையிலே தவறாகச் செய்தி வந்தால் மறுக்கக்கூடாதா ? தவறாகச் செய்தி வந்தால் எது உண்மை என்று சொல்லக்கூடாதா ?

**திரு. செ. மாதவன் :** உண்மையைச் சொல்லக்கூடாது என்று நான் சொல்லவில்லை, அந்த அளவுக்கு இந்த அரசாங்கம் நடந்திருக்கிறது. மிலிடரி கூடாது, அதைத் தவிர்க்கவேண்டுமென்று சொன்னார்கள்......

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது முற்றிலும் தவறு என்று ஏற்பட்டால், அதற்காக கனம் அங்கத்தினர் மீது எந்த உரிமைப் பிரேரணையைக் கொண்டு வருவது ; அப்படி உரிமைப் பிரேரணை கொண்டுவந்தால் என்ன சமாதானம் சொல்லப்போகிறார்கள் ?

**திரு. செ. மாதவன் :** தவறா அல்லது உண்மையா என்பதை இந்த அரசாங்கம் தான் சொல்லவேண்டும். செய்திகள் வெளியாகின்றன என்று பத்திரிகைகளுக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. திருமதி இந்திரா காந்தி அவர்கள் பேசும்பொழுது யூ.என்.ஐ. நிருபரை அரஸ்ட் செய்திருக்கிறார்கள். பத்திரிகைகளிலே தவறான செய்திகள் வந்தால் அதைத் தடுப்பதற்குத் தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் : பத்திரிகைகளிலே செய்தி போடாவிட்டால் மக்கள் மூலம் பொதுமக்களுக்குச் செய்திகள் பரவும் என்ற நிலையை உணரத் தவறி விடுகிறார்கள். பத்திரிகைச் செய்திகளை சென்ஸார் செய்ய பாதுகாப்பு விதிகளைப் பயன்படுத்துகிறார்கள். பத்திரிகை ஆசிரியர்கள், பத்திரிகை நிருபர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். எனவே, போலீஸார் மூலம் இந்த அரசாங்கம் பாதுகாப்பு விதிகளைத் துஷ்பிரயோகம் செய்து வருகிறது. பத்திரிகைகள் மீது வழக்குகள் இருக்கின்றன ; அது வேறு விஷயம். ஆனால் எதற்காக வழக்குப் போடவேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந்த அரசாங்கம் பாதுகாப்புச் சட்டத்தைத் தன்னுடைய பதவிக்காகப் பயன்படுத்துகிறது என்று கூறுவதிலே தவறு இருக்கிறதா ? எப்படி இந்த அரசாங்கம் இதை மறுக்க முனைந்திருக்கிறது ? இத்தனை உயிர்கள் பழி வாங்கப்பட்டன ; காரணம் யார் ? இவ்வளவு பலாத்காரம் உருவாக்கப் பட்டது ; காரணம் யார் ? போலீஸ்காரர்கள் சட்டத்தை மீறினார்கள் ; பலாத்காரத்தில் சட்ட விரோதமாக இறங்கினார்கள் ; காரணம் யார் ? 9-30 a.m.
தனிப்பட்ட பத்திரிகைகள் மீது தவறான முறையிலே நடவடிக்கை எடுத்தார்கள் ; காரணம் யார் ? பாதுகாப்புச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தினார்கள்—தனிப்பட்ட மனிதர்கள் பேரில் உள்ள விரோதத்தின் காரணமாக; எங்கள் கட்சித் துணைத் தலைவர் உட்பட பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். காரணம் யார் ? இவ்வளவுக்கும்

காரணம் இந்தப் பதவி நாற்காலியிலே கடந்த 17 ஆண்டு காலமாக இருந்து வருகிற ஒரே ஆசை தான். சர்க்கார் தங்களுடைய தவறான போக்கை, அதிகாரத்தைப் பயன்படுத்தி வருகிற போக்கை இன்றைக்கும் கடைப்பிடித்து வருகிறது என்ற குற்றச்சாட்டைக் கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸ் மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஜனவரி மாதம் 23-ம் தேதிக்கு முன்பு வரை போலீசார் இந்தத் தமிழகத்திலே செவ்வனே சேவை செய்து வருகிறார்கள் என்று பல முறை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மன்றத்திலேயே பேசினார்கள். ஆனால் இன்று இந்த நேரத்தில், "போலீஸ் அத்து மீறி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்" என்ற குற்றச்சாட்டைக் கூறியதிலிருந்து இந்த நாட்டு மக்கள் அவர்களைப் பற்றி நன்றாகப் புரிந்து கொள்வார்கள். இதுவரையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்த நாட்டிலே நடத்திய எந்தக் கிளர்ச்சியிலும் எந்த வெற்றியும் பெற முடியவில்லை ; பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை ; இனியும் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படாமல் போய் விடுமோ என்ற காரணத்தால் அப்பாவி மாணவர்களைத் தூண்டிவிட்டு, கலவர நிகழ்ச்சிகளை நாட்டிலே ஏற்படுத்தியதைப் பற்றி இந்த மன்றத்திலும் கடந்த பத்து நாட்களாக விவாதித்து வருகிறோம். எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் அண்மையில் நடந்த கலவரங்களிலே போலீஸார் அடக்கு முறையைப் பற்றிச் சொன்னார்கள். அவர் எந்த ஒரு இடத்திலாவது போலீஸ்காரர்களைத் தாக்கியதைப் பற்றிச் சொல்வாரா என்று பார்த்துக் கொண்டிருந்தேன். அதைப் பற்றிச் சொல்லவேயில்லை. போலீஸ்காரர்களும் நம்மைப் போன்ற மனிதர்கள் தான். அவர்களை உத்தியோகத்தில் அமர்த்தி இருக்கிறோம் என்று சொன்னால் நாட்டு மக்களின் நன்மைக்காக, பாதுகாப்புக்காக அமர்த்தியிருக்கிறோம். போலீஸ்காரர்களை யார் வேண்டுமானாலும் தாக்கிவிடலாம் ; மாணவர்கள் கல்லால் அடிக்கலாம் ; ரௌடி எலிமெண்ட்ஸ் அவர்களைத் தீ வைத்துக் கொளுத்தலாம் ; இவ்வளவையும் பார்த்துக்கொண்டு போலீஸ்காரர்கள் வெறுமனே இருக்கவேண்டும் ; லத்தி சார்ஜ் செய்யக்கூடாது ; கண்ணீர்ப்புகைக் குண்டு போடக் கூடாது ; துப்பாக்கியால் சுடக்கூடாது என்றால் வேறு என்ன செய்ய வேண்டும். தமிழ் நாட்டிலே வன்முறைச் செயல்கள் உருவாகிவிட்டதே என்பதைப் பற்றித் தமிழக மக்கள் அனைவரும் வேதனையில் இருக்கக் கூடிய நேரத்தில், போலீஸ்காரர்கள் சுட்டது மாத்திரம் தவறு என்று ஒரு பக்கத்தில் வாதித்துக்கொண்டிருப்பது அவ்வளவு ஒழுங்கல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மதுரையில் நடந்த கலவரத்தைப்பற்றிச் சொன்னார்கள். காங்கிரஸ் ஆபீஸ் முன்னால் நடந்த கலவரத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். "என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் ?" என்று கேட்டார்கள். போலீஸ்காரர்கள் கூட வராத நேரத்தில் அந்தக் காங்கிரஸ் ஆபீஸில் இருந்தவர்கள் தங்கள் உயிரைப் பாதுகாப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்களோ அதை எடுத்துக்கொள்ளவில்லையென்றால் அங்கே மூன்று பேர்களுடைய உயிர் போயிருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கோஷம் போட்டுக் கொண்டு வந்தவர்கள் அவ்வளவு மோசமான நிலையில் நடந்து கொண்டார்கள். வருகின்ற வழியில் இருக்கின்ற அத்தனை விளவுகளையும் வெட்டியெறிந்து தீக்கிரையாக்கி இருக்கிறார்கள். கலவரம் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடனே வந்திருக்கிறார்கள். தோரணங்களை எல்லாம் அறுத்து எறிந்திருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களுடைய உயிருக்கு எவ்வளவு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். "காங்கிரஸ்காரர்கள் செய்த செயலுக்கு நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டார்கள்" என்று குற்றம் சுமத்துவதிலே ஒன்றும் அர்த்தம் இல்லை.

ஹாஸ்டலிலே எல்லாம் கண்ணீர்ப் புகைக் குண்டை விட்டார்கள் ; மாணவர்கள் இருந்த அறைக்குள்ளேயெல்லாம் கண்ணீர்ப் புகைக்குண்டை விட்டார்கள் என்று எடுத்துச் சொன்னதிலே எவ்வளவு உண்மை இருக்கு



மென்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெங்கடேஸ்வரா ஹாஸ்டலிலே என்னுடைய சின்ன அம்மாவின் மகன் இருக்கிறான். அங்கே என்ன நடந்தது என்று அவனை விசாரித்தேன். அவன் போலீசாரிடத்தில் ஒரு அடி கூட வாங்கியிருக்கிறான். அடி வாங்கியதைப் பற்றிக் கவலைப்படவில்லை ; சந்தோஷப்படுகிறான். எதிரே உள்ள மண்டலக் காங்கிரஸ் கமிட்டி ஆபீசுக்குத் தீ வைத்துக்கொளுத்த முயற்சி செய்தார்கள் என்று கூறினான். தீ வைக்குமளவிலே மாணவர்கள் போய்க் கொண்டிருப்பார்களானால் மாணவர்களை அடிக்கக் கூடாதா ? வன்முறைகள் நடந்து நாட்டிலே அமைதி ஏற்பட்ட பிறகும் கூட நேற்றைய தினத்திலே உதகையிலே நடந்த கலவரத்தைப் பற்றித் தகவல் வந்திருக்கிறது. கல்லூரிகளுக்கு மாணவர்களைப் பெற்றோர்களே கூட்டிக் கொண்டு போயிருக்கிறார்கள். பிள்ளைகளின் படிப்பு பாழாகிவிடக் கூடாதே என்ற எண்ணத்தில் அவர்கள் கூட்டிக் கொண்டு போயிருக்கிறார்கள். அந்த நேரத்தில் என்ன நடந்தது ? அந்த மார்க்கட் பக்கத்தில் இருந்த ரௌடி எலிமெண்ட்ஸ் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் போகக்கூடாது என்று தடுத்தார்கள். குறிப்பிட்ட சில மாணவர்களும் தடுத்தார்கள். அவர்களைப் போலீஸ்காரர்களும், பெற்றோர்களும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு கேட்டும் பள்ளிக்கூடத்திற்குப் போகக் கூடாது என்று வலுக்கட்டாயப்படுத்திய காரணத்தால் நான்கு மாணவர்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். உடனே அங்கிருந்தவர்கள் எல்லாம் மார்க்கட்டின் பக்கத்தில் வந்தார்கள். மார்க்கட்டில் இருக்கக்கூடிய ரௌடி எலிமெண்ட்ஸ் எல்லாம் ஒன்று சேர்ந்து போலீஸாரின் மண்டையை உடைக்கக் கல்லை எடுத்து வீசும்போது போலீசார்கள் வெறுமனே நின்று கொண்டிருக்க முடியுமா ? போலீஸ்காரர்களுக்கு என்ன பந்தோபஸ்து இருக்கிறது. அவர்கள் முதலிலே தடியடி செய்தார்கள் ; பிறகு கண்ணீர்ப்புகை குண்டை வீசினார்கள் ; பிறகுதான் துப்பாக்கியால் சுட்டார்கள். அதிலே ஒருவர் இறந்தார். இறந்தவர் மாணவரல்ல. வயது வந்தவர் ; மார்க்கட்டிலே கூலி வேலை செய்யக்கூடிய போர்ட்டர். அவருக்கு அந்த இடத்திலே சம்பந்தம் என்ன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசியல் கட்சிகள் பின் நின்று ரௌடி எலிமெண்ட்ஸைத் தூண்டிவிட்டன என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். போலீஸ் மானியத்திலே போலீஸ்காரர்களுக்கு என்ன செய்யவேண்டும் ; அவர்களுக்கு எந்த விதத்திலே பந்தோபஸ்து கொடுக்க வேண்டும் ; அவர்கள் எப்படி மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்ற கண்ணோட்டத்திலே பார்க்கவேண்டும். போலீஸ்காரர்களுடைய உடைமைக்கும், உயிருக்கும் இன்று ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. போலீஸ்காரர்கள் தாங்கள் வாங்குகின்ற 60 ரூபாய் பிச்சைக்காசு சம்பளத்திற்காகத் தங்களுடைய உயிரையும் மதியாது ரௌடி எலிமெண்ட்ஸோடு போராடுவதைப்பற்றிக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன். இந்த நாட்டிலே அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்று சொன்னால் போலீஸ்காரர்களுக்குச் சரியான சம்பளத்தைக் கொடுக்கவேண்டும். ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் இறந்து விட்டால் அவன் வீட்டிற்கு என்ன கொடுக்கிறோம் ? அதை வைத்துக் கொண்டு குடும்பம் நடத்த முடியுமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். போலீஸ்காரர்கள் எந்தக் காரணத்தினால் மரணம் அடைந்து விட்டாலும் இவ்வளவு ரூபாய் கொடுக்கிறோம் என்ற அளவில் ஏதாவது ஒரு இன்ஷூரன்ஸ் திட்டத்தையாவது கொண்டு வர வேண்டும். அப்போதுதான் போலீஸ்காரர்கள் தைரியமாக வேலை செய்ய முடியும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சப் இன்ஸ்பெக்டர் வேலைக்கு வர, நல்ல குடும்பத்தில் உள்ளவர்கள், நல்ல திறமை உள்ளவர்கள் போலீஸ் வேலைக்கு வருவார்களா என்பதைப் பற்றி சந்தேகிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. ஆகவே அவர்கள் சம்பளத்தை இரண்டு மடங்காக மிலிட்டரிக்குக் கொடுப்பது போல் கொடுத்தால் தான் இந்த நாட்டைப் பாதுகாக்க முடியும். அமைதியையும் நிலை நாட்ட முடியும். மக்களை அணுகும்போது சிரித்துக்கொண்டே அணுகவேண்டுமென்று நேரு அவர்கள் சொன்னார்கள் என்று கனம் தி.மு.க. உறுப்பினர் மாதவன் அவர்கள் சொன்னார்கள். அன்றைக்கு

இருந்த நிலை என்ன? அன்று காங்கிரஸ்காரர்கள் செய்யவில்லையா, அன்று இப்படி காங்கிரஸ்காரர்கள் குறிப்பிடவில்லையா? அன்று காங்கிரஸ்காரர்கள் தந்திக் கம்பிகளை அறுக்கவில்லையா, அன்று காங்கிரஸ்காரர்கள் ரெயிலிலுக்கு தீ வைக்கவில்லையா, என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அன்று நம்மை ஆண்டு கொண்டிருந்தவர்கள் யார்? இன்று நம்மை ஆண்டு கொண்டிருப்பது யார்? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்று அன்னியன் நம்மை ஆண்டு கொண்டு இருந்தான். ஆகவே அவர்களுக்கு என்னென்ன தொல்லைகள் கொடுக்க வேண்டுமோ அவற்றைக் கொடுத்தால்தான் அவர்கள் ஆட்சியை அகற்ற முடியும் என்று அன்று செய்யப்பட்டது. ஆனால் இன்று நம்மை ஆண்டு கொண்டிருப்பது யார்? இன்று ஜனநாயக நாட்டில் மக்கள் பிரதிநிதிகள் நம்மை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். எந்த அரசும் இன்று நம்மை ஆண்டு கொண்டிருக்கவில்லை. எந்த ராஜாவும் நம்மை ஆண்டுகொண்டிருக்கவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் நம்மை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். அப்படி மக்கள் பிரதிநிதிகள் நம்மை ஆண்டு கொண்டிருக்கும்போது மக்கள் சொத்தையும் மக்கள் வரி மூலம் ஏற்படுத்தி வைத்திருக்கும் சொத்துக்களை எல்லாம் தீ வைத்து சேதம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அதைப் பார்த்துக்கொண்டு போலீஸ் சும்மா இருக்க வேண்டுமென்று சொன்னால் இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடியாது என்பதைச் சிந்தித்துப் பார்த்து போலீஸ்காரர்கள் மிகவும் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். சென்ற மாதம் நடந்ததுபோல் இனிமேலும் வன்முறைச் செயல்கள் நடக்க ஏது ஏற்படாமல், அப்படி ஏதாவது நடந்தால் நிச்சயமாக எல்லோரையும் ப்ராசிக்யூட் செய்யவேண்டும், எல்லோருடைய பேரிலும் சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். மாணவர்களானாலும் சரி, பொது மக்களானாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி அவர்கள் பேரில் நடவடிக்கைகள் எடுக்க முற்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன். இன்று முதல் அமைச்சர் அவர்கள் பெரிய மனது வைத்து குழந்தைகள்தானே நம் குழந்தைகள் தானே அவர்களை வெளியேவிட்டு விடுவோம், அவர்கள் குற்றம் செய்திருந்தாலும் சரி, தண்டனை பெற்றிருந்தாலும் சரி வெளியே விட்டு விடுவோம் என்று கூறி பெரிய மனது வைத்து விட்டும் இன்று கூட அரசியல் கட்சிக்காரர்களின் தூண்டுதலின் பேரில் மறுபடியும் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இதைச் சிந்தித்துப் பார்க்கும்போது இனி எந்த தயவுதாட்சண்யமும் மறுபடியும் முதல் அமைச்சர் அவர்கள் காண்பித்தால் குழந்தைகள் என்று சொல்லிக் கொண்டு குழந்தைகள் பேரில் நடத்தக்கூடிய இந்தப் போராட்டத்திற்கு குழந்தைகளுக்கு பரிவு காட்டக்கூடிய அளவில் பரிவு காட்டினால் நிச்சயமாக இந்த நாட்டில் ரௌடி எலிமெண்ட்ஸ் அதிகமாகி இந்த நாட்டிலே ஆட்சி செலுத்த முடியாத, பொது மக்கள் வெளியில் வரக் கூட முடியாத நிலை ஏற்படும். எதற்கும் ஆட்சிக்காரர்களைத்தான் பேசுகிறார்கள். போலீஸ்காரர்கள் துப்பாக்கியால் சுட்டாலும் பொது மக்கள் ஆட்சியாளர்களைத்தான் திட்டுகிறார்கள். வெளியே ரௌடி எலிமெண்ட்ஸ் போலீசை அடித்துக் கொண்டு வெளியே பொது மக்கள் நடமாட முடியாத நிலை ஏற்பட்டாலும் அதற்கும் சர்க்காரைத்தான் குறை கூறுகிறார்கள். ஆகவே இந்த இக்கட்டான நிலைமையில் எந்தக் காரணம் கொண்டும் தயவுதாட்சண்யம் வைத்து கொண்டிருக்கவே கூடாது என்று கூறி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க எந்த விதமான தயக்கமும் காட்டக்கூடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என் மாவட்டத்தில் நேற்று நடந்த சம்பவங்களுக்கு, இன்று இங்கு போலீஸ் மான்யக் கோரிக்கை இருக்கிற காரணத்தினால் ஒரு அவசரப் பிரேரணையோ அல்லது முதல் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கோ கொண்டு வரவில்லை. அதன் விவரங்கள் பூராவும் பற்றி போலீஸுக்குத் தகவல்கள் கிடைத்திருந்தால் அதை முதல் அமைச்சர் அவர்கள் இங்கு விளக்கிச்சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.



***திரு. டி. பி. ஏழுமலை**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து என் அபிப்பிராயங்களைச் சொல்ல பிரியப்படுகிறேன். நீதி நிர்வாகம், ஆட்சி அரசியல் போன்ற இத்துறைகள் அத்தனையும் சரியான முறையில் நடப்பதற்கு இந்த நாட்டிலே போலீஸ் இலாகாவின் நண்பர்களுடைய உதவி மிகவும் அதிகம் தேவை என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். அந்த முறையில் ஆட்சியில் இருக்கிற அத்தனை மக்களும் நீதியோடு வாழ வேண்டும், நல்ல முறையில் மக்கள் தங்களுடைய குடும்பங்களின் நலனைக் கவனிக்கவேண்டுமென்று சொன்னால் அமைதி இருந்தால்தான் அந்தக் குடும்பங்கள் நல்ல வாழ்வு வாழ முடியும். அப்படிப் பார்க்கிறபோது போலீஸார் தங்கள் நிர்வாகத்தைச் சிறந்த முறையில் செய்தால்தான் நாட்டில் அமைதி நிலவ முடியும். நாட்டில் மக்கள் நல்வாழ்வு வாழ, குறிப்பாக ஏழை மக்கள் நல்வாழ்வு வாழ அமைதி இருக்க வேண்டும் என்பது யாவரும் அறிந்ததே. இதற்காகப் பணியாற்றுகிற போலீஸ்காரர்களுடைய குடும்ப வாழ்க்கையை நல்லமுறையில் கவனித்துக்கொள்வது நம்முடைய கடமையாக இருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது ஒரு தனிப்பட்ட கான்ஸ்டேபிளை எடுத்துக் கொண்டால் அவருடைய வருமானம் என்ன, அவருடைய குடும்பத்தில் இருக்கிறவர்களின் எண்ணிக்கை என்ன, அவர்களுடைய குடும்பத்தை எப்படி நடத்துகிறார்கள் என்பதை எல்லாம், ஆட்சியில் இருக்கிற நாம் சரியாகக் கவனித்து அவர்களுடைய குடும்பங்களில் இன்னல் இல்லாமல் வாழ்ந்து நல்ல நீதியை நிலைநாட்டுகிற அளவில் அவர்கள் நேர்மையான வழியில் செல்வதற்கு ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஒரு சில இடங்களில் பணியாற்றுகிற போலீஸ் படையினர் சரியான முறையில் அவர்கள் தங்கள் பணியை ஆற்றவில்லை என்று சொன்னால் அதற்குக் காரணம் அவர்களுடைய குடும்பத்தில் இருக்கிற இன்னல்கள் தான் என்பதை நாம் மறுக்க முடியாது. சுதந்திர நாட்டில் வாழ்கிற நாம் தனி மனிதன் சுதந்திரம் இன்றைக்குத் தலை தெரியாமல் இருக்கும் நிலையில்தான் இருக்கிறோம். எதை எடுத்தாலும் தனி மனிதன் சுதந்திரம் என்று கூறிக்கொண்டு தனி மனிதனை அல்லாத ஒரு கூட்டத்தையே ஒழித்துக் கட்டுகிற நிலையில் அவர்கள் மனித சுதந்திரம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இன்று ஒரு கான்ஸ்டபிளுக்கு 90 ரூபாய், சர்வீஸான கான்ஸ்டபிளுக்கு 100 ரூபாய் கொடுக்கிறோம். குறிப்பாக திருவொற்றியூரிலிருந்து சைதாப்பேட்டைக்கு ஒரு கான்ஸ்டபிள் காலையில் சைதாப்பேட்டை கோர்ட்டுக்கு வந்து கேஸ் நடத்தி விட்டு மாலையில் திரும்பிச் செல்ல வேண்டுமென்றால் அவருக்குக் கொடுக்கிற படி 1 ரூபாய் 25 நயாபைசா. ஆகவே அவருக்குப் பலவித தொந்தரவுகள் இருக்கின்றன. இதை எல்லாம் கவனிக்கவேண்டுமென்று சர்க்காரை நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அண்மையில் நடந்த மொழிக் கிளர்ச்சிபற்றி பல விஷயங்களை இங்கு சொன்னார்கள். எனக்கு முன்னால் பேசிய திரு மாதவன் அவர்கள் கனம் அங்கத்தினர் திரு. ராஜேந்திரன் அவர்கள் வீட்டில் கலவரத்தை ஒரு சிலர் நடத்தியதாகவும் போலீஸுக்கும், முதல் அமைச்சர் அவர்களுக்கும் தகவல் கொடுத்தும் அவர்களைக் காப்பாற்ற வரவில்லை என்று ரொம்ப வருத்தத்தோடு சொன்னார்கள். வாஸ்தவம்தான். இதைவிடச் சில முக்கியமான ஆபத்தான செயல் வேறு இடத்தில் இருந்தால்தான் அங்கு போய் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பணி போலீஸ்காரர்களுக்கு இருக்கிறது. அதை மறுக்கக் கூடாது. ஒரு விஷயத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். திரு. எஸ்.எஸ். ராஜேந்திரன் அவர்கள் பெற்ற புகழ் நம் நாடு சுதந்திரம் பெற்ற பிறகுதான் அது அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. அவர்களுக்கு ஏவலாளர்கள் நிறையப் பேர்கள் உண்டு. கூப்பிட்ட நேரத்தில் ஆள்கள் வந்து நிற்கும் சக்தி படைத்தவர் திரு. ராஜேந்திரன் அவர்கள். அது மட்டுமல்ல, தன்னைக் காப்பற்றிக்கொள்ள வேண்டிய வசதி படைத்தவர். ஆனால் எனக்கு நேர்ந்ததையும் உதாரணமாக சொல்லுகிறேன். நான் 13 வருடங்களாக இந்தச் சட்டசபையில் இருக்கிறேன். பொன்னேரி என் தொகுதி. 12-ம் தேதி பொன்னேரிக்குச் சென்றிருந்தேன். திருவொற்றியூரில் சென்ற 12-ம் தேதி இந்தி எதிர்ப்புக் கலகம் நடந்தது, பல கொடுமைகள் நடத்தினார்கள். பிறகு சுமார் நாலு மணி

[திரு. ஜே. மாதா கவுடர்] [13th March 1965

இருந்த நிலை என்ன ? அன்று காங்கிரஸ்காரர்கள் செய்யவில்லையா, அன்று இப்படி காங்கிரஸ்காரர்கள் குறிப்பிடவில்லையா ? அன்று காங் இரஸ்காரர்கள் தந்திக் கம்பிகளை அறுக்கவில்லையா, அன்று காங்கிரஸ் காரர்கள் ரெயிலிலுக்கு தீ வைக்கவில்லையா, என்றெல்லாம் குறிப்பிட்டார் கள். அன்று நம்மை ஆண்டு கொண்டிருந்தவர்கள் யார் ? இன்று நம்மை ஆண்டு கொண்டிருப்பது யார் ? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்று அன்னியன் நம்மை ஆண்டு கொண்டு இருந்தான். ஆகவே அவர்களுக்கு என்னென்ன தொல்லைகள் கொடுக்க வேண்டுமோ அவற்றைக் கொடுத்தால்தான் அவர்கள் ஆட்சியை அகற்ற முடியும் என்று அன்று செய்யப்பட்டது. ஆனால் இன்று நம்மை ஆண்டு கொண் டிருப்பது யார் ? இன்று ஜனநாயக நாட்டில் மக்கள் பிரதிநிதிகள் நம்மை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். எந்த அரசும் இன்று நம்மை ஆண்டு கொண்டிருக்கவில்லை. எந்த ராஜாவும் நம்மை ஆண்டுகொண் டிருக்கவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் நம்மை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். அப்படி மக்கள் பிரதிநிதிகள் நம்மை ஆண்டு கொண்டிருக்கும்போது மக்கள் சொத்தையும் மக்கள் வரி மூலம் ஏற்படுத்தி வைத்திருக்கும் சொத்துக்களை எல்லாம் தீ வைத்து சேதம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அதைப் பார்த்துக்கொண்டு போலீஸ் சும்மா இருக்க வேண்டுமென்று சொன்னால் இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடியாது என்பதைச் சிந்தித்துப் பார்த்து போலீஸ் காரர்கள் மிகவும் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொள் கிறேன். சென்ற மாதம் நடந்ததுபோல் இனிமேலும் வன்முறைச் செயல் கள் நடக்க ஏது ஏற்படாமல், அப்படி ஏதாவது நடந்தால் நிச்சயமாக எல்லோரையும் ப்ராசிகியூட் செய்யவேண்டும், எல்லோருடைய பேரிலும் சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். மாணவர்களானா லும் சரி, பொது மக்களானாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி அவர்கள் பேரில் நட வடிக்கைகள் எடுக்க முற்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள பிரியப் படுகிறேன். இன்று முதல் அமைச்சர் அவர்கள் பெரிய மனது வைத்து குழந்தைகள்தானே நம் குழந்தைகள் தானே அவர்களை வெளியேவிட்டு விடுவோம், அவர்கள் குற்றம் செய்திருந்தாலும் சரி, தண்டனை பெற்றிருந் தாலும் சரி வெளியே விட்டு விடுவோம் என்று கூறி பெரிய மனது வைத்து விட்டும் இன்று கூட அரசியல் கட்சிக்காரர்களின் தூண்டுதலின் பேரில் மறுபடியும் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இதைச் சிந்தித்துப் பார்க்கும்போது இனி எந்த தயவுதாட்சண்யமும் மறுபடியும் முதல் அமைச்சர் அவர்கள் காண்பித்தால் குழந்தைகள் என்று சொல்லிக் கொண்டு குழந்தைகள் பேரில் நடத்தக்கூடிய இந்தப் போராட்டத்திற்கு குழந்தைகளுக்கு பரிவு காட்டக்கூடிய அளவில் பரிவு காட்டினால் நிச்சயமாக இந்த நாட்டில் ரௌடி எலிமெண்ட்ஸ் அதிகமாகி இந்த நாட்டிலே ஆட்சி செலுத்த முடியாத, பொது மக்கள் வெளி யில் வரக் கூட முடியாத நிலை ஏற்படும். எதற்கும் ஆட்சிக் காரர்களைத்தான் பேசுகிறார்கள். போலீஸ்காரர்கள் துப்பாக்கியால் சுட் டாலும் பொது மக்கள் ஆட்சியாளர்களைத்தான் திட்டுகிறார்கள். வெளியே ரௌடி எலிமெண்ட்ஸ் போலீசை அடித்துக் கொண்டு வெளியே பொது மக்கள் நடமாட முடியாத நிலை ஏற்பட்டாலும் அதற்கும் சர்க்காரைத் தான் குறை கூறுகிறார்கள். ஆகவே இந்த இக்கட்டான நிலைமையில் எந்தக் காரணம் கொண்டும் தயவுதாட்சண்யம் வைத்து கொண்டிருக்கவே கூடாது என்று கூறி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க எந்த விதமான தயக்கமும் காட்டக்கூடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என் மாவட்டத்தில் நேற்று நடந்த சம்பவங்களுக்கு, இன்று இங்கு போலீஸ் மான்யக் கோரிக்கை இருக்கிற காரணத்தினால் ஒரு அவசரப் பிரேரணையோ அல்லது முதல் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கோ கொண்டு வரவில்லை. அதன் விவரங்கள் பூராவும் பற்றி போலீஸுக்குத் தகவல்கள் கிடைத்திருந்தால் அதை முதல் அமைச்சர் அவர்கள் இங்கு விளக்கிச்சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.



13th March 1965]

***திரு. டி. பி. ஏழுமலை :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து என் அபிப்பிராயங்களைச் சொல்ல பிரியப்படுகிறேன். நீதி நிர்வாகம், ஆட்சி அரசியல் போன்ற இத்துறைகள் அத்தனையும் சரியான முறையில் நடப்பதற்கு இந்த நாட்டிலே போலீஸ் இலாகாவின் நண்பர்களுடைய உதவி மிகவும் அதிகம் தேவை என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். அந்த முறையில் ஆட்சியில் இருக்கிற அத்தனை மக்களும் நீதியோடு வாழ வேண்டும், நல்ல முறை யில் மக்கள் தங்களுடைய குடும்பங்களின் நலனைக் கவனிக்கவேண்டு மென்று சொன்னால் அமைதி இருந்தால்தான் அந்தக் குடும்பங்கள் நல்ல வாழ்வு வாழ முடியும். அப்படிப் பார்க்கிறபோது போலீஸார் தங்கள் நிர்வாகத்தைச் சிறந்த முறையில் செய்தால்தான் நாட்டில் அமைதி நிலவ முடியும். நாட்டில் மக்கள் நல்வாழ்வு வாழ, குறிப்பாக ஏழை மக்கள் நல்வாழ்வு வாழ அமைதி இருக்க வேண்டும் என்பது யாவரும் அறிந்ததே. இதற்காகப் பணியாற்றுகிற போலீஸ்காரர்களுடைய குடும்ப வாழ்க்கையை நல்லமுறையில் கவனித்துக்கொள்வது நம்முடைய கடமை யாக இருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது ஒரு தனிப்பட்ட கான்ஸ் டேபிளை எடுத்துக் கொண்டால் அவருடைய வருமானம் என்ன, அவரு டைய குடும்பத்தில் இருக்கிறவர்களின் எண்ணிக்கை என்ன, அவர்க ளுடைய குடும்பத்தை எப்படி நடத்துகிறார்கள் என்பதை எல்லாம், ஆட்சி யில் இருக்கிற நாம் சரியாகக் கவனித்து அவர்களுடைய குடும்பங்களில் இன்னல் இல்லாமல் வாழ்ந்து நல்ல நீதியை நிலைநாட்டுகிற அளவில் அவர்கள் நேர்மையான வழியில் செல்வதற்கு ஊக்கம் கொடுக்க வேண்டு மென்று இந்தச் சமயத்தில் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஒரு சில இடங்களில் பணியாற்றுகிற போலீஸ் படையினர் சரியான முறையில் அவர்கள் தங்கள் பணியை ஆற்றவில்லை என்று சொன்னால் அதற்குக் காரணம் அவர்களுடைய குடும்பத்தில் இருக்கிற இன்னல்கள் தான் என்பதை நாம் மறுக்க முடியாது. சுதந்திர நாட்டில் வாழ்கிற நாம் தனி மனிதன் சுதந்திரம் இன்றைக்குத் தலை தெரியாமல் இருக்கும் நிலையில்தான் இருக்கிறோம். எதை எடுத்தாலும் தனி மனிதன் சுதந் திரம் என்று கூறிக்கொண்டு தனி மனிதனை அல்லாத ஒரு கூட்டத்தையே ஒழித்துக் கட்டுகிற நிலையில் அவர்கள் மனித சுதந்திரம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இன்று ஒரு கான்ஸ்டபிளுக்கு 90 ரூபாய், சர்வீஸான கான்ஸ்டபிளுக்கு 100 ரூபாய் கொடுக்கிறோம். குறிப்பாக திருவொற்றியூரிலிருந்து சைதாப்பேட்டைக்கு ஒரு கான்ஸ்டபிள் காலையில் சைதாப்பேட்டை கோர்ட்டுக்கு வந்து கேஸ் நடத்தி விட்டு மாலையில் திரும்பிச் செல்ல வேண்டுமென்றால் அவருக்குக் கொடுக்கிற படி 1 ரூபாய் 25 நயாபைசா. ஆகவே அவருக்குப் பலவித தொந்தரவு கள் இருக்கின்றன. இதை எல்லாம் கவனிக்கவேண்டுமென்று சர்க்காரை நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அண்மையில் நடந்த மொழிக் கிளர்ச்சிபற்றி பல விஷயங்களை இங்கு சொன்னார்கள். எனக்கு முன்னால் பேசிய திரு மாதவன் அவர்கள் கனம் அங்கத்தினர் திரு. ராஜேந் திரன் அவர்கள் வீட்டில் கலவரத்தை ஒரு சிலர் நடத்தியதாகவும் போலீ ஸுக்கும், முதல் அமைச்சர் அவர்களுக்கும் தகவல் கொடுத்தும் அவர் களைக் காப்பாற்ற வரவில்லை என்று ரொம்ப வருத்தத்தோடு சொன்னார் கள். வாஸ்தவம்தான். இதைவிடச் சில முக்கியமான ஆபத்தான செயல் வேறு இடத்தில் இருந்தால்தான் அங்கு போய் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பணி போலீஸ்காரர்களுக்கு இருக்கிறது. அதை மறுக்கக் கூடாது. ஒரு விஷயத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். திரு. எஸ்.எஸ். ராஜேந்திரன் அவர்கள் பெற்ற புகழ் நம் நாடு சுதந்திரம் பெற்ற பிறகுதான் அது அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. அவர்களுக்கு ஏவலாளர்கள் நிறையப் பேர்கள் உண்டு. கூப்பிட்ட நேரத் தில் ஆள்கள் வந்து நிற்கும் சக்தி படைத்தவர் திரு. ராஜேந்திரன் அவர்கள். அது மட்டுமல்ல, தன்னைக் காப்பற்றிக்கொள்ள வேண்டிய வசதி படைத்தவர். ஆனால் எனக்கு நேர்ந்ததையும் உதாரணமாக சொல்லுகிறேன். நான் 13 வருடங்களாக இந்தச் சட்டசபையில் இருக்கிறேன். பொன்னேரி என் தொகுதி. 12-ம் தேதி பொன்னேரிக்குச் சென்றிருந் தேன். திருவொற்றியூரில் சென்ற 12-ம் தேதி இந்தி எதிர்ப்புக் கலகம் நடந்தது, பல கொடுமைகள் நடத்தினார்கள். பிறகு சுமார் நாலு மணி

இருக்கும். ஒவ்வொரு காங்கிரஸ்காரரர் வீடாக இந்தக் கலகக் கூட்டத்தினர் (தொழிற்சாலைகளில் வேலை செய்யக் கூடியவர்கள்) அங்குள்ள முனிசிபல் சேர்மன் வீட்டுக்குச் சென்று தேசியக் கொடியை இறக்கி அங்கேயே கொளுத்தி பிள்ளைகளை வரிசையாக நிறுத்தி இந்தி ஒழிக என்று கத்தச் சொல்லி சேர்மனைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள். அவர் ஒரு வீட்டில் ஓடி ஒளிந்து கொண்டார்கள். பின்பு முனிசிபல் கவுன்சில் கட்சித் தலைவர் பக்தவத்சலம் அவர்கள் வீட்டிற்கும் சென்று அப்படிச் செய்தார்கள். ஒவ்வொரு வீடாகச்சென்று கொண்டிருந்தபோது எழுமலை வீட்டுக்குச் செல்லுங்கள் என்று சொன்னார்களாம். வீட்டில் என் தம்பி மட்டும் இருந்தான். என் வீட்டில் பிள்ளைகள் இருப்பது ஒரு ஹாஸ்டல் போல் இருக்கும். சின்னப் பிள்ளைகள், எனக்கும் என் தம்பிக்கும் என் அண்ணுவுக்கும் சேர்த்துச் சொல்கிறேன். இவ்வளவு குழந்தைகளும் இருந்தார்கள். அப்போது எங்கள் வீட்டுக்குச் சிலர் வந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம் உங்கள் வீட்டுக்கு தீ வைக்கப் போகிறார்கள் என்று சொல்லி ஜாக்கிரதையாக இருங்கள் என்றும் சொல்லிவிட்டுப் போனார்கள். உடனே என்னுடைய தம்பி போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார், என்னுடைய அண்ணன் அப்போது வீட்டில் இல்லை, எங்களுக்குப் பாதுகாப்பு கொடுங்கள் என்று கதறியிருக்கிறார். அதற்கு அங்குள்ள போலீஸ் ஸ்டேஷனிலிருந்து, அங்கிருந்த ஹெட் கான்ஸ்டபிள், இங்கு போதிய போலீஸ் பலம் இல்லை, இப்போது நான் மட்டும் தான் ஸ்டேஷனில் இருக்கிறேன். இங்கு 9 கான்ஸ்டபிள்கள் தான் உண்டு, அவர்கள் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் வந்ததும் அனுப்பிவைக்க முயற்சிக்கிறேன் என்று மிகவும் பரிதாபத்தோடு சொல்லியிருக்கிறார். என்ன செய்வது, உடனே என் தம்பியும் மற்ற எல்லோரும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு பக்கத்து வீட்டிற்குப் போயிருக்கிறார்கள். எனக்கு தகவல் தெரிந்திருந்தால் நான் உடனே போயிருக்கக்கூடும். ஆகவே இதையெல்லாம் ஒரு பிரமாதமாக நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. நம் நாடு சுதந்திரம் அடைந்த பின்னால் தான் இப்படி நாம் வந்து உட்கார்ந்து கொண்டு பேச முடிகிறது. கனம் ராஜேந்திரன் போன்ற அங்கத்தினர்கள், என் போன்ற அங்கத்தினர்கள் இங்கு வந்து இருக்கிறோம், நமக்கெல்லாம் சுதந்திரத்தோடு வாழக்கூடிய திறமை இருக்கிறது. தங்களைத் தாங்களாகவே காப்பாற்றிக்கொள்ளக்கூடிய முறையில்தான் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். இந்த நிலையில் நமது முதலமைச்சர் அவர்களுக்கு யாரும் ஞானோபதேசம் செய்ய வேண்டிய அவசியமில்லை. நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டினுடைய சுதந்திரத்திற்காகப் பாடுபட்டுவந்திருக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு, மாணவர்களாகவும், தொழிலாளர்களாகவும் இருந்து இன்றைக்குச் சட்டசபை மெம்பர்களாக வந்திருக்கும் நாம் முதலமைச்சர் அவர்களுக்கு ஞானோபதேசம் செய்யவேண்டியதில்லை. யார் யாருக்கு ஞானோபதேசம் செய்வது என்பதை எதிர்கட்சி அங்கத்தினர்கள் சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தபோலீஸ் மான்யத்தின் மீதுபேசப்படுகின்ற இந்த நேரத்தில் நான் மிகவும் பணிவோடு எதிர்க்கட்சி அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன், ஏதோ காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கெல்லாம் ஆட்சியிலும், போலீஸிலும், நிர்வாகத்திலும் எதையும் சாதிக்க முடிகிறது என்று நம்பியிருந்தால் அதை விட்டுவிடுங்கள். இன்றைக்கு காங்கிரஸ் கட்சி, பல பண்புடைய நல்ல பெரியவர்களையும் சட்ட நிபுணர்களையும் இன்றைக்கு நாட்டுக்கு வேலை செய்யவேண்டும் என்று காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு தாரை வார்த்து கொடுத்திருக்கிறது. நாங்கள் (காங்கிரஸ் கட்சிக்காரர்கள்) மிகவும் கஷ்டப்படுகின்றோம். ஏதோ காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கிறது என்றால் எல்லா காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கும் நன்மை கிடைத்துவிடும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் எதிர் கட்சிக்காரர்கள். நாங்கள் சர்க்காரில் எந்த காரியத்தைச் சொன்னாலும் விசாரிக்கிறேன் என்றுதான் எங்களிடத்திலும் அமைச்சர்கள் சொல்லுகிறார்கள். நான் பல நேரங்களில் மிக ஆவேசத்தோடு வருத்தத்தோடு முதலமைச்சர் அவர்களிடத்தில் சில குறைகளைச் சொல்லவேண்டும் என்று போவேன். ஆனால் அங்கே போனவுடன், அவர்கள் ஃபைலைத்தான் அதிகமாக பார்த்துக்கொண்டிருப்பார்கள். காரணம் ஃபைலில்தான் அதிக



மான உண்மைகள் இருக்கின்றன. நாம் சொல்வதில்கூட பல உண்மைகள் இருப்பதில்லை. முதலில் எங்களிடத்தில் விசாரிக்கிறேன் என்று சொல்லி விட்டு, ஃபைல்களை எல்லாம் பார்த்துவிட்டுதான் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஃபைலை பார்த்து, அதிலுள்ள விவரங்கள் மூலம் நாட்டு மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற ஒரே எண்ணத்தில்தான் முதலமைச்சர் அவர்கள் எப்போதும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அதைவிட்டுவிட்டு, ஏதோ 13 ஆண்டு சட்டசபையில் அங்கத்தினராக இருக்கிறேன் என்பதற்காகவோ, அல்லது ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் காரியதரிசியாக இருக்கிறேன் என்பதற்காகவோ அல்லது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவன் என்பதற்காகவோ எந்தக் காரியத்தையும் உடனடியாகச்செய்து விடுவதில்லை. நாங்கள் (காங்கிரஸ்காரர்கள்) படுகிற கஷ்டங்கள் உங்களுக்குத் தெரியாது. நாங்கள் போனால் எல்லா காரியமும் ஆகிவிடும் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எந்த வேலையும் செய்ய முடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறோம். எதை நாங்கள் சொன்னாலும் "விசாரிக்கிறோம்" என்றுதான் பதில் சொல்லுகிறார்கள். ஆனால் எதிர்க்கட்சிக்காரர்களுக்குச் சுலபமாக வேலை நடந்து விடுகிறது. இங்கே ஒரு கேள்வியைப் போட்டுவிட்டால் எல்லா விவரங்களும் கிடைத்து விடுகிறது. இப்படி ஒரு கேள்வியைச் சட்டசபையில் கேட்டுவிட்டால், அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ அல்லது மற்றவர்களோ என்ன ஆகப் போகிறதோ என்று பயந்துகொண்டு கேள்வியைக் கேட்டவருக்கு அவர் சம்பந்தப்பட்ட வேலைகளையும் செய்து விடுகிறார்கள். சில நேரங்களில் உண்மை இல்லாத விஷயங்கள் கூட இங்கே வருகின்றன. தங்களுக்குத் தோன்றிய காரியங்களையெல்லாம் இங்கு கேட்கலாம். ஆகவே காங்கிரஸ்காரர்கள்தான் எல்லாவற்றையும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நினைத்தால் ஆட்சியில் எல்லாம் நடந்துவிடுகிறது என்று நினைத்துக் கொண்டிருந்தால் தயவு செய்து அந்தச் சந்தேகத்தை விட்டுவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியில் இருக்கிறோம் என்றால் எங்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள், சங்கடங்கள் இருக்கின்றன. எங்கள் கட்சியில் கூட சொல்வார்கள், கெட்ட பிள்ளையை எப்போதும் கண்டித்துத் தான் வளர்க்கவேண்டும் என்று. அப்போது தான் அவன் ஒழுங்காக வாழ முடியும். எங்களுடைய குடும்பத்தில் பெரிய மகன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஒரு நாள் சினிமாவுக்குப் போய்விட்டு, மறுநாளும் சினிமாவுக்கு போகவேண்டும் என்று அடம் பிடித்தான். அவனை அடிப்பதற்கும் எனக்கு மனது வரவில்லை. என் மனைவி அடித்தாள்; இப்படித்தான் அடம் பிடித்தால் கண்டிக்கவேண்டியிருக்கிறது. எனக்கு இதைப்பார்த்து கஷ்டமாகத்தான் இருந்தது. என்ன செய்வது. அந்த விதத்தில் சர்க்கார் விஷயத்தில் அடம் பிடித்துக்கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களை கண்டித்துத்தான் அடக்கவேண்டும். அடம் பிடிக்கின்ற விஷயத்தில் சிறிது கண்டிப்போடு இருந்தால் தான் ஒழுங்கு இருக்க முடியும். ஆகவே முதலமைச்சர் அவர்கள் தைரியத்தோடு இருந்து, அடம் பிடித்துக்கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக்காரர்களை அடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இதை நான் என் சொல்லுகிறேன் என்றால், நான் தொழிலாளியாக இருந்து இந்தச்சட்டசபைக்கு அங்கத்தினராக வந்திருக்கிறேன். அதே போன்று பல அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். போலீஸ் கான்ஸ்டபிளாக இருந்த எனது மதிப்பிற்குரிய நண்பர் ஒருவர் இங்கு அங்கத்தினராக வந்திருக்கிறார். இதையெல்லாம் நினைக்கும்போது நாம் எந்த முறையில் இதற்கு ஆளானோம், நாட்டு மக்களுக்கு என்னென்ன வழிகளில் வேலை செய்யவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் திருவொற்றியூரில் 68 ஆயிரம் குடும்பக் கட்டுப்பாடு கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.......... (சிரிப்பு).

**கனம் சபாநாயகர் :** உணவுக்காக "குடும்பக் கார்டு" தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

. . . [13th March 1965

**திரு. டி. பி. ஏழுமலை :** மன்னிக்கவும், 68 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். இதில் தொழிற்சாலையில் வேலை செய்கின்றவர்கள் 10 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். பெரிய நகரமாகவே இருக்கிறது. இந்த இடத்தில் இருக்கக்கூடிய போலீஸ் ஸ்டேஷனில் 15 கான்ஸ்டபிள்கள் தான் மொத்தம் இருக்கிறார்கள். எ.எஸ்.ஐ., எஸ்.ஐ. என்ற இரண்டு பேர்கள், மற்றவர்கள் கான்ஸ்டபிள்கள். இது போதாது, இதை டவுன் போலீஸ் ஸ்டேஷனாக மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தொழிற்சாலைகள் இருக்கக்கூடிய அம்பத்தூர், வில்லிவாக்கம், எண்ணூர் போன்ற இடங்களில் எல்லாம் டவுன் ஸ்டேஷன்களை அமைத்தால் வசதியாக இருக்கும். குறிப்பாக தீ அணைக்கும் படை சமீபத்தில் நடந்த கலவரத்தின் போது நல்ல முறையில் செயலாற்றி இருக்கிறார்கள். எங்கள் பகுதியில் இரண்டு ரயில் பெட்டிகளுக்கு தீ வைக்கப்பட்டது. அதையெல்லாம் சீக்கிரமாகவே அணைப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். இவர்களுக்கும் வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, திருவொற்றியூரில் தீ அணைக்கும் நிலையம் அமைக்க கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். எஸ். மணி :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, போலீஸ் மான்யத்தின் மீது கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களை சொல்லவிரும்புகிறேன். உள்ளபடியே உலகத்திலேயே இன்றையதினம் ஸ்காட் லாண்ட் போலீசார் தான் நல்ல முறையில் பணியாற்றுகிறார்கள் என்று எல்லோரும் பாராட்டுகிறார்கள். அதற்கடுத்தபடியாக இந்திய உபகண்டத்தில் தமிழ்நாட்டிலுள்ள போலீசாரை பாராட்டுகிறார்கள். அந்த முறையில் திறம்பட பணியாற்றிவருகிறார்கள் தமிழ்நாட்டு போலீசார் என்பதை நாங்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத்திலும் சொல்லி பாராட்டியிருக்கிறோம். இந்த நேரத்திலும் பாராட்டுகிறோம். இந்த அளவுக்கு பாராட்டப்படுகிற போலீசார் இன்றையதினம் ஒரு கட்சியின் ஆதிக்கத்திற்கும், நிர்ப்பந்தத்திற்கும் ஆளாக்கப்படுகிறார்கள், பயன்படுத்தப்படுகிறார்கள் என்கின்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். அதல்லாமல் வேறு எந்தவிதமான வெறுப்போடும் நாங்கள் போலீசாரைப்பற்றி சொல்லவில்லை என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

போலீசாருக்கு இன்றையதினம் ஓரளவுக்கு ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறார்கள். கடந்த சட்டமன்றத்திலேயே நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். அவர்களுடைய அடிப்படை சம்பளம் குறைந்த அளவு 100 ரூபாயாவது இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டோம். நாங்கள் குறிப்பிட்ட கோரிக்கைகள் நேர்மையானதா என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்க தவறிவிட்டார்கள். அது மட்டுமல்ல, போலீசார் 24 மணி நேரமும் பணியாற்றவேண்டியிருக்கிறது. இவ்விதம் பணியாற்றும் அவர்களுக்கு 20 நாட்களுக்கு மேல் டி.எ. கொடுப்பதில்லை. மற்ற நாட்களில் எப்படி அந்த போலீசார் வாழ்க்கையை கழிப்பது. மீதி பத்து நாட்களுக்கு எங்கே போய் சாப்பிடுவார்கள் ? இதன் காரணமாகத்தான் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யவேண்டிய நிலைமைக்கும் லஞ்சம் வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் ஆளாகிறார்கள். ஒரு தொழிற்சாலையில் வேலை செய்கின்ற தொழிலாளியை எடுத்துக்கொண்டால் அவர் ஒரு மணி நேரம் கூடுதலாக வேலை செய்தால் இரட்டிப்பு சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் வீட்டை விட்டு வெளியே வந்து வேலை செய்கின்ற இந்த போலீஸ் தொழிலாளர்களுக்கு இன்றையதினம் ஊதியம் சரிவர கொடுக்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, போலீசாருக்கு சைக்கிள்கள் கொடுக்கவேண்டும் என்று கடந்த கூட்டத்தில் நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். அவர்களுக்கு சைக்கிள்கள் இனாமாக கொடுக்கவேண்டும், அது முடியவில்லை என்றால் கடன் மூலமாகவாவது கொடுக்கப்படவேண்டும் என்று இதே மன்றத்தில் சொல்லியிருக்கிறோம்.

அடுத்து, சட்டம் அமல் நடத்தப்படுவது சம்பந்தமாக சொல்லப்போனால் 1,000 குற்றவாளிகள் தப்பித்துக்கொண்டாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பது தான் சட்டத்தின் உள் நோக்கம். சமீபத்தில் நடை



13th March 1965] [திரு. எம். எஸ். மணி]

பெற்ற கலவரத்தின்போது நிரபராதிகள் பலர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வஞ்சம் தீர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள், காங்கிரஸ் கட்சியினரின் தூண்டுதலால். ஆனால் நாட்டில் நமது போலீஸ் அமைச்சர் அவர்களுக்கு நல்ல பெயர். இந்த பொல்லாங்குகளில் ஒன்றும் அவர் ஈடுபடவில்லை என்று . . (சிரிப்பு)

அதே நேரத்தில் இந்தப் பழி, பாவத்தை முதல் அமைச்சர் அவர்கள் 10-00
ஏன் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதை எண்ணிப் பார்க்க வேண்டாமா ? a.m.
அதை எண்ணிப்பார்த்தால் உள்ளபடியே உண்மை புரியும்.

சமீபத்திலே நடைபெற்ற கலவரத்தைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சட்டப்படி போராட்டம் நடைபெறுவதை ஜனநாயக நாட்டிலே இன்றைய தினம் அனுமதிக்கிறார்கள். ஆனால் இங்கே சட்டப்படி போராட்டம் நடைபெறும் என்று சொன்னால் அனுமதி கிடையாது. அனுமதித்திருந்தால் இப்படிப்பட்ட கலவரம் ஏற்படுவதைத் தடுத்திருக்க முடியும். சமீபத்தில் நடந்த கலவரத்திலே இண்டியன் எக்ஸ்பிரஸ் ஃபோட்டோகிராஃபர் தாக்கப்பட்டிருக்கிறார். ஆனால் நேற்றைய தினம் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அமெரிக்காவில் நீக்ரோக்கள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். அதை பத்திரிக்கைகளில் படம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அங்கே அந்த மாதிரிப் போராட்டங்களைப் படம் எடுக்க அனுமதிக்கப்படுகிறது. அதே போன்ற ஜனநாயக நாடாகிய நம் நாட்டில் ஃபோட்டோக்ராஃபர்கள் தாக்கப்படுகிறார்கள் என்றால் என்ன காரணம் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். அதே போல பல சம்பவங்களை நான் இங்கே சொல்ல முடியும்.

இன்றைக்கு சாராய வழக்கு என்று பல பகுதிகளில் போடப்படுகின்றன. உண்மையாகச் சாராயம் குடிக்கின்றவர்கள் மீது வழக்குப் போடப்படுகிறதா என்றால் இல்லை. மேலதிகாரிகள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வருகிறார்கள். கடந்த மாதம் எவ்வளவு கேஸ் என்று கேட்கும்போது 20 கேஸ் என்று சொல்லுகிறார்கள். இந்த மாதம் 20 கேஸ்கள் இல்லை என்றால் அங்கு இருக்கிற போலீசார் மீதும், சப்-இன்ஸ்பெக்டர் மீதும் நடவடிக்கை எடுக்கிறார்கள். நடவடிக்கை எடுத்துவிடுவார்களே என்ற பயத்தின் காரணமாக அப்பாவிகளைப் பிடித்துக் கொண்டு போய் வாயில் சாராயத்தை ஊற்றி அவர்கள் மேல் வழக்குகளைப் போட்டு விடுகிறார்கள். போலீஸ் ஸ்டேஷனிலேயே சாராயத்தை வைத்திருக்கிறார்கள் திருச்சியிலே. அதைப் பார்த்து திருச்சியில் உள்ள எஸ்.பி. அவர்கள் கண்டித்து, போலீஸ் ஸ்டேஷனில் சாராயம் வைக்கக்கூடாது, கஞ்சா வைக்கக் கூடாது என்ற முறையைக் கொண்டு வந்திருக்கிறார்.

இன்றைய தினம் ஒலிபெருக்கி அனுமதி அவர்கள் கொடுக்கிறார்கள். மூன்று மணி நேரத்திற்குத் தான் அனுமதி கொடுக்கிறார்கள். ரயில்கள் காலதாமதம் ஆகிப்போவதால் சொற்பொழிவாளர்கள் தாமதம் ஏற்பட்டாலும் அரை மணி நேரம் கூட அதிகமாகப் பேச முடியாது. ஜனநாயக நாட்டில் பேசுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

54-வது செக்ஷன்படி இன்றைய தினம் பலரைப் பிடித்துச் சிறையில் போட்டு விடுகிறார்கள். ஊர், பெயரைக் கேட்கும்போது திரும்பத் திரும்பக் கேட்கும்போது ஒன்றுக்கொன்று மாற்றி மாற்றி சொன்னால் அவர்களைப் பிடிப்பது இந்த செக்ஷன்படி. இன்றைய தினம் சட்ட மன்ற உறுப்பினர்கள், 30,000 அல்லது 40,000 மக்கள் வாக்குகளைப் பெற்றவர்களை 54-வது செக்ஷன்படி உள்ளே தள்ளுகிறார்கள். நகராட்சி மன்றத் தேர்தலில் போலீசார் நல்ல முறையில் நடந்துகொண்டதற்காகப் போலீசாரைப் பாராட்டுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். திருச்சி நகராட்சித் தேர்தலில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நகராட்சி மன்றத் தேர்தலில் பொய் ஓட்டுப் போடுவதற்காகச் சென்றவர்களைப் பிடித்துக் கொடுத்தபோது அதைக் காங்கிரஸ்காரர் தடுத்ததன் காரணமாக அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். முன்னேற்றக் கழகம், காங்கிரஸ்காரர்கள் ஓட்டுக்குப் பணம் கொடுக்கி

றூர்கள், ஓட்டுக்குப் பணம் கொடுப்பது தவறு, அதைப் போலீசார் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது, " நீங்களும் பணம் கொடுப்பது தானே " என்று திருச்சி நகராட்சி மன்றத் தேர்தலில் ஒரு பெரிய போலீஸ் அதிகாரி குறிப்பிட்டார். "அவர்கள் கொடுக்கிறூர்கள் என்றுல், " நீங்களும் பணம் கொடுங்கள் " என்று சொல்லும் அளவுக்கு போலீஸ் துறை ஆட்படுத்தப்பட்டிருக்கிறது.

விலைவாசிப் போராட்டத்தில் நானும் என்னைச் சேர்ந்த 25 பேர்களும் மறியல் செய்தோம். " மறியல் செய்தோம், மறியல் செய்தது குற்றம் என்றுல் குற்றத்தை ஒத்துக்கொள்கிறேும், கொடுக்கக்கூடிய தண்டனையை ஏற்றுக்கொள்கிறேும் " என்று சொன்னேும். போலீசார் வழக்கை ஜோடித்து கோர்ட்டிலே நிறுத்தி " அப்போது ஒரு க்ளார்க் வந்தார், மறியல் செய்ததின் காரணமாக அவருடைய வேலைக்கு பாதிப்பு ஏற்பட்டது " என்று ஒரு க்ளார்க்கை வைத்து சொல்லச் சொல்லி தண்டனை வாங்கிக் கொடுத்தார்கள். இதிலே தாசில்தார் சாட்சி சொல்ல மறுத்து விட்டார். ஆர். டி. ஓ. சாட்சி சொல்ல மறுத்து விட்டார். ஒரு க்ளார்க்கை பிடித்து சாட்சி சொல்லச் செய்து தண்டனை வாங்கிக் கொடுக்கிறூர்கள். " நாங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறேும் " என்று பகிரங்கமாகச் சொல்லியும், பொய் வழக்குகளை ஜோடிப்பானேன் ? இது வரையில்......

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் " பொய் " என்று சொல்லுகிறூர். " பொய் " என்ற வார்த்தையைச் சபையில் உபயோகிக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எம். எஸ். மணி :** நான் " பொய் வழக்கு " என்று சொன்னேனே தவிர " பொய் " என்று சொல்லவில்லை . .

**கனம் சபாநாயகர் :** " பொய் " என்று சொல்லாமல் " பொய் வழக்கு " என்று எப்படிச் சொல்ல முடியும் ? பர்ஸனலாகச் சொல்லவில்லை என்று சொல்லவேண்டும்.

**திரு. எம். எஸ். மணி :** இரவு நேரத்தில் தி. மு. கழகத் தோழர்களை பிடித்து மூன்று நாட்கள் ரிமாண்டில் வைத்துவிடுகிறூர்கள். சமீபத்தில் அந்த மாதிரி நூற்றுக்கணக்கான பேர்கள் வைக்கப்பட்டார்கள். ரிமாண்டில் அடிக்கலாமா என்று எண்ணிப்பார்க்கவேண்டும். திருச்சியில் சமீபத்தில் கைது செய்யப்பட்டவர்கள் சப்-ஜெயிலில் இருக்கும்போது அவருடைய கடையைப் போலீசார் சூறையாடியிருக்கிறூர்கள். காங்கிரஸ்காரர் புகார் கொடுத்ததன் காரணமாக அவர் கைது செய்யப்பட்டிருக்கிறூர். திருச்சியில் உள்ள நம் நாடு, முரசொலிப் பத்திரிகைகளின் ஏஜெண்டுகள் என்ற காரணத்திற்காக, காங்கிரஸ்காரர்கள் புகார் செய்யப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறூர்கள்.

என் குடும்பத்தில் நடந்த ஒன்றைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். எனக்கு மனைவி மூலமாக வந்த மைத்துனர் ஒருவர் . . .

**கனம் சபாநாயகர் :** எல்லோரும் தங்கள் குடும்பத்தைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது ? (சிரிப்பு).

**திரு. எம். எஸ். மணி :** என் மனைவி மூலமாக வந்த மைத்துனர்கள் இருவர். தங்கை மூலமாக வந்த மைத்துனர் இன்றையதினம் நகராட்சி மன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர். அவருக்கு என்னுடைய இரு மைத்துனர்களைப் பிடிக்காது. நானும் அவருக்கு பிடிக்கமாட்டேன். இதனுல் குடும்பத்தில் தகராறு. காங்கிரஸ் கட்சியிலிருக்கிற மைத்துனர் போலீசில் புகார் கொடுத்திருக்கிறூர். போலீஸார் எனது இரு மைத்துனர்களை கைது செய்ய மறுத்து விட்டார்கள். உடனே இங்கே அமைச்சருக்கு வந்திருக்கிறது மனு. இங்கேயிருந்து உத்திரவு அனுப்பி போலீஸாரைக் கைது செய்யச் சொல்லியிருக்கிறூர்கள். என்னுடைய பையன் கார்ப்பரேஷனில் வேலை செய்கிறுன். என்னுடைய வீட்டுக்கு சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர், 25 வயது உள்ளவர், என் பையனது நண்பன், என் வீட்டுக்கு வருகிறுன் என்று காங்கிரஸ் கட்சியிலிருந்து அவன் மீது குற்றத்தை சுமத்தி அவன் கைது செய்யப்பட்டு இப்போது ஜாமீனில் வந்திருக்கிறுன். திருச்சி நகராட்சி மன்றத்தில். . .



(மணியடிக்கப்பட்டது).

**கனம் சபாநாயகர் :** இப்படியே போனுல் என்ன செய்வது ? இன்னும் 15, 20 பேர்கள் இருக்கிறூர்கள். ஆகையால் இதோடு கனம் அங்கத்தினர் தங்கள் பேச்சை முடித்துக்கொள்ளலாம்.

**திரு. எம். எஸ். மணி :** திருச்சி நகராட்சி மன்றத் தேர்தலில் யார் யார் அங்கத்தினராக வருவதற்கு போட்டியிட நிறுத்தப்பட்டார்களோ அவர்களெல்லாம் போலீஸார் மூலமாக கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கிறூர்கள். இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் சிந்தித்து நல்லதொரு நிலைமையை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. பி. பழனி :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட போலீஸ் மான்யக் கோரிக்கையை வரவேற்று, ஆதரித்து என் கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தி, மக்களுடைய உரிமைக்கும், உடைமைக்கும், உயிருக்கும், பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய ஒரு சிறந்த இலாகா போலீஸ் இலாகா என்று சொன்னுல் அது மிகை ஆகாது. போலீஸ் இலாக்காவில் பணியாற்றுகிற அதிகாரிகள் எப்படி வெற்றி பெறுகின்றூர்கள் என்பது குறித்து நமது ஒப்பற்ற தலைவர் நேருஜி அவர்கள் ஒரு மாநாட்டில் இவ்வாறு அழகாகக் குறிப்பிட்டார்கள் :—

" The success of a Police officer lies wherever he may be stationed and whatever he may be doing in the measure he can obtain the co-operation of the public ".

எப்போது பொது மக்கள் மத்தியில் உதவி ஒத்துழைப்பை போலீஸ் இலாக்காவைச் சேர்ந்தவர்கள் பெறுகிறூர்களோ அன்றைய தினம்தான் முழு அளவுக்கு வெற்றி பெறமுடியும் என்று குறிப்பிட்டிருக்கிறூர்கள் என்ற உண்மையை மன்றத்தின், குறிப்பாக அங்கத்தினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு துறைகளில் சிறப்பு இருப்பதுபோல, போலீஸ் இலாகாவும் தனியான பெருமையை, சிறப்பினைத் தேடித் தருகிறது என்று சொன்னுல் அது மிகை ஆகாது. குறிப்பாக ஒரு விரல் ரேகையை வைத்து அந்தக் குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்கக் கூடிய ஒரு முறை, விஞ்ஞான வளர்ச்சி, இந்தியாவிலேயே ஆந்திரா, மஹாராஷ்டிரா, சென்னை ஆகிய மூன்று மாநிலங்களில் தான் இருக்கிறது. அதிலும் சென்னையைப் பொறுத்தவரையில் திறம்பட பல ஆராய்ச்சிகள் செய்து அந்தத் துறையில் வெற்றி பெற்றிருக்கிறூர்கள் என்று சொன்னுல் அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் நமது பாராட்டுதலுக்கு உரியவர்கள் ஆவார்கள். நம் துப்பறியும் நாயின் பணியைப்பற்றிப் பார்க்கும் நேரத்தில், ஆசியா கண்டத்திலேயே ஒரு சிறப்பான இடத்தை அந்த முறையில் நம் போலீஸ் இலாகா பெற்றிருக்கிறது என்று சொன்னுல் அது மிகை ஆகாது. அதோடு கிராம வளர்ச்சித் திட்டம், சாலை அமைத்தல், மரம் நடுதல் போன்ற பல அபிவிருத்தி வேலைகளையும், ஆக்க வேலைகளையும் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர்கள் செய்து வருகிறூர்கள் என்று அமைச்சர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறூர்கள். அதற்கும் அவர்களுக்கு நாம் பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேும்.

[திரு. என். துரைபாண்டி] [13th March 1965

எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரு கிராமத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள் என்று சொன்னால், அதை போலீஸுக்கு தெரியப் படுத்தவேண்டுமென்றால், 4, 5 மைலுக்கு அப்பால், 10, 20 மைலுக்கு அப்பால் வந்து ஸர்கிள் இன்ஸ்பெக்டரிடம் சொன்னாலும்கூட, அவர் உடனே அந்தக் கிராமத்திற்கு விரைந்து செல்வதற்கு வசதி கிடையாது. போலீஸ் இருக்கும் இடங்களில் டாக்ஸி கார் கிடையாது. போலீஸ் இன்ஸ்பெக்டர் அங்கு இருந்து கிராமத்திற்கு செல்வதற்கு எந்த வித வாய்ப்பும் இல்லை. அவர் கிராமத்திற்கு செல்லவேண்டுமென்று சொன்னால், யார் வந்து புகார் செய்தார்களோ அவர்தான் கார் கொடுத்து அழைத்து போகவேண்டியிருக்கிறது. பிறகு ஆபீஸர் தன்னுடைய கடமையைச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு வருகிறது. என்னுடைய அபிப்பிராயம் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் போன் வசதி இருக்கவேண்டும், ஒவ்வொரு ஸப்-இன்ஸ்பெக்டருக்கும் ஒரு ஜீப் கொடுக்கவேண்டும் என்பதுதான்.

அடுத்து, துப்பறியும் நாய்களை உபயோகப்படுத்தி நமது போலீஸ் அதிகாரிகள் நல்ல முறையில் சேவை செய்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அளவுக்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் அம்மாதிரி துப்பறியும் நாய்களை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ்காரர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் அநேகமாக எல்லா இடங்களிலும் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, இன்னும் பல கிராமங்களிலே பல போலீஸ் ஸ்டேஷன்களில் இருக்கும் போலீஸ்காரர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்காத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கும் உடனடியாக வீடுகளை கட்டிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த அளவுக்கு இந்த சர்க்கார் போலீஸ்காரர்கள்மீது கவனம் செலுத்தி, நமது நாட்டில் அமைதியை உருவாக்கவேண்டும். இன்றைக்கு எதிர்க்கட்சிக்காரர்கள் போலீஸ் அநியாயமாக கேஸ் போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். குற்றம் புரியாதவர்களும் சுட்டுக் கொல்லப் படுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஒரு பெரியார் சொல்லியிருக்கிறார்கள்.

> " கூத்தும் விழாவும் கொலைக் களமும் பெரியார் செல்லார்
> செல்லின் இழுக்கும், இளவும் தரும்."

எங்கெல்லாம் கூட்டம் கூடுகிறதோ, அந்த இடங்களிலே அன்னார் போய்ச் சேரார். அம்மாதிரி போய்ச் சேர்ந்தால் அமைதியை நிலை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும்பொழுது, உண்மையில் குற்றம் புரியாதவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். யாரோ ஒரு பெரியவர், பணக்காரர் பின்னால் இருந்து தூண்டி விடுகிறார்கள், மாணவர்களை தூண்டி விடுகிறார்கள், ஊரில் இருக்கிற ரௌடி எலிமென்ட்ஸை தூண்டி விடுகிறார்கள். அதன் காரணமாக இவ்வளவு பெரிய குழப்பங்கள் வருகின்றன. ஒருவர் காரில் வருகிறார் என்றால் கார் இல்லாதவர்களெல்லாம் சேர்ந்து கொண்டு, காரில் ஏறிக்கொள்ளலாம் என்று தூண்டி விட்டால் என்ன ஆகும்? அதே மாதிரி ஒருவர் மில் வைத்திருந்தால், மில் இல்லாதவர்களெல்லாம் சேர்ந்துகொண்டு, அங்கே குடிபுகுங்கள் என்று சொன்னால், அவர்கள் அங்கே சாடுவார்கள். இந்த சமயத்தில் போலீஸ்காரர்கள் யாரைக் காப்பாற்ற வேண்டும்? பெரியவர் தமக்கும் அந்த கதி ஏற்படலாம் என்பதை உணரவேண்டும். ஆகவே, மாணவர்களுக்கு நல்ல புத்திமதியைச் சொல்லிக்கொடுக்க வேண்டும், அவர்கள் தங்கள் பள்ளிகளுக்கு திரும்பும்படி கேட்டுக்கொள்ள வேண்டும், அவர்கள் அம்மாதிரி பள்ளிகளுக்கு திரும்ப வேண்டும் என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



13th March 1965]

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** அவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் பேசலாம் என்று இருக்கிறேன். இன்றைய தினம், அண்மையில் நடந்து இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் போலீசு அதிகாரிகள் ஏவப் பட்டதைக் குறித்து விவாதித்துக் கொண்டு இருக்கிறோம். ஒரு பக்கத்திலே போலீசுகாரர்கள் இவற்றிற்கெல்லாம் பொறுப்பற்றவர்கள் என்றும், மற்றொரு பக்கத்திலே, அவர்கள் குற்றமற்றவர்கள் என்றும் போஸ்ட் மார்ட்டெம் செய்வதற்கு முன்பாக, பாராளுமன்றத்திலே பிரதம மந்திரி சாஸ்திரியார் சொன்னது போல, ஒரு ஹை பவர் கமிஷனை, ஜுடிஷல் கமிஷனை அமைத்து நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்று இந்த சபை விவாதிக்க வேண்டும். இந்த சம்பவங்களுக்கு ஐ.ஜி.-யா, சென்னை கமிஷனரா காரணம் என்று சிந்திக்க வேண்டும். அவர்கள் அல்ல காரணம், இந்த முதல் அமைச்சர் அவர்களே காரணம். அரசியல்வாதிகள், ஆட்சியிலே இருக்கிறவர்கள் காரணம். அட்மினிஸ்ட்ரேஷனில் இருப்பவர்கள் அல்ல. முதல் அமைச்சரையே இந்தக் குற்றம் சாரும். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளுக்கு மூல காரணம் யார்? மூலகாரணம் என்ன. போலீஸ்காரர்களுக்கும், இந்திப் போராட்டங்களை நடத்தியவர்களுக்கும் ஏதாவது பாகத் தகராறு, வியாஜ்ஜிய தகராறு? பழி வாங்கும் நோக்கு ஏதாவது உண்டா? இல்லை. அரசு முன் எச்சரிக்கையாக செய்ய வேண்டியதைச் செய்ததால் நடந்த நிகழ்ச்சிகள் அவை. முன் எச்சரிக்கையாகச் செய்திருக்கக் கூடாதா? இதற்கெல்லாம் காரணம் யார்? சுட்டார்கள், போலீஸ்காரர்கள். இல்லை என்று சொல்லவில்லை. அடித்தார்கள், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அதையெல்லாம் தவிர்த்திருக்கலாம் அல்லவா? முன் எச்சரிக்கையாக இருந்திருக்கலாம் அல்லவா? 15-ம் தேதி வந்த விவேகம், இந்த முதல் அமைச்சருக்கு ஏன் முன்பாகவே வரவில்லை? ஆறு மாதத்திற்கு முன்பாக ஏன் வரவில்லை? சென்ற ஆண்டில் ஏன் வரவில்லை? இது என்ன திடீரென்று ஏற்பட்ட நிகழ்ச்சியா? இத்தனை படுகொலைகளுக்கும், துப்பாக்கிப் பிரயோகங்களுக்கும், மீண்டும் மீண்டும் மீண்டும் சொல்லுவேன், வலியுறுத்திச் சொல்லுவேன், இந்த பக்தவத்சலம்தான் தனிப்பட்ட முறையில் பொறுப்புள்ளவர் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். போலீஸ் அதிகாரிகள் செய்திருக்கிறார்கள், இல்லை என்று சொல்லவில்லை. போலீஸ் அதிகாரிகளை பொது மக்கள் அடித்தும் இருக்கலாம். கொன்றும் இருக்கலாம். அப்படிக் கொல்லப்பட்ட போலீஸ் அதிகாரிகளுடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பல இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. ஒரு இடத்தில், இரண்டு இடத்தில் அல்ல. எல்லா இடமும் திருப்பூரா? கூடலூரா? இல்லை. எல்லா இடங்களிலும் நடந்தது ஏன்? இந்த மந்திரிகள் மனதில் கையை வைத்துச் சொல்லட்டும். இவையெல்லாம் நியாயமான சம்பவங்கள் தானா? தடுத்திருக்க முடியாதா? அரசு எண்ணிப் பார்க்கவேண்டும். திட்டவட்டமாகச் சொல்லுவேன், இந்த முதல் அமைச்சர் எரிகின்ற தீயில் எண்ணெயை வார்த்து வளர்ப்பது போல, தினம் தினம், நிமிஷத்திற்கு நிமிஷம் இன்ஸ்ட்ரக்ஷன்கள் கொடுத்துக் கொண்டே இருந்திருக்கிறார்கள். மாணவர்கள் ஆத்திரத்தை கிளப்பி விட்டார்கள். ஏன்? அவர்கள் ஆத்திரத்தை குறைக்க ஏதாவது வழி செய்தார்களா? திரு. சி. சுப்பிரமணியம் ராஜினாமா செய்தார்கள். நான் ராஜினாமா செய்வேன் என்று இந்த முதல் அமைச்சர் சொன்னாரா? மத்திய சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்தப் போகிறேன் என்று போனார்களே, அப்பொழுது 15-ம் தேதி வந்த அந்த விவேகம் ஏன் கொஞ்சம் முன்னால் வரவில்லை? அப்படி வந்திருந்தால், நாட்டிலே ஏற்பட்ட குழப்பங்கள் தடுக்கப்பட்டிருக்குமே? அதன் காரணம் என்ன? நாளுக்கு நாள் குழப்பங்களும், கலவரமும் அதிகரிக்க என்ன காரணம்? இந்த முதல் அமைச்சருடைய தனிப் பட்ட விருப்பு, வெறுப்பு தான் காரணம், இந்த மந்திரி சபையில் எல்லோரும் உடந்தை அந்தக் காரியங்களுக்கு என்று நான் சொல்ல மாட்டேன். ஒரே ஒரு மனிதருடைய விருப்பு வெறுப்பின் காரணமாகத்தான் இந்தக் கோரச் செயல்கள் ஏற்பட்டன என்று இந்த சட்ட சபையில் குற்றம் சாட்ட விரும்புகிறேன். துப்பாக்கி பிரயோகம் கோவை

யில் நடந்தது. இறந்தவர்கள் 65, 70, 80, 90 என்று பலவாருக பத்திரிகையில் வந்தது. ஆனுல் இந்த முதல் அமைச்சர் என்ன சொல்லுகிருர் ? 15-ம் தேதி ஸ்டேட்மெண்ட் கொடுக்கிருர். போலீஸ் அதிகாரிகளைப் பாராட்டி, இரட்டை இங்க்ரிமெண்ட் கொடுக்கிருர்கள். கொடுக்கட்டும், ஜனவரி ஒண்ணும் தேதி, ஏப்ரல் ஒண்ணும் தேதி என்று சொல்லக் கூடாதா ? அந்த சமயத்தில்தான் சொல்ல வேண்டுமா ? எரிகிற தீயில் எண்ணெ வார்க்கிருர்கள் என்ருல் தவருனது ஆகுமா ? ஏன் போலீசாருக்கு கொடுக்க வேண்டும் என்ருல், பட்ஜட்டில் கொடுக்கக் கூடாதா ? இரண்டு மாத சம்பளத்தை வேண்டுமானுலும் கொடுக்கட்டும். ஆனுல் போலீசார்கள் செய்தது சரியா, தவரு என்று கண்டுபிடிக்கும் முன்பாக, நூற்றுக் கணக்கான பேர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிருர்கள் என்ற காரணத்திற்காக, 15-ம் தேதி முதல் அமைச்சர் "நான் போலீசாரையெல்லாம் பாராட்டுகிறேன், அவர்களுக்கு இரட்டை இங்க்ரிமெண்ட் கொடுக்கிறேன்" என்கிருர்கள். வெள்ளைக்காரனுக்கும், உங்களுக்கும் என்ன வித்தியாசம். அவன் பூண் போட்ட தடியால் அடித்தான் என்ருல் நீங்கள் இரும்புத் தடியால் அடிக்கிறீர்கள் என்ற அளவுக்குத்தானே ஆட்சியில் இருந்துக் கொண்டு செய்திருக்கிறீர்கள் ? இன்றைய தினம் போலீசாரை தன்னுடைய விருப்பு, வெறுப்புக்குப் பயன் படுத்திக் கொண்டு இருக்கிருர்கள் இந்த முதல் அமைச்சர். 19-ம் தேதி பத்திரிகையில் பார்த்தேன், சுடலாம் என்று சொல்லியிருக்கிருர்கள். சுட்டால் ஆட்கள் இறந்து விடுகிருர்கள் குண்டுகளைப் பரிசீலிக்கிருர்கள். இவர்கள் உபயோகிக்கும் குண்டுகள் வைத்துச் சுட்டால் ஆள் காலி. வேருெரு குண்டு வகை இருக்கிறதாம். அதை வைத்துச் சுட்டால் வலிக்கும், காயம் படும், கூட்டம் கலைந்து சென்று விடும் என்று சொல்லுகிருர்கள். இந்தக் குண்டுகளை உபயோகிக்காமல், கொன்றுவிடும் குண்டுகளை உபயோகிக்க ஏன் உத்தரவு கொடுக்கப்பட்டது ? யார் இதற்குக் காரணம் ? கொல்லாத குண்டுகளை உபயோகிக்க வேண்டும் என்று ஏன் இந்த முதல் அமைச்சர் உத்தரவு போடவில்லை என்பதைக் கேட்க விரும்புகிறேன். ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், முதல் அமைச்சர் அடிக்கடி, நிமிஷத்திற்கு நிமிஷம், தினம் தினம், போலீஸ் அதிகாரிகளைத் தூண்டித் தூண்டித் தூண்டி விட்டதன் மூலம் காரியத்தைக் கெடுத்திருக்கிருர்கள். (மணியடிக்கப்பட்டது) ஒரே நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். கனம் சபாநாயகர் அவர்களே, தங்களுடைய அனுமதியின் பேரில், கமிஷனருடைய 12-ம் தேதி அறிக்கையை வாசிக்கலாம் என்று நினைக்கிறேன்.

'The Police have strict instructions to open fire if the situation does not improve with lathi charge and tear gas'.

"சுடுங்கள், சுடுங்கள், சுடுங்கள்" என்று இந்த அரசாங்கம், இந்த முதல் அமைச்சர், போலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவு கொடுத்து இருக்கிருர்கள். போலீஸ் அதிகாரிகளை திராவிட முன்னேற்றக் கழகம் எதிரிகளாக வருவிக்க வேண்டும், என்ற எண்ணத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேரில் போலீஸ் அதிகாரிகளை ஏவி விடுகிருர்கள் என்பதை மீண்டும் மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றளவும் களங்கம் இல்லாமல் இருந்த போலீஸ் அதிகாரிகளை, இன்றைக்கு தமிழ் மக்கள் வெறுக்கின்ற அளவுக்கு இந்த முதல் அமைச்சர் தவறுகள் செய்திருக்கிருர்கள், வேறு யாரும் பொறுப்பல்ல என்று சொல்லி என் பேச்சை முடிக்கிறேன்.

*திரு. ப. உ. சண்முகம் : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்தின் மீது என்னுடைய கருத்துரையை வழங்கத் தாங்கள் சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதற்கு முன்பெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் போலீசாரைப் பாராட்டினுல், ஆளும் கட்சி நண்பர்கள் பலர், போலீஸ்காரர்கள் பலர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், அவர்களிடம் அந்த வாடை வீசுகிறது என்று குற்றம் சாட்டினுர்கள். நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம், இந்திக் கிளர்ச்சி நடந்தபோது, போலீசார் பரிபக்குவமாக நடந்துக் கொண்டார்கள் என்றுதான் சொல்லுகிருேம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் குற்றச் சாட்டெல்லாம், ஆளும் கட்சியின் மீது





உத்தரவுகளைக் கொடுத்த மந்திரிகள் மீது, அந்த உத்தரவுகளை அமுலாக்கும் போலீசார் மீது அல்ல. சட்டத்தை உருவாக்குகிறவர்கள் அவர்கள் அல்ல. போலீசார் அதை அமுலாக்குகிறவர்கள் தான். ஆட்சியில் இருப்பவர்களுடைய உத்தரவுகளைத்தான் அவர்கள் அமுலாக்குகிருர்கள், என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. முதல் அமைச்சர் பக்தவத்சலமே சொல்லியிருக்கிருர்கள், நானே கூட தடியடி பட்டிருக்கிறேன் வெள்ளைக்காரன் காலத்தில், என்று. அன்றைக்கு வெள்ளைக்காரன் சொன்னதைச் செய்தார்கள் இந்தப் போலீசார்கள். இன்றைக்குத் தெற்றத் தெளிய தெளிவாக்க விரும்புகிறேன். எங்களுக்கு வருத்தம், கோபம் எல்லாம் இந்த முதல் அமைச்சர் மேல்தான், அந்த உத்தரவுபேரில் அடியுங்கள் கொல்லுங்கள் என்று செய்த காரியங்களின் பழி பாவம் எல்லாம் இந்த அமைச்சரவையைத்தான் சாரும். ஆகவே எங்கள் குற்றச்சாட்டுகள் எல்லாம் இந்த மந்திரிசபை மீதுதான். நாங்கள் போலீசாரைக் குற்றம் சாட்டவில்லை. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். மாணவர்களைத் தூண்டிவிட்டது, மில் அதிபர்கள் என்று முதல் அமைச்சர் சொன்னுர்கள். இன்றைய தினம் துணிவோடு கேட்கிறேன். முதல் அமைச்சர் சொன்னுல் போலீஸ்காரர்கள் கைது செய்வார்களே ? யார் அந்த மில் அதிபர் ? ஏன் அவரைக் கைது செய்யவில்லை ? இரண்டு மூன்று நாட்களுக்கு முன் கொடுத்த பொதுவிவாதத்தின் பதிலில் கூறுவார்கள் என்று எதிர் பார்த்தேன், ஆனுல் பதில் கொடுக்கவில்லை. பத்திரிகையில் பார்த்தோம், மில் அதிபர்கள் காரணம் என்று முதல் அமைச்சர் சொன்னுர்கள். ஏன் போலீசாரை விட்டு அந்த மில் அதிபரைக் கைது செய்யவில்லை ? காரணம் என்ன போலீசார் கோழைகள் அல்ல. போலீசார் மில் அதிபர்களிடம் தேர்தல் நிதி வாங்கவில்லை. "லஞ்சம் வாங்குகிருர்கள்" என்று நான் குற்றம் சாட்டமாட்டேன். தமிழ்நாட்டு முதல் அமைச்சர் அல்லது அவருடைய அதிகாரத்தைப் பெற்ற ஒருவர் இத்தகைய பல குற்றச்சாட்டுக்களைச் செய்தார். உடனே போலீஸ் இலாகா அந்த முதலாளிகளைக் கைது செய்திருக்க வேண்டும். கைது செய்யாதது கோழைத்தனம் என்று நான் வன்மையாக, அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறேன். ஏன் கைது செய்யத் தவறிவிட்டது இந்த அரசு ?

"மாணவர்களைத் தூண்டிவிட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள்", என்று பொது விவாதத்திற்குப் பதில் சொல்கிறபோது முதல் அமைச்சர் அவர்கள் பட்டியல் படித்துக் கொண்டு வந்தார்கள். "ஆரணியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எட்டு பேர்கள் இதைச் செய்தார்கள், இன்னொரு ஊரில் பத்து பேர்கள், இன்னொரு ஊரில் நான்கு பேர்கள்" என்று பட்டியல் படித்துக் கொண்டு வந்தார்கள். "மறுக்க முடியுமா ?", "மறுக்க முடியுமா ?" என்று அவர்கள் கேட்டார்கள். நான் மறுக்கிறேன். நீதி மன்றத்திலும் மறுக்கப் போகிருேம். மாணவர்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தார் தூண்டிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டுவது சரியல்ல என்பதை நீதி மன்றத்தின் முன்பு நாங்கள் நிரூபிக்கப் போகிருேம். இந்தக் குற்றச்சாட்டுகள் நியாயமா ? இந்தக் குற்றச்சாட்டுகளை நீதி மன்றம் ஏற்றுக்கொள்ளுமா ? எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த நாட்டில் எது போனுலும், நீதி அழியவில்லை, தர்மம் அழியவில்லை—நிச்சயம் இந்த நாட்டில் எங்களுக்கு நீதி, நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நீதி மன்றத்தில் அந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்து வாதாட நாங்கள் தயாராயிருக்கிருேம். 10–30 a.m.

முதல் அமைச்சர் அவர்கள் பட்டியல் படித்தானதற்குப் பிறகு பல முக்கியமான திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் கைது செய்யப்பட்டது மட்டுமல்ல, பலமாகத் தாக்கப்பட்டிருக்கிருர்கள். நான் ஒன்று கேட்கிறேன். ஒரு ஊரில் ஒரு போலீஸ்காரர் யாரையாவது அடித்திருந்தால் அவருக்கும் அவருக்கும் தனி விரோதம் என்று குற்றஞ்சாட்டியிருக்கலாம். ஏதோ இரண்டு மூன்று ஊர்களில் அசம்பாவிதம் நடந்து விட்டது என்று சொல்லியிருக்கலாம். ஆனுல், எந்த ஒரு போலீஸ் ஸ்டேஷனும் பாக்கியில்லை. கையில் கிடைத்த திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் அடிபடாது வெளியே வந்தது இல்லை. இப்பொழுது

கேட்கிறேன், என்ன காரணம்? போலீசாருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் பகையா? திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கும் போலீசாருக்கும் பகை உணர்ச்சி இருந்ததா? இப்பொழுது நான் குற்றம் சாட்டுகின்றேன். "திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் எங்கெங்கு கிடைத்தார்களோ அவர்கள் மீதெல்லாம் சதி வழக்குகளும், அவர்கள் மீதெல்லாம் கொள்ளை வழக்குகளும், அவர்கள் மீதெல்லாம் கொலை வழக்குகளும் போடுங்கள். கிடைத்தவர்களை அடியுங்கள்" என்று உத்தரவு பிறப்பித்திருப்பது இந்த மந்திரிசபைதான். முதல் அமைச்சர் அவர்களுடைய உத்தரவின் பேரில்தான் நடந்திருக்கிறதே தவிர, வேறொன்றும் அல்ல. எனவே, போலீசார் மீது குற்றஞ்சாட்ட நான் விரும்பவில்லை. இந்த அமைச்சரவை போட்டிருக்கும் உத்தரவைத்தான் நான் குறை சொல்கின்றேன்.

சென்ற தடவை மானியக் கோரிக்கை விவாதத்தில் நான் பேசும்போது, "ஒரு உயர்தர போலீஸ் அதிகாரி என்னிடம் சொன்னார்" என்று சொன்னேன். மிருகத்தை அடிப்பது போல் தடியால் அடித்துச் சாகடிக்கலாம் என்கிற அந்த அளவிற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதே! என்? எதற்காக? முதல் அமைச்சரைக் கேட்கின்றேன். ஒரு வேளை எழுமலைக்குக் கோபம்வரும். "நீயும் ஞானோபதேசம் செய்ய வந்துவிட்டாயா? ஞானோபதேசம் செய்ய வயது வேண்டாமா? நாற்பது ஆண்டு அனுபவமுள்ள முதல் அமைச்சருக்கு நாற்பது வயது கூட ஆகாத ஒருவன் ஞானோபதேசம் செய்வதா? என்று கேட்கக்கூடும். அவருக்குச் சொல்வேன், ஒரு வேளை அவருக்குப் புராணம் தெரியாமல் இருக்கலாம், ஆனால், புராணங்கள் படித்த பக்தவத்சலத்திற்குச் சொல்வேன், ஞானோபதேசம் செய்வது தகப்பனுக்குப் பிள்ளையே தவிர . . . . .

**கனம் சபாநாயகர் :** "கனம்", "திரு." என்ற சொற்களைச் சேர்த்துப் பேசுவதையே பொதுவாகக் கனம் உறுப்பினர்கள் விட்டுவிட்டார்கள் போலிருக்கிறது!

**திரு. ப. உ. சண்முகம் :** கனம் திரு. பக்தவத்சலம் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். ஞானோபதேசம், தகப்பனுக்குப் பிள்ளை செய்ததாக இருக்கிறதேயல்லாமல், பிள்ளைக்கு தகப்பன் செய்ததாக இல்லை. எனவே, நாங்கள் சொல்கிற ஞானோபதேசத்தைத் தவருக எடுத்துக் கொள்ள வேண்டாம், நாட்டிலே ஏற்பட்ட குழப்பத்தைக் குறித்தும், அதிலே போலீசாருடைய செயல்களைக் குறித்தும் விசாரணை வேண்டும் என்று எங்களது தரப்பில் கோரப்பட்ட நியாயமான வாதத்தை ஏற்றுக் கொண்டே தீரவேண்டும். நீதி விசாரணை வைக்க வேண்டும். உயர்தர மட்டத்தில் நீதி விசாரணை வைத்து, எங்கே குழப்பம் ஏற்பட்டது, யாரால் ஏற்பட்டது என்பதைக் கண்டு பிடித்து, எந்தக் கட்சிக்காரர்களால் ஏற்பட்டிருந்தாலும் கவலை இல்லை. அவர்களை நீதி மன்றத்தின் முன்பு கொண்டு வந்து நிறுத்தி தண்டனை கொடுக்க வேண்டும் என்று வாதியுங்கள்.

இதற்கு முன்பு இந்த மன்றத்தில் குறிப்பிட்டேன், திரு. கருணாநிதி அவர்களைப்பற்றி. கனம் கருணாநிதி அவர்களை டிபென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸின் கீழ்க் கைது செய்து, பாளையங்கோட்டைச் சிறையில் வைத்தார்கள். கனம் சபாநாயகர் அவர்களே, தங்களுக்குத் தெரியும் கருணாநிதி அவர்களைப்பற்றி. கருணாநிதி அவர்களுடைய உடம்பு மெலிந்திருக்கும் என்பது தங்களுக்குத் தெரியம். அவர் இதயம் தான் இரும்பாக இருக்குமே தவிர, உடம்பு மெலிந்திருக்கும். அப்படிப்பட்டவரைக் கைது செய்து, லாரியில் ஏற்றி, 400 மைல் இழுத்துச் சென்றார்கள். இந்தக் கொடுமைக்குக் காரணம் யார்? இதையும் போலீசார் தான் செய்ததா? பிடி கருணாநிதியை, என்று இரவு 12 மணிக்குப் போலீஸ் லாரியில் ஏற்றிச் சென்றிருக்கிறார்கள். ஒரு கைதியைக்கூட அப்படிக் கொண்டுபோயிருக்க மாட்டார்கள். ஒரு பயங்கரக் குற்றவாளி, கொலைகாரன், சமூகத் துரோகியைக் கூட அப்படிக் கொண்டுபோக அஞ்சியிருப்பார்கள். ஆனால், கருணாநிதி அவர்கள், "நெஞ்சு வலி", "நெஞ்சு வலி", என்று மதுரை அருகில் கத்தியும், "மேற்கொண்டு போகக் கூடாது" என்று டாக்டர் தடுத்தும்,



அவரை இழுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். மறு நாள் காலை நான்கு மணிக்கே அங்கிருந்து அவரை எடுத்துச் சென்று பாளையங்கோட்டை சிறையிலேஅடைத்திருந்தார்கள். போலீசாரிடத்திலும், சர்க்காரிடத்திலும், கருணாநிதியைக் கொண்டுபோக அந்த வாகனம் தானா இருந்தது? அவரைத் தனியாகக் கொண்டுபோக வேறு வாகனம் இருந்தது. அதை உபயோகித்திருக்கலாம். ஆனால், பயன்படுத்தவில்லை. காரணம், எதிர்க்கட்சிக்காரன் கருணாநிதி. கருணாநிதி இந்த மன்றத்தில் பேசும்போது கடுமையாகத் தாக்கியிருந்தார், அந்தக் குரலில் பேசிக்கொண்டிருந்தார் கருணாநிதி, அதனால், கருணாநிதியைப் பழிவாங்கவேண்டுமென்று, முதல் அமைச்சர் அவர்கள் கருணாநிதியை டிடென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸில் கைது செய்து, அங்கு கொண்டுபோய் வைத்துவிட்டார்கள். வழக்கு நீதி மன்றத்தில் இருப்பதால் அதைப்பற்றிச் சொல்லவில்லை. ஏன் கைது செய்தார்கள் என்பதற்கு வெள்ளை அறிக்கை வைக்க வேண்டும் என்று நான் கேட்டேன். பொது விவாதத்தின்போது கேட்டதற்கு, இந்த மானியத்தின்போதாவது அப்படி வைப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். இப்பொழுதும் கேட்கிறேன். நம்முடைய நாட்டைச் சீனக்காரனுக்குக் காட்டிக் கொடுத்தார்கள் என்று குற்றஞ்சாட்டிக் கேரளாவில் கம்யூனிஸ்டுகளைக் கைது செய்தவுடன், பாராளுமன்றத்தில் இருந்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் உள்துறை அமைச்சர் திரு. நந்தாவிடம் கோரி, ஒரு முறை அல்ல, இரண்டு முறை வெள்ளை அறிக்கை அங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. நாட்டில் தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டவர்களைக் குறித்தே இரண்டு முறை வெள்ளை அறிக்கைகள் வைத்தார்கள் என்று சொன்னால், அதுவும் கனம் திரு. நந்தா அவர்கள் வைத்தார்கள் என்று சொன்னால், ஏன் நமது முதல் அமைச்சர் கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் மறுக்கிறார்கள்? தயங்குகிறார்கள்? ஒரு வேளை அவர்கள் சொல்லலாம், வழக்கு இருக்கிறது என்று. நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்கின்றேன், வழக்கு முடிந்ததற்குப் பிறகாவது, உடனே அந்த வெள்ளையறிக்கையை வைக்கத் தயாரா? எங்கே குற்றம் நடைபெற்றது? யார் குற்றம் செய்தார்கள்? கருணாநிதி அப்படிச் செய்யவில்லை. இதற்கு முன்பும் விவாதத்தில் நான் தெரிவித்தேன். இப்பொழுதும் நான் அந்தப் பிரச்சினையை எழும்புகிறேன். திரு. இராசாங்கம் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்தின் உறுப்பினர். அவர் தாக்கப்பட்டார், அவர் தாக்கப்பட்டார் என்று சொல்லியான பிறகும்கூட, அதுவும் இந்த மன்றத்தில் சொல்லியான பிறகும்கூட, அதைப் பற்றிக் கவலைப்படாமல் முதல் அமைச்சர் அவர்கள் ஏனோ தானோ என்று இருந்துவிட்டார்கள். முதல் அமைச்சரை ஒன்று கேட்டுக்கொள்வேன். மறந்துவிடாதீர்கள். 'அரசு அன்று கொன்றால் தெய்வம் நின்று கொல்லும், மறக்க' வேண்டாம் என்று கூறி உரையை முடிக்கின்றேன்.

MR. SPEAKER : This is an insinuation. I do not allow this sort of speech. "தெய்வம் நின்று கொல்லும்" என்பது சாபம் போடுவது போல் இருக்கிறது.

**திரு. ப. உ. சண்முகம் :** தமிழ்நாட்டுப் பழமொழி சொன்னால் சாபமா?

**கனம் சபாநாயகர் :** தமிழ்நாட்டுப் பழமொழிதான் என்றாலும் அது இங்கே பொருந்தாது.

*** திரு. க. ர. நல்லசிவம் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைதினம் தமிழகப் போலீஸ் இலாகாவினுடைய நிலையைப் பார்த்து உண்மையிலேயே நான் பரிதாபப்படுகிறேன். ஒரு பக்கம் பாராட்டும், இன்னொரு பக்கம் தாக்குதலும் இருப்பதைப் பார்க்கும்போது, அந்த இலாகாவினுடைய நிலை உண்மையிலேயே பரிதாபத்திற்குரியதாகத்தான் இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் என்ன என்று பார்த்தால், சர்க்காருடைய நடவடிக்கை தான் என்று சொல்ல வேண்டும். நம்முடைய போலீஸ் இலாகாவைப் பொறுத்த வரையில், இந்தியாவிலேயே சிறந்த முறையிலே

[திரு. க. ச. நல்லசிவம்] [13th March 1965

பணியாற்றி, சட்டம், அமைதியைப் பாதுகாக்கக்கூடியவர்கள் என்ற பெயரை அவர்கள் நீண்ட நாட்களாகப் பெற்றிருந்தார்கள். ஆனால், தமிழகத்தில் பெரிய கலவரம் நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்த நெருக்கடியில் அந்த நல்ல பெயரை யெல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் போய்விட்டது. அதற்கு அந்த இலாகாவினர் காரணம் அல்ல என்பதுதான் என்னுடைய சொந்தக் கருத்து.

கலவரத்தின் ஆரம்பத்தில் ஜனவரி 25, 26 தேதிகளில் போலீசார் மிக வேகமாக அடக்கு முறையைக் கையாண்டார்கள். கலவரம் மிகப் பயங்கரமாகி 9, 10, 11, 12 தேதிகளில் போலீசார் இன்னது செய்வது என்று தெரியாமல் மனம்போன போக்கிலே காரியங்கள் செய்வது போல் தோன்றிற்று. இதற்கு மத்தியிலே இந்தக் கலவரம் எப்படி உருவெடுக்கும் என்பதைப் பற்றிப் போலீஸ் இலாகா நல்ல முறையில் பரிசீலித்துக் பார்த்து, கலவரத்தை அடக்குவதற்குத் தேவையான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். இதற்கென்று ஒரு குற்றப் பிரிவு இருக்கிறது. அதற்கு மேலே மத்திய சர்க்கார் இன்டெலிஜென்ஸ் ப்யூரோ இருக்கிறது. இதெல்லாம் என்ன செய்தது என்று தெரியவில்லை. 10, 11, 12 தேதி கலவரங்களில் போலீஸ் இலாகா திறமையுடன் காரியங்கள் செய்திருந்தால் நிச்சயமாக அதனுடைய வேகத்தையாவது ஓரளவுக்குக் குறைத்திருக்க முடியும். அதைச் செய்யாதது ஏன் என்று தெரியவில்லை. ஒருகால் அமைச்சரின் அத்து மீறிய தலையீடுதான் காரணம் என்று நான் நினைக்கிறேன். போலீசாருடைய திறமைக் குறைவு காரணம் என்று என்னால் சொல்ல முடியவில்லை.

இன்றைக்குக்கூட ஒரு காரியம் நடந்து கொண்டிருக்கிறது. குற்றம் செய்தவர்கள் யார் யாரோ அவர்கள் எங்கெங்கோ இருக்கிறார்கள். குற்றம் செய்யாதவர்களானாலும், அழுக்குத் துணி கட்டியிருந்தால் அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். சிறு நகரங்களிலும், பெரு நகரங்களிலும் கூட, எங்கெல்லாம் ஏழை எளியவர்கள் இருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் கைது செய்யப்படுகிறார்கள். அது மட்டுமல்ல. பெரிய வேடிக்கை என்னவென்றால், எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் கூடப பல இடங்களில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். போலீசார் ஏன் இப்படிச் செய்கிறார்களோ தெரியவில்லை. மதுராந்தகத்திலும், உடுமலையிலும், சேலத்திலும் எங்கள் கட்சிக்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த இயக்கத்தில் எந்த மாதிரிப் பங்கெடுத்துக்கொண்டார்கள் என்றே தெரியாது. எப்படி அவர்கள் மீது சர்க்கார் கேஸ் போட்டுக் கோர்ட்டிலே நடவடிக்கை எடுக்க முடியும் என்றே தெரியவில்லை. அடக்குமுறை தான் தோன்றிப் போக்கிலே போகிறது. இது நிறுத்தப்பட வேண்டும். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் இலாகா சரியானபடி இயங்க வேண்டும். தெருவிலே போகிறவர்களையும் வழியிலே போகிறவர்களையும் பிடித்து அடிப்பதன் மூலமாகத் தகவல் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாது. இதைச் சரியான முறையிலே பரிசீலனை செய்து பார்த்து, குற்றவாளிகளல்லாதவர்களை நிச்சயமாகப் பிடிக்கக் கூடாது என்ற ஒரு உத்தரவை அல்லது யோசனையை முதல் அமைச்சர் அவர்கள் போலீஸ் இலாகாவிற்குச் சொல்ல வேண்டும். போலீஸ் இலாகாவைச் சர்க்கார் நல்ல முறையில் இயங்கச் செய்ய வேண்டும். இம்மாதிரி அடக்குமுறையில் ஒவ்வொரு ஊரிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்பொழுது சட்டசபை நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில்கூட ஒவ்வொரு ஊரிலும் கைதிகள் நடந்துகொண்டிருப்பதாகப் பல தகவல்கள் எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. இதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, அம்மாதிரி வேகமாக நடக்கும் அடக்குமுறையைத் தடுப்பதற்கு ஏதாவது செய்தாக வேண்டும்.

அடுத்தபடியாக, இன்றைக்கு நடக்கும் கலவரங்களுக்கான காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி என்று அவர்களைக் குற்றம் சாட்டிப் பிரயோசனம் இல்லை. இந்த நாட்டிலே ஆங்கிலம் தொடர்ந்து நீண்ட காலம் இருக்கவேண்டும் என்று எங்கெங்கோ பின்னால் இருந்துகொண்டு சிலர் இந்தக் காரியத்தைச் செய்துகொண்டிருக்



13th March 1965] [திரு. க. ச. நல்லசிவம்]

கிறார்கள். ஒரு உதாரணம் சொல்கிறேன். சமீபத்தில் இந்தி எதிர்ப்புக் கலவரங்கள் நிகழ்ந்தபோது ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கக் கூடிய "பார் கவுன்சில்" இல் உள்ளவர்கள், வழக்கறிஞர் மன்றங்களில் உள்ளவர்கள், இந்தத் தேசத்தின் பொது மொழி, தேசீய மொழி, ஆட்சி மொழி இந்தி என்று பேசுவதற்குக்கூட விடவில்லை. காலிகள் யாரோ செய்வதாக நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கக்கூடாது. ஆங்கிலம் நிரந்தரமாக சட்டசபையிலும், கோர்ட்டிலும் இருக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் தான் இன்றைக்குப் பின்னணியில் இருந்து கொண்டு பல்வேறு வகையில் இந்தக் கிளர்ச்சிகளைத் தூண்டிவிடுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இந்தக் கிளர்ச்சியை இன்றைக்குத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என்பதைப் பார்க்கிறோம். இருந்தும் இன்றைக்கும் இயக்கம் நடந்து கொண்டிருப்பது ஒன்று. இரண்டாவது எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும்—இந்த மொழிப் பிரச்சினையைத் தூண்டிவிடுகிறவர்களைக் கைது செய்ய இந்த அரசாங்கத்திற்கு ஒரு துணிவு இருக்க வேண்டும். அவர்கள் தான் இந்தக் கலவரத்தைத் தூண்டிவிடுகிறார்கள் என்கிற தகவல் இருக்கிறது. இன்னொரு யோசனையையும் கூடச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் முன்பு சொன்னதுபோல சட்டமன்றங்களிலும் சரி, நீதி மன்றங்களிலும் சரி, எங்கே தமிழ் வந்துவிடுமோ என்ற ஐயப்பாட்டினால் தான் அவர்கள் இந்தக் கிளர்ச்சியைத் தூண்டிவிடுகிறார்கள். அவர்கள் இன்று இருக்கிற நிலைமையில் இப்படித் தூண்டிவிட்டுக்கொண்டேபோகாது தடுக்க வேண்டுமென்றால்—உடனடியாக 6 மாதத்துக்குள் தமிழையே நம்முடைய நிர்வாகம் எல்லாவற்றிலும் கொண்டுவந்து விடவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக இதுவரை நடந்த கலவரம் போல தமிழ் நாட்டில் நடந்ததே கிடையாது. இப்படி ஒரு கலவரம் நடக்கும் காலத்தில் ஜனக்கூட்டத்தை துப்பாக்கிப் பிரயோகம் இல்லாதபடி எப்படிக் கலைப்பது என்பது பற்றி அவர்கள் ஆராய்ச்சி செய்திருக்க சந்தர்ப்பம இல்லை. இப்போது நமக்குக் கிடைத்துள்ள அநுபவத்தைக் கொண்டாவது துப்பாக்கிப் பிரயோகம் இல்லாதவாறு எப்படி ஜனக் கூட்டத்தைக் கலைப்பது என்பது பற்றி அவர்கள் நன்கு ஆராய்ந்தாக வேண்டும்.

அடுத்தபடியாக அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய உடை பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பெரும்பாலானவர்களுக்குக் கம்பளி உடை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. கால்களுக்குக் கட்டிக் கொள்ள கொடுக்கப்படுகிற கம்பளிப்பட்டியைக் கூட நைலான் துணியில் கொடுக்கலாம். கம்பளிப் பட்டியைக் கட்டிக் கொள்வது அவர்களுக்குச் சங்கடமாகத்தான் இருக்கிறது.

மேலும் அவர்களுக்குக் குடியிருப்பதற்கான இடம் போதாது. பரிசு கொடுப்பதன் மூலமாக அவர்களிடத்திலே ஒழுங்கு ஏற்படுத்த முடியாது. அவர்கள் லஞ்சம் வாங்கக் கூடியவர்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. ஆகவே போலீஸ்காரர்களுடைய சம்பளத்தைக் குறைந்த பட்சம் 100 ரூபாய் அளவிற்காவது உயர்த்திக் கொடுத்தாக வேண்டும். ஆளும் கட்சியினர்களுடைய பாராட்டுதலைப் பெறவும், எங்கள் தாக்குதலைச் சமாளிக்கவும்—தங்கள் உயிரையும் கூடத் திரணமாக மதித்துச் செயலாற்ற வேண்டியதாக இருக்கிறது. ஆகவே அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும். கடைசியாக எதிர்க் கட்சி உப தலைவர், கருணாநிதி அவர்களை எதற்காகப் பிடித்து உள்ளே வைத்து இருக்கிறார்கள் என்ற கேள்வி இந்த மன்றத்தில் எழுப்பப்பட்டது. மத்திய சர்க்கார் போட்டு இருக்கிற பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் திரு. கருணாநிதியைப் பிடித்து உள்ளே வைத்திருக்கிறார்கள் என்றால் அதற்கான காரணத்தைச் சொல்ல வேண்டும். அவர்கள் மீது கேஸ் போடலாம். அப்படி இல்லாமல் அவரைச் சட்ட விரோதமாகப் பிடித்து வைத்திருப்பது நியாயம் இல்லை. அவர்கள் சொன்னது போல அவர் உள்ளத்தில் வைரம் இருக்கலாம். உடல் நலக் குறைவானவர்கள். ஆகவே அதிகப்படியான யோசனை இல்லாமல் இன்றைக்கு தொடர்ந்து நடக்கிற கலவரங்களை அடக்கக் கூட பதவியில் உள்ளவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதற்காகச் சொல்லுகிறேன்—திரு. கருணாநிதியை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்து கொள்கிறேன். வணக்கம்.

[13th March 1965

* **திரு. கோ. நாராயணசாமி நாயுடு :** அன்புமிக்க அவைத்தலைவர் அவர்களே, நம்முடைய சர்க்கார் கொண்டு வந்திருக்கிற போலீஸ் மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல முன் வந்துள்ளேன். சமீப காலத்திய கலவரங்களைப் பற்றி நம்முடைய சட்டசபையைச் சேர்ந்த மெம்பர்கள் பல்வேறு கோணங்களில் அலசி, ஆராய்ந்து, எல்லாக் குற்றங்களும் நமது முதல் அமைச்சர் அவர்களையே சார்ந்தது என்று முடிவு கட்டிச் சொன்னார்கள். எல்லா மந்திரிகளும் இதற்குப் பொறுப்பு என்றார்கள். போலீஸ் மந்திரி நல்லவர், பெரிய மந்திரி இவரைக் கெடுத்துவிட்டார் என்பதாக இப்படி பலவிதமாகச் சொன்னது எல்லாம் வேடிக்கையாக அனுபவிக்கின்ற தமாஷாகத்தான் இருந்தது. இன்றைக்கு நாட்டில் நடந்துள்ள சம்பவங்களுக்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல என்பதாக எல்லாக் கட்சிக்காரர்களும் சொல்ல முடியும். ஆனால் ஒத்துக் கை தட்டாது இருந்தால் சம்பவம் நடக்க வழியில்லை. நாற்காலியைப் பிடிக்க எது சந்தர்ப்பம் என்று இருக்கிறவர்களுக்கு இப்போது பையன்களை முன்னே தள்ளி கிளர்ச்சியை நடத்த சந்தர்ப்பம் கிடைத்தது. பையன்களை முன்னே தள்ளிய காரணத்தால் தான் நமது முதல் மந்திரி அவர்கள்—அவர் உள்ளம் உரம் வாய்ந்து இருக்கலாம்—கை அவ்வளவு பலமாக இல்லை. நம்முடைய குழந்தைகள், நம்முடைய குழந்தைகள் என்று தாட்சண்யம் காட்டி வந்த காரணத்தினால் தான் நிலைமை கட்டுக்கு மீறினது போல ஆயிற்று. இந்த மாதிரியான நிலைமை ஏற்படும் என்று யாரும் நம்பவில்லை. ஆட்சியைக் கவிழ்க்க திட்டமிட்டவர்களுக்கு மாணவர்கள் கேடயமாகப் பயன்பட்டார்கள். அவர்களுக்குக் கேடயமாகப் பயன்பட்டது இன்னொரு கட்சி.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

அதன் விளைவுகளை எல்லாம் நாம் பார்த்தோம். இன்றைக்கு இருக்கிற நிலைமை வேறு. ஆரம்ப கட்டத்தில் சர்க்காரே போய்விடும் என்ற நிலைமை இருந்தது. இன்றைக்கு நிலைமை ஓரளவு சீர்படுத்தப்பட்டு, தங்கள் குழந்தைகள் படிக்க வேண்டுமென்று பெற்றோர்களும், தாங்கள் படித்து பரிட்சை எழுத வேண்டும் என்று மாணவர்களும் விரும்புகிறார்கள். இருந்தும் ஒரு சிலர் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதில் இருந்தே உண்மையான குற்றவாளி யார் என்று கண்டு பிடிக்க வழியேற்படுகிற நேரத்தில் இப்போது வேறு பல காரணங்களைக் கண்டு பிடிக்க முயல்கிறார்கள். ஆகையால் நடந்த சம்பவங்கள் எப்படி இருந்தாலும்—இறந்து போனவர்கள் நமது விரோதியில்லை—நாட்டில் எந்த மந்திரி சபை இருந்தாலும் அமைதியும், பாதுகாப்பும் இருப்பது அவசியம்—முதல் மந்திரி அவர்கள் வெள்ளைக்காரன் காலத்தில் இருந்தே பார்த்து வருகிறேன்—என்றைக்கும் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து வருவார்கள். யாருக்கும் பயப்பட்டதில்லை—இப்போதும் உறுதியாக நின்று செயல்பட்டிராவிட்டால் நிலைமை கட்டுக்கு அடங்கியிருக்காது. காரணம் இந்தமாதிரி நிலைமை இதற்கு முன் ஏற்பட்டது இல்லை என்று எனக்குத் தெரியும். திரு. கருணாநிதியை சிறையில் வைத்து இருப்பது பற்றிச சொன்னார்கள். க்ரிமினல் ப்ரொஸீஜர். கோடின் அந்த செக்ஷன்படி கைது செய்யப்பட்டால் அப்படித்தான் திரு. நல்லசிவம் அவர்களுக்கும் தெரிந்திருக்கும். எனக்கும் தெரியும். இந்தச் சர்க்கார் என்னையும் அப்படித்தான் இரண்டு முறை கைது செய்து உள்ளே வைத்திருந்தது. அதன் உள் விஷயங்களைச் சொன்னால் அதன் மூலமே பிரசாரம் ஆகிவிடும். முன்பெல்லாம் நடந்த போராட்டங்கள் ஒரு வகை. இப்போது நடைபெறுவது ஒரு வகையாக இருக்கிறது. நாம் எல்லாம் பாராயணம் செய்யும் போது சொல்வோமே

அஞ்சிலே யொன்று பெற்ற னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாரியற் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்குகண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தான்........

என்பதுபோல அஞ்சிலே ஒன்றை வைக்க ஆரம்பித்து விட்டார்கள். கல்லை எடுத்து அடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். (ஒரு கனம் அங்கத்தினர் அஞ்சிலே ஒன்று என்ன ? ) நெருப்பு தான், நெருப்பு வைப்பதும் கல்லால் அடிப்பதும் போராட்ட முறைகளில் ஒன்றாகிவிட்டது. இனி



3th March 1965] [திரு. கோ. நாராயணசாமி நாயுடு]

ாலீஸ்காரர்கள்கூட விஞ்ஞான முறையில் இதனால் விளைகிற நிலைமையை ப்படிச் சமாளிப்பது என்று பார்த்தாக வேண்டும். எப்படி இருந் ாலும் தமிழ் நாட்டளவில் இந்த நிகழ்ச்சிகள் தலைகுனிய வைத்துவிட்டது. து வரையிலும் இல்லாத வன்முறைச் செயல்கள் தலை தூக்க ஆரம்பித்து ிட்டன. போலீஸ்காரர்கள்—அவர்களுக்கும் மனச் சாட்சி இல்லையா— டவேண்டிய நிலை வந்து விட்டது.

இப்பொழுது கல் ஆயுதம் வருகிறபொழுது அதற்குப் பதிலாக என்ன யுதத்தை உபயோகப்படுத்துவது என்பதை யோசிக்க வேண்டும். போலீ ாருக்கு அந்த அளவுக்குக் கல் எறிந்தால் என்ன செய்வது என்ற திகில் ற்பட்டிருக்கிறது.

உணவுப் பிரச்னையைப் பயன்படுத்தி நாற்காலி பிடிக்க வேண்டுமென்று ஆரம்பித்தார்கள். அதனால்தான் உணவு வருகின்ற நாலா பக்கங்களிலும் யில்களைச் சேதப்படுத்தினார்கள். சி. ஐ. டி. டிபார்ட்மெண்ட் இன்னும் கொஞ்சம் விழிப்பாக இருந்திருந்தால் சேதங்கள் ஏற்படாமல் டுத்திருக்கலாம். இந்த நாட்டிலே இதுபோன்ற முன் அனுபவம் இல்லா திருந்ததால்தான் இந்த நிலை ஏற்பட்டது. ஆனால்; இந்த நாற்காலிப் பிரச்னை கொஞ்ச நாளைக்கு இருந்துதான் தீரும். வெளிநாட்டிலிருந்து ஆபத்து இருந்த காரணத்தால் இதைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் நான் இந்தக் கிளர்ச்சிகள்—கிளர்ச்சிகள் என்று சொல்வதற்கு இல்லை— லகங்கள் ஏற்பட்டன. போலீஸார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் ; பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். யார் யார் எல்லாம் பாதிக்கப்பட்டார்களோ அவர்கள் எல்லோருக்கும் நமது அனுதாபம் உண்டு.

போலீஸாருக்கும் மனச்சாட்சி உண்டு. அந்த மனச்சாட்சி அவர்களைக் குத்திக்கொண்டு இருந்தாலும், வேறு வழியில்லாததால்தான் அவர்கள் கடுமையாக நடவடிக்கை எடுத்திருப்பார்கள். போலீஸ்காரரை " நீ போய்ச் சுடு " என்று யாரும் சொல்லமாட்டார்கள். அப்படி எந்த மந்திரியும் சொல்ல வேண்டியதில்லை. அவர்களுடைய நிலைமை அவர்களுக்குத்தெரியும். திருப்பூரிலே போலீஸ் சப்-இன்பெக்டர்கள் புரட்சி இயக்கத்திலேகூட இல்லாத முறையிலே, அவர்களைக் கழுத்திலே சுருக்கு மாட்டி இழுத்துக் கொண்டு போய், தண்ணீர்கூடக் கொடுக்காமல், பெட்ரோலை ஊற்றி— அந்தக் காலத்தில் தண்டனையாகச் சுண்ணாம்புக் காளவாயிலில் ஏற்று வார்கள், அல்லது அவயவங்களை வெட்டுவார்கள்— அவர்களைக் கொளுத்தி இருக்கிறார்கள். இந்த நிலைமையைப் பார்க்கும்பொழுது, போலீஸ்கார களுக்கு மட்டுமல்ல சர்வ சாதாரணமானவர்களுக்குகூட ஆத்திரமும், ஆவேசமும் ஏற்படத்தான் செய்யும். அது எல்லோருக்கும் வரக் கூடிய நிலைமைதான். தவறிலிருந்தும் படிப்பினை என்பது மாதிரி நாம் இதிலிருந்து சில படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நான் சிறு பிள்ளையாக இருந்தபோது பார்த்திருக்கிறேன். போலீஸ்காரர் என்றால் அந்தக் காலத்தில் பானெட் வைத்திருப்பார்கள். ஆனால் இந்தக் காலத்தில் நமது சர்க்காரில் அவர்களுக்கு மூங்கில் கம்பு மட்டும்தான் கொடுக்கப்படுகிறது.

இந்தக் கலவரங்களைப் பற்றி பீகிங் ரேடியோவுக்கு மகிழ்ச்சி ; பாகிஸ்தானுக்கும் மகிழ்ச்சி. வேறு நாற்காலி பிடிக்கிறவர்களுக்கும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். ஆனால் நாற்காலி பிடிக்கிறவர்கள் இந்த நிலைமைக்குப் பிறகு மாறிவிட்டார்கள். கலகத்தை விரும்புகின்ற வெளிநாட்டு ஆட்கள் நம்மிடையே இருக்கிறார்கள். ஆகையால்தான் அவர்களைப் பிடித்து உள்ளே வைக்கிறார்கள். அவர்களின் மேல் கேஸ் போட்டு, வழக்கு விசாரணை நடந்து முடிவாவதற்குள், இங்கு ஹிந்தியோ அல்லது சீனமோ, அல்லது அரபியோ எந்த மொழி படிக்கிறோமோ என்று தெரியாத அளவுக்குத்தான் இன்றைய நிலைமை இருக்கிறது. எனவே இந்தக் கலகக்காரர்கள் விஷயத்தில் முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இந்தப் போலீஸ்காரர்களும் மிகவும் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்களுக்கு இருக்கின்ற குறைபாடுகளை யெல்லாம் எல்லா நண்பர்களும் சொன்னார்கள்.

[திரு. கோ. நாராயணசாமி நாயுடு] [13th March 1965

அவர்களுக்கு இருக்கிற வீட்டு வசதியைப் பார்க்கிறபோது அவர்களுக்குச் சரியான வீட்டு வசதிகள் கிடையாது ; இந்தக் காலத்தில் அந்த வீடுகளில் காலந் தள்ள முடியாது. சென்னையில் இருக்கிறவர்களுக்கும் சரி, வெளியில் இருக்கிறவர்களுக்கும் சரி, அவர்களுடைய சம்பளம் பற்றாக்குறையாக இருக்கிறது. கேவலமான சம்பளமாக இருக்கிறது. அவர்களுக்கு இப்பொழுது இருக்கிற ஆயுதத்தை விட வேறு தினுசான ஆயுதம் கொடுக்கப்பட வேண்டும். சினிமாக்காரர்கள் வைத்திருப்பதுபோல், சினிமாப் படம் எடுப்பவர்கள் வைத்திருப்பதுபோல், ரோல் பிலிம் கொடுக்க வேண்டும். நிரூபிக்க முடியாது என்று சொல்கிறார்கள். ஆகையால் அந்த ரோல் பிலிம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டால் அவர்கள் அதைக் கையில் வைத்துக் கொண்டு இந்த மாதிரிக் கலகங்களில் படம் எடுத்து நிரூபிப்பதற்கு வசதியாக இருக்கும். வரக்கூடிய கலகங்களையும் வெளி நாட்டினர் படையெடுப்பையும் பொருட்படுத்தாமல் பக்கத்தில் இருக்கக்கூடிய அந்தமான் தீவுகளில் கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டிச் செலவு செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், அங்கே எதிர்க் கட்சிகள் வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, எல்லா இடங்களிலும், முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். ரொம்பவும் போலீஸார் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர்களுடைய சம்பளத்தையும், ஆடைகளையும் அதிகரிக்கவேண்டும். அவர்களுக்கு கம்பளிக்காலுரைகளை நீக்கி பருத்திக் காலுரைகள் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

அதற்குள்ளாகவா நேரம் ஆகிவிட்டது. முடித்து விடுகிறேன். போலீஸ்காரர்கள் தீவிரமாக இருந்தால் சர்க்கார் கோபித்துக் கொள்வார்கள். மெதுவாகப் போனால் அதிகாரிகள் கோபித்துக்கொள்வார்கள் என்ற நிலை இருப்பதால், அவர்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கலகங்களிலிருந்து தப்புவிப்பதற்குப் பொதுமக்களுக்குக்கூட இனிமேல் பயிற்சியளிக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஏனென்றால் இந்தக் கல்லெறியிலிருந்து தப்புவதற்குச் சரியான ஆயுதம் கண்டுபிடிக்க வேண்டும். கல்லெறிக்குப் பயப்படத்தான் வேண்டியிருக்கிறது. கொசு கடிக்கிறது என்றால் நாம் பயந்து கொண்டு வேறு இடத்திற்குப் போவதில்லையா ? அதுபோல்தான். கொசுவை அடிப்பதென்றால் 500 கொசுக்களையாவது அடித்து விடலாம். ஆனால் அது கடித்தால் வலிக்கும், தொந்திரவாக இருக்கும் என்ற காரணத்தால்தான் நாம் தூரத்திற்குப் போய் காற்றடிக்கிற இடமாகப் பார்த்துப் படுத்துத் தூங்குகிறோம். எனவே, இத்தனை கஷ்டங்களையும் பார்த்துத்தான் மனச்சாட்சி இருப்பதன் காரணமாகப் போலீஸார் கடுமையாக நடந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நாங்கள்கூட நினைத்தோம், " என்ன இது, நம் கையில் அதிகாரம் இருக்கிறது, கலகம் செய்கிறார்கள், ரயிலைக் கொளுத்துகிறார்கள், கல் எறிகிறார்கள், இதைத் தடுக்கவேண்டாமா? கொஞ்சம் தீவிரமாகப் போனால்தான் என்ன ? " என்றெல்லாம் நினைத்தோம். எனினும்,

" தண்டிருந்ததிவன்கரத்தில் தனுவருந்தவன் கரத்தில்
வண்டிருந்த பூங்குழல் மேல்மாசு இருந்ததென இருந்தேன்."

என்று சொன்னபடி சர்க்கார் கையிலே அதிகாரம் இருந்தும் போலீஸார் தாக்கப்பட்டிருக்கிறார்கள் ; பொதுஜனங்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் ; மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் ; மக்கள் பயணத்திற்குக் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். ரயில்களை எரித்து இருக்கிறார்கள். இந்தப் போராட்ட முறையை நாம் பார்த்ததில்லை. நம்முடைய சொந்த சொத்தையே நாசப்படுத்துவதற்குப் போராடும் இந்த முறையை நாம் பார்த்ததில்லை. கோடிக்கணக்கான ரூபாய் ரயில்வேக்குச் சேதம். போஸ்ட் ஆபீஸ்களுக்குச் சேதம். பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகள் பள்ளிக்குச் சென்றிருக்கிறார்களே, திரும்பி வருவார்களா என்ற சந்தேகம். இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக போலீஸ்காரர்களுக்கு ஜீப்கள் கொடுக்க வேண்டும். போட்டோ மெஷின் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் வெளியே போக நேர்ந்தால் நல்ல ஆயுதத்தைக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் இப்பொழுது எல்லாம் போலீஸ்காரர்கள் ஆயுதம் வைத்திருந்தால் அவர்களுக்கு ஒரு மரியாதை இருக்கிறது.



13th March 1965] [திரு. கோ. நாராயணசாமி நாயுடு]

மேலும் சப்-இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள் இவர்களை எல்லாம் பார்த்தால் ஏதாவது எழுதிக் கொண்டே இருக்கிறார்கள், அல்லது யாரிடமாவது டைப்ரைட்டர் வாங்கி வந்து டைப் செய்துகொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மாற்றி, அவர்களுக்கு என்னென்ன கருவிகள் கொடுக்க வேண்டுமோ அவைகளை யெல்லாம் கொடுக்க வேண்டும்.

இந்த பட்ஜெட்டிலே அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிற பணம் போதாது. எனவே, அடுத்த உபரி பட்ஜெட்டிலாவது நிறையச் சம்பளம் கொடுத்து, அவர்களுக்கு வசதியாக வீடுகளும் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறப்பாக, அவர்கள் தங்களுடைய வேலையை நல்ல முறையில் செய்ததற்காக அவர்களுக்கு என் நன்றியையும்—எங்களுடைய ஊரில் போலீஸ் அதிகாரிகள் மிகத் தெளிவாக நடந்து கொண்டு பலாத்கார நிகழ்ச்சி ஏற்படாமல் தடுத்துள்ளார்கள்—எனவே அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கோசல்ராம் :** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இந்த 11-00 a.m.
போலீஸ் மானியக் கோரிக்கையிலே பேசுகின்றவர்களிடையே இரண்டு விதமான மாற்றுக் கருத்துக்கள் இருக்கின்றன. நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய சில முக்கிய விஷயங்களை மாத்திரம் பேசலாம் என்று நினைக்கிறேன். சுதந்திரத்திற்குப் பின்னால் கல்விக்காக ஆண்டு ஒன்றுக்கு $37\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒதுக்கி மக்களுடைய நிலைமையை உயர்த்திவிட்டால் இந்த மாதிரிக் கலவரங்கள், கலகங்கள், கிளர்ச்சிகள் ஆகியவற்றைத் தடுத்து விட முடியும் என்று நினைத்தோம் ; நினைக்கின்றோம். பதவி ஆசை என்பது மனிதனுடைய இயல்பு. யாரும் ஆசைப்படுவதைக் குறை சொல்ல முடியாது. பதவியைப் பிடித்துக்கொண்டு விடவேண்டுமென்று எதிர்க் கட்சிகள் நடந்தாலும் சரி, நமது கட்சியில் யாரும் பதவியைப் பெற வேண்டுமென்று முற்பட்டாலும் சரி, அதிலே தவறு எதுவும் இல்லை. அந்தப் பதவியைப் பிடிப்பதைக் கிளர்ச்சியின் மூலமாகச் செய்து விட முடியும் என்று யாராவது நினைப்பார்களேயானால் அது தவறு என்று நாம் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். சில நாட்களுக்கு முன்னாலே கனம் பக்தவத்சலம் அவர்களைக் கன்னாபின்னா என்று திட்டியவர்கள்கூட " அவர் நல்ல முறையிலே கலகங்களை அடக்கினார் " என்று கூறியிருக்கிறார்கள். அவரைப் புகழ்ந்ததோடு மட்டுமல்ல ; அவர் செய்தது சரிதான் என்று பொதுமக்கள் பேசக்கூடிய நிலைமை வந்திருக்கிறது.

போலீஸ் போர்ஸைப் பொறுத்தவரை இப்போது இருக்கின்ற அளவு போதாது. எஸ்டிமேட்ஸ் கமிட்டியினர் போலீஸ் போர்ஸ் பற்றிய நிலைமையை ஆராய ஜில்லா முழுவதும் சுற்றிப் பார்த்து, நகரத்திலே உள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக் கெல்லாம் சென்று பார்த்து ஒரு பெரிய யாதாஸ்தைச் சமர்ப்பித் திருக்கிறார்கள். இப்போது மக்களுக்குச் சுமுகமான வாழ்க்கை நடத்த முடியுமா, தெருவில் நடக்க முடியுமா, வீட்டில் அமைதியாக இருக்க முடியுமா என்ற பயம் ஏற்பட்டு விட்டது. கலகக்காரர்கள் என்று சொல்லும்போது நான் எந்தக் கட்சியையும் சொல்லவில்லை ; கலகக்காரர்கள் எல்லா இடத்திலும் இருக்கிறார்கள். கலகக்காரர்களை ஒடுக்க வேண்டுமென்றால் இன்று இருக்கிற போலீஸ் போர்ஸை அதிகரிக்கவேண்டும். எல்லா மாவட்டத்திலும் போலீஸ் போர்ஸை அதிகரிக்க வேண்டும். சமீபத்தில் நம்முடைய ராஜ்யத்தில் மிலிடரி வர வேண்டு மென்று ஐ.ஜி. அவர்கள் நினைத்தார்கள் ; போலீஸ் அமைச்சர் அவர்கள் நினைத்தார்கள் ; முதலமைச்சர் அவர்கள் நினைத்தார்கள். இதற்குக் காரணம் என்ன ? நம்முடைய ராஜ்யத்தில் போலீஸ் போர்ஸ் போதாது என்பதைத்தான் இது காட்டுகிறது. போலீஸைப் பலப்படுத்தி விட்டால் மிலிடரியைக் கொண்டு வரவேண்டிய அவசியமே இல்லை.

எஸ்டிமேட்ஸ் கமிட்டியைப் பொறுத்து என்னுடைய கருத்துக்கும் அரசாங்கத்தின் கருத்துக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஒரு இலாகாவின் "எஃபிஷியன்சி"யை அதிகப்படுத்துவதற்காக அந்த இலாகாவிற்கு எஸ்டிமேட்ஸ் கமிட்டி சென்று பார்த்து அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் கொடுக்க வேண்டிய அதிகாரந்தான் இருக்கிறதே தவிர, போலீஸ்காரர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்வதற்கு அதிகாரம் இல்லை யென்று சொன்னார்கள். போலீஸ்காரர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்தாவிட்டால், சப்-இன்ஸ்பெக்டர்கள் சம்பளத்தை அதிகப்படுத்தாவிட்டால் எப்படி அவர்களுடைய "எஃபிஷியன்ஸி" அதிகரிக்க முடியும்? போலீஸ் கான்ஸ்டபிள் சுமுகமாக வாழ்க்கை நடத்த முடிந்தால்தான் அரசாங்கம் நன்றாக நடக்க முடியும் என்று சொல்வது "எ஼பிஷியன்சி" தான். அந்தக் கமிட்டி ராஜ்யம் முழுமையும் சுற்றி, ஆங்காங்கு தகவல்களைச் சேகரித்து, சாட்சியங்களை விசாரித்து ரிப்போர்ட் சமர்ப்பிக்கிறபோது அவர்களுடைய சம்பளத்தையும் உயர்த்த வேண்டுமென்று அந்த ரிப்போர்ட்டிலே கூறினால் அதற்கான அதிகாரம் அந்தக் கமிட்டிக்குக் கிடையாது என்று கூறுகிறார்கள். முதலிலேயே அந்தக் கமிட்டியினுடைய அதிகாரத்தை நிர்ணயித்திருக்க வேண்டும். அவர்களுடைய எ஼பிஷியன்சி வளர வேண்டு மென்று சொன்னால் எப்படி வளர முடியும்? அவர்களிடையே எ஼பிஷியன்சியை வளர்க்க வேண்டுமென்றால் அந்த ரிப்போர்ட்டை இம்ப்ளிமெண்ட் பண்ணவேண்டுமென்பதுதான் கோரிக்கை. பார்லிமெண்டிலே எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட் கொடுத்தால் 60 சத விகிதம் இம்ப்ளிமெண்ட் பண்ணுகிறார்கள், 75 சத விகிதம் இம்ளிமெண்ட் பண்ணுகிறார்கள். எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் எல்லாக் கட்சியினரும் இருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் கனம் நெடுஞ்செழியன் அவர்கள் இருக்கிறார்கள்; நண்பர் நல்லசிவம் அவர்கள் இருக்கிறார்கள்; நான் இருக்கிறேன். அதிலே கட்சி மனப்பான்மையோடு எதையும் பார்ப்பதில்லை. எங்களுடைய ரிப்போர்ட்டில் போலீஸ்காரர்களுக்குக் குறைந்த பட்சம் ரூ. 85—3—130 என்ற அளவுக்காவது சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறோம். சாதாரணமாக ஒரு போலீஸ்காரருக்கு ஐந்தாறு குழந்தைகள் இருக்கும். இப்போது நாட்டிலுள்ள விலைவாசியில் அவன் இந்தக் குறைந்த சம்பளத்தில் எப்படிச் சாப்பிடமுடியும்? எப்படி வேலை பார்க்க முடியும். போலீஸ்காரர்களில் சிலர் தி.மு.க. வா, சிலர் காங்கிரசா என்று பார்ப்பதெல்லாம் ஆபத்தானது. அவனுடைய வாழ்க்கைக்கு வரக்கூடிய வருமானம் போதாது. அவர்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டு மென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். நண்பர் ப. உ. சண்முகம் அவர்கள்கூட முதல் மந்திரி மீது குற்றம் சாட்டினார்களே தவிர, போலீஸ் மீது குற்றம் சாட்டவில்லை. அரசியல் ரீதியாகப் பேசினார். அவரைப் பாராட்டுகிறேன். போலீஸ் பலமாக இருந்தால்தான் நாட்டில் மனிதன் அமைதியாக வாழ முடியும். அவர்களுடைய அடிப்படைத் தேவை என்ன என்பதை உணர வேண்டும்.

நகரத்தில் அவர்களுக்காகச் சிறிய சிறிய கைத்தொழில்களை வைத்திருக்கிறார்கள். அதற்கு நம்முடைய ஸ்டேட்டில் இருந்து உதவி கொடுக்கவில்லை. கூட்டுறவு முறையில் நடக்கிறது. போலீஸ்காரர்கள் வீட்டுப் பெண்கள் அந்தச் சிறு தொழில்களிலே ஈடுபட்டு ஒரு நாளைக்கு $1\frac{1}{4}$ ரூபாயிலிருந்து $2\frac{1}{2}$ ரூபாய் சம்பாதிக்கிறார்கள். அதற்கு முதல் ரொம்பக் குறைவுதான். இந்த மாதிரி சிறு தொழில்களுக்குச் சர்க்கார் ஓரளவு ஸ்டேட் எய்டு கொடுத்தால் ஓரளவுக்கு அவர்களுடைய குடும்ப வருவாய் பெருக வாய்ப்பு ஏற்பட்டு அவர்களுடைய எ஼பிஷியன்சி பெருக வழி ஏற்படும். சமீபத்தில் ஏதோ ஒரு பியூன் ஒரு ரூபாய் வாங்கினான் என்பதற்காகத் தண்டிக்கப்பட்டான் என்று பார்த்தேன். எனக்கு அதைப் பற்றிப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவனுக்கு என்ன சம்பளம் என்று பார்க்க வேண்டும். ஒரு பெட்டியை அவன் தூக்கிக்கொண்டு வந்தான் என்றால் அவனுக்கு ஒரு ரூபாய் கொடுக்கிறோம். இது ஒரு பெரிய தப்பா? ஆகவே, அவனுடைய சம்பளத்தை உயர்த்திவிட்டு அவர்களைக் கண்காணிப்பாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.





போலீஸ் துறையிலே, குறிப்பிட்ட கேஸ்களை—செக்ஷன் 54 படி கேஸ்களை, ப்ரொக்பிஷன் கேஸ்களை மாதத்திற்கு இவ்வளவு கேஸ்கள் பிடிக்க வேண்டு மென்று விதித்திருக்கிறார்கள். . . .

**கனம் திரு. பூ. கக்கன் :** குறிப்பாக அப்படி ஒன்றும் இல்லை. உண்மைக்கு விரோதமாக இப்படிச் சொல்லிச் சொல்லித்தான் அதையும் நம்பக்கூடிய நிலைமையைச் செய்து விட்டார்கள். அப்படி எந்த விதியும் கிடையாது.

**திரு. கே. டி. கோசல்ராம் :** கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் கூறியதைக் கேட்டு சந்தோஷப்படுகிறேன். ஆனால் மாதத்திற்கு இவ்வளவு கேஸ் போட வேண்டுமென்ற நிலை இருக்கிறது என்ற எண்ணம் பொதுவாக இருக்கிறது. அந்த எண்ணம் தவறானது என்று தெளிவு படுத்த வேண்டிய அவசியம் மிக முக்கியமானது.

அடுத்து போலீஸ்காரர்களுக்கு லாயல்டி இருக்க வேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்தில் போலீஸ்காரர்கள் அவர்களுக்கு லாயல்டியாக இருந்து, இப்போது சொல்வதை யெல்லாம் விட வருணிக்க முடியாத அளவு கொடுமையைச் செய்தார்கள். அந்த அரசாங்கத்திற்கு லாயலாக இருந்தார்கள். ஆனால் அந்தச் சமயத்திலும் நமக்கு உதவி செய்தவர்கள் இருந்தார்கள். அவர்கள் அந்த அரசாங்கத்திற்கு "டிஸ்லாயல்" ஆக இருந்து நமக்கு உதவி செய்தார்கள். ஆனால் அன்று வெள்ளைக்காரன் அரசாங்கத்திற்கு யார் லாயல் ஆக இருந்தார்களோ அவர்கள் இன்றும் நம்முடைய அரசாங்கத்திற்கு லாயல் ஆக இருக்கிறார். ஆனால் அன்று டிஸ்லாயல் ஆக இருந்து நமக்கு உதவி செய்தவர்கள் இன்று நம்முடைய அரசாங்கத்திற்கு டிஸ்லாயல் ஆகத்தான் இருக்கிறார்கள். இது என்னுடைய சொந்தக் கருத்து மட்டுமல்ல; என்னுடைய அனுபவத்தை யொட்டிக் கூறுகிறேன். அப்படி டிஸ்லாயல் ஆக இருந்தவர்கள் உத்தியோகத்தை விட்டுக்கூட அனுப்பப்பட்டிருக்கிறார்கள். சிலர் ராஜினாமாச் செய்து விட்டுப் போயிருக்கிறார்கள். போலீசார் பொதுமக்களுடைய நன்மைக்காகப் பணியாற்றுகிறார்கள். அதே சமயத்தில் "போலீசார்கள் அரசாங்கம் சொல்கிறபடி கேட்கிறார்கள்" என்று அவர்களைப்பற்றி பொதுமக்கள் குறை சொல்லக்கூடிய "கேயாடிக் கண்டிஷனில்" இருக்கிறது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த போலீஸ் மான்ய விவாதத்தில் நாம் பங்கு கொள்கிற சூழ்நிலை, எல்லோருடைய மனமும் மிகவும் பாதிக்கப்பட்டு, மனப் புண் ஏற்பட்டு அந்த மனப் புண்ணிலிருந்து நாம் மீள்வதற்கு முன்பு மற்றும் இன்னும் விபரீதமான காரியங்கள் நடைபெறுகிற ஒரு சூழ்நிலையில் இன்று நாம் இதை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். நீலகிரி மலை உச்சியில் நேற்றைய தினம் உதகமண்டலத்தில் 60 வயதான கிழவர் ஒருவர் போலீஸ் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இரண்டு மாணவர்கள் ஆஸ்பத்திரியில் மரணப் படுக்கையில் படுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்று மாலை கர்ப்யூ ஊரடங்குச் சட்டம் நீலகிரி மலை உச்சியில், உதகமண்டலத்தில் பிரகடனப்படுத்த வேண்டிய ஒரு பயங்கரமான சூழ்நிலையில்தான் நாம் போலீஸ் மான்யத்தை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். நீலகிரி மலை உச்சியில் நடைபெற்றிருக்கும் சம்பவங்கள் நண்பர் மாதா கவுடர் அவர்கள் சொன்ன மாடலில் ஏற்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. இன்று மந்திரி சபை பீடத்தில் இருப்பவர்கள் அப்படி அணுகமாட்டார்கள் என்று கருதுகிறேன். இன்று ரத்த ஆறு தமிழ் நாட்டில் ஓடிக் கொண்டிருக்கிறது. கொங்கு நாட்டின் மண்ணில் தமிழர்களின் ரத்தம் ஓடியது. காவேரி ஆற்றின் படுகையில் பிணங்கள், பாண்டிய நாட்டு மண்ணில் புனிதமான உயிர்கள், யாரும் பெற முடியாத உயிர்கள் பலியாகியிருக்கின்றன. இவற்றில் நம் பங்கு, சர்க்காரின் பங்கு என்ன? நம் சக்திக்கு உட்பட்டதை நாம் செய்திருக்கிறோமா? நம் சாத்தியக் கூறுகளை எல்லாம் செய்துவிட்டோமா? இன்று திரு. பக்தவத்சலம் அவர்கள் போய் திரு. கக்கன் அவர்கள் வருவதும், அல்லது கக்கன் அவர்கள் போய் அறிஞர் அண்ணா அவர்கள்

[திரு. கே. ஏ. மதியழகன்] [13th March 1965

வருவதோ அல்லது திரு. நெடுஞ்செழியன் அவர்கள் வருவதோ பிரச்னை அல்ல. ஜனநாயக ஆட்சி முறை அமைப்புக்கு நாம் இன்று தயாராகயிருக்கிறோமா என்று அறை கூவலுக்கு விடையளிக்க வேண்டிய நிலையில் ஆட்சியாளர்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் துயர சம்பவங்களை சாதாரண அரசியல் கண்ணோட்டத்துடன் என்றுமே நாங்கள் அணுகவில்லை. 25-ம் தேதி முதல் சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க அரசாங்கம் தவறி விட்டது. அதோடு கட்சி நலனுக்காக அதிகாரத்தைப் போலீஸ் படையே துஷ் பிரயோகம் செய்து விட்டார்கள் என்ற பலத்த குற்றச்சாட்டை சாட்டுகிறேன். திரு. மாதவன் அவர்கள் மதுரை காங்கிரஸ் ஆபீஸ் முன்பு அரிவாளால் மாணவர்கள் வெட்டப்பட்டதைக் கூறினார். ஆனால் அதுபற்றிய விளக்க அறிக்கை, அமைச்சரால் இந்த மன்றத்தில் படிக்கப்பட்டபோது, முழுப் பூசினிக்காயை சோற்றில் மறைப்பது போல் அரிவாள் வெட்டுச் சம்பவம் மட்டும் மறைக்கப்பட்டுள்ளது. அந்தத் தேதியிலும் அதற்கு முந்திய நாளும் பிந்திய நாளும் போலீஸ் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் மதுரை மாவட்டத்தில்தான் இருந்தார்கள். காங்கிரஸ் அலுவலகம் முன்பு நடந்த சம்பவத்தை மறுக்கிறாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். வெங்கடேஸ்வரா ஹாஸ்டலிலும், பச்சையப்பன் கல்லூரி ஹாஸ்டலிலும், சட்டக் கல்லூரி ஹாஸ்டலிலும் அனுமதியின்றி அத்துமீறி புகுந்து அடித்தார்கள் போலீஸ்காரர்கள். போலீஸ்காரர்கள் அமைச்சரின் தூண்டுதலினால்தான் இந்த வெறியாட்டத்தை நடத்தினார்கள். சாதாரணமாக போலீஸ்காரர்கள் இப்படி நடந்து கொண்டிருக்கமாட்டார்கள். 26-ம் தேதி நுங்கம்பாக்கத்தில் கூட்டம் போட வேண்டுமென்று கேட்டிருந்தோம். அறிஞர் அண்ணா, நான், திரு. அரங்கண்ணல், திரு. மணிமொழியார் கலந்து கொள்ள இருந்தோம். கூட்டத்திற்குத் தடையில்லை. எனினும் சட்ட விரோதமாக நள்ளிரவில் அறிஞர் அண்ணாவும் நாங்களும் கைது செய்யப்பட்டோம். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் போலீஸ்காரன் மகனாகிய ஓர் மாணவனை மற்றோர் போலீஸ்காரன் சுட்ட கொடுமை நிகழ்ந்தது. திருப்பரங்குன்றம் தியாகராயர் இன்சினியரிங் கல்லூரி விடுதி ரோட்டிலிருந்து நெடுந்தூரம் உள்ளே, வனாந்திரத்தில் உள்ளது. இங்கு அறைகளில் புகுந்து தடியடியும் கண்ணீர் புகையும் பிரயோகிக்கப்பட்டது. மதுரை கல்லூரியில் 60 வயதான பிரின்சிபால்தான் கல்லூரி பிரின்சிப்பால் என்று கூறியும் கல்லூரி அறையிலே புகுந்து அவர்களை அடித்தார்கள். அப்படியெல்லாம் செய்து ஒரு பெரிய அதிருப்தியை அரசினர் ஏற்படுத்திக் கொண்டு விட்டார்கள். வைஸ் சான்சலர் அவர்களே சொன்னார்கள். நீங்கள் தலையிடாதீர்கள், கல்லூரி, மாணவர் விடுதி ஆகியவற்றின் எல்லைக்கு உள்ளே போகாதீர்கள் என்று சொன்னார்கள், இன்று போகவில்லை. இதேபோல் அன்று செய்திருக்கக் கூடாதா? தவறு செய்ததினால்தான் நிலைமை அப்படிப்போய்விட்டது. குமாரபாளயத்தில் நடந்தது என்ன? பவானியில் அன்றைய தினம் மாணவர் ஊர்வலம் நடந்தது. நடுவில் காவேரி ஆறு ஓடுகிறது. ஒரு பக்கம் குமாரபாளயம், மற்றொரு பக்கம் பவானி. பவானியில் நடந்த ஊர்வலம் சென்று முடிந்திருக்கிறது 10½ மணிக்கு. குமாரபாளயத்திலும் ஊர்வலம் நடந்து முடிந்து எதிர்க்கரையிலுள்ள பவானிக்கு போக வேண்டுமென்று சொன்னார்கள். அன்று பவானியிலும், குமாரபாளயத்திலும் 144 கிடையாது. அப்படி ஒரு மணி நேரம் போயிருந்தால் என்னவாகியிருக்கும்? நடந்தது என்ன? உயர்தர போலீஸ் அதிகாரி மாணவர்கள் சிலரைத் துப்பாக்கிக் கட்டையால் மிருகத்தனமாக தாக்கிவிட்டு போலீஸ் ஸ்டேஷனிலே அடைக்கலம் புகுந்தார். பல சிறுவர்கள் விசாரிக்க ஸ்டேஷனுக்குப் போனார்கள். 12 வயது சிறுவன் ஒருவன், 10 வயது பெண் ஒருத்தி ஸ்டேஷன் வாயிலிலே நின்றார்கள். ஒரு கண நேரத்தில் 12 வயது சிறுவனும் பத்து வயது பெண்ணும் சுட்டுக் கொல்லப்பட்டனர். போலீஸ் ஸ்டேஷன் ஆயுதங்களை பறிக்கவா போனார்கள்? அவர்களைச் சுட்ட பின்னர்தான் குமாரபாளயத்தில் கோபத்தீயால் துயர மிக்க சம்பவங்கள் ஏற்பட்டன. போலீஸ் அமைச்சர் அவர்கள் அன்று தர்மபுரியில் இல்லையா? அங்கு சென்றிருக்கக் கூடாதா? 20 பேர்களை சாகடித்த பிறகுதான் இது பற்றி விசாரிப்பதா? அன்று அங்கு 144 கிடையாது.



13th March 1965]

**கனம் திரு. பூ. கக்கன் :** தர்மபுரியில் நான் காலையில் இருந்தேன். தேர்தலுக்காகப் போனேன். சேலத்திற்கு வந்தபின்தான் தெரியும். தர்மபுரிக்கு என் போகவில்லை என்றால் பக்கத்தில் இருந்தால் போயிருப்பேன். அதற்கு முன்பே நடந்து விட்டது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இரண்டாவது தடவை இரவு 7 மணிக்கு மேல் குமாரபாளயத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. அதைத் தடுத்திருக்கக் கூடாதா என்பதைத்தான் தெரிய விரும்புகிறேன். திருப்பூர் சம்பவம் பற்றி நாங்களும் கண்டித்தோம். போலீஸ்காரர்களை தீ வைத்துக் கொளுத்துவது என்பதை வெறுக்கிறேன். மனிதாபிமானம் மிக்க எவனும் அந்த அருவருக்கத்தக்க செயலை ஒப்புக்கொள்ளமாட்டான். வன்முறை தி.மு.க. வின் வழி முறையல்ல. மாணவர்கள் 3,000 பேர் ஊர்வலம் போக வேண்டுமென்று தெருவிலே கிளம்பினார்கள். போலீஸ் இலக்கணப்படி கலவரக் கூட்ட சம்பந்தமாக நாலு விதிமுறைகளை அனுசரிக்க வேண்டும். ஒன்று அப்ரிசியேஷன் (appreciation), இரண்டு டாமினேஷின் (Domination) மூன்று எக்ஸ்ட்ரிகேஷன் (Extrication), நான்கு எவாக்யுவேஷன் (Evacuation) என்று கட்டங்கள் உள்ளன. 3,000 மாணவர்கள் மத்தியில் இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், சில போலீஸ்காரர்கள். ஆயுத தளவாடங்கள் சொற்பம். நிலைமையை அப்ரிஷியேட் செய்தார்களா? நாலு மாணவர் தலைவர்களை அழைத்து போலீஸ் ஸ்டேஷனில் வைத்து நையப் புடைத்து திரும்பவும் கூட்டத்திலே விட்டு விட்டார்கள். கூட்டம் ஆத்திர உணர்ச்சி கொண்டபோது சப்-இன்ஸ்பெக்டர்கள் சுட ஆரம்பித்தார்கள். இரண்டு பேர்கள் பிணமாக விழுந்தனர். அது மக்களின் கோப உணர்ச்சியைத் தூண்டி விட்டது. சுட்ட ஆத்திரம் மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது. உயர்தர போலீஸ் அதிகாரி ஒருவர் சாதுர்யமாக ஜீப்பில் ஓடியிருக்கிறார். சப் இன்ஸ்பெக்டர்கள் பரிதாபகரமான நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். எக்ஸ்ட்ரிகேட் செய்திருக்க வேண்டும். குமாரபாளயத்தில் போலீஸ் அதிகாரி ஓடிச் சென்று ஸ்டேஷனில் அடைக்கலம் புகுந்து கொள்ளவில்லையா? மக்களின் உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி நிலைமையை சமாளிக்கத் தவறியதால்தான் திருப்பூர் சம்பவங்கள் நடைபெற்றன ? பொள்ளாச்சியில் நடந்தது என்ன? பொள்ளாச்சியில் 60, 70 பேர்கள் ராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர். ஆண்டவனிடம் பெரும் பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருக்கிற முதல் அமைச்சர் அவர்கள் மனசாட்சியைத் தொட்டுப் பார்த்துச் சொல்லட்டும். மதுக்கரையில் ராணுவ முகாமின் பக்கத்தில் உள்ள காடுகளில் அந்தப் பிணங்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன. தெளிவாக, திட்டவட்டமாக நான் சொல்வேன். பொள்ளாச்சியில் என்ன பெரிய காரியம் நடந்தது? சமாளிக்க முடியவில்லை, சமாளிக்க முடியவில்லை என்று சொல்கிறீர்கள். சமாளிக்க முடியாதபடி அன்று அங்கே என்ன நடந்தது? ராணுவம் வருவதற்கு முன்பு அங்கு போலீஸ்காரர்கள் தடியடி, கண்ணீர்ப் புகை, துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு, கட்டுக்கடங்காததால் ராணுவம் வந்ததா என்றால் இல்லை. அங்கு எந்தக் கலவரமும் நடைபெறவில்லை. ராணுவக்காரனுக்குத் தமிழ் நாட்டின் கதவைத் திறந்து விட்டீர்கள். அனுபவமில்லாத பொள்ளாச்சி சப்-கலெக்டரான இளைஞர் கோனுக்கு போன் செய்தார். பட்டாளம் புறப்பட்டது. பொள்ளாச்சி வந்தவுடன் நிரபராதிகளான நமது உடன்பிறப்புகளை 60, 70 பேரை இயந்திரத் துப்பாகியினாலே சுட்டு வீழ்த்தினார்கள். சமாளிக்க முடியவில்லை என்ற நிலைமை வந்த பின்னால் ராணுவம் கொண்டுவரப்பட்டது என்று சொன்னார்கள். நான் அறைகூவிக் கேட்கிறேன். ராணுவம் வருவதற்கு முன்பு பொள்ளாச்சியில் அன்றையதினம் ஒரு சிறு சம்பவமாவது நடைபெற்றது, அதனைப் போலீசாலே சமாளிக்க முடியவில்லை என்பதை நிரூபிக்க முடியுமா? மெஷின் கன்னால் சுட வில்லை, சாதாரணத் துப்பாக்கியால்தான் சுட்டார்கள் என்பதற்கு வாதம் நடத்துகிறார்கள். ராணுவம் என்றாலே மெஷின்கன்கள், நாட்டுவெடிக்குண்டுகள், ஆயுத தளவாடங்கள் வருகின்றன என்பதுதானே பொருள் ? ராணுவத்தார் சேவாதள தொண்டர்களா? ஊர்க்காவல் படையினரா? ராணுவம் வந்து விட்டது என்றாலே சுடப் போகிறார்கள் என்று தானே பொருள்? நான் தெளிவாக திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். நிச்சயமாக 60, 70 பேரை பொள்ளாச்சியில் பிணமாக்கியிருக்கிறார்கள்.

இதனை எந்த நீதி விசாரணையிலும் நிரூபிக்கத் தயாராயிருக்கிறேன். அதே மாதிரி செஞ்சியில் நடந்ததென்ன, கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த இடம்தான், அங்கு நடந்தது என்ன? நான் ஆதாரத்தோடு சொல்லுகிறேன். அங்கு கலவரத்தை காங்கிரஸ்காரர்கள்தான் தூண்டிவிட்டார்கள். ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டில், பெண்களை மானபங்கப்படுத்தி அவர் மகளுடைய கல்யாணப் புடவையை எடுத்து சேதப்படுத்தி நெருப்பு வைத்திருக்கிறார்கள். இதை நிச்சயமாகக் காங்கிரஸ்காரர்கள்தான் செய்தார்கள் என்பதை நான் தக்க ஆதாரத்தோடு சொல்ல முடியும் என்பதைக் தங்களிடத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கோசல்ராம் :** பொதுப்படையாகக் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்வதைவிட, அவர்களுடைய பெயர்களை சொல்லிவிடலாமே

. . . . .

**திரு. கே. ஏ. மதியழகன் :** பெயர்களைத் தனிப்பட்டமுறையில் வேண்டுமென்றாலும் சொல்லுகிறேன். இதற்காக ஏதாவது விசாரணை வைக்கப்படுமானால் அப்போதும் சொல்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். கொஞ்ச காலத்திற்கு முன்பு, சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள் காங்கிரஸ்காரர்கள் சிலபேர் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை காரணமாகத்தான், அதில் பாதிக்கப்பட்ட காங்கிரஸ்காரர்கள் இந்தக் கலவரத்தை பொறுப்பற்ற முறையில் செய்தார்கள் என்பதை என்னால் சொல்ல முடியும். நான் இவைகளை எல்லாம் சொல்லும்போது மிகவும் பொறுப்போடுதான் சொல்லுகிறேன். இவைகளை எல்லாம் நான் வருத்தத்துடன் சொல்லிக் கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ் பண்பாடு உடையவர் என்று உரிமை கொண்டாடுகிறார்கள். நமக்கும் உடன்பாடுதான். உள்துறை அமைச்சர் நந்தா அவர்களுடைய செல்வாக்கிற்காக இவர்கள் ஆளாக வேண்டும்? உள்துறை அமைச்சர் நந்தா அவர்கள் அன்றைய தினம் அதாவது ஜனவரி 25-ம் தேதி விமானத்தில் வந்திருந்தார்கள்.

. . . . . .

MR. DEPUTY SPEAKER : The hon. Member is making an insinuation.

SRI K. A. MATHIALAGAN : I am not insinuating, Sir. It is my thought. There is no insinuation either against the Hon. Chief Minister or against the Hon. Home Minister of the Government of India. I am only saying how things could have been shaped.

அவர்கள் அன்றையதினம் வராமல் இருந்திருந்தால் ஒருவேளை முதலமைச்சர் அவர்கள் மாணவர்களைச் சந்தித்திருக்கக்கூடும். வந்திருந்த உள்துறை அமைச்சர் நந்தா அவர்கள், கேரளத்திற்குப் போகின்ற வழியில், இங்கொருகாலும் திருவனந்தபுரம் ஒருகாலுமாக வைத்துக் கொண்டிருக்கிற நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் அவர்களைப் போய்ச் சந்தித்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் ஏன் இங்குள்ள நிலைமையைப்பற்றி கவனிக்கத் தவறிவிட்டார்கள்? கௌகாத்தியிலும், வங்காளத்திலும் நடந்த சம்பவங்களின் போதெல்லாம் மத்திய அமைச்சர்கள் ஓடோடிப் போனார்களே, அவ்விதம் இருக்கக்கூடியவர்கள், ஏன் இங்கு வரவில்லை? லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் இங்கு வந்திருக்க வேண்டாமா? இந்தியா எல்லாம் ஒன்று உணர்வுபூர்வமான ஐக்யம் வேண்டும் என்று சொல்லக்கூடிய இந்தத் தலைவர்கள் ஒருவரும் வராமல் இருந்துவிட்டு எல்லாம் முதலமைச்சர் அவர்கள் கையிலேயே விட்டுவிட்டார்கள். ஒருவேளை நந்தா அவர்கள், எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளுங்கள். வேண்டுமென்றால் ராணுவத்தை அனுப்புகிறேன் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கக்கூடும். பாராளுமன்றத்தில் ஹிரேன்முகர்ஜி அவர்கள் நந்தாவின் செயலாற்றத் தன்மையைக் குறிப்பிட்டபோது கனம் குல்சாரிலால் நந்தா அவர்கள், நான் செயலாற்றமல் இருந்திருக்கலாம். ஆனால் எனக்காக **Mr. Bhaktavatsalam acted in an admirable manner** என்று பாராட்டினார். இவைகளை என் காதாரக் கேட்டேன்.





இரண்டு நாட்களில் மைசூரிலிருந்தும், மற்றும் மத்திய பிரதேசத்திலிருந்தும் போலீஸ் படை வந்தது. ராணுவம் வந்தது. இதற்கிடையில் கனம் சுப்பிரமணியம் அவர்கள் வந்தார்கள். காரணம் திருப்பூரில் நடைபெற்ற வன்முறைச் செயல்களைக் கேள்விப்பட்டு வந்திருக்கக்கூடும். அங்கே நடந்த வன்முறைச் செயல்களை நாமும் கண்டிக்கிறோம். ஆனால் இங்கே வந்து பழனிசாமி கவுண்டர் அவர்களையும் மகாலிங்கம் அவர்களையும் பார்த்துப் பேசினார்கள். இந்தச் சம்பவத்தில் இறந்துபோன போலீஸ் அதிகாரிகளுக்கு நிதி கொடுக்கவேண்டும், அதற்கு நிதி திரட்டிக் கொடுங்கள் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு காரணமான டையர் துரைக்கு நிதி கொடுப்பதற்காக வெள்ளைக்கார மாதர்கள் 2,000 பவுன் நிதி திரட்டினார்கள்—அதைப்போன்று தான் இருக்கிறது, இந்தச் செயலும்—அன்றைய தினம் இருந்த வெள்ளைக்கார மாதர்களுக்கும் திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கிறேன். கனம் முதலமைச்சர் அவர்களும் இந்தக் கலவரங்களைத் தூண்டிவிட்டார் என்றே சொல்லவேண்டும். இந்தி எதிர்ப்புப் போராட்டம் 25-ந் தேதி துவங்கியது. அதே நேரத்தில் ஜனவரி 29-ந்தேதி நமது முதலமைச்சர் வெள்ளைக்கார ஆட்சி காலத்தில் இருந்த திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரையைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற வாஞ்சி ஐயருடைய மனைவிக்குப் பரிசு அளித்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் சிலருடைய மனதில் என்ன உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்க முடியும்? இதையெல்லாம் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், கம்யூனிஸ்ட் கட்சியின் பேரால் 1959-ல் கேரளத்தில் நடந்து கொண்டிருந்த ஆட்சியின் போது, காங்கிரஸால் தூண்டப்பட்டு மன்னத் பத்மநாபனும, கத்தோலிக்க மடாதிபதிகளும் சேர்ந்துகொண்டு அரசாங்கத்தைக கவிழ்க்க "விமோசன சமர சமிதி" என்ற பெயரால் அராஜகச் செயல்களில் ஈடுபட்ட நேரத்தில் கூட, அங்கிருந்த அரசாங்கம் தடையுத்தரவு போடவில்லை. நேர்மாறாக நீங்களும் வாருங்கள், கூடிப் பேசி முடிவு காணலாம், கலந்து பேசி தீர்வு காண்போம் என்று தான் சொன்னது. ஆனால் இங்கு நடப்பதென்ன? பெரிய அளவில் வாய்ப்பூட்டு பத்திரிகைகளுக்கு. ஊரெல்லாம் தடையுத்தரவு பாதுகாப்புச் சட்டம், சிறைக் கைதிகள். இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற உயிர்ச் சேதங்களுக்கு மட்டுமல்ல, சேதமடைந்திருக்கும் பல கோடிக்கணக்கான பொதுச் சொத்துக்களுக்கும் இந்த மந்திரி சபை தான் பொறுப்பு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்படி அன்று திரு. பக்தவத்சலம் அவர்களும் பாஷ்யம் அவர்களும் பெற்ற தடியடி வெள்ளைக்கார எதேச்சாதிகாரத்திற்கு மரண அடியாக அமைந்ததோ, அதே போல் இன்று எங்கள் தோழர்கள் ஆயிரக்கணக்கானவர் மீது விழுந்த தடியடி அஸ்தமனம் ஆகப்போகும் உங்கள் அக்கிரம ஆட்சியின் மீது விழுந்த மரணஅடி என்பதை மறந்து விடாதீர்கள். எங்கள் மீது பாய்ச்சப்பட்ட துப்பாக்கிக் குண்டுகள், இந்த ஆட்சி தனக்குத்தானே சுட்டுக்கொண்ட தற்கொலைக் குண்டுகள் என்று கூறிக்கொண்டு இந்த ஆட்சி அஸ்தமனமாவதற்கு முன்பே, பதவியிலிருந்து நீங்களாகவே விலகி விடுங்கள் என்று ஆட்சியினரைக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** கனம் சட்டமன்ற உப-தலைவர் அவர்களே, இந்தப் போலீஸ் மான்யக் கோரிக்கையை ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன். ஏறத்தாழ 8¾ கோடி கோரப்பட்டிருக்கிறது. இன்னும் கூடுதலாகக் கேட்கக் கூடாது என்று நான் எனக்குத் தோன்றுகிறது. யதேச்சாதிகாரம் அல்லது அந்நிய ஆட்சி இருந்ததைவிட ஜனநாயகத்தில் அடிப்படை உரிமை என்று சொல்லிக் கொண்டு ஆளும் தரப்பார், எதிர் தரப்பார் என்று வைத்துக்கொண்டு உரிமையின் பேரால் சட்டவிரோதமான செயல்களும் கிளர்ச்சிகளும் ஏற்படும்போது போலீசாரின் உதவி மக்களுக்கு மிகவும் தேவையாக இருக்கிறது. ஜனநாயகத்தில் உரிமை என்கிற பெயரால் பல நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. சட்டமன்றத்தில் இருக்கின்றவர்கள் சமீபத்தில் பேசியதை எல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இத்தனை உரிமைகள் இருக்கின்றன என்றாலும் அதிகப்படியாகப் பேசுவதற்குக்கூட உரிமையில்லாத அளவில் சட்டங்கள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டது. அந்த முறையில் ஜனநாயகத்தைப்

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [13th March 1965

பற்றி பேசினார்கள். காலஞ்சென்ற மதிப்பிற்குரிய ஜவகர்லால் நேரு அவர்கள் பொதுக்கூட்டங்களில் பேசுவதைப் பார்த்திருக்கிறோம், அவ்விதம் பேசுகின்ற கூட்டங்களில் கூட நேரமாகிவிட்டது என்றாலும் கூட, அவர்களுடைய பேச்சை முடிப்பதற்காக ஞாபகப்படுத்தப்படுகிறது. காங்கிரஸ் கட்சி அமைத்துக் கொடுக்கின்ற கூட்டங்களில் எல்லாம் அவ்வாறு பின்பற்றப்பட்டுத்தான் வருகிறது. 10½ மணிக்குக் கூட்டம் முடிய வேண்டும் என்றால் அதில் எந்தத் தலைவர்கள் பேசிக்கொண்டிருந்தாலும் சரி—அதிகாரிகளை எல்லாம் ஆட்டிப் படைக்கும் அதிகாரங்களைக் கொண்டிருக்கிற அமைச்சர்கள் பேசினாலும் சரி—ஐந்து நிமிடங்களுக்கு முன்னால் நினைவு படுத்தித்தான்காங்கிரஸ்காரர்கள் கூட்டங்களை நடத்திக்கொண்டு வருகிறார்கள். எங்கள் பகுதியில் சமீபத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நான் சொல்ல விரும்புகிறேன். எதிர் தரப்பில் அதிகம் பேர்கள் பேசினார்கள். போலீசார், காங்கிரஸ்காரர்களுக்குச் சலுகை காட்டுகிறார்கள், எதிர்க் கட்சியினருக்கு எதிராக இயங்கி வருகிறார்கள் என்றும் சொன்னார்கள். நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் ஒரு சில மாதங்களுக்கு முன்னால் திருநெல்வேலியில் சுற்றுப் பிரயாணத்திற்கு வந்திருந்தபோது—தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலிக்கு வருவதற்கு இரவு 11½ மணியாகிவிட்டது. ஜனங்கள் அதுவரை காத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் எல்லாம் கடமை, கட்டுப்பாடு இவற்றில் நம்பிக்கை யுள்ளவர்களாயிற்றே, இரவு 11½ மணிக்கு மேல் வந்தாலும், மைக் இல்லாமல்—காங்கிரஸ்காரர்களைப் போன்று—பேசுவார்கள் என்று நினைத்தோம். ஆனால் 11½ மணிக்கு மேல் வந்து மைக் வைத்துக்கொண்டு பேசுவதற்கு அங்குள்ள போலீசார் அனுமதித்தார்கள். காங்கிரஸ்காரர்களுக்காக நடந்து கொள்கிறார்கள் என்றால் போலீசார் இம்மாதிரி நடவடிக்கை எடுத்திருக்க முடியாது. அதே போன்று பாளையங்கோட்டையில் ஜனவரி 29-ம் தேதியன்று மாலை ஐந்து அல்லது நாலே முக்கால் மணியிருக்கும், அப்போது ஷூட்டிங் நடந்து கொண்டிருக்கும்போது அந்த இடத்திலிருந்து இரண்டு பர்லாங் தூரத்தி லுள்ள இடத்தில் பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது, அதில் எதிர்க் கட்சிக்காரர்கள் பேசிக்கொண்டுதான் இருந்தார்கள். இதையெல்லாம் பார்த்தால் போலீசார் காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ளலாம். எப்போதும் போலீஸ் இலாகாவினர் நடுநிலைமையாக இருந்து செயல் படவேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். ஆனால் எதிர் தரப்பிலிருந்து அவர்களுக்காக ஆராரோ தாலாட்டுப் பாட்டுக்களை எல்லாம் அவர்களுக்காகப் பரிந்து பாடிக் கொண்டிருந்தார்கள், அதற்கு எங்கே புறம்பாகப் போய்விடப் போகிறார்களோ என்ற எண்ணத்தில் இன்றையதினம் அவர்களைக் கெஞ்சக்கூடிய அளவிற்கு இன்றைய தினம் எதிர்க்கட்சிகளின் நடவடிக்கை இருக்கிறது. ஆகவே இந்தப் போலீஸ் இலாகா நல்லமுறையில் நடைபெற வேண்டும் என்றால் அவர்களுடைய மான்யத்தை இன்னும் கூடுதலாக அளித்து, அவர்களுக்கு வேண்டிய பல சலுகைகளையும் கொடுக்க வேண்டும். எதிர் தரப்பிலிருந்தும் பேசினவர்கள் அவர்களுக்குப் பல சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். முக்கியமாக நம்முடைய மாநிலத்தில் விவசாயத்திலும் சரி, கல்வியிலும் சரி, மின்சாரத்திலும் சரி, எல்லாவற்றுக்கும் நாம் திட்டமிட்டு முன்னேறி வருகிறோம். பாரதத்திலேயே நாம் தான் எல்லாவற்றிலும் முன்னேறியிருக்கிறோம்.

அதே போன்று போலீஸிலும் மிகச் சிறந்திருக்கிறோம் என்பதில்
11-30 a.m. புத்தகத்தில் இருக்கின்றவைகளே போதுமானதாக, தேவைப்படுகிற அளவுக்கு இருக்கிறது. முக்கியமாக இங்கிருந்து நம் படைகள் அஸ்ஸாமுக்கும், நாகாலாந்துக்கும் சென்று பணியாற்றக்கூடிய முறையில் அவைகள் நன்கு விளங்குகின்றன என்பதற்காகப் போலீஸ் இலாகாவைப் பாராட்டுகிறோம். அந்த அளவுக்கு போலீஸ் இலாகா நல்ல முறையில் நடக்கிறது.

அதே போன்று ஊர்க்காவல் படைகள் நல்ல முறையில் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. முன்பெல்லாம் மக்கள் போலீஸ் ஸ்டேஷனே வேண்டாம் என்று சொல்லி, "எங்கள் ஊருக்கு சிகப்புத் தலைப்பாவே வேண்டாம்" என்று சொன்னது போக இப்போது காவல் நிலையம் ஊர் ஊராக வேண்டுமென்று கோரி, போலீஸ்காரர்கள் மக்கள் நண்பர்கள், "உங்கள் நண்பன்" என்று சொல்லக்கூடிய அளவில் செயல்பட்டு வருகிறது.



13th March 1965] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

முக்கியமாக, போலீஸார் கிராம அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டு, கிராமத்தில் வீடுகள் கட்டுதல், பாதைகள் அமைத்தல், குடி தண்ணீர்க் கிணறுகள் வெட்டுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் ஒன்றிரண்டு ஆண்டுகளாக நல்ல விதத்தில் அந்தத் திட்டங்கள் செயல்படவில்லை என்று எடுத்துக் கூற விரும்புகிறேன். அந்தத் திட்டங்களை மீண்டும் செயல்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். போலீஸ்காரர்களுடைய மனைவிகளுக்கு அம்பர் சர்க்கா, கைராட்டை, முதலியவைகளைக் கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்குப் பசு மாடு வாங்கிக் கொடுக்கும் திட்டம் வேண்டுமென்று வெகுநாளாக நான் கேட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். அதையும் நல்ல முறையில் ஆராய்ந்து பார்த்துச் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

முக்கியமாக இந்த மாதிரிக் கிளர்ச்சி நடக்கிற நேரங்களில் ஊர்க்காவல் படை மிகவும் நல்ல சேவை செய்கிறது. குடும்பங்களுக்கு அரிசி கார்டுகளை வினியோகித்ததிலும், சமீபத்தில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தல்களிலும் ஊர்க்காவல் படை நல்ல முறையில் பணி புரிந்திருக்கிறது. அரிசிக் கார்டுகளை வினியோகிப்பதிலே அந்தக் காரியத்தை அவர்கள் செவ்வனே செய்திருக்கிறார்கள். கிளர்ச்சி நடக்கிற இந்தச் சமயத்திலும் ஊர்க்காவல் படையினர் மாணவர்களின் பெற்றோர்களைச் சந்தித்து ஆங்காங்கு அவர்களுக்கு எடுத்துக் கூறி மாணவர்களைப் பள்ளிக்கு அனுப்புவதிலும், மாணவர்களும் ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்லவேண்டும் என்று எடுத்துச் சொல்லியும் அந்த முறையில் அவர்கள் பணியாற்றினால் அது ஒரு நல்ல அம்சமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக இந்த டெய்லி அலவன்ஸ் கொடுப்பதில் போலீஸாருக்கு இரண்டு ரூபாய் கொடுப்பது போதாது என்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள்கூட எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் டிரெஸ்ஸைச் சலவைக்குப் போடுவதற்கு கூட ஒரு ரூபாய் போதாது. சாதாரணமாக ஒரு சட்டையை நாம் சலவைக்குப் போடவேண்டுமென்றால் கூட 15 பைசா, 20 பைசா கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் இரண்டு ரூபாய் போதாது என்று கூறிக்கொண்டு அதை உயர்த்த வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக போலீஸ் நாயின் சேவை பிரமாதமாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மதுரையில் மூன்று நாய்கள் இருக்கின்றன. நெல்லை போன்ற இடங்களில் குற்றங்கள் நடந்தால் உடனே நாய் கொண்டுவரப்படுகிறது. போலீஸ் நாய் வருகிறது என்று கேட்ட மாத்திரத்திலேயே பாளையங்கோட்டையில் குற்றத்தை ஒப்புக் கொள்ளக்கூடிய அளவுக்கு வந்து விட்டது என்றால் நாயின் சேவை நல்ல விதத்தில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எதிர்க் கட்சித் தரப்பில் பேசப்பட்ட, அமைச்சர்கள் பற்றியும், முதல் அமைச்சரைப் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். முதல் அமைச்சர் தான் பொல்லாதவர், அவருக்குக் கீழ் பணியாற்றுகிற அருள் நல்லவர் என்று பாகுபடுத்திப் பிரித்துப் பேசுகிற தன்மையை எதிர்க் கட்சியில் பார்த்தோம். பள்ளியில் படித்த மாணவன் நன்றாகப் படித்தான் என்றால், நல்ல மார்க் வாங்குகிறான் என்றால், ஆசிரியர் நன்றாகச் சொல்லிக் கொடுத்திருக்கிறார் என்று ஆசிரியர் தன்மையை எடுத்துக் கூறுகிறோமே தவிர வேறு அல்ல. பொறுப்பு ஆசிரியர் தான் என்பதை உணர வேண்டும். அதே போல, போலீஸ் இலாகா செயல்படுகிறது என்றால், போலீஸ் இலாகாவினர் அதிகமாகக் கடுமையாக இல்லை, முதல் அமைச்சர் அவர்களுடைய தூண்டுதலால் தான் இந்த மாதிரிச் செய்தார்கள் என்று முதல் அமைச்சரைக் குற்றம் சாட்டி, இலாகா நன்றாக இருக்கிறது, அதிகாரிகள் நல்லவர்கள், அமைச்சர் தான் பொல்லாதவர் என்ற தன்மையில் இங்கு பேசப்பட்டதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். கிளர்ச்சி நடக்கும்போதே முதல்

அமைச்சர் அவர்கள் பண்பட்ட தன்மையோடு, பெரும் தன்மையோடு, மாணவர்கள் தன் குழந்தைகள் என்ற இரக்க சிந்தனையோடு இருந்ததால் தான் இத்தனை கஷ்டங்களும் வந்தன என்று நான் கூறிக் கொள்வேன். என் சொந்த வீட்டில் என்ன நடந்தது என்பதை அத்தனை பேர்களும் அறிவார்கள். எங்களுடைய சொந்த பந்தோபஸ்துக்குப் போலீஸார் ஏற்பாடு செய்திருந்தால் இந்த வித நஷ்டங்களை அடைந்திருக்க மாட்டோம். ஜில்லா காங்கிரஸ் கமிட்டி ஆஃபீஸில் இருந்த கொடிகளை எரித்துக் கொண்டு வந்த கும்பல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய பந்தோபஸ்துகளைக் காங்கிரஸ்காரர்களுக்கு கொடுத்திருந்தால் இந்த வித நஷ்டங்களை அடைந்திருக்க மாட்டார்கள் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ்காரர்களுக்குச் சலுகை கொடுத்திருந்தால் என் போன்றவர்களுடைய சொத்துக்களுக்கு நாசமோ அல்லது விரயமோ, அல்லது எங்கள் குழந்தைகளுடைய உயிருக்கு ஆபத்தோ ஏற்பட்டு இக் கட்டுக்கு ஆளாகியிருக்க மாட்டர்கள். காங்கிரஸ் கட்சிக்கு ஒன்று, எதிர்க்கட்சிக்கு ஒன்று என்று பாகுபடுத்தியிருந்தால், காங்கிரஸ்காரர்களுடைய பந்தோபஸ்துக்கு ஏற்பாடு செய்திருந்தால் அவர்களுக்குப் பெரிய சேதம் ஏற்பட்டிருக்காது. காங்கிரஸ் கட்சிக்கு ஒன்று மாற்றுக் கட்சிக்கு ஒன்று என்ற பாகுபாடு இல்லாமல் நடு நிலைமையில் பணியாற்றுகிறார்கள் என்பதற்கு இதே ஒரு சான்றாக இருக்கும் என்று கூறிக்கொண்டு இந்த மான்யத்தை வரவேற்று முடித்துக்கொள்கிறேன்.

***திரு ர. ஜீவரத்னம்:** மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, உள்நாட்டு இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மான்யக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம் போலீஸ் இலாகாவானது நம் இந்திய தேசத்திலேயே பெருமை படக் கூடிய அளவில் தமிழ்நாட்டில் மிகத் திறமையாகப் பணியாற்றுகிற ஸ்தாபனம். அந்த ஸ்தாபனத்தை நாம் மேலும் அதிகமாக முடுக்கி விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சமீபக் காலக் கலகங்களிலே போலீஸார்கள் மிகத் திறமையாகப் பணியாற்றினார்கள். . அந்த விதமாகப் பணியாற்றுவதற்காக என்னுடைய பாராட்டுதல்கள். குறிப்பாக நம் எதிர்க் கட்சி நண்பர்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவில்லை என்று அவர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள். நான்கூட ஒரு சம்பவத்தை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பிப்ரவரி 12-ம் தேதி வாலாஜாவிலிருந்து ஒரு டெலி.·.போன் எனக்கு வந்தது. "இங்கு ஒரு காங்கிரஸ்காரர் வீட்டைக் காலிகள் கூட்டம் தாக்கிக் கொண்டிருக்கிறது. இங்கே போலீஸ் கிடையாது. உடனடியாக வேலூரிலிருந்தாவது போலீஸை அனுப்ப வேண்டும். இல்லையென்றால் குறிப்பிட்ட காங்கிரஸ்காரருக்கு ஆபத்து" என்று டெலி.·.போன் செய்தி கூறியது. உடனே ஸி.ஐ.டி. இலாகாவுக்கு, வேலூருக்கு டெலிஃபோன் செய்து, டெலிஃபோன் வந்த செய்தியைக் குறிப்பிட்டு, "போலீஸை இங்கிருந்து அனுப்புங்கள் அல்லது ராணிபேட்டையிலிருந்து அனுப்புங்கள்" என்று சொன்னேன். அங்கே இருந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரிடம் சொன்னேன். அப்போது அவர்கள் சொன்னார்கள். "5,000 காலிகள் கூட்டம் ஆற்காடு போலீஸ் ஸ்டேஷனைத் தாக்கிக்கொண்டிருக்கிறது, தாலூகா ஆஃபீஸைத் தாக்கிக்கொண்டிருக்கிறது, உயிர்ப் பாதுகாப்புக்குத் தலைமை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கே ஆபத்தாக இருக்கும்போது உங்களுக்கு எங்கே போலீஸை அனுப்பி வைப்பது" என்று டெலிஃபோனில் என்னிடமிருந்து செய்தியை வாங்கிய சப்-இன்ஸ்பெக்டர் சொன்னார். மேலும் அவர்கள் "நீங்கள். டெலிஃபோன் செய்து விடுங்கள், போலீஸ் வந்து பாதுகாப்புத் தரும் என்று உங்கள் நண்பர் நினைக்க வேண்டாம்" என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு அராஜகம் தலை விரித்து ஆடியது. முடிந்த வரையில் எல்லோருக்கும் போலீஸார் பாதுகாப்பு அளித்தார்



கள், கட்சிப் பாகுபாடு இல்லாமல் பாதுகாப்பு அளித்தார்கள் என்பது பாராட்டுக்கு உரியது. அவர்களிடம் போதுமான போலீஸ் படை இல்லை. நம் சர்க்கார் சுதந்திரம் அடைந்த பிறகு செய்த பல தவறுதல்களில் இதுவும் ஒரு தவறுதல் தான்—போலீஸ் படையைப் பலப்படுத்தாமல் விட்டது. போலீஸ் படையைப் பலப்படுத்தியிருக்க வேண்டும். சுதந்திரம் வந்த பிறகு மக்களெல்லாம் சீர்த்திருந்தி விட்டார்கள் என்று நினைத்து போலீஸ் படையை பலப்படுத்தாமல் விட்டு விட்டோம். பலனை அனுபவித்தோம். குறிப்பாக வேலூர் நகரத்தில் அன்றைய தினம் போலீஸே கிடையாது. ஆற்காடுக்கு, ஆரணிக்கு, பேர்ணம்பட்டுவுக்குப் போய்விட்டார்கள். முடிந்த வரையில் மக்கள் ஒற்றுமையாக இருந்து போலீஸ் இல்லாமலேயே இருக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தினோம். அங்கு காலிகள் கூட்டம் கூட கொஞ்சம் குறைவாக இருந்தது. அதனால் வேலூரில் நிலைமையை நாம் சமாளிக்க முடிந்தது. ஆனால், ஏதாகிலும் வேலூரில் கலவரம் ஏற்பட்டிருந்தால் நிச்சயம் போலீஸ் அதைத் தடுத்திருக்க முடியாது. அந்த அளவுக்கு போலீஸ் இல்லாமல் போய்விட்டது. கல்வி இலாகாவுக்கு நாம் ரூ. 37 கோடி செலவு செய்கிறோம். அதையல்லாமல் கொஞ்சம் சீர்தூக்கிப் பார்த்து, போலீஸ் இலாகாவுக்கும் நிறையப் பணத்தைக் கொடுத்து, போலீஸ் படை இப்பொழுது இருப்பது போதாது, இன்னும் இரண்டு மடங்காக போலீஸ் படையை பலப்படுத்த வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்திக்கொள்கிறேன்..

அடுத்தப்படியாக கனம் உறுப்பினர் திரு. நாராயணஸ்வாமி நாயுடு அவர்கள் ஸி.ஐ.டி. இலாகா சற்று கண்காணிப்பாக இருந்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதே அபிப்பிராயத்தைத்தான் நானும் கொண்டிருக்கிறேன். இவ்வளவு கலவரங்கள் ஏற்படும் என்று நம்முடைய சர்க்காரும் நினைக்காமல் போய் விட்டது. நாமும் நினைக்காமல் போய்விட்டோம். இனியாகிலும் ஸி.ஐ.டி. இலாகாவைப் பயன்படுத்தி, அதனுடைய பல பிரிவுகளையும் பலப்படுத்தி, அவர்களுக்கு பலவிதச் சலுகைகள் கொடுத்து, ஸி.ஐ.டி. இலாகா முன் கூட்டியே இம்மாதிரி சம்பவங்களை யெல்லாம் அறிவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல நகரங்களிலுள்ள போலீஸ்காரர்களுக் கெல்லாம் ஏதோ ஒரு அளவுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பலருக்கும் வீடுகள் இல்லாமல், வீட்டு வாடகை அலவன்ஸ் தரப்படுகிறது. அது அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. ஆகவே, அதை உயர்த்திக் கொடுக்கவேண்டும் அல்லது அவர்களுக்கு படிப்படியாக வீடுகளை கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வளவு பெரிய கலவரங்கள் என்னுடைய ஜில்லாவிலே நடந்தது பற்றி நான் சில சம்பவங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். மதிப்பிற்குரிய அங்கத்தினர்களெல்லாம் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னார்கள். ஆரணி, ஆற்காடு, பேரணம்பேட் ஆகிய மூன்று இடங்களிலும் தான் பெரிய சம்பவங்கள் நடந்தன. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அதிலே பங்குக் கொண்டார்களோ இல்லையோ, திராவிட முன்னேற்றக் கழகத்தினருடன் சேர்ந்துக்கொண்டு நாட்டுச் சாராயம் காய்ச்சுபவர்கள் அதிலே பெரும் அளவுக்கு பங்கு கொண்டார்கள். நாட்டுச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு போலீஸ் பேரில் ஒருவிதமான வெறுப்பு இருந்தது. அந்த வெறுப்பைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அரசியல் கட்சியினுடைய பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. இப்பொழுது ஏதோ மாணவர்கள் கிளர்ச்சி செய்தார்கள், அந்தக் கிளர்ச்சியை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தூண்டிவிட்டார்கள் என்ற நிலைமை வந்தபொழுது, நாமும் அதிலே பங்கு கொண்டு போலீஸ்காரர்களின் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டும்

[திரு. அ. ஜீவரத்னம்] [13th March 1965

என்ற அபிப்பிராயத்தோடு, நாட்டுச் சாராயம் காய்ச்சுபவர்கள் பெரும் அளவுக்கு இந்தக் கலவரத்தைத் தூண்டிவிட்டார்கள். கலவரத்தில் ஈடுபட்டார்கள், போலீஸ் ஸ்டேஷனைக் கொள்ளையிட்டார்கள். இதைப் போலீஸ்காரர்கள் உணர்ந்து சரியானபடி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய எதிர்க்கட்சி நண்பர்களும் நாட்டுச் சாராயம் காய்ச்சுபவர்களைத் தங்களுடைய பக்கத்தில் வரக்கூடாது என்று அவர்களை ஒதுக்கித் தள்ளவேண்டும். இன்று இப்படி பாய்கின்ற புலி ஒரு நாள் அவர்கள் மீதும் பாயும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

போலீஸ் இலாகாவில் கை ரேகை குற்றப் பிரிவு என்ற ஒன்று இருக்கிறது. நம்முடைய நகையோ, நட்டோ, பணமோ, அல்லது சொத்தோ திருட்டுப் போய்விட்டாலும் சரி, அல்லது எதிர்க்கட்சி நண்பர்களுடைய சொத்தோ, பணமோ திருட்டுப் போய்விட்டாலும் சரி, அதைக் கண்காணிப்பதற்குக் கண்டுபிடிப்பதற்கு நம்முடைய ராஜ்யத்தில் கை ரேகை இலாகா என்ற ஒரு பிரிவு இருக்கிறது. கை ரேகை பிரிவுக்கு வேலூர் நகரத்தில் தலைமை ஆபீஸ் இருக்கிறது. அங்கே சுமார் 70, 80 பேர்கள் ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான சம்பள வசதி கிடையாது. ஒன்று அவர்களை ரெவின்யூ இலாகாவோடு சேர்த்து, ரெவின்யூ இலாகா சிப்பந்திகளுக்கு என்ன ஊதியம் கொடுக்கிறோமோ அல்லது அவர்களுக்கு என்ன உயர்வு கொடுக்கிறோமோ, அம்மாதிரி இவர்களுக்கும் அளிக்கவேண்டும். அல்லது அவர்களை போலீஸ் இலாகாவோடு சேர்த்துக்கொண்டு, போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறையாத அளவுக்கு சம்பளத்தைக் கொடுத்து, இன்ஸ்பெக்டர் கிரேடு, அஸிஸ்டெண்ட்டு சூபரின்டென்டெண்டு கிரேடு, சூபரின்டென்டெண்டு கிரேடு இம்மாதிரி கொடுக்க வேண்டும். அவர்கள் எந்த நிலைமையிலும் இல்லாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள். அந்த சூழ்நிலையை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, கனம் முதல் அமைச்சர் அவர்கள் பற்றி ஏதேதோ சொன்னார்கள்: அவர்கள் கடுமையானவர், ரத்த ஆறு ஓடுகிறது, அந்த ஆறு ஓடுகிறது, இந்த ஆறு ஓடுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், நண்பர் திரு. ஏழுமலை அவர்கள் சொன்னது தான் உண்மை. அவர்கள் மட்டும் கடுமையாக இருந்தால், இந்த நிலைமை வந்திருக்காது. ஏதோ கடுமையாக இருப்பவர் போல் தோன்றுகிறதே தவிர, அவரது உள்ளம் ரொம்பவும் மிருதுவானது. காங்கிரஸ்காரர்கள் மீது தான் அவர்கள் கடுமையைக் காட்டுகிறார்களே தவிர, மற்றவர்கள் மீது அவர்கள் கடுமையைக் காட்டவில்லை. அந்த முறையை மாற்றிக்கொண்டு, கடுமை காட்ட வேண்டியவர்களிடத்தில் கடுமை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், முதல் அமைச்சர் அவர்களையும், உள்துறை அமைச்சர் அவர்களையும் ஏதோ பிரித்துப் பிரித்துப் பேசினார்கள். தள்ளித் தள்ளிப் பேசினார்கள். அவர்கள் இருவரும் ஒன்று தான். ஒரு மனிதனுக்கு இரண்டு கண்களும் எப்படி முக்கியமானதோ, அதே போன்று தான் இருவர்களும். இருவர்களும் கலந்து பேசித் தான் காரியங்களைச் செய்துவருகிறார்கள். பிரித்துப் பேசுவதினால் ஒன்றும் பலன் இல்லை. பிரிவினையை விட்டு, ஒற்றுமையை கோரக்கூடிய இந்த நேரத்தில இப்படிப் பிரித்துப் பேசுவது சரியல்ல. எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். எஸ். மணி :** இந்திய உள்துறை அமைச்சர் நந்தா அவர்கள் முதல் அமைச்சர் அவர்களைப் பாறை போன்றவர் என்று குறிப்பிட்டார். இப்பொழுது கனம் அங்கத்தினர் மிருதுவாக இருக்கிறார் என்று குறிப்பிடுகிறார். இதில் எது உண்மை ?



13th March 1965]

**திரு. ர. ஜீவரத்னம் :** நான் இந்த மன்றத்திலுள்ள உள்துறை அமைச்சர் அவர்களைப் பற்றித்தான் குறிப்பிட்டேன்.

***திரு. எஸ். எஸ். ராஜேந்திரன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் போலீஸ்துறை மான்யம் பற்றி நடைபெற்ற விவாதத்தில் என்னுடைய கருத்துக்களையும் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்களைப் பற்றியும், எதிர்க் கட்சியினரைப் பற்றியும் பேசுகிற நேரத்தில் போலீஸ்காரர்களுக்கும், எதிர்க் கட்சியினருக்கும் என்னவோ விரோதம் இருப்பது போலவும், போலீஸாரை எதிர்க் கட்சியினர் பாராட்டவில்லை என்றும், பாதிக்கப்பட்ட, பலியான போலீஸ்காரர்களைப் பற்றி வருத்தம் தெரிவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். முதல் அமைச்சர் கூட ஒரு சமயத்தில் பேசும்போது இதே கருத்தைத்தான் சொன்னார்கள். ஆனால் போலீஸ் இலாகாவைப் பற்றி ஆளும் கட்சிக்கு எந்த அளவு அக்கறை இருக்கிறதோ, அதைவிடப் பன்மடங்கு ஆசையும், அக்கறையும் எதிர்க் கட்சியினருக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அம்மையார் ஒருவர் பேசுகையில் போலீஸ்காரர்களுக்கு இன்றையதினம் ஆராரோ பாடுகிறார்கள் என்று சொன்னார்கள். நான் சில ஆதாரத்துடன் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினன் என்ற முறையிலும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். போலீஸ் இலாகா சீரும் சிறப்புடனும் இயங்க வேண்டும் என்று மிக மிக அக்கறை கொண்டவர்களில் நானும் ஒருவன். அரசாங்கம் உங்கள் நண்பன் என்ற ஒரு படத்தைத் தயாரிக்க முன்வந்த நேரத்தில், அதிலே முக்கிய பங்கு கொண்டவன் நான் என்பது மட்டுமல்ல, அதைத் தயாரிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்ட முக்கியஸ்தர்களில் நானும் ஒருவன் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. சமீபத்தில் நான் சொந்தத்தில் தயாரித்த "அல்லி" என்ற படத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பார்த்திருக்கக் கூடும். அந்தப் படத்தின் நோக்கமே, போலீஸ் அதிகாரிகளுக்கு எத்தகைய கஷ்டங்கள் வந்தாலும், எத்தகைய உரிமைப் பிரச்சினைகள் வந்தாலும், எத்தகைய பந்தபாசங்கள் குறுக்கிட்டாலும், போலீஸ்காரர்கள் தங்களுடைய கடமையைச் செய்வதிலிருந்து தவறக் கூடாது என்ற கருத்தினை வலியுறுத்துவதற்காகவே எடுக்கப்பட்ட படம் அல்லி. என் படத்தைப் பார்த்தவர்கள் அரசாங்கம் செய்ய வேண்டிய வேலையை நீங்கள் செய்திருக்கிறீர்கள் என்று என்னைப் பாராட்டினார்கள். பாராட்டு விழாவிலும் அத்தகைய கருத்துக்களைச் சில பெரியவர்கள் கூறினார்கள். அந்தப் படத்திலே கதாநாயகர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர். மிகத் திறமையாக ஒரு கொள்ளைக் கூட்டத்தைச் சமாளிக்கிறபொழுது அவருடைய கண்களை இழந்துவிட்ட பிறகு, ஒரு அம்மையார் அனுதாபத்தோடு அவரது கண்களைப் போலீஸ் அதிகாரிக்குத் தருகிறார்கள். அப்படித் தந்த கண்களை வைத்துக்கொண்டு தீவிரமாக தன்னுடைய கடமையிலிருந்து வழுவாது பணியாற்றிக் கொண்டு வருகிறார். அப்படிப் பணியாற்றிக்கொண்டு வருகிற நேரத்தில், பழைய கொலைக் குற்றவாளி தப்பித்து ஓடிவிட்டார். அவர் யார் என்று தேடிக் கண்டுபிடிக்கும் பொறுப்பைப் பெரிய போலீஸ் அதிகாரி அந்த சப்-இன்ஸ்பெக்டரிடத்தில் ஒப்படைத்தார். அவர்கள் பார்க்கிற நேரத்தில் தனக்குக் கண்ணைக் கொடுத்தவள் தான் அந்தக் கொலைகாரி என்று தெரிகிறது. அப்பொழுது பாச பந்தங்களை மறந்து, அவளைச் சட்டத்தின் முன் குற்றவாளியாக நிறுத்துகிறார். அதே மாதிரிதான் தன்னுடைய தங்கையின் கணவனையும் பந்தபாசம் பாராமல் சுட்டுக் கொல்கிறார். இத்தகைய முறையில் போலீஸ் அதிகாரி.......

**திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் அங்கத்தினர் தன்னுடைய படத்தை விளம்பரப்படுத்துகிறாரா ?

**திரு. எஸ். எஸ். ராஜேந்திரன் :** விளம்பரம் இல்லாமல் படம் ஓடி முடிந்து போய்விட்டது. கனம் முதல் அமைச்சர் பார்க்கவில்லை. அவர்களுக்கு உபயோகப்படும் என்று சொல்கிறேன். அந்தப் படத்தின்

நோக்கத்தைப் பற்றிச் சொன்னேன். அந்த அளவிலே இந்த இலாகா தூய்மையாக இயங்க வேண்டும் என்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அக்கறை இருக்கிறது. அந்த வகையில் எங்களுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது என்பதற்கு ஆதாரமாக இதைக் குறிப்பிட்டேன். ஏனென்றால் இப்பொழுது 'ஆராரோ' பாடுகிறார்கள் என்று சொன்னார்கள். எப்பொழுதும் ஆராரோ பாடுகிறவர்கள்தான். நல்ல முறையிலே அந்த இலாகா நடைபெற வேண்டும். யாரும் அதில் தலையிடக் கூடாது என்பதுதான் எங்கள் விருப்பம். அப்படி எண்ணுகிறவர்கள் நாங்கள். இந்த நேரத்தில் ஒன்று சொல்ல வேண்டும். காங்கிரஸ்காரர்கள் போலீஸாரை ஆட்டிப் படைக்கிறார்கள் என்று எதிர்க் கட்சிக்காரர்கள் குற்றம் சாட்டினால் அதை மறுக்க முடியாது. இதைப் பற்றி முன்பே சொல்லியிருக்கிறேன். என்னைக் கைது செய்து 36 மணி நேரம் வைத்திருந்தார்கள். கைது செய்த பிறகு கமிஷனர் ஆபீசுக்குக் கொண்டு போனார்கள். கமிஷனர் திருப்பி போலீஸ் ஸ்டேஷனுக்கே கொண்டு போங்கள் என்று சொல்லிவிட்டார். ஆகவே, திரும்பவும் போலீஸ் ஸ்டேஷனுக்கே கொண்டு வந்தார்கள். அங்கேயே இரவு முழுவதும் வைத்திருந்தார்கள். பிறகு பகல் ஒரு மணிக்கு சிறைக்கு அனுப்பினார்கள். அந்த 36 மணி நேரமும் பார்த்தேன். நான் போலீஸ் ஸ்டேஷனில் இருந்த அவ்வளவு காலமும் பார்த்தேன். போலீஸார் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள், கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்பதை நான் நேரிலேயே பார்த்தேன். அங்கே காங்கிரஸ்காரர்கள் வந்த வண்ணம் இருந்தார்கள்; அவர்களெல்லாம் மண்டலக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர், வட்டாரக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர்கள், அங்கே வந்து அவர்கள், கொடியைக் கட்டுகிறார்கள், ஆட்களை அனுப்புங்கள், அங்கே அனுப்புங்கள், இங்கே அனுப்புங்கள் என்று தொந்திரவு செய்தவண்ணம் இருந்தார்கள். அத்தகைய காட்சியை நான் நேரிலேயே பார்த்தேன். கொடியைக் கட்டுகிறார்கள், இரண்டு ஆட்களை அனுப்புங்கள் என்பார் ஒருத்தர். போலீஸார் பயந்து வேலை செய்ய வேண்டிய நிலைமைதான் இருந்தது. அப்படிக் காங்கிரஸ்காரர்கள், போலீஸாரை ஆட்டிப் படைக்கிறார்கள். அப்படிச் செய்யக் கூடாது, அது பெரிய தவறு என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதே நேரத்திலே நாம் ஒன்றைப் பார்க்க வேண்டும். போலீஸ்காரர்கள் வேறு யாரோ அல்ல. நிச்சயமாகத் தெரியும். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். என் தம்பி போலீஸ் இலாகாவில் இருக்கிறான். மதுரை மாவட்டத்தில் பணியாற்றுகிறான். இன்னொரு தம்பி மாணவன். அவன் கைது செய்யப்பட்டவன். இப்படிப் பார்க்கும்போது, எல்லாப் போலீஸ்காரர்களுமே நம் சகோதரர்கள்தான். இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்தான். அவர்கள் மீது துவேஷப்பட காரணம் ஒன்றும் இல்லை. நண்பர் ப. உ. சண்முகம் பேசும்போது சொன்னார்கள்., வெள்ளைக்காரன் காலத்தில் முதல் அமைச்சர் தடியடி பட்டார் என்று சொன்னார்கள். வெள்ளைக்காரன் போலீஸ்காரனைச் செய்யச் சொன்னான். போலீஸ்காரன் செய்தான். வெள்ளைக்காரர்கள் சொன்னபோதும் அவர்கள் தம் கடமையைச் செய்தார்கள். வெள்ளைக்காரனிடத்தில் அடிபட்ட முதல் அமைச்சர் சொல்லும் போதும், போலீஸ்காரர்கள் தங்கள் கடமையைச் செய்கிறார்கள். நாளைய தினம் மதிப்பிற்குரிய நாவலர் நெடுஞ்செழியன் அல்லது, மதிப்பிற்குரிய கருணாநிதி, அல்லது மதிப்பிற்குரிய மதியழகன் மந்திரியாக வந்தார்கள் என்றால், அவர்கள் சொல்வதையும் போலீஸ்காரர்கள் கேட்பார்கள். ஆகவே, நான் போலீஸ்காரர்கள் மீது தனிப்பட்ட முறையில் யாரையும் குற்றம் சொல்லத் தயாராக இல்லை. யாரும் குற்றம் சொல்ல மாட்டார்கள். ஆனால், அதே சமயத்தில், எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் திரு. எழுமலை அவர்கள் சொன்னார்கள், திரு. ராஜேந்திரன் அவர்களே சமாளித்து இருக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். நாமே காரியத்தை சமாளிப்பது என்பது சட்ட விரோதம் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அவருடைய தம்பிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கலவரம் செய்வார்கள் என்று முன் எச்சரிக்கை கொடுத்தார்கள் என்று கனம் எழுமலை சொன்னார். ஆனால், காங்கிரஸ் நண்பர்கள் எனக்கு அப்படிப்பட்ட எச்சரிக்கை கொடுக்கவில்லை. ஆகவே என் குடும்பத்தினரைக் காப்பாற்ற முடியவில்லை, கலவரம் நடந்தபோது,





அவர்களை அப்புறப்படுத்த முடியவில்லை. கனம் அம்மையார் போன் செய்தது பற்றிச் சொன்னார்கள். வீட்டில் கலவரம் நடந்தபோது நான் மூன்று நான்கு மைலுக்கு அப்பாலுள்ள கோடம்பாக்கத்தில் ஒரு தோட்டத்தில் இருந்தேன். ஆகவே, அங்கிருந்து அமைச்சருக்குப் போன் செய்தேன். போலீஸ்காரர் வரமாட்டேன் என்று சொல்லுகிறார்கள்......

**கனம் உதவி சபாநாயகர் :** அன்று சொன்னதையே மறுபடியும் சொல்ல வேண்டுமா? நேரம் ஆகிவிட்டது.

**திரு. எஸ். எஸ். ராஜேந்திரன் :** பிறகு கனம் முதல் அமைச்சர் கமிஷனருக்குப் போன் செய்யுங்கள் என்றோ, உதவியாகவோ சொல்லவில்லை. போலீஸாருக்குப் போன் செய்யுங்கள் என்றால் ஒன்றும் செய்ய முடியாது என்று சற்றுக் கோபமாகவே கூடச் சொன்னார்கள். ஐ.ஜிக்குப் போன் செய்தேன். ஆனால் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால் சுமுகமாக முடிந்திருக்கும் என்று தெரிவிக்க விரும்புகிறேன். அதே நேரத்திலே முதல் அமைச்சர் என்ன சொல்லுகிறார்கள் ? என்னிடம் என்ன கத்தியா இருக்கிறது, துப்பாக்கியா இருக்கிறது, என்று கேட்கிறார்கள். நம்முடைய இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்கள் கையில் கத்தியா இருக்கிறது ? துப்பாக்கியா இருக்கிறது ? கமிஷனரிடம் கத்தி இருக்க முடியாது, துப்பாக்கி இருக்க முடியாது? எதற்காக முதல் அமைச்சருக்குப் போன் செய்தேன் ? அவரிடம் பலம் இருக்கிறது, அதிகாரம் இருக்கிறது, அவர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டு, நியாயமாகச் செய்ய வேண்டும் என்றுதான் போன் செய்தேன். கத்தி இருக்கிறதா, இல்லையா என்று பார்த்து போன் செய்யவில்லை. முதல் அமைச்சரிடம் பொறுப்பான பதிலை எதிர்பார்த்தேன், இந்தப் பதிலை அல்ல.

ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார்கள், போலீஸாருக்கு மூவிங் காமிரா கொடுக்க வேண்டும் என்று. அதை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். வரவேற்கிறேன். நேரிடையாக, உண்மையானக் குற்றவாளிகளைப் கண்டுபிடிக்க உதவியாக இருக்கும். ஆகவே, அப்படிக் கொடுப்பதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று உள்துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிக் காமிராக்களை உடனடியாக வழங்கக் கால தாமதம் ஏற்படும் என்று சர்க்கார் கருதினால் நாங்கள் வழங்கத் தயாராக இருக்கிறோம் என்று எங்கள் கலைக் குழுவின் சார்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன். மதிப்பிற்குரிய ஐ.ஜி. அருள் அவர்கள் ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறார்கள், ஆளைக் கொல்லாத துப்பாக்கி சூடு கொடுக்கும் முறையை அமுலாக்க திட்டமிட்டு இருக்கிறோம் என்று. (மணியடிக்கப்பட்டது). அதை உடனே பரிசீலிக்க வேண்டும். ஆகவே, பாதிக்கப்பட்ட அத்தனைப் பேர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்க இந்த அரசாங்கம் முன்வர வேண்டும். நிரபராதிகள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

***** **திரு. கோ. ராஜாராம் :** மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்தை நான் ஆதரிக்கிறேன். மனித நாகரீக வளர்ச்சியிலே போலீசின் தொடக்கம் சிறப்பான கட்டமாகும். தமிழகத்திலே போலீஸ் துறை ஏறக்குறைய நூறாண்டுகளுக்கு மேற்பட்ட பெருமைக்குரிய வரலாற்றினைப் பெற்று, சிறப்பான வகையில் பணியாற்றி வருகிறது. சமுதாயத்தில் சட்டத்தையும், அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்டுகின்ற பெரும்பணி ஏற்றிருக்கின்ற போலீசார் சமுதாயத்தின் நல்லெண்ணத்திற்கும், நம்பிக்கைக்கும் உரியவர்களாக இருப்பது அவசியமாகும். போலீசுக்கும் பொதுமக்களுக்கும் இடையே மலருகின்ற நல்லுறவும் நல்லெண்ணமும் போலீசின் பணி நல்ல முறையில் இயங்க வழி செயயக் கூடியதாக அமையும். அதற்கு மாறாக போலீசுக்கும் பொதுமக்களுக்கும் இடையே தவறான எண்ணங்கள், கருத்து வேற்றுமைகள், கசப்பான நிலைகள் உருவானால் போலீசின் பணி கடினமானதாக ஆகிவிடுவதோடு நிலைமைகள் விபரீதமாக அமைந்து விடவும் வழியேற்பட்டுவிடும்.

அதனாலேதான் காலஞ்சென்ற நமது பிரதமர் ஜவஹர்லால்நேரு அவர்கள்

" In fact, greater the co-operation there is between the Police and public, better will be their performance. Everyone should remember that if there is mutual confidence among them, the work can be done more efficiently ".

என்று சொன்னார்கள். சமீப காலத்தில் நடந்த துர்ப்பாக்கியமான நிகழ்ச்சிகள், வன்முறைச் செயல்கள் இவை யெல்லாம் பொது மக்களுக்கும் போலிசுக்குமிடையே இருந்த நல்லுறவு முறிந்ததும் தவறான எண்ணங்கள் வளர்ந்ததுமான சூழ்நிலைகளாலேதான். போலீஸ்மீது பொது மக்கள் துவேஷம் கொள்ளவும், தவறான எண்ணங்களை வளர்த்துக் கொள்ளவுமான நிலைகள் உருவாக்கப்பட்டன. இந்த நிலைமைகள் உருவாவதற்குத் திட்டமிட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விற்பனையைப் பெரிதாக எண்ணிய பத்திரிகைகள் பரபரப்பான செய்திகளைத் தந்து நாட்டின் குழப்பத்தை அதிகரித்துக் கொண்டிருந்தன. நாட்டினுடைய அமைதி கெட்டிருந்த நேரத்தில் தவறான செய்திகளுக்கு முக்கியத்வம் தந்து பத்திரிகா தர்மம் கெட்டு சில பத்திரிகைகள் செயல்பட்டன. விற்பனை, விளம்பரம் இவையே அவற்றின் குறிக்கோளாக அமைந்தது. போலீசுக்கும் பொது மக்களுக்கும் இடையே இருந்த நல்லுறவு முறிவதற்கும் போலீசின் மீது பொது மக்கள் துவேசம் கொள்ளவுமான வகையில் செய்திகள் தந்தன. பரபரப்புச் செய்தி தரும் பத்திரிகைகள் என்று இந்த நேரத்தில் நான் குற்றஞ்சாட்ட விரும்புகின்றேன். நாட்டினுடைய அமைதியிலே நாட்டமில்லாமல் இந்தப் பத்திரிகைகள், குழப்பமான நேரத்தில் மேலும் குழப்பத்தைப் பெருக்குகின்ற வகையிலே செயல்பட்டன. ஹிந்து, மெயில், தமிழ்ச் செய்தி, தென்றல் திரை, இவை போன்ற சில பத்திரிகைகள் அறங் காத்த நேரத்தில் மற்றைய பத்திரிகைகள் பரபரப்புச் செய்திகளைத் தருவதிலே சுவை கண்டு கொண்டிருந்தன. போராட்டம் நடந்து கொண்டிருந்தபோது ஒரு பத்திரிகையிலே பரபரப்பான ஒரு செய்தி வந்தது. "போலீஸ் நிலையத்தைப் போராட்டக்காரர்கள் கைப்பற்றினார்கள்'' இப்படியொரு செய்தி சூலூர் விமான தளம் சீனர்களாலே கைப்பற்றப்பட்டபோது கூட இப்படிப் பரபரப்பான செய்தியை அந்தப் பத்திரிகை தந்ததோ என்னவோ ? இப்போது பரபரப்பு ஊட்டுவதிலே அத்தனை ஆர்வம் அந்தப் பத்திரிகைக்கு. இன்னொரு பத்திரிகை, கூட்டுறவு முறையிலே நடைபெறும் பத்திரிகை, செய்தி யொன்று வெளியிட்டது. " துப்பாக்கிச் சூடு மாணவர்மீது—எழு பேர் சாவு'' இது செய்தி. முதல் பக்கத்திலே இந்தச் செய்தி பெரிய எழுத்துக்களிலே வெளியாகியிருந்தது. இதற்காகவே தனி அச்சுக்களைப் பொறுக்கி இருப்பார்கள் என்று நினைக்கிறேன். மாணவர் போராட்டம் உச்சக் கட்டத்திலே இருந்த நேரம். இந்தச் செய்தி எத்தனை விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் ? இந்தச் செய்தியைப் படித்த மாணவர்கள் மத்தியில் அது எந்த உணர்ச்சிகளை விளைத்திருக்கும் ? அந்தச் செய்தியைப் படித்துப் பார்த்தால் மாணவர்கள் ஒருவர்கூட செத்ததாக இல்லை. ஆனால் செய்தியின் தலைப்பு " துப்பாக்கி சூடு—மாணவர் மீது—எழுபேர் சாவு'' இப்படிச் செய்தி தந்ததிலே அந்தப் பத்திரிகைக்குத் தனி மகிழ்ச்சி.

இன்னொரு வேடிக்கையான நிகழ்ச்சி. என்னிடத்திலே போலீஸ்
12-00 அதிகாரி யொருவர் குறிப்பிட்டார். போராட்டம் நடந்த ஒரு ஊரில் போராட்டக்காரன் ஒருவன் வெகு வேகமாக உரத்தக் குரலில் கூவிக் கொண்டிருந்தானாம். "எங்களில் 30 பேர்கள், உங்களில் 4 பேர்கள் தானே'' என்று, அதிகாரி புரியாமல் அவனைப் பிடித்து விசாரித்த போது கையிலேயிருந்த பத்திரிகையை நீட்டினானாம். அதிலே வெளியாகியிருந்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் இதுவரை செத்தது 30 பேர்கள் போலீசார்களில் செத்தது 4 பேர்கள். இப்படி போலீசாரையும் பொது மக்களையும் பிரித்துப் போலீசாரை ஏதோ ஒரு தனி இனமாகக் காட்டிக் கொண்டிருந்தார்கள் இந்தப் பத்திரிகைக்காரர்கள்.





செஞ்சி நிகழ்ச்சியைப்பற்றிக் கூட ஒரு பத்திரிகையில் " இரண்டு பேர்கள் பலி'' என்று போடப்பட்டிருந்தது. எத்தனை பேர் செத்தார்கள் என்ற உண்மையைக் கூடத் தெரிந்துகொள்ள நேரமில்லாதவர்களாகத் தங்களின் பத்திரிக்கை விற்பனையே பெரியதாக நினைத்து இந்த நாட்டின் அமைதியிலே நாட்ட மில்லாமல் பத்திரிகைக்காரர்கள் நடந்து கொண்டார்கள். ஏதோ கிரிக்கட் ஸ்கோர் போடுவதைப்போல சாவு எண்ணிக்கையைப் பரபரப்பாகப் பிரசுரித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். இப்படித்தான் அரசியல்வாதிகள் சிலரும் தவறான செய்திகளைப் பெரிது படுத்திக்கொண்டு நாட்டினுடைய அமைதியை அழித்துக் கொண்டிருந்தார்கள். இங்கேகூட, எதிர்க் கட்சிக்காரர்கள் பேசும்போது எங்களைப் பார்த்து வெள்ளைக்கார ஆட்சியினர் என்று சொன்னார்கள். " டயரை'' சாட்சிக் கழைத்தார்கள். கன்னிங்காமை மன்றத்திற்குக் கூட்டி வந்தார்கள். சில நேரங்களில் " ஜார்'' என்று கூட எங்களைக் குறிப்பிடுவதுண்டு. இப்படிச் சரித்திரத்திலே வருகின்ற அரசியல் கொடுங்கோலர்களை யெல்லாம் எங்களுக்கு ஒப்புவமை காட்டிக் கூறுவதிலே எதிர்க் கட்சியினருக்கு ஒரு திருப்தி. இப்படி அவர்கள் திருப்திபட்டுக் கொள்வதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், இவர்களின் இந்தச் செயலைப் பார்க்கின்றபோது எனக்கு அறிஞன் " **cervantes** '' ன் " டான்க்விக்ஸாட்'' கதை நினைவுக்கு வருகிறது. கதாநாயகன் டான்க்விக்ஸாட் பல வீர நிகழ்ச்சிகள் நிறைந்த கதைகளைப் படித்துவிட்டு தன்னைப் பெரிய மாவீரனாகத் தவறாக நினைத்துக் கொண்டு வீரச் செயல்கள் புரிய புறப்பட்டு பல நிகழ்ச்சிகளில் பொருத்தமில்லாமல் ஈடுபட்டு மூக்குடைபடுகிறான். இது கதை. அது போல இங்கே எதிர்க் கட்சியினர் சரித்திர சம்பவங்களைப் படித்துவிட்டு அவற்றைத் தவறாகப் புரிந்து கொண்டு பொருத்தமில்லாமல் எங்களை யார் யாருக்கோ ஒப்புவமை காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை அரசியல் " டான்க்விக்ஸாட்டுகள் '', " டான்க்விக்ஸாட் அரசியல்வாதிகள் '' என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது ?

இங்கே போலீசார் மீது குறை சொல்லப்பட்டது. போராட்டத்தின் போது தவறான காரியங்களிலே அவர்கள் ஈடுபட்டதாகப் பட்டியல் தந்தார்கள் எதிர்க் கட்சிக்காரர்கள் சிலர். ஆனால், அவர்கள் அப்படிப்பட்ட செயல்களைச் செய்வதற்கு அடிப்படையாக அமைந்த நிகழ்ச்சிகள் எவை ? அவை சரிதானா என்று கேட்டபோது " இல்லை இல்லை '' என்று எதிர்க் கட்சியினர் குறிப்பிட்டார்கள். இப்படிச் சமுதாய விரோதச் செயல்கள் செய்வது தவறு என்று அவர்கள் சொல்வார்களானால், அதனைத் தடுக்க போலீசார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் மட்டும் எப்படித் தவறென்று சொல்ல முடியும் ? அப்படித்தான் " ஜுடிஷியல் என்க்வையரி '', " போலீஸ் எக்ஸெஸ் '' என்றெல்லாம் இங்கே அடிக்கடி கூறப்பட்டன. இப்படிச் சொல்லிக் கொள்வது ஒரு " பாஷனாகவே மாறிவிட்ட நிலையைப் பார்க்கிறோம். இதனைச் சொல்வதால் போலீசார் செய்கின்ற தவறுகளை யெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், போலீசின் அதிகாரம் வேடிக்கைக்குரிய ஒன்றாக ஆக்கப்பட்டு விடக் கூடாது என்றுதான் சொல்லிக் கொள்வேன்.

போலீஸ் துறையில் கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் தவறான செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பது பரவலான குற்றச் சாட்டாகும். அதற்குக் காரணம், அவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு அடிப்படைத் தேவைகளைக்கூட பெறுவதற்கேற்ற ஊதியம், வருமானம் இல்லை என்ற கூற்று உண்மையாக இருக்கலாம். அவர்களுடைய வருமானம் பெருக அரசு நல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வேன். அதே நேரத்தில் கீழ்மட்ட போலீஸ் பணியாளர்களின் தரம் காக்கப்பட வேண்டும். ஆனால் அவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது நல்ல படிப்பும், பண்பாடும், ஒழுக்கமும் உள்ளவர்களாக அத்தகைய பணிக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். போலீஸ் பணிக்குத் தரமுள்ளவர்களைத் தேடுகின்றபோது; போலீஸ் உத்தியோகத்தில் கவர்ச்சி யில்லாத தன்மை இருப்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எஸ்டிமேட் கமிட்டி ரிபோர்ட்டிலே பார்க்கிறோம், சாதாரண கான்ஸ்டேபிளாகப் பணி ஏற்கிறவர் ப் இன்ஸ்பெக்டராகக்கூட ரிடையர் ஆக முடியாத நிலை. அதனைப்

போலவே சப்–இன்ஸ்பெக்டராக வேலையில் அமர்கின்றவர் டெபுடி சூப்பிரென்டென்டாகக் கூட ஓய்வு பெற முடியாது. இத்தகைய நிலைமைகளைத் தவிர்த்து அவர்கள் விரைவில் உயர்நிலை பெறுவதற்கான வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை.)

சென்னை நகரைப் பொறுத்தவரை, போலீஸ் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுகிற ஸ்பெஷல் அலவன்ஸ், லா அண்ட் ஆர்டர் ஸ்டாப்புக்கு மட்டும் தரப்படுவதில்லை என்று கூறப்படுகிறது. மற்றைய அதிகாரிகள் பெறுகின்ற இந்த ஸ்பெஷல் அலவன்ஸ் லா அண்ட் ஆர்டர் பணியாளர்களும் பெறுகின்ற வகையில் வழிவகை செய்ய வேண்டுமெனக் கூறி, உரை நிகழ்த்த வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். பி. முத்துகருப்பண்ணசாமி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸ் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன்.

நம் நாட்டுப் போலீஸ் சிறந்த முறையில் பணியாற்றி வந்துள்ளது என்பதற்காக நான் என்னுடைய பாராட்டுதலை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அண்மையில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி காரணமாக ஏற்பட்ட கலவரங்களில் போலீஸ் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வந்துள்ளது. அதற்கு முன்பு கோயமுத்தூர் மாவட்டத்தில் பில்லூரில் நடந்த ஒரு கலவரத்தின் போதும் நமது போலீஸ் படை சிறந்த முறையில் பணியாற்றி அந்தச் சூழ்நிலையையும் தவிர்த்திருக்கிறார்கள். அதேபோல பல்வேறு துறைகளிலும் நமது போலீசார் நல்ல கடமை ஆற்றியிருந்தால் சமீபத்தில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் கூட எவ்வளவோ பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஆனாலும், போலீசுக்கு இன்னும் நல்ல சிறந்த அதிகாரங்கள் இல்லை என்பதுதான் என்னுடைய வருத்தம். கிராமப் புறங்களில் நடக்கக்கூடிய அராஜகங்களைச் சிறந்த முறையில் கண்காணிப்பதற்கு ஒரு தகுந்த வாய்ப்பு இல்லாமலே இருக்கிறது. ஏனென்றால், பத்துப் பதினைந்து மைல் தூரத்தில் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அங்கு அவர்கள் இரவு பகலாக அவர்களுடைய வேலைகளைச் செய்ய வேண்டிய நிலைமையும் இருக்கிறது. அப்படி அவர்கள் கிராமப் புறங்களுக்கு வரும்போது அவர்களுக்குப் போதிய வாகன வசதி கிடையாது. முக்கியமாக, போலீசாருக்கு சைக்கிள், மோட்டார் சைக்கிள் கொடுத்து உதவியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அரசாங்கத்திலிருந்தே இவைகளை அவர்களுக்குக் கொடுக்காவிட்டாலும் கூட, கடனாகவாவது கொடுத்து, அவர்களுக்கு வேண்டிய போக்குவரத்து வசதியைச் செய்துக் கொடுக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

போலீஸ் கான்ஸ்டபிள்கள் சாதாரணமாக ஐந்து, ஆறு வகுப்பு வரையில் படித்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். இந்தப் படிப்பு அவர்களுக்குப் போதாது. சுமார் எஸ். எஸ். எல். சி. வரையிலாவது படித்தவர்களைத்தான் போலீஸ் கான்ஸ்டபிள்களாக நியமிக்க வேண்டும். அப்பொழுது தான் கிராமத்தில் அவர்களுடைய கடமையை ஆற்றுவதற்கு வசதியாக இருக்கும்.

போலீஸ் ஸ்டேஷனில் டெலிபோன் வசதி செய்துக் கொடுக்க வேண்டும். கிராமப் புறங்களில் எங்காவது சச்சரவு ஏற்பட்டு, அதைப் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றால் முடிவது இல்லை. போக்குவரத்து வசதியும் சரியானபடி இல்லை. அதனால் போலீஸ் ஸ்டேஷன்களுக் கெல்லாம் டெலிபோன் வசதி செய்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.





போலீஸ்காரர்களுக்கு கம்பளி உடை கொடுக்க வேண்டும். இரவில் பனிகாலங்களில் அவர்கள் கிராமங்களுக்குப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. மேலும், இன்றைய நிலைமையில் கிராமப்புறங்களில் சாராயம் காய்ச்சுவது, திருடுவது போன்ற நிலைமை இன்னும் இருந்து கொண்டே தான் இருக்கிறது. பொள்ளாச்சி தாலுக்காவில் நெகமம் என்கிற சரகத்தில் இன்னும் அராஜகச் செயல் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. காரணம் போலீசார் தங்களுடைய கடமையை நல்ல முறையில் பணியாற்ற முடியாமல் இருக்கிறது. அதுதான் காரணம். அதற்காக அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அத்துடன், போலீசாருக்குச் சம்பளங்களைச் சற்று உயர்த்திக் கொடுக்க வேண்டும். சாதாரணமாக ஒரு போலீஸ்காரருடைய சம்பளம் நூறு ரூபாய்க்குக் குறைவில்லாமல் இருக்க வேண்டும். அவர்களுடைய சம்பளம் குறைவாக இருப்பதால், அவர்களுடைய குடும்பத்தின் நிலைமை பாதிக்கப்படுகிறது. போலீஸ் இன்ஸ்பெக்டர்களாக இருந்தாலும், போலீஸ்காரர்களாயிருந்தாலும், அவர்களுக்குப் போதிய சம்பளம் கிடைப்பதில்லை. போதிய சம்பளம் இல்லாததால் அவர்கள் மனம் உடைந்து போய்விடுகிறார்கள். அதனால், கடமையைச் சரியான முறையில் ஆற்ற முடிவதில்லை. அதற்காக அவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஊர்க் காவல் படையை ஏற்படுத்தியிருக்கிறோம் என்றாலும், இன்னும் பல கிராமங்களில் அத்தகைய படைகள் ஏற்படுத்தப்படவில்லை. எந்த எந்தக் கிராமங்களில் ஏற்படுத்தப்படவில்லை என்பதை அறிந்து அங்கே ஏற்படுத்த வேண்டும். கிராமங்களில் அந்தப் படைகள் இருந்தால் தான், அங்குள்ள நிலைமைகளை அறிந்து போலீசாருக்குத் தகவல் கொடுத்து, போலீசார் வந்து பணியாற்றுவதற்குச் சௌகரியமாக இருக்கும். அதையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தீ அணைக்கும் படைகள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பொள்ளாச்சி, கோயமுத்தூர் இப்படிப்பட்ட பெரிய நகரங்களில் இருக்கின்றன. கிராமப்புறங்களில் எங்காவது நெருப்புப் பிடித்துவிட்டால், அதை அணைப்பதற்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. அதனால், கிராமப்புறங்களில் ஒட்டிய பகுதிகளில் இன்னும் அதிகமான தீ அணைப்புப் படைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கைப்பற்றி அரசாங்கம் கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும். மது விலக்குத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறவில்லை. அது நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்றால், சாராயம் காய்ச்சுகிறவர்களுக்கு இன்னும் அதிகப்படியான தண்டனை கொடுக்க வகைச் செய்ய வேண்டும். போலீசாருக்கும் அதிகப்படியான அதிகாரங்களைக் கொடுக்கவேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நமது முதல் அமைச்சர் அவர்கள் இதில் மெதுவாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இரும்பு நெஞ்சத்துடன் போகிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மையாக இருக்கலாம். ஆனால் தீவிரமாகச் செயல்பட்டு இருந்தால் கிராமங்களிலுள்ள அராஜகச் செயல்களைத் தடுத்திருக்க முடியும். "ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும் ஈனருக்குரைத்திடில் இடரதாகுமே" என்பதாகச் சொல்லப்படுகிறது. மக்களுக்குத் தீங்கு செய்கிறவர்களிடத்தில் ஞான போதனை, நீதி போதனை இவை எல்லாம் செய்து கொண்டிருந்தால் ஒன்றும் பயன் தராது. தீய செயல்களை, கொடூரமான செயல்களைப் புரிகின்றவர்களிடத்தில் அரசாங்கம் மிகக் கடுமையாக, தீவிரமாகச் செயல்பட்டால்தான் நாட்டையும், நாட்டு மக்களையும் காப்பாற்ற முடியும் என்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[13th March 1965

*திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : *சட்டமன்றத் தலைவர் அவர்களே,*

*' அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்*
*நின்றது மன்னவன் கோல் '*

*என்ற வள்ளுவனது திருக்குறளை மனதில் கொண்டும்,*

*' குன்றென வுயரிய குலவுத் தோளினான்*
*வென்றியந் திகிரிவெம் பரிதி யாமென*
*யொன்றென வுலகிடை யுலாவி மீமிசை*
*நின்றுநின் றுயிர்தொறு நெடிது காக்குமே '*

*என்ற கம்பனின் திருவாக்கை மனதில் கொண்டும்,*

*' நெல்லும் உயிரென்றே நீரும் உயிரென்றே*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் '*

*என்ற தமிழ்ப் பேரிலக்கியத்தின் கருத்தை மனதில் கொண்டும் தமிழ் நாட்டின் நற்பண்பு வாய்ந்த மக்கள் சார்பாகவும், தங்களுடைய உயிரை விட மானத்தையே பெரிதாக எண்ணி வாழ்கின்ற தமிழினத்தின் பெண்கள் சார்பாகவும், இந்தப் பெரிய நாடு ஒன்றே என்று எண்ணு கின்ற நல்லுணர்வு வாய்க்கப்பெற்ற நன்மக்களின் சார்பாகவும் வாழ்த்துக் கூறி தமிழக அரசாங்கத்தின் போலீஸ் இலாகாவை பாராட்டுவதுடன் அதை முன் நின்று வழிப்படுத்துகின்ற தமிழக முதல் அமைச்சர் அவர்களுக்கு நல்வாழ்த்துக்கூறியும் ஊசி வழியே நூல் போகும் என்கின்ற தமிழ் வழக்கின் கொள்கைக்கு ஏற்ப பணியாற்றுகின்ற உள்துறை அமைச்சர் அவர்களுக்கும் நல்வாழ்த்துக் கூறி போலீஸ் இலாகாவின் தரப்பில் கோரப்பட்டு இருக்கின்ற மானியக் கோரிக்கையை வரவேற்கின்றேன்.*

**கனம் சபாநாயகர் :** *சங்கப் புலவர் அரங்கேற்றம் போல் இருக்கிறது !* (சிரிப்பு)

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** *காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற சேதி நாடு பூராவும்பரவிற்று அந்தச் சமயத்தில் ஈரோடிலே பெரிய கூட்டம். மக்களுடைய உணர்ச்சி கொந்தளித்துக் கொண்டிருந்தது. எல்லாம் அனுதாப உணர்ச்சி தான். மாலையில் ஈரோடிலே வாழ்கின்ற முஸ்லிம் பெரு மக்களுடைய வீடுகள் சூறையாடப்பட்டன. முஸ்லீம் பெருமக்கள் வழிபாடு நடத்துகின்ற மசூதி தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. முஸ்லிம் பெரு மக்களுடைய குழந்தைகளும் மனைவிமார்களும் ஓ வென்று அலறி மாறு வேடம் பூண்டு பக்கத்தில் உள்ள கிராமங்களுக்குச் சென்று ஒளிந்து கொண்டார்கள். மாலை வரவர போக்கிரிகள் கூட்டம் தீயவர்கள் கும்பல் ஈரோடிலே வந்து சேர்ந்தது. அன்று நான் அங்கு இருக்கிறேன். போலீஸ் இலாகா மிகவும் சிரமத்தோடு கலவரங்களை அடக்க முயற்சி செய்து கொண்டிருந்தது. மக்கள் கூட்டமோ மிகப் பெரியது. போலீஸ்காரர் களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அந்தச் சமயத்தில் கோர இருள் எல்லோர் உள்ளத்திலும் மண்டிக் கிடந்தது. ஒரு பக்கத்தில் கிராமத்தில் இருந்து வந்து திரண்டிருந்த போக்கிரிக் கூட்டம் *** ***—நான் வராண்டாவில் நின்று கொண்டிருந்தேனே—அந்த வீட்டின் முகப்பில் நின்று பேசிக் கொண்டிருந்தது. எனக்கு அதில் இருந்த சில ஆட் களையும் நன்றாகத் தெரியும். அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை நினைத்தால் இப்போதும் உடம்பு சிலிர்க்கிறது—சொல்ல நா எழவில்லை*

*** *** *** ***

*அதைக் கேட்ட உடனே என் மனம் பதறிற்று. " ஐயோ, ஆண்டவனே என்றேன். அந்த சமயத்தில் தான் மசூதி அருகே போலீஸ்காரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். ஒரு தந்திக் கம்பத்தில் நின்று மசூதியின் மேல் தாவிக் கொண்டிருந்த ஒரு சிறுவன் சுட்டுக் கொல்லப் பட்டு கீழே விழுந்தான். போலீஸ்காரர்கள் தகுந்த முன் எச்சரிக்கை எல்லாம் கொடுத்துவிட்டுத்தான் துப்பாக்கிச் சூடு செய்*

***** Expunged as ordered by the Chair.**



13th March 1965]

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

*தார்கள். அதைக் கண்டவுடனே இந்தப் போக்கிரிக் கூட்டம் திக்குக்கு ஒன்றாக ஓடிக் கலைந்து விட்டது. இதை ஏன் சொல்கிறேன். சின்னக் கலவரம் ஏற்படுவதற்குள் அந்த அனுதாப உணர்ச்சி மேலோங்கி இருந்த நிலையிலேயே தீயவர்கள் கூட்டம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு எத்தகைய அவல நிலையை உண்டாக்க இருந்தது என்பதை நாம் கூர்ந்து பார்க்க வேண்டும். இப்போதும் கூட அத்தகைய அவல நிலை—என்றைக் குமே ஏற்பட்டிராத நிலை—தமிழகத்திற்கு வந்தது என்பதை நாம் அறிவோம். மனச்சாட்சியை முன்னிறுத்தி, மனத்தில் ஈரத்தை வைத்து இதைச் சிந்திக்கும்படியாக இந்த மன்றத்தில் உள்ளவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எப்படி போலீஸ் இலாகாவைப் பற்றியும், அமைச்சர் களைப் பற்றியும் நாக்கில் நரம்பு இல்லாமல் பேச முடியும் ?*

*" தீங்கு உரைக்கும் நாவிற்கு நல்கூர்வு இல் " என்பது ஒரு பழமொழி. மிக மோசமான நிலை—தமிழகம வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டபோது அவர்கள் செய்திருக்கும்படியான சேவையை யாரும் மறுக்க முடியாது. இங்குள்ளவர்கள்—எந்தக் கட்சியில் இருந்தாலும் போலீஸ் காரர்களுக்குப் பாராட்டுதல் தான் தெரிவிப்பார்கள் என்று நான் நினைத் தேன். கண்டனம் தெரிவிக்கின்ற ஒருவர் இருவர் கூட இருக்கிறார்கள் என்றால்—ஆண்டவனே, தமிழகத்தின் தலைவிதி இதுவா—ஒன்றும் விளங் காத நிலையில் இருக்கிறேன்—*

*தலைவர் அவர்களே, கம்பன் சொன்னான் : " நின்றுநின் றுயிர் தொறு நெடிது காக்குமே " என்பதாக. ஊண் இருக்கலாம். உடுத்துவ தற்கு உடை இருக்கலாம். இருப்பதற்கு பங்களா இருக்கலாம். போவதற்கு வாகனங்கள் இருக்கலாம். எங்கு பார்த்தாலும் கல்விக் கூடங்கள் இருக்க லாம். வைத்தியசாலைகள் இருக்கலாம். ஆனால் நாட்டு மக்களுக்கு பத்திர உணர்வு இல்லை யென்றால் இந்த நாடு நாடாகாது. எல்லோரும் நினைத்துப் பார்க்க வேண்டும்—பத்திர உணர்வு இல்லை யென்றால் இது ஒரு நாடாகுமா ? எங்கே எந்த நேரத்தில் எந்த இடத்தில் கொடியவர்களால் துன்பம் வந்து விடுமோ, சீரழிவு ஏற்படுமோ என்றநிலை இருக்குமானால் இந்த நாட்டில் எது இருந்து எதற்குப் பிரயோஜனம் ? அந்த பத்திர உணர்வை முதற் படியாக ஏற்படுத்துவதற்கு மிக்க உறுதியுடன் செயலாற்றியுள்ள முதல் அமைச்சர் அவர்களை ஏன் கண்டிக்க வேண்டும் ? ஏன் போலீஸ் இலாகா வைக் கண்டிக்க வேண்டும் ? ஆண்டவனை முன்னிறுத்தி, தர்மத்தை முன் னிறுத்தி, நெஞ்சின் ஈரத்தை முன்னிறுத்திக் கேட்கின்றேன். அவர் களுக்கு நாம் நல்வாழ்த்து அல்லவா கூறவேண்டும். எவ்வளவு மோச மான காரியங்கள் நடந்திருக்கின்றன. தங்கள் உயிரையும் பணயம் வைத்தல்லவா அமைதியை மீண்டும் ஏற்படுத்தப் போராடியிருக்கிறார்கள். அவர்களைக் கண்டு நல்லவர்களுக்கு ஏன் எரிச்சல் என்று கேட்கிறேன். கனம் சபாநாயகர் அவர்களே, தங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். திருப்பூரிலே இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள் இறந்தார் களே, அதை மறந்துவிட முடியுமா ? மிக்க தீரமாக இப்படி தங்கள் உயிரையும் கொடுத்துப் போராடி இந்த ராஜ்ய மக்களுடைய மனத்திலே பத்திர உணர்ச்சியை ஏற்படுத்தியுள்ள போலீஸ் இலாகாவினருடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்பதாகச் கேட்டுக் கொள் கிறேன்.*

*அடுத்து நான் முன்னமேயே கேட்டுக்கொண்ட பிரகாரம் கிராமப் புறங்களில் உள்ள சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார் பைக் கொடுக்க வேண்டும். கிராமப் புறங்களில் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு அவசரமாக அவர்கள் போக வேண்டுமென்றால் வசதி கிடையாது. ஆகவே இவர்களுக்கு மோட்டார் பைக் கொடுப்பது மிகவும் அவசியம். நண்பர் நல்லசிவம் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய கருத்துக்களில்— ஒன்றிரண்டை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆங்கிலத்தை இந்த நாட்டில் வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிற ஆங்கிலப் பரம்பரை இன்னும் இந்த நாட்டிலே இருக் கிறது. ஆங்கில ஆட்சியில் கிடைத்த இனிமையை நினைத்துக்கொண்டு இன்னும் அது வாராதா, அந்த நிலை வாராதா என்று ஏங்கிக் கொண்டிருக்க*

கூடியவர்களும் இந்த நாட்டில் இருக்கிறார்கள். இவர்களை யெல்லாம் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் கவனித்துக்கொண்டுதான் வருகிறார்கள். அவர்களைப் போற்றுகிறேன் ; போலீஸ் இலாகாவினரைப் போற்றுகிறேன்; இந்த மந்திரிசபையைப் போற்றுகிறேன்; தக்க சமயத்தில் அமைதியை நிலைநாட்டியவர்களைப் போற்றுகிறேன். எனவே, ஆண்டவனை முன் நிறுத்தி நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*** *** *** ***

* திரு. அ. பெ. தர்மலிங்கம் : தகுதிமிக்க சட்டமன்றத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின் பேரில் நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே முதலிலே அண்மையிலே உயிர்நீத்த காவல்துறையினருக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இங்கே நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் போலீஸ் இலாகாவைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், அண்மைக் காலத்திலே போலீஸ் இலாகாவுக்கு ஒரு அருள் ஏற்பட்டு, போலீஸ் இலாகாவிலிருந்த இருள் நீங்கி ஒளிமயமான எதிர்காலம் வர இருக்கிற நேரத்தில் சமீபகாலத்திலே ஏற்பட்ட ஒரு சில சம்பவங்களின் காரணத்தால் ஒரு சிறு கறை படிய ஆரம்பித்தது. படிந்த கறைக்கு நான் போலீஸ் இலாகாவினரைக் குறை சொல்ல விரும்பவில்லை. போலீஸ் இலாகாவிலே வேறு சிலர் தலையிட்ட காரணத்தால் தான், அந்தக் கறையும் ஏற்பட்டிருக்குமோ எனறு நான அஞ்சுகின்றேன். போலீஸ் இலாகா மானிய கோரிக்கையின் பேரில் நாங்கள் பேசுகின்ற நேரத்திலே எங்களைக் கேலியும், கிண்டலும் பேசி வந்த ஆளும் கட்சியினரும், அவர்களைச் சேர்ந்த அரசாங்கத்தினரும் போலீஸார்களுடைய நலனைக் கருதி அவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். என்றாலும், சம்பள உயர்வை உயர்த்திய நேரம் சரியில்லாதது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ் இலாகாவுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதற்குக் காரணம் அவர்கள் மேல் இப்பொழுது தான் நம்பிக்கை ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது தான் நம்பிக்கை வந்தது என்று எந்த அமைச்சர் எப்பொழுது சொன்னார் !

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** உள் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில் தான் சொன்னார்கள். காவல் துறையினிடம் எங்களுக்கு என்றைக்குமே நம்பிக்கை இருந்து வந்திருக்கிறது. அந்த நம்பிக்கை என்றைக்கும் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். போலீஸ்காரர்கள் மட்டுமல்ல. எல்லா அலுவலகங்களிலும் பணியாற்றுகின்ற அலுவலர்களும் அரசாங்கத்திற்கு நன்றியுடையவர்களாகவும், நம்பிக்கையுடையவர்களாகவும் பணியாற்றுகிறார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அரசாங்கம் வேறு, கட்சி வேறு என்று அறியாதவர்கள் அவர்களுக்குக் கட்டளை இடுகின்ற காரணமாகவே சில நேரங்களில் அவர்கள் தங்களுடைய கடமையிலிருந்து தவற ஆரம்பித்து விடுகிறார்கள். ஆகவே, ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகமாகத் தலையிடுகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நடந்த போராட்டத்திற்கான உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கத் தவறி விட்டார்கள் என்பதற்குக் காரணம் அவர்கள் மீது குறைச் சொல்ல விரும்பவில்லை ; போலீஸ்காரர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள் ; கள்ள நோட்டைக் கண்டுபிடித்தவர்கள் ; கள்ள நோட்டை அச்சிட்டவர்களைக் கண்டு பிடித்தவர்கள் ; அதற்காகப் பெரிய தியாகமும் செய்து பணியாற்றியவர்கள் நமது போலீஸ் இலாகாவினர். இந்த நாட்டிலே மாத்திரமல்ல. வடநாட்டிலும் சென்று கூட அங்கு நடக்கின்ற

*** Expunged as ordered by the Chair.





விரும்பத் தகாத, வேண்டத் தகாத செயல்களையும் கண்டு பிடித்து வெற்றிகரமாகத் தங்கள் இலாகாவை நடத்திக் கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த உண்மைக் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் மேலும், இன்னும் ஆகாதவர்கள் மேலும் குற்றஞ்சாட்ட காங்கிரஸ்காரர்களும், வேறு சிலரும் ஒரு லிஸ்டை அவர்களிடம் கொடுத்து "இவர்களைப் பிடியுங்கள், இவர்களைக் கைது செய்யுங்கள்" என்று சொல்லி போலீஸ்காரர்கள் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நிலைமையை உருவாக்கிவிடுகிறார்கள்.

அது மட்டுமல்ல. இந்தச் சபையிலும், சொல்லியிருக்கிறார்கள். மேல் சபையிலும் சொல்லியிருக்கிறார்கள். வெஸ்ட் ஜெர்மனியிலிருந்து துப்பாக்கிகள் வந்து குவிந்துக்கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே இங்கு இருக்கக்கூடிய துப்பறியக்கூடியவர்கள் ஏன் இதைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபடாமல் இருக்கிறார்கள். கப்பல் கப்பலாக இந்த நாட்டுக்கு, தமிழ் நாட்டுக்கு துப்பாக்கிகள் வருகின்றன என்று சொல்கிறார்கள். அதை ஏன் இன்னும் கண்டு பிடிக்கவில்லை. ஏன் இங்கே இருக்கிற அமைச்சர்களிடம் சொல்லியிருக்கலாம். அல்லது ஐக்கிய நாடுகள் சபையிலாவது கூறியிருக்கலாம். வெஸ்ட் ஜெர்மனி துப்பாக்கிகள் அனுப்புகிறது என்று அங்கே சொல்லி இருக்கலாம். அதை விட்டு எதை எதையோ, எப்படியெப்படியோ சொல்லி எங்கள் மேல் குற்றம் சுமத்த விரும்புகிறார்கள்.

போலீஸார்கள் தங்களுடைய மனச்சாட்சிக்கு விரோதமாகக் கூட சிலரைக் கைது செய்யக்கூடிய நிலைமை இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. அதனாலே தான் உண்மைக் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கவில்லை. நாங்கள் சென்று போலீஸ் ஸ்டேஷனில் வழக்குகள் கொடுத்தால் சரியாகக் கவனிக்கப்படுவதில்லை. திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்கள் சொன்னார்கள் தங்களுடைய வீட்டிலே நடந்த செயல்களைப்பற்றி. உண்மையிலேயே நாங்கள் அதற்காக வருந்துகிறோம். அந்தச் செயல்களைக் கண்டிக்கிறோம். அதே நேரத்தில் துறிஞ்சாபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய வீட்டில் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் தேதி அவருடைய இல்லக் கிழத்தியைத் தாக்கியிருக்கிறார்கள். நான் அவர்களை ரௌடிகள் என்று சொல்லமாட்டேன். தாக்கியவர்கள் நகரசபைத் தலைவர், மண்டல காங்கிரஸ் கமிட்டித் தலைவர், தாலூகா காங்கிரஸ் கமிட்டித் தலைவர், மற்றவர்கள் எல்லோரும் வந்து இந்தக் கலகத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். இத்தனையும் நடந்தது ஆர்.டீ.ஓ., ஏ.எஸ்.பி. முன்னிலையில் தான். 144-ஐ மீறினார்கள் என்று அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. எப்.ஐ.ஆர். போடப்பட்டது. ஆனால் அரசாங்கத்திலிருந்து உத்திரவு போகிறது, 'நிறுத்தி வையுங்கள்' என்று சொல்லி. அதே போல் நண்பர் ப. உ. சண்முகம் அவர்களுடைய வீட்டில் தாக்கியிருக்கிறார்கள். அங்கேயும் ஆர்.டி.ஓ., ஏ.எஸ்.பி. முன்னிலையில் நடந்திருக்கிறது. வழக்குப் பதிவாகியும், எப்.ஐ.ஆர் போடப்பட்டும்—உத்திரவு போகிறது அரசாங்கத்திலிருந்து, 'நிறுத்தி வையுங்கள்' என்று. எனவே, இந்த நிலைமை ஏற்பட்டால் எங்கள் வீட்டில் நடக்கின்ற இந்த இழவு சமாசாரம் நாளைக்கு உங்கள் வீட்டில் நடக்காது என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது என்பதை ஆழ்ந்து யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** "உங்கள், நீங்கள்" என்று சொல்ல வேண்டாம்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மன்னிக்க வேண்டும்.

**கனம் சபாநாயகர் :** அபபடிச் சொன்னால் அது சபாநாயகரைக் குறிக்கும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நம்முடைய போலீசார்கள் உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடித்து விடுவார்கள். ஆனால் மற்றவர்கள் தலையிடுகிற காரணத்தால் மனச்சாட்சிக்கு விரோதமாக வேலை செய்கிறார்கள். போடப்பட்ட வழக்குகளை யெல்லாம், யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், எந்தக் கட்சி என்று பார்க்காமல் அந்த வழக்குகளை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [13th March 1965

முதலமைச்சர் அவர்கள் அன்று சொன்னார்கள். இதில் ஈடுபட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம், இடது சாரி கம்யூனிஸ்ட் என்று. ஆனால், நாங்கள் இதுவரை கொடுத்த புகார்களில் மற்றவர்கள் இதில் எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறோம். திருவண்ணாமலை, மதுரை கலவரங்களில் ஈடுபட்டவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்று. ஏன் அவர்கள் கைது செய்யப்படவில்லை. உடனடியாக அவர்கள் மேல் நடவடிக்கை எடுங்கள். நாங்கள் தவறு செய்திருந்தாலும் எங்கள் மேல் எந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுங்கள்; இதில் பாரபட்சம் காட்ட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலில் பேசிய திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் இன்றும் பேசினார்கள். நடந்தது நடந்துவிட்டது. "நடந்தவை நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்" என்று துவங்கிய பிறகு, இந்தக் கலகத்தைத் தூண்டியவர்கள் இப்பொழுது எதையெதையோ பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். நான் கேட்க விரும்புகிறேன். உண்மையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம்தான் தூண்டிவிட்டதா என்று. கோயம்புத்தூரிலே திரு. ராமகிருஷ்ணன், M.P. அவர்களும், தாமோதரம், M.L.C. அவர்களும், மகாலிங்கம், M.L.A. அவர்களும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தான் அங்கு கலகத்தைத் தூண்டிவிட்டார்கள் என்று கோவை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்து, அவர்களை அதற்குச் சமாதானம் கேட்டிருக்கிறது. அப்படியானால் தூண்டிவிட்டவர்கள் எந்தக் கட்சிக் காரர்கள் ?

12-30 p.m. கோவை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானம் போட்டு அவர்கள் தூண்டி விடுவதற்குக் காரணமாக இருந்தார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு அனுப்பியது. கமிட்டிக் கூட்டத்தில் பேசுகிறபோது அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அதைப் பற்றிக் குறிப்பிட்டு 'வெளியே போகக்கூடியவர்கள் எப்படியாவது போய் தொலையட்டும், இதற்கு நடவடிக்கை எதற்கு ?' என்று கூறியதாக நான் கேள்விப்படுகிறேன். ஆகவே, தூண்டியவர்கள் எப்படி எங்கள் பக்கத்தில் இருக்கிறார்கள் ; இதிலே யாருடைய தூண்டுதல் இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

போலீஸ்காரர்களின் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருப்பதோடு அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கல்லூரிகளில் இவ்வளவு இடம் என்று ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பி.யு.சி.-ல் இத்தனை இடம், பி.ஏ.-ல் இத்தனை இடம், மருத்துவக் கல்லூரியில் இத்தனை இடம், பொறியியற் கல்லூரியில் இத்தனை இடம் என்று போலீஸ்காரர்களின் பிள்ளைகளுக்கு என்று அதிகார பூர்வமாக ஒதுக்கப்படவேண்டும். அவர்களுக்குக் கொடுக்கிற பிராயாணப் படியைப் பொறுத்து எங்களுடைய மாவட்டத்தை யொட்டிப் பார்த்தால் அவர்கள் 30 நாட்கள் வெளியே டியூட்டியில் இருந்தால் 20 நாட்களுக்குக் கூட படி கொடுக்கப்படுவதில்லை ; 10 நாட்களுக்குத் தான் கொடுக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. போலீஸ்காரர்கள் எத்தனை நாட்கள் டியூட்டி பார்க்கிறார்களோ, அத்தனை நாட்களுக்கும் அவர்களுக்குப் படி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களை வெளியூர்களுக்கு அனுப்புகிறபோது இரண்டு மாதங்கள், மூன்று மாதங்கள் என்று வெளியூரிலேயே வைத்துக் கொள்கிறார்கள். அவ்வாறு அவர்களை வெளியூருக்கு அனுப்பும்போது அவர்களுக்கு அட்வான்ஸ் கொடுப்பதோடு, அவர்களுடைய குடும்பத்திற்கும் அட்வான்ஸ் கொடுக்க வேண்டுமென்று . கேட்டுக்கொள்கிறேன். இப்போது அவர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்ற மின்சாரக் கட்டணம், வீட்டு வாடகையை விட அதிகமாகப் போய்விடுகிறது. இதையும் அமைச்சர் கவனத்தில் கொண்டு மின்சாரத்தையும் இலவசமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



13th March 1965] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

ஒவ்வொரு நகரப் பஞ்சாயத்திலும் ஒரு தீயணைக்கும் படையை வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தீ அணைப்பதற்காக மட்டுமல்லாமல் அவர்கள் பல சேவைகளையும் செய்து வருகின்ற காரணத்தால் ஒவ்வொரு நகரப் பஞ்சாயத்திலும் ஒரு தீயணைக்கும் படையை வைக்க வேண்டும்.

கடைசியாக நம்முடைய முதலமைச்சர் அவர்களை உங்கள் மூலமாக நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்வது, இந்த நாட்டிலே சில காடுகளிலே மிருகங்களைச் சுடக் கூடாது என்று சட்டம் இருக்கின்றது : மீறி மிருகங்களைச் சுடுகிறவர்கள் மீது வழக்குத் தொடரலாம் என்று இருக்கிறது. மனிதாபிமானத்தோடு உங்களையெல்லாம் சிந்திக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஏழை எளியவர்கள் எல்லாம் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள் ; அதன்பேரில் வழக்குத் தொடர்வதற்குக் கூட வழியில்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்கள் மற்ற அமைச்சர்களுடன் கலந்து பேசி, 'ஷூட் டு கில்' என்று இருப்பதை மாற்றியமைக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **கனம் ஸ்ரீ. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்திலே நான் கலந்து கொள்ள முற்பட்டிருக்கிறேன் என்றால் ஏதோ முதலமைச்சர் என்ற ஹோதாவில் அல்ல ; அல்லது எனது மதிப்புக்குரிய சகா உள்துறை அமைச்சர் அவர்களுடைய பொறுப்பை நான் என் தலைமேல் போட்டுக்கொண்டேன் என்ற வகையில் அல்ல. எனக்கும் போலீஸ் நிர்வாகத்திற்கும் பொறுப்பு இருக்கிறது என்ற முறையிலேதான் நான் சில விளக்கங்களைக் கூற விரும்புகிறேன். உள்துறை அமைச்சர் நிர்வகிக்க வேண்டிய பொறுப்பை எல்லாம் நான் எடுத்துப் போட்டுக் கொண்டேன் என்ற வகையிலே கனம் உறுப்பினர்கள் பேசினார்கள். அப்படி ஒன்றும் இல்லை. போலீஸ் நிர்வாகத்தின் பொறுப்பு கனம் உள்துறை அமைச்சர் அவர்களிடந்தான் இருக்கிறது. ஆனால் அதிலே "லா அண்டு ஆர்டர்" என்ற ஒரு அம்சம் இருக்கிறது. "ஹோம்" என்ற இலாகா போலீஸ் நிர்வாகம் பற்றிக் கவனம் செலுத்தி வருகிறது. லா அண்டு ஆர்டர் என்பது பப்ளிக் இலாகாவிலே கவனிக்கப்பட்டு வருகிறது. அதுவும் போலீசாருடைய நடவடிக்கைகளைப் பற்றியதுதான். போலீசாரின் பொறுப்புக்களைப் பற்றியது தான். 'லா அண்டு ஆர்டர்' என்பது என்னுடைய பொறுப்பாக இருக்கிறது. அந்த வகையிலேதான் இப்போது சில வார்த்தைகளைக் கூற முற்பட்டிருக்கிறேன். மற்றொன்றைப் பற்றியும் நான் மிகுந்த நன்றியைக் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். "மந்திரி சபையிலே மற்றவர்களைப் பற்றி ஒன்றும் குற்றம் சொல்வதற்கில்லை ; நான்தான் இத்தனை தவறுதல்களுக்கும் பொறுப்பு" என்று எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் சிலர் சொன்னார்கள். பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன் ; சக அமைச்சர்கள் மீது குற்றம் ஒன்றும் இல்லை யென்று சொன்னதற்காக மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொரு வகையிலும்கூட நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். "போலீசார் மீது ஒன்றும் குற்றம் இல்லை ; எல்லாம் இந்த மந்திரிசபை அல்லது முதலமைச்சர் அல்லது பக்தவத்சலம் தான் இந்தப் போலீசாரை ஆட்டி வைக்கிறார்" என்று கூறினார்கள். அதையும் மிகுந்த மகிழ்ச்சியோடு நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் முன்பே இந்த மன்றத்தில் சொன்னேன்—"போலீசார் மீது குறை கூறாதீர்கள் ; அது யாருக்கும் நல்லதில்லை ; குறை கூறுகிறவர்களுக்கும் நல்லதல்ல. எங்கள் மீது குறை கூறுங்கள் ; அரசியல்வாதிகள் மீது குறை கூறுங்கள் ; ஆட்சியாளர்கள் மீது குறை கூறுங்கள் ; போலீசார் கடினமான வேலையிலே ஈடுபட்டிருக்கிறார்கள் ; கம்பியில் நடப்பது போல் தங்கள் கடமையைச் செய்து கொண்டிருக்கிறார்கள் ; மக்களைப் பாதுகாக்கும் மகத்தான பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள அவர்கள்மீது குற்றம் கூறாதீர்கள்" என்று நான் ரொம்ப மன்றாடிக் கேட்டுக்கொண்டேன். அதற்கிணங்க இன்று பேசியவர்கள் அநேகமாக எல்லோரும் "போலீசார் மீது குற்றம் இல்லை" என்று சொன்னார்கள். அவ்வாறு சொன்னதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி.

[திரு. எம். பக்தவத்சலம்] [13th March 1965

ஆனல் போலீசாரை ஆட்டி வைக்கும் நிமித்தம் ஒன்றும் எங்களுக்கு இல்லே. போலீசார் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய, நாசம் விளைவிக்கக் கூடிய, துன்பத்தை விளைவிக்கக் கூடிய வகையிலே யார் முற்பட்டாலும் அவர்களிடம் போலீசார் கண்டிப்பாக நடந்து கொண்டு மக்களுக்கு வேண்டிய பாதுகாப்பை அளிக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. அதிலும் தங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் உயிரைப் பலி கொடுத்து மக்களேப் பாதுகாத்து வருகின்ற போலீசாரை அரசாங்கம் பாராட்டுகிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பாராட்டுகிருர்கள். மிகுந்த மகிழ்ச்சி. அரசாங்கம் ஏதோ சொல்கிருர்கள், ஆளும் கட்சியினர் ஏதோ சொல்கிருர்கள் ; அதைக் கேட்டு அவர்கள் ஏதோ தவறுதலாக நடக்கிருர்கள் என்று சொன்னல் அது முற்றிலும் தவறு என்றுதான் நான் கூற விரும்புகிறேன். அரசாங்கம் போலீசாரிடம் கண்டிப்பாக வற்புறுத்திக்கொண்டு வருவது "யாராக இருந்தாலும் தாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள்" என்பதுதான். எந்தக் கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியினராக இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள் என்றுதான் வற்புறுத்தி வருகிருேம். அவ்வாறு எந்தவிதமான தாட்சண்யமும் காட்டப்படாமல் தொடரப்பட்ட வழக்குகளே நான் சான்றுகள் மூலமாகக் காட்ட முடியும். அம்மாதிரி மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிற வகையிலே நடவடிக்கை எடுத்துக்கொண்டால் சீற்றம் ஏற்படுகிறது. போலீசார்மீது சீற்றம் காட்டுவதில்லேயென்ருல் அதுவரையிலே வரவேற்கிறேன். போலீசாரிடத்தில் எல்லாக் கட்சியினருக்கும் அக்கறை இருப்பதோடு அச்சமும் இருக்கத்தான் வேண்டும். அச்சம் இல்லேயென்ருல் எட்டுக் கோடி ரூபாயை எதற்காகச் செலவு செய்யவேண்டும் ? இதைப்பற்றி நான் முன்பே சொல்லியிருக்கிறேன். அவ்வாறு அச்சம் இல்லாமல் இருந்தால் காவல் படைக்கு என்று ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவு தொகை செலவு செய்து என்ன பயன் என்றுதான் நான் நிதியமைச்சர் என்ற ஹோதாவில் கருதுகிறேன். குழந்தைக்குத் தாயிடத்தில் அன்பு கலந்த அச்சம் இருக்கவேண்டும். அந்த வகையிலே போலீசாரிடத்திலும் அச்சம் இருக்கவேண்டும். அந்த வகையிலே இன்று விவாதத்திலே கலந்துகொண்ட உறுப்பினர்கள் மனப்பான்மை காணப்பட்டது மிகுந்த திருப்தியை ஏற்படுத்துகிறது போலீசார் அரசாங்கம் சொல்கிறபடி நடக்கிருர்கள் என்பது உண்மைதான். அரசாங்கத்திற்கு மாருக அவர்கள் எதுவும் செய்ய முடியாது. நான் 1932-ல் அடிப்பட்டதைப் பற்றிச் சொன்ஞர்கள். நான் அடிபட்டேன். சுதந்திரம் நம்முடைய நாட்டுக்கு வேண்டுமென்று சொன்னதுதான் நான் செய்த தவறு. காங்கிரஸ் கொடியைப் பிடித்துக்கொண்டு அகிம்சை முறையில் சென்றேன். அடிக்க வேண்டிய நிலேமையே இல்லே. அடித்தார்கள். அப்போது கூடக் கோபம் இல்லே. இப்போது போலீசார் எங்கு அடிக்க நேரிடுகிறதோ, அங்கெல்லாம், தவிர்க்க முடியாத நிலேயிலேதான் அடிக்கிருர்கள். கண்ணீர்ப் புகை விடுகிருர்கள் ; சுடவும் சுடுகிருர்கள். கலவரம் மேலிட்டு எவ்வளவுதான் அவர்களுக்கு எச்சரிக்கை கொடுத்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் மேலும் மேலும் நாசத்தை விளேவிக்கக் கூடிய வகையிலே, உயிரை மாய்க்கக் கூடிய வகையிலே முரட்டுக் கூட்டமாக ஈடுபட்டால் தவிர்க்கக் கூடாத வகையில் முதலில் பிரம்படிப் பிரயோகம் செய்கிருர்கள் ; பிறகு தடியடிப் பிரயோகம் செய்கிருர்கள் ; பிறகு கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்கிருர்கள் ; அதற்கும் பிறகுதான் துப்பாக்கிப் பிரயோகம் செய்கிருர்கள்.

சில அங்கத்தினர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். சில மாதங்களுக்கு முன்புதான் போலீஸ் விழாவில் கலந்து கொண்டு பேசியபோது போலீஸ்காரர்களிடம் கூறினேன். ஒரு வருடமாவது துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இடமில்லே என்று ஏற்பட்டால் அது பெரிய பாராட்டுதலுக்குரியதாகும் என்று சொன்னேன். அவர்கள்தான் என்ன செய்வார்கள் ? சுட வேண்டுமென்ரு சுடுகிருர்கள் ? நடந்த சம்பங்கள் அங்கத்தினர்களுக்குத் தெரியும், எப்படி நடந்தது என்று. திரு. மதியழகன் அவர்கள் பேசும்போது "பொள்ளாச்சியில் என் சுட்டிருக்கவேண்டும் ? திருப்பூரில் என் சுட்டிருக்க வேண்டும் ? குமாரபாளேயத்தில் என் சுட்டிருக்க வேண்டும் ? இதை எல்லாம் தவிர்த்திருக்கலாமே" என்று கூறிஞர்கள். போலீஸ் செயலற்ற



V211,31'N65 N65-2703

13th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

நிலேயில் இருக்க வேண்டுமென்று சிலர் கூறுகிருர்கள். அப்படி சாதாரணமாகக் கோரக் கூடியவர்கள் சமுதாய விரோதிகள். ஆனல் சட்ட மன்ற அங்கத்தினர்கள் அவ்வாறு மனதில் கூட நினேக்கக் கூடாது. விசாரணே நடைபெற்றது. விசாரித்தவர்கள் தங்கள் கருத்துக்களேத் தெரிவித்திருக்கிருர்கள். நேராகப் பார்த்தவர்களும் தெரிவித்திருக்கிருர்கள். தவிர்க்கக் கூடாத வகையில் கூட்டம் பெருகி, பலாத்காரச் செயலில் ஈடுபட்டு, நாசச் செயலில் ஈடுபட்டு,பெரிய நாசமும் உயிர்ச் சேதமும் ஏற்படுகிறபோதுதான் அதைத் தவிர்க்க வேண்டுமென்று கடைசிப் பட்சமாக துப்பாக்கியை உபயோகிக்கிருர்களே தவிர வேறு அல்ல. நடைபெற்றிருக்கிற சம்பவங்களில் போலீஸ்காரர்கள் துப்பாக்கியால் சுட்டிருக்க வேண்டாம் என்று சொன்ஞல் மேலும் நாசங்கள் நடந்தால் நலமாக இருக்கும் என்று மனதில் ஒரு கருத்து தோன்றித்தான் சொல்லியிருப்பார்களே தவிர வேறு வகையில் பொறுப்புள்ளவர்கள் சொல்லி இருக்க மாட்டார்கள். கஷ்டமான நிலேயை சமாளித்து, போலீஸ்காரர்களின் உயிர்கள் பலியாகிறது என்ருலும் அதையும் பொருட்படுத்தாமல் வீரத்துடன் கடமை உணர்ச்சியோடு மக்களேப் பாதுகாத்தார்கள் என்ருல் உடனடியாக நாம் நம் பாராட்டுதல்களை அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிருேம். அந்த வகையில்தான் அவர்களுக்கு நாம் சம்பள உயர்வு அளித்தோமே தவிர வேறு வகையில் இல்லே. அது கூட கனம் அங்கத்தினர்களுக்குப் பொறுக்கவில்லே என்ருல் எனக்கு அந்த உறுப்பினர்களின் மனப்பான்மையைப் புரிந்து கொள்ள முடியவில்லே. ஒரு பக்கத்தில் போலீஸைப் பாராட்ட வேண்டும் என்று கூறுகிருர்கள், மற்ருெரு பக்கத்தில் ஏன் கொடுத்தாய் என்ருல் அவர்கள் செயலற்றவர்களாகப் போக வேண்டும்.

64894

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஏன் கொடுத்தார்கள் என்று சொல்லவில்லே. கொடுத்த நேரம் சரியாக இல்லே என்றுதான் சொன்ஞர்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைத்தான் நானும் சொல்கிறது. கொடுத்த நேரத்தைத்தான் சொல்கிறேன். ஆபத்தான நிலேயைப் பொருட்படுத்தாமல் தங்கள் கடமையை ஆற்றிஞர்களே அப்போதுதான் நாம் நம் பாராட்டுதல்களேத் தெரிவிக்க வேண்டும். இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிறகு போய் அதற்கப்புறம் சர்டிபிக்கேட் கொடுப்பதில் பிரயோஜனமில்லே. இப்போது என் கொடுக்கக் கூடாது ? இவர்கள் செய்தது எல்லாம் தவறு என்று அங்கத்தினர்கள் நினேத்தால் என்னேக் கண்டிக்கலாம். எந்த முறையில் சம்பள உயர்வு கொடுத்தீர்கள் என்று சொல்லலாம். அவர்கள் மக்களேப் பாதுகாத்தார்கள் என்பதை இந்த மன்றத்தில் உள்ள ஒரு சில உறுப்பினர்கள் ஒப்புக்கொள்ளவில்லே என்ருலும் மக்கள் ஒப்புக் கொள்கிருர்கள். மக்கள் உணருகிருர்கள். மக்கள் பாராட்டுகிருர்கள் இன்றையதினம். மக்களின் சார்பாகத்தான் அரசாங்கம், அவர்களுடைய பாராட்டுதல்களே உருப்படியான வகையில் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்தது. போலீஸ்காரர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எல்லாம் யாரோ லிஸ்ட் கொடுக்கிருர்கள் என்று சொன்ஞர்கள். அப்படி ஒன்றுமில்லே. போலீசுக்கு வேண்டிய நண்பர்கள் சில பேர்கள் எதிர்க்கட்சியில் இருக்கலாம். அவர்கள் தனியாகப் போய்க் கேட்கலாம், ரகசியமாகப் போய்க் கேட்கலாம், யார் லிஸ்ட் கொடுக்கிருர்கள் என்று. தவறுதல்கள் செய்வதாக புலன் வருகிறது. அப்போது தடுப்பு நடவடிக்கைகள், அல்லது குற்றம் செய்தவர்களேத் தண்டிக்க வேண்டிய நிலே ஏற்படுகிறது. கனம் அங்கத்தினர் திரு. சண்முகம் அவர்கள் சொன்ஞர்கள், யார் மேலும் தப்பு இல்லே, என்னேத்தான் தண்டிக்க வேண்டுமென்று சொன்ஞர்கள். அதில் எனக்குப் பெரிய மகிழ்ச்சி என்னவென்ருல் அவர்கள் கடவுள் உதவியை நாடுகிருர்கள் என்னேத் தண்டிப்பதற்கு. கடவுளிடம் அத்தகைய நம்பிக்கை இன்றைக்கு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அது போதும் எனக்கு.

**திரு. ப. உ. சண்முகம் :** கனம் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களேக் குறிப்பிட்டு நான் சொல்லவில்லே. அரசு எனறுதான் சொன்னேன். ஆட்சியைத்தான் சொன்னேனே தவிர வேறு எதையும் குறிப்பிடவில்லே. பழமொழி அதைத்தான் சொல்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசு அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும் என்றார்கள். யாரைக் கொல்லும் ?

**திரு. ப. உ. சண்முகம் :** அரசை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முன்பு சொன்னது தவறு என்று திரு. சண்முகம் அவர்களே உணர்ந்து விட்டார்கள் என்றால் அதில் எனக்குத் திருப்தி. கடவுளிடம் ஒரு நம்பிக்கை ஏற்பட்டு விட்டதென்றால் கடவுளுடைய உதவியை நாம் நாட வேண்டியிருக்கிறது என்று திரு. சண்முகம் அவர்கள் உணர்ந்து விட்டார்கள் என்றால் அதில் எனக்கு மிகவும் திருப்தி. கடவுளின் சொரூபத்தை நான் உணர்ந்திருக்கிறேன். படிக்கவில்லை. சாஸ்திரம், புராணம் பற்றியெல்லாம் சொன்னார்கள், அதை எல்லாம் நான் படிக்கவில்லை. கடவுளின் சொரூபத்தைத்தான் உணர்ந்திருக்கிறேன். ஒரு வேளை சண்முகம் அவர்கள் அசல் சண்முகம் என்று நினைத்துக்கொண்டு செய்தாலும் செய்யலாம். அதுபற்றி எனக்குக் கவலையில்லை. போலீஸ்பற்றி கமிஷன் வைத்து போலீஸ் திறன் பற்றி ஆராய வேண்டுமென்று கூறினார்கள். சில மாநிலங்களில் கமிஷன் வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இங்கு வந்து ஆராய்கிறார்கள். போலீஸ் எப்படி நடக்கிறது என்று. இந்த அரசாங்கத்தின் அபிப்பிராயம் நாம் ஒன்றும் தனியாகக் கமிஷன் வைக்க வேண்டியதில்லை. மற்ற நாடுகளில் எவ்வாறு போலீஸ் நடை பெறுகிறது என்று பார்த்துக் கொள்ளலாம். இப்போதே போலீஸ் இயந்திரம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும், இன்னும் அதிகத் திறமையோடு இயங்கும் என்பது அரசாங்கத்தின் நம்பிக்கை. மற்றொரு அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். ஏதோ பிரதம மந்திரி அவர்கள் இந்தச் சம்பவங்களைப்பற்றி எல்லாம் விசாரிக்க வேண்டும், அதற்கு ஒரு கமிஷன் வேண்டுமென்று கூறினார்கள் என்று. பிரதம மந்திரி அவர்கள்அவ்வாறு கூறவில்லை. அவர்கள் கூறியது எல்லாம், மாணவர்கள் இப்படி பலாத்காரத்தில் திடீரென்று இறங்கி விட்டார்களே, அதை விசாரிக்க வேண்டும், மாணவர்களின் மனப்பான்மை கெட்டு விட்டதே என்றுதான் கூறினார்கள். மாணவர்களை மட்டும் விசாரித்துப் பயன் இல்லை. பெரியவர்களையும் விசாரிக்க வேண்டும். இப்போது என் நண்பர்கள் சிலர் எதிர்க் கட்சியில் இருக்கிறார்கள். அவர்கள் ரொம்ப உருக்கமாகப் பேசினார்கள். மாணவர்களைப்பற்றி பேசுகிறார்கள். பேசும்போது எல்லாம் மாணவர்கள் இதில் ஈடுபடுவது ரொம்பத் தவறு, பெரியோர்களிடம் இதை விட்டுவிட வேண்டுமென்றும் மாணவர்கள் நன்கு படிக்க வேண்டுமென்றும் சொல்கிறார்கள். இப்படி இங்கு பேசிவிட்டு வெளியே வந்தால் மாணவர்கள், இப்படிச் சொல்லி யிருக்கிறீர்களே என்றால் நான் அங்கே அப்படிச் சொன்னேன், நீங்கள் இப்படிச் செய்யுங்கள் என்று சொல்கிற தலைவர்கள் இருக்கிறார்கள் எதிர்க்கட்சியில்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** எந்தக் கட்சி என்று சொல்ல வேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எதிர்க்கட்சி நண்பர்கள் என்பேன்.

**Sri V. KRISHNAMOORTHY :** Sir, unless the name is mentioned, it will be considered as false.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த மேதாவிக்கு இதெல்லாம் தெரியும். ரொம்பப் படித்தவர், பெரிய வழக்கறிஞர். அவர் பேசுவது தான் எனக்கு எப்போதும் தெரிந்ததாயிற்றே. இவர் இப்போது எழுந்திருக்க வேண்டியதில்லை.

மில் ஓனர்கள் பற்றி கூறினார்கள். அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள இப்போது தைரியம் இல்லை என்று சிலர் கூறினார்கள். இப்போதும் சொல்கிறேன். சில மில் சொந்தக்காரர்கள் இதில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தூண்டிவிட்டிருக்கிறார்கள். அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று.



**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா ? அவர்கள்மேல் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தெரிந்தால் உடனே கைது செய்வதில்லை. பரிசீலனை செய்துதான் கைது செய்ய முடியும். மதுரை சம்பவம் பற்றி ஒன்றுமே செய்யவில்லையே என்றால் அது பரிசீலனையில் இருக்கிறது. இன்வஸ்டிகேட் செய்கிறார்கள். இன்வஸ்டிகேஷன் பூர்த்தி அடைய சில மாதங்கள் ஆகின்றன. இன்வஸ்டிகேட் செய்து புலன் ஏற்படுவதைப் பொறுத்துத்தான் செய்ய வேண்டும். யாரோ பின்னாலிருந்து தூண்டி விட்டார்கள் அல்லது மாணவர்களை ஊக்கப்படுத்தினார்கள் என்றால் இதெல்லாம் தொடர்ந்து பரிசீலனையில் இருக்கிற விஷயம். பரிசீலனை ஏற்பட்டால் அதற்கப்புறம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமோ அதற்குத் தக்கபடி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். என்னிடம் தகவல் இல்லாமல் இல்லை. ஏன் கைது செய்யவில்லை என்றால், ஏன் ப்ராசிக்யூட் செய்யவில்லை என்றால் ப்ராசிக்யூட் செய்ய ஒரு முறை இருக்கிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மில் ஓனர்களை, மதுரை சம்பவங்களில் ஈடுபட்டவர்களை எல்லாம் கைது செய்ய, இன்வஸ்டிகேட் செய்து கைது செய்ய வேண்டும் என்றார்கள். தி.மு.க. அல்லது மற்றவர்கள், சாதாரணமானவர்கள் என்று நினைத்தால் சந்தேகத்தின் பேரில் கைது செய்ய அரசாங்கத்திற்கு திட்டமிருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது கைது செய்யப்பட்டிருப்பவர்கள் மட்டும்தான் சந்தேகத்திற்குட்பட்டவர்கள் என்றல்ல. இன்னும் பலர் மீது சந்தேகங்கள் இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பலரிடமும் சந்தேகம் இருக்கின்றது. அவர்கள் எல்லோரையும் இன்று கைது செய்து விடவில்லை. எல்லா விவரங்களும் இன்வெஸ்டிகேஷன் நடக்கிறது. படிப்படியாக முறையாக என்னென்ன செய்ய வேண்டுமோ அதற்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதைப்பற்றிச் சொன்னார்கள். இது பற்றி ஹைகோர்டில் வழக்கு இருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் இங்கு என்ன சொன்னார்களோ அதைத்தான் அவர்கள் சார்பில் கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது. நான் ஏதோ கெட்ட எண்ணத்தோடு வேண்டுமென்றே கைது செய்து வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கோர்ட்டில் இன்னும் வழக்கு முடியவில்லை. எனக்கு அவ்வாறு எந்த விதமான எண்ணமும் இல்லை. ஒன்றைத் திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். நான் சொல்ல விரும்புவது, வொயிட் பேப்பர் வைப்பது என்றால் அதற்குக் காரணம் இருக்க வேண்டும். பாராளு மன்றத்தில் பேப்பர் வைக்கப்பட்டது என்றால் ஒரு கட்சியைப்பற்றி விவரங்கள் தெரிந்து கொள்வதற்கு வொயிட் பேப்பர் வைக்கப்பட்டது. பாதுகாப்பிற்காகக் கைது செய்து வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரைப்பற்றியும் பேப்பர் வைக்க முடியாது. கோர்ட்டில் இதையெல்லாம் சொல்லி இருக்கிறோம். ஹைகோர்ட் இதைப்பற்றித் தீர்ப்பு செய்ய வேண்டும். சட்டம் இருக்கிறது. பாராளு மன்றத்தில் கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள இடதுசாரிகள் ஏன் கைது செய்யப்பட்டார்கள் என்பதைப்பற்றிச் சொல்லுகின்ற வகையில் ஒரு கட்சியினுடைய விவரங்களை எல்லாம் வைத்திருக்கிறார்கள். அதே போன்று இங்கும் ஒரு கட்சியைப்பற்றி விவரங்களை வைக்க வேண்டும் என்ற அவசியம் வரும்போது அதற்கான விவரங்களை வைப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் தனிப்பட்ட நபர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதற்காக வொயிட் பேப்பர் வைக்க முடியாது. ஆகவே ஏதோ வொயிட் பேப்பர் வைக்க அச்சப்படுகிறோம் என்று யாரும் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தனிப்பட்ட முறையில் யாரிடத்திலும் எனக்கு விருப்பு வெறுப்பில்லை. தனிப்பட்ட முறையில் யாரிடத்திலும் விருப்பு வெறுப்போடு நடக்கிறவன் நான் அல்ல. கனம் உறுப்பினர் ராஜேந்திரன் அவர்கள் கேட்டுக்கொண்ட

தற்கு நான் நடவடிக்கை ஒன்றும் எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்லப்பட்டது. அன்றைய தினம் விடியற்காலையில் டெலிபோனில் அவர் பேசினார். ராஜேந்திரன் என்று சொன்னவுடன் யாரென்று உடனே என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவ்வளவு பழக்கம் அவரோடு கிடையாது. சட்ட மன்ற உறுப்பினர் திரு. ராஜேந்திரன் அவர்கள் என்பது எனக்கு போனில் பேச்சு முடியும்போதுதான் தெரிந்தது. நான் அவர்களிடத்தில் கமிஷனரிடத்தில் சொல்லுங்கள் என்று சொல்லி யிருப்பேன். அல்லது இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்களிடத்தில் விவரத்தைச் சொல்லுங்கள் என்று சொல்லி யிருக்கக்கூடும். அதல்லாமல் ஏதோ நீ, நான் என்றெல்லாம் பேசியதாகச் சொல்வது தவறு. அந்தமாதிரி பேசுவதே எனக்கு வராது. மிக ஏழையாக இருந்தாலும், எவ்வளவுதான் சிறுவர்களாக இருந்தாலும் நீ, நான் என்று நான் யாரிடத்திலும் பேசுவதில்லை. அந்தப் பழக்கமும் எனக்குக் கிடையாது. என் வாயிலே அம்மாதிரி வராது. அன்றைய தினம் அவர்கள் பரபரப்பாக இருந்ததினால் நான் சொன்னதைத் தவறாக எடுத்திருக்கக்கூடும். உண்மையில் நான் ஒன்றும் செய்ய முடியாது என்று தான் அன்றைய தினம் போன் செய்த பலரிடமும் கூறினேன். விவரங்களை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்களிடம் சொல்லுங்கள் என்று பலரிடத்திலும் சொன்னேன். எத்தனையோ பேர்கள் அன்றைய தினம் இரவு இவ்விதம் போன் பண்ணினார்கள். அவர்கள் எல்லோருக்கும் இதைத்தான் சொன்னேன். எல்லா விவரங்களையும் போலீசாரிடத்தில் சொல்லுங்கள் என்றுதான் சொன்னேன். இவ்விதம் நான் அவர்களிடம் சொன்னேன் என்றாலும் கமிஷனரைக் கூப்பிட்டு விவரத்தைக் கேட்டேன். அவர்கள் எனக்கு அங்கு நடந்த விவரங்களை எல்லாம் சொன்னார்கள். ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும்சரி, யாராக இருந்தாலும்சரி தொல்லை ஏற்பட்டால் அதைக் கவனியாமல் அலட்சியமாக இருந்தேன் என்று யாரும் கருதக்கூடாது.

மற்றொன்று, திரு. மதியழகன் அவர்கள் கூறியதெல்லாம், ஏன் வெளியிடங்களிலிருந்து வரவழைத்தார்கள், ராணுவத்தை ஏன் வரவழைத்தார்கள் என்று கேட்டார்கள். நிலைமை மோசமாக இருந்தால் வரவழைக்கவேண்டிய நிலைமைதான் ஏற்படுகிறது. எப்படி வேண்டுமானாலும் கெட்டுபோகட்டும், இன்னும் நிறைய அமளிகள் நடக்கட்டும், நிலைமை இன்னும் மோசமாகட்டும் என்று நினைப்பவர்கள்தான் ஏன் வெளியிலிருந்து போலீசை வரவழைத்தார்கள் என்று கேட்பார்கள். மிலிட்டரி இருப்பது யுத்த காலத்திற்கு மட்டுமல்ல. ஏதாவது விபத்து ஏற்பட்டாலும் நாம் போலீசாரை உபயோகிக்கிறோம், ஆயுதம் தாங்கிய போலீசாரை உபயோகிக்கிறோம். அந்த வகையில் அவர்கள் மக்களுக்குப் பணிபுரிகிறார்கள். எதிர்பாராத வகையில் ஏதாவது அமளி ஏற்பட்டாலும் அப்போதும் நாம் போலீசின் உதவியைக் கோருகிறோம். பெரும்பாலும் இவர்கள் எல்லோரும் தமிழர்கள்தான். இந்த நிலைமையில் போலீசை வரவழைப்பது, ராணுவத்தை வரவழைப்பது தவறு என்று சொல்லுகிற மனப்பான்மையை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பொதுவாக மக்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற பணியில், எத்தனையோ இடையூறுகளுக்கிடையில் . . . .

**திரு. கே. ஏ. மதியழகன் :** மிலிட்டிரியை வரவழைப்பது தவறு என்று சொல்லக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். நான் குறிப்பிட்டது, மிலிட்டிரியை வரவழைக்கின்ற சந்தர்ப்பம் ஏற்படுகிறது என்றால், சிவில் லா ஃபெயிலாகிவிட்டது என்றுதான் அர்த்தம். அந்த முறையில் நம்முடைய போலீஸ் இங்கிருந்து கொண்டிருக்கும் போது மிலிட்டிரியைக் கொண்டு வருவது, சூப்பர்ஃப்ளுஸாக இருக்குமல்லவா என்ற முறையில்தான் கேட்டேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படியொன்றும் அர்த்தமில்லை, எங்களுடைய அர்த்தம் அப்படியொன்றுமில்லை. நிலைமை மோசமாக இருந்தால் வெளி மாநிலங்களிலிருந்து போலீசாரை வரவழைக்கிறோம். கட்டுக்கு அடங்கவில்லை என்று வரும்போது ராணுவத்தினரை வரவழைக்கிறோம். ராணுவத்தை வரவழைக்கிறோம் என்றால் நாம் அவர்களிடம்



ஆட்சியை ஒப்படைக்கிறோம் என்று அர்த்தமல்ல. சிவில் அட்மினிஸ்ட்ரேஷன் போய்விட்டது, அல்லது நின்றுவிட்டது என்று அர்த்தமல்ல. விபத்துக்கள் நேரும் போது, புயல் அடித்து விபத்துக்கள் வரும்போது நாம் உதவிக்காக ராணுவத்தை வரவழைக்கின்றோம், அப்படி வரவழைப்பது, எங்களுடைய பொறுப்பு நீங்கிவிட்டது, பொறுப்பை விட்டு விட்டோம் என்று சொல்லி மிலிட்டிரியிடம் விட்டுவிடுவதாகாது. சிவில் அட்மினிஸ்ட்ரேஷனுக்கு கீழ் தான் ராணுவத்தினர் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் பணியாற்றுகின்றார்கள். ஆகவே அவர்களுடைய உதவியைக் கோரியது எந்தவிதத்திலும் தவறு அல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உதகையில் நேற்று நடைபெற்ற சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். உதகையில் மாணவர்கள் இரண்டு மூன்று நாட்களாகக் கிளர்ச்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்கே ஒரு கல்லூரியும் இருக்கிறது. சாதாரணமாக உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள்தான் இப்போது அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களை சுலபமாக ஏமாற்றிவிடலாம், கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வயது வந்தவர்கள். கல்லூரி மாணவர்கள்கூட அவ்வளவு ஆவேசமாக வரவில்லை. பள்ளி மாணவர்கள்தான் ஆவேசமாக வந்தார்கள். சிறு குழந்தைகள், அவர்களிடம் ஆவேசத்தை முடுக்கிவிட்டுவிடுகிறார்கள் சிலர். அங்கு முனிசிபாலிட்டி பள்ளிக்கூடம் ஒன்றிருக்கிறது. பள்ளிக்கூடம் திறந்து இரண்டு நாட்கள் ஆகியும் பிள்ளைகள் பள்ளிக்குப் போகவில்லை, பின்னால் பெற்றோர்கள் அக்கறை எடுத்துக்கொண்டார்கள். இப்போதுகூட துரதிஷ்டவசமாக சில மாணவர்கள் இன்னும் பள்ளிகளுக்குப்போகாமல் இருந்து வருகிறார்கள். இதற்குக் காரணம் ஒழுங்காகப் போகின்ற மாணவர்களையும் ஒருசில மாணவர்கள் கெடுத்து நாசமாக்கப் பார்க்கிறார்கள், ஆனால் பெரும்பான்மையான மாணவர்கள் ஒழுங்காகப் பள்ளிக்கூடத்திற்குப் போய்ப் படிக்கவேண்டும் என்றுதான் இருக்கிறார்கள். ஆனால் ஒரு சில மாணவர்கள் தான் இவ்விதம் கெடுத்து வருகிறார்கள். இப்படி வருகிறவர்கள் வன்முறைச செயல்களில் ஈடுபடுகிறார்கள். போகின்ற மாணவர்களையும் தடுத்து, போகவேண்டாமென்று வற்புறுத்துகிறார்கள், பலவந்தப்படுத்துகிறார்கள். அந்த முறையில் இங்கும் நடந்துகொண்டிருக்கிறது, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இவ்வாறு பள்ளிக்கூடத்திற்குச் சென்ற பிறகு வெளியிலிருந்து மாணவர்கள் அவர்களை வெளியே இழுத்துவர முற்பட்டார்கள், அப்போது பள்ளித் தலைவர் போலீசாரின் உதவியை நாடினார்கள். பெற்றோர்கள் வந்திருக்கிறார்கள், மாணவர்களும் வந்திருக்கிறார்கள், ஆனால் ஒரு சில மாணவர்கள் உள்ளே வந்தவர்களை வெளியே வருவதற்கு கையைப் பிடித்து இழுத்திருக்கிறார்கள். இதைப் பார்த்த பின்னால் எங்களுக்கு போலீஸ் உதவி வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள், பின்னால் சச்சரவு செய்து கொண்டிருந்த மாணவர்கள் வெளியே வந்து விட்டார்கள். மேலும் வெளியில் சச்சரவு மூண்டிருக்கிறது. பெற்றோர்களிடம் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருக்கும் போது பேச்சு முற்றியிருக்கிறது, ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டனர், இதைப்பற்றி முழுத்தகவலும் வரவில்லை. இங்கு போலீஸ் ஸ்டேஷன் பள்ளிக்கூடத்திலிருந்து 4 பர்லாங் தூரத்தில் இருக்கிறது. இதற்கிடையில் கலவரம் செய்த பலரைக்கைது செய்திருக்கிறார்கள். வெளியே கூட்டம் சேர்ந்து கொண்டது. கைது செய்யப்பட்டவர்களை எல்லாம் விடுதலை செய்யவேண்டும் என்று வெளியேயுள்ளவர்கள் கோரினார்கள். இதன் காரணமாக கைகலப்பு ஏற்பட்டது. இது 10 மணிக்கு தொடங்கியது. பத்து மணிக்குத் தொடங்கிய சச்சரவு தொடர்ந்து கொண்டே இருந்தது. மூன்று மணி வரையிலும் ஓய்ந்தபாடில்லை. அப்போது லாத்திசார்ஜ் செய்யப்பட்டது. அதிலும் கூட்டம் கலையவில்லை, பின்னால் எச்சரிகை செய்து விட்டு கண்ணீர்ப் புகை விட்டிருக்கிறார்கள். அதிலும் பலன் இல்லை. அதன்பிறகு மைக்கோபோன்—ஒலிபெருக்கி மூலமாக கூட்டத்தினரைப்பார்த்து, கலைந்து போய் விடுங்கள் இல்லையென்றால் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியிருக்கும் என்று ஒலிபெருக்கியின் மூலமாக சிறிது நேரம் எச்சரிகை செய்தார்கள்.

[திரு. எம். பக்தவத்சலம்] [13th March 1965

அதற்குள் சிலர் அடிபட்டிருக்கிறார்கள், போலீசார் பலர் அடிப்பட்டிருக்கிறார்கள். பின்னாலும் கொந்தளிப்பு வளர்ந்து கொண்டேயிருந்தது. அதற்கு மேல் போலீசார் சுட வேண்டியிருந்தது. அதில் ஒருவர் இறந்திருக்கிறார், அவர் கூட்டத்தில் இருந்தவர்தான். மார்க்கட்டுக்கு எதிராகக் கூட்டம் கூடியிருந்தது. அதற்குப் பிறகு 9 பேர்கள் காயமடைந்திருப்பதாகவும், அதில் இரண்டு பேர்களினுடைய நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது. இந்தச் சம்பவத்தைப்பற்றி விசாரிப்பதற்கு கோவை மாவட்ட செஷன்ஸ் நீதிபதி அவர்கள் நியமிக்கப்
1-00 p.m. பட்டிருக்கிறார்கள். அவர்கள் இதை விசாரிப்பார்கள். விசாரணை முடிந்து என்ன கருத்து தெரிவிக்கப் படுகிறதோ அதற்கு ஏற்றவாறு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

இப்போது பொள்ளாச்சி பற்றிக் கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் கூறினார்கள். எதற்காக மிலிட்டிரி வந்தது, எதற்காகச் சுட்டிருக்கவேண்டும், ஒன்றும் செய்திருக்கவேண்டாம் என்று சொன்னார்கள். மிலிட்டரி வரும்வரையில் போலீஸார் தங்களால் இயன்ற வரையில் தங்கள் பணியினைச் செய்தார்கள். மேலும் மேலும் நிலைமை மோசமாகிக்கொண்டிருந்தது. (திரு. கே. எ. மதியழகன் : குறுக்கீடு) கனம் உறுப்பினர் மகாலிங்கம் அவர்களைக் கேட்டால் சொல்லுவார்கள். மகாலிங்கம் அவர்கள் மந்திரி அல்ல. பொள்ளாச்சி சம்பவத்தைப் பற்றி அவர் சொல்லுவார் . . . (திரு கே. எ. மதியழகன் : whether the சரி..சரி., நல்ல வெதர் தான். அவர்களைக் கேட்டால் சொல்லுவார்கள். அதற்கு அப்புறம் மிலிட்டரி வந்தது. மிலிட்டரி வந்து எவ்வளவு நேரம் ஆயிற்று ?

நான்கு மணி நேரம் மிலிட்டரி எச்சரிக்கை செய்துகொண்டிருந்தது மிலிட்டரி பேரிலும் கல் போடப்பட்டது. மிலிட்டரிகூட பொருட்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. அதற்கு மேல்தான் மிலிட்டரி ரைஃபிளை உபயோகப்படுத்தி துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியிருந்தது என்று கூற விரும்புகிறேன்.

இறந்தவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்த வரையில், எங்களிடம் இருக்கிற விவரங்களை வைத்துக்கொண்டு சொல்லுகிறோம். புயல் காற்றில் இறந்தவர்கள் இவ்வளவு என்று அரசாங்கம் சொன்னபோது, ஆயிரக் கணக்கில் எண்ணிக்கை வந்தது. இப்போதும் வருகிறது. பாராளுமன்றத்திலும் வருகிறது. எங்களிடம் இருப்பதைக் கொடுக்கிறோம். இருப்பதை அப்படியே கொடுக்கிறோமே. தவிர வேறு ஒன்றும் இல்லை. இதற்கு மேல் தங்கள் காலத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு- கே. ஏ. மதியழகன் :** ஆன் ஏ பாயிண்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன், ஸார், திருப்பூர் பொள்ளாச்சி, குமாரபாளையம் போன்ற இடங்களில் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கக்கூடாது என்று நான் சொன்னேன். நடைபெறக் கூடாது என்று சமூக விரோதிகள் சொல்லவேண்டும், சட்ட மன்ற உறுப்பினர் சொல்லக்கூடாது என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இதில் ஒரு விளக்கத்தைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். . . .

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் விளக்கத்தைச் சொல்லலாம். இப்படியே நேரம் போகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** நான் குறிப்பிட்ட விவரங்கள், குமாரபாளையத்தைப் பொறுத்த வரையில் டி. எஸ். பி. அவர்கள் நல்ல முறையில் நடந்துகொள்ளத் தவறியதாலும், சிறு பிள்ளையை அடித்ததாலும் நடைபெற்றிருக்கிறது. அதைச் செய்யாமலிருந்திருந்தால் இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்காது, டாக்ட் இல்லை என்று சொன்னேன். திருப்பூரில் 3,000 பேர்கள் சூழ்ந்துகொண்டிருக்கும் போதுநான்கு பேர்களைப் பிடித்துக்கொண்டு போய், போலீஸ் ஸ்டேஷனில் அடித்ததால் தான் இரண்டு பேரைச் சுடும் அளவுக்குப் போயிற்று. இதை அவாய்ட்



13th March 1965] [திரு. கே. எ. மதியழகன்]

பண்ணியிருக்கலாம் என்று சொன்னேன். பொள்ளாச்சியில் யார் எதைச் சொன்னாலும், நேராகவந்து இறங்கிய உடனே நேராகச்சுட ஆரம்பித்திருக்கிறார்கள். எந்த வித எச்சரிக்கையும் கொடுக்கவில்லை. 50, 60 பேர்கள் புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. இதை எந்த இடத்திலும் நிரூபிக்கத் தயாராகஇருக்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் க்ளாரிஃபிகேஷன், எங்கள் கட்சித் துணைத்தலைவர் அவர்கள் கைது செய்யப்பட்டது பற்றி வெள்ளை அறிக்கை வைக்கவேண்டும் என்று பேசப்பட்டதைப் பற்றி, அவர் தனி ஆள், ஒரு கட்சி அல்ல என்று சொன்னார்கள். நான் சொல்லுகிறேன், கலைஞர் கருணாநிதி என்பவர் 50 அங்கத்தினர்கள் கொண்ட...

**கனம் சபாநாயகர் :** கேஸைப்பற்றித்தான் கேள்வியே தவிர துணைத் தலைவர் பற்றி அல்ல.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** கட்சி சார்பில் கேட்கிறேன், வெள்ளை அறிக்கை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தனி ஆள் என்று சொல்லவில்லை. நான் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போதே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்று சொன்னேன். வெள்ளை அறிக்கை பற்றிப் பிரஸ்தாபம் வந்ததிலே, பார்லிமெண்ட்டில் வெள்ளை அறிக்கை வைத்தார்களே, நீங்கள் என் வைக்கவில்லை என்று சொன்னார்கள். அதற்கு, குறிப்பிட்டவர்கள்பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டால் அப்போது வெள்ளை அறிக்கை கொடுக்கப்படுவதில்லை : அங்கு மொத்தமாக கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி வெள்ளை அறிக்கை வைத்திருக்கிறார்கள், பாதுகாப்புக் கைதிகளாக வைக்கப்பட்டிருப்பவர்களைப் பற்றி தனித் தனியாக அங்கு கூட வைக்கவில்லை என்று சொன்னேன். அதைத் தானே அவர்கள் மேற்கோளாகக் காட்டினார்கள். ஒரு கட்சியைப் பற்றித்தான் குறிப்பிடப் பட்டது என்று சொன்னேன்.

**திரு: கே. டி. கோசல்ராம்** எழுந்தார்—

**MR. SPEAKER :** There is no need for any point of order.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, போலீஸ் மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை யொட்டி ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன்னால் எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன்.

முதல் அமைச்சர் அவர்கள் ஊட்டியில் நடந்த துப்பாக்கி சூடு குறித்து ஒரு செஷன்ஸ் நீதிபதியை நியமித்திருக்கிறோம், அவர்கள் விசாரித்து நல்ல முடிவு தருவார்கள் என்று சொன்னார்கள். அதே போல தமிழகத்தில் பல இடங்களில் துப்பாக்கி சூடு நடந்திருக்கிறது. போலீஸார் அத்து மீறித் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருக்கிறார்களா, வரம்பு மீறித் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருக்கிறார்களா என்று ஆராய்ந்து அறிந்து, துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு யார் காரணம், கலவரங்களுக்கு யார் காரணம், கொள்ளை அடிக்க யார் காரணமாக இருந்தார்கள், கொலை செய்ய யார் காரணமாக இருந்தார்கள், போலீஸார் வரம்பு மீறினார்களா, அல்லது வேறு அரசியல் கட்சிக்காரர்கள் வரம்பு மீறிக் கலகத்திற்குக் காரணமாக இருந்தார்களா என்று ஆராய்ந்து அறிய, ஹைக்கோர்ட் நீதிபதி அந்தஸ்தில் உள்ள பலரைக் கொண்ட கமிஷனை நியமித்து, அந்தக் கமிஷன் தமிழகத்திலே துப்பாக்கிச் சூடு நடந்த இடங்களுக்கெல்லாம் விஜயம் செய்து ஆங்காங்கு உள்ளவர்களை நல்ல முறையில் விசாரித்து ஒரு அறிக்கை சமர்ப்பித்தால், நிச்சயமாக எதிர்க் கட்சித் தரப்பிலேயிருந்து நமது முதல் அமைச்சர் அவர்கள் மீது சுமத்தப்படுகிற குற்றச்சாட்டை அவர் மறுப்பதற்கு உண்மையான காரணங்கள் இருக்கின்றன, ஆகவே அத்

தகைய நீதி விசாரணைக் அமைக்க முன் வந்தார்கள் என்று ஏற்றுக் கொள்ள முடியும். நீதி விசாரணைக் குழு அமைக்க வேண்டுமென்று கேட்கிற நேரத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகள் அத்தனையும் தேவையானது என்று சொல்லப்படுகிற நேரத்தில், அமைச்சர் அவர்கள் அத்தகைய நீதி விசாரணைக் குழுவை அமைக்க ஏன் அஞ்சுகிறார்கள் அல்லது தயங்குகிறார்கள் என்று கேட்டுக்கொள்ள இந்த சந்தர்ப்பத்தில் ஆசைப்படுகிறேன், இந்த சர்க்கார், அவசியத்திற்கு உட்பட்டு, அத்து மீறாத முறையில், வரம்பு மீறாத முறையில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருக்கிறது என்று சொல்லுகிற வாதம் சரியான வாதமாக இருந்தால், இந்த சர்க்கார் தன் பேரில் இருக்கிற அல்லது அவர்கள் சொல்லுகிறார்களே, வேண்டுமென்றே புனைந்து சொல்லுகிறார்கள், கற்பனையாகச் சொல்லுகிறார்கள், சர்க்கார் மீது பழி சுமத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை வெகு எளிதில் போக்கிக் கொள்ள முடியும். ஆகவே, நடந்த துப்பாக்கிப் பிரயோகங்கள் அத்தனையும் வரம்பு மீறியதல்ல, அவசர அவசிய காரணத்திற்காக, மக்கள் உடைமை, உயிர் அத்தனையையும் பாதுகாக்க நடத்தப்பட்டது என்று அந்தக் குழு தீர்ப்பு அளித்தால் நிச்சயமாக இந்தச் சர்க்கார் மீது உள்ள பழி கூடப் போய்விடும். ஆகவே, நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம், துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்த அத்தனை இடங்களையும் பார்வையிட ஹைகோர்ட் நீதிபதி அந்தஸ்தில் உள்ள குழுவை நியமித்து விசாரணை செய்யவேண்டும் என்பதாகும். அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தக் கலகத்திற்குப் பல இடங்களில் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்ற பட்டியலை நேற்று முன் தினம் படித்தார்கள். அதே நேரத்தில் சேலம் ஆட்டையாம்பட்டியில் மாணவர்கள் அமைதியாக ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்தார்கள். காமராஜ் மன்றத்தைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள் மாணவர்களைத் தாக்கி, பின்னால் மாணவர்கள் காந்தியத்தைக் கடைபிடித்த காரணத்தினால் போலீஸ்காரர்களே காங்கிரஸ்காரர்கள் இருவர் மீது வழக்கு மன்றத்தில் வழக்கு போட்டிருக்கிறார்கள். ஆகவே, அதே போல மதுரையிலே கூட மாணவர்களுக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது என்று முதல் அமைச்சர் அவர்கள் அறிக்கை சமர்ப்பிக்கிற நேரத்தில் சொன்னார்கள். இத்தனை கைகலப்புகள் ஏற்பட யார் யார் காரணம், ஏன் அவர்கள் மீது வழக்குகள் தொடரப்படவில்லை என்று கேட்டுத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் முதல் அமைச்சரும் சர்க்காரும் எந்த அளவுக்கு எதிர்க்கட்சிக்காரர்கள் மீது வழக்கு போடுகிறார்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மாமன்றத்தின் முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் தர்மபுரி வட்டாரத்தில் தேர்தல் வேலைக்காக பிப்ரவரி 2-ம் தேதியிலிருந்து அங்கு இருந்தார். இங்கெல்லாம் கலவரம் எல்லாம் முடிந்து தேர்தலை ஒத்தி வைத்தது பிப்ரவரி 14-ம் தேதி. அவர்கள் 14-ம் தேதி வாக்கில் தென் ஆற்காடு சென்றார்கள். இருந்தாலும், அதற்குள் கலவரங்களெல்லாம் நடந்து முடிவடைந்து விட்டன. கலவரம் நடப்பதற்கு முன்னாலே தேர்தல் பிரசாரத்திற்காக வருகை தந்த அவர், தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதினால், தன்னுடைய ஊருக்குச் சென்ற அவரை 151-வது செக்ஷன்படி இந்த அரசாங்கம் கைது செய்திருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது ? தருமபுரி இடைத் தேர்தலில் யார் யார் தீவிரமாக வேலை செய்கிறார்களோ, அவர்களையெல்லாம் எப்படியும் சிறையில் அடைத்துவிட வேண்டும் என்று எண்ணுகிறது என்று தான் கருதவேண்டியிருக்கிறது.

* **திரு. சு. அங்கமுத்து நாயக்கர் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் போலீஸ் துறை மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

MR. SPEAKER : I think the House has no objection to sit till 2-30 p.m.





***திரு. சு. அங்கமுத்து நா**யகின்றது. ஆகவே, அங்கு ஒரு போலீஸ்யும் நல்ல விதமாக இருக்கிறதிமன்று கேட்டுக்கொண்டு என்னுடைய வாகத் திறமையைத் தான் காட்டுகிற
தில் பேசியிருக்கிறோம். போலீஸினுடை சபாநாயகர் அவர்களே, கடந்த குறை கூறுவதற்கில்லை. எதிர்க்கட்சி ந ன கலவரங்களைப் பற்றிகடந்த வாகத்தைப் பற்றி குறை கூறவில்லை. ஆ த்தைக் கிளப்பிவிட்டால், நிகழ்ச்சிகளைப் பார்க்கும்பொழுது, முதல் அமை தோ, அவரைக் கொல் தலின் பேரில்தான் போலீஸ்காரர்கள் அத்துமீ திரும்பி வந்து யாரைக் டது, அந்தச் செயல் பாதகமானது என்ற ஒரு மு போல, இந்தி சொல்லுகிறார்கள். போலீஸ்காரர்கள் அப்படி திறமை அரக்கி "வாழப் ளாவிட்டால், நாட்டில் ஜனங்கள் நடந்து போக முடியாது, கிளப்பிவிட்ட பட்டுவிடும்என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். சேலம் கேட்கும் பொறுத்தவரையில் நண்பர்கள் சிலர் நீதி விசாரணை வேண் கிறோம். சொன்னார்கள். திருச்செங்கோடு, குமரப்பாளையம், நாமக்கல் ண்டு பகுதிகளில் "ஷூடிங்" நடந்தது. ஆனால், எஸ்.பி. அவர்களும் மாவட்ட கலெக்டர் அவர்களும் பெரும் கூட்டத்தை கும்பலைப்பார்த்து பிட்டுக் கேட்டுக்கொண்டார்கள். பல மணி நேரம் அவகாசம் கொடுத்து கும்பிட்டுக் கேட்டுக்கொண்டார்கள். பிறகும் கூட கும்பலை அடக்க முடியாத நிலைமையில் தான் ஷூடிங் செய்யும்படி ஆர்டர் கொடுத்தார்கள். ஒரு தரத்திற்கு நான்கு தரம் கும்பிட்டுக் கேட்டுக்கொண்டும், நீண்ட அவகாசம் கொடுத்த பிறகுதான் நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே ஷூடிங் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதே போலத்தான் நாமக்கல் போலீஸ் ஸ்டேஷனை எடுத்துக்கொண்டால் அங்கே 8, 10 பேர்கள்தான் இருக்கிறார்கள். பக்கத்தில் தபால் ஆபீஸை நொறுக்கித் தள்ளிவிட்டு, அடுத்து போலீஸ் ஸ்டேஷனை தாக்குவதற்கு வந்தார்கள். அங்கே 7, 8 போலீஸ்காரர்கள் தான் இருக்கிறார்கள். வெளியிலே 1,000 பேர்களுக்கு மேல் கூடியிருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை எதிர்க்கட்சி நண்பர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். அவர்களுடைய உயிர் போனாலும் போகட்டும், அவர்கள் எப்படிப் போனாலும் போகட்டும் என்று சொல்லுகிறமாதிரி இருக்கிறது. வாஸ்தவமாகச் சொல்லுகிறேன், அந்த நிலைமையிலே வேறு யாராக இருந்தாலும், அவர்கள் தற்காப்புக்கு இந்த மாதிரி காரியங்களைச் செய்ய வேண்டித்தான் வரும். அந்த நிலையில் அவர்கள் ஷூடிங் நடத்தக் கூடாது என்று சொல்லுவதற்கு இல்லை. அவர்களுக்கு இன்னும் தேவையான அதிகாரத்தைக் கொடுத்தால் தான், இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்ய முடியும், நல்லவர்கள் வெளியிலே நடந்து போக முடியும், அவர்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் நல்ல பாதுகாப்பு தரமுடியும். அந்த வகையில் என்னுடைய தாலுகாவில் ஆத்தூரில் சில வன்முறைச் செயல்கள் நடந்திருக்கின்றன. கார் போக முடியாது, ரயில் போக முடியாது. பலர் கட்சிக் கொடிகளை அவிழ்த்து விட்டு இறக்கி தீயிட்டுக் கொளுத்தினார்கள். அப்பொழுது கூட காங்கிரஸ்காரர்களும், மற்ற பொது மக்களும் எப்படியாவது இருக்கட்டும், இன்றைக்கு சமாதானமாக போகட்டும் என்று அமைதியாக இருந்ததினால் தான், நிலைமையை ஓரளவுக்கு சமாளிக்க முடிந்தது. அதைப்போல பல இடங்களிலும் காங்கிரஸ்காரர்கள் சமாளிக்க முடிந்தது என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த வகையில் பார்க்கும்பொழுது போலீஸுக்கு இன்னும் அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும். மாணவர்கள் இன்னும் நல்ல முறையில் கட்டுப்பாட்டுடனும், ஒழுங்குடனும் நடந்துகொண்டு அவர்களுடைய முன்னேற்றத்தில் கவனம் செலுத்தவேண்டும் என்று நாம் நினைக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். போலீஸ்காரர்களுக்கு இன்னும் அதிகாரத்தைக் கொடுத்து, மாணவர்களுக்கு கண்டிப்பான நல்ல புத்திமதிகளைக் கூற அரசாங்கம் முயலவேண்டும். அதற்காக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ்காரர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று பலரும் கேட்டார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசாங்கம் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

[திரு எம். வி. கரிவேங்கடம்] [13th March 1965

தகைய நீதி விசாரணைக் அமைக்க முன் வந்தார்கள் என்று ஏற்றுக் கொள்ள முடியும். நீதி விசாரணைக் குழு அமைக்க வேண்டுமென்று கேட்கிற நேரத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகள் அத்தனையும் தேவையானது என்று சொல்லப்படுகிற நேரத்தில், அமைச்சர் அவர்கள் அத்தகைய நீதி விசாரணைக் குழுவை அமைக்க ஏன் அஞ்சுகிறார்கள் அல்லது தயங்குகிறார்கள் என்று கேட்டுக்கொள்ள இந்த சந்தர்ப்பத்தில் ஆசைப்படுகிறேன், இந்த சர்க்கார், அவசியத்திற்கு உட்பட்டு, அத்து மீறாத முறையில், வரம்பு மீறாத முறையில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருக்கிறது என்று சொல்லுகிற வாதம் சரியான வாதமாக இருந்தால், இந்த சர்க்கார் தன் பேரில் இருக்கிற அல்லது அவர்கள் சொல்லுகிறார்களே, வேண்டுமென்றே புனைந்து சொல்லுகிறார்கள், கற்பனையாகச் சொல்லுகிறார்கள், சர்க்கார் மீது பழி சுமத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை வெகு எளிதில் போக்கிக் கொள்ள முடியும். ஆகவே, நடந்த துப்பாக்கிப் பிரயோகங்கள் அத்தனையும் வரம்பு மீறியதல்ல, அவசர அவசிய காரணத்திற்காக, மக்கள் உடைமை, உயிர் அத்தனையையும் பாதுகாக்க நடத்தப்பட்டது என்று அந்தக் குழு தீர்ப்பு அளித்தால் நிச்சயமாக இந்தச் சர்க்கார் மீது உள்ள பழி கூடப் போய்விடும். ஆகவே, நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம், துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்த அத்தனை இடங்களையும் பார்வையிட ஹைக்கோர்ட் நீதிபதி அந்தஸ்தில் உள்ள குழுவை நியமித்து விசாரணை செய்யவேண்டும் என்பதாகும். அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தக் கலகத்திற்குப் பல இடங்களில் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்ற பட்டியலை நேற்று முன் தினம் படித்தார்கள். அதே நேரத்தில் சேலம் ஆட்டையாம்பட்டியில் மாணவர்கள் அமைதியாக ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்தார்கள். காமராஜ் மன்றத்தைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள் மாணவர்களைத் தாக்கி, பின்னால் மாணவர்கள் காந்தியத்தைக் கடைபிடித்த காரணத்தினால் போலீஸ்காரர்களே காங்கிரஸ்காரர்கள் இருவர் மீது வழக்கு மன்றத்தில் வழக்கு போட்டிருக்கிறார்கள். ஆகவே, அதே போல மதுரையிலே கூட மாணவர்களுக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது என்று முதல் அமைச்சர் அவர்கள் அறிக்கை சமர்ப்பிக்கிற நேரத்தில் சொன்னார்கள். இத்தனை கைகலப்புகள் ஏற்பட யார் யார் காரணம், ஏன் அவர்கள் மீது வழக்குகள் தொடரப்படவில்லை என்று கேட்டுத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் முதல் அமைச்சரும் சர்க்காரும் எந்த அளவுக்கு எதிர்க்கட்சிக்காரர்கள் மீது வழக்கு போடுகிறார்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மாமன்றத்தின் முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் தர்மபுரி வட்டாரத்தில் தேர்தல் வேலைக்காக பிப்ரவரி 2-ம் தேதியிலிருந்து அங்கு இருந்தார். இங்கெல்லாம் கலவரம் எல்லாம் முடிந்து தேர்தலை ஒத்தி வைத்தது பிப்ரவரி 14-ம் தேதி. அவர்கள் 14-ம் தேதி வாக்கில் தென் ஆற்காடு சென்றார்கள். இருந்தாலும், அதற்குள் கலவரங்களெல்லாம் நடந்து முடிவடைந்து விட்டன. கலவரம் நடப்பதற்கு முன்னாலே தேர்தல் பிரசாரத்திற்காக வருகை தந்த அவர், தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதினால், தன்னுடைய ஊருக்குச் சென்ற அவரை 151-வது செக்ஷன்படி இந்த அரசாங்கம் கைது செய்திருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது ? தருமபுரி இடைத் தேர்தலில் யார் யார் தீவிரமாக வேலை செய்கிறார்களோ, அவர்களையெல்லாம் எப்படியும் சிறையில் அடைத்துவிட வேண்டும் என்று எண்ணுகிறது என்றுதான் கருதவேண்டியிருக்கிறது.

* **திரு. சு. அங்கமுத்து நாயக்கர் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் போலீஸ் துறை மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

MR. SPEAKER : I think the House has no objection to sit till 2-30 p.m.



13th March 1965] [திரு. சி. கோதண்டராம பாகவதர்]

அங்கே பஸ்களில் திருட்டுப் போகின்றது. ஆகவே, அங்கு ஒரு போலீஸ் ஸ்டேஷனை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. எஸ். ராமசாமி நாயுடு.** கனம் சபாநாயகர் அவர்களே, கடந்த 10 நாட்களாக திரும்பத் திரும்ப நடந்துபோன கலவரங்களைப் பற்றிகடந்த கொண்டிருக்கிறோம். புராண காலத்தில் பூதத்தைக் கிளப்பிவிட்டால், யாரைக் கொல்ல வேண்டும் என்று கிளப்பப்பட்டதோ, அவரைக் கொல்வதற்கு சாத்தியமில்லையானால், கிளப்பிவிட்டவரிடமே திரும்பி வந்து யாரைக் கொல்வது, யாரைக் கொல்வது என்று கேட்பதைப் போல, இந்தி அரக்கியை கொல்லுவதற்கு கிளப்பிவிடப்பட்ட பூதம், அந்த அரக்கி "வாழப் பிறந்த பெண்" என்று கண்டுகொண்டு, திரும்பி வந்து, கிளப்பிவிட்டவரையே "யாரைக் கொல்வது" "யாரைக் கொல்வது" என்று கேட்கும் பொழுது, "ஐயோ, ஐயோ" என்று சத்தம் போடுவதைக் கேட்கிறோம். இவர்கள் கிளப்பிவிட்ட பூதம் கிளப்பிவிட்டவர்களையே கொன்று கொண்டு இருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

கிராமத்தான் என்ற முறையில் நான் போலீசாரைப் பற்றிப் பேச விரும்புகிறேன். கிராமப் பகுதிகளில், அதுவும் முக்கியமாக எங்கள் பகுதியில் மக்களுக்கு ஜாஸ்தி பந்தோபஸ்து இல்லாமல் இருந்தது. ஆடுமாடுகள் களவு, தானியக் களவு, வீடுநுழைந்து களவு, வழிப்பறி முதலியன அதிகமாக இருந்தன. இப்பொழுது அந்த நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. இப்பொழுது சில்லரைச் சச்சரவுகள் மட்டுமே, ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அது சட்டத்தின் குறைபாடு. போலீசார் மீது குறையில்லை. ஆகவே, சட்டம் சரியாகச் செய்யப்பட்டு, சின்னக் குற்றமாக இருந்தாலும் அது "காக்னைசபிள்" என்று வைத்து விட்டால் சரியாகிவிடும். அப்படிச் செய்தால்தான் போலீசாருக்கு நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும்.

போலீசாருக்கு சலுகைகள் கொடுக்க வேண்டும் என்பதில் நானும் அக்கறை கொண்டவன. ஆகவே, வசதிகள் செய்து கொடுப்பதைப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். எல்லா இடங்களிலும் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். கிராமங்களில் கூட போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கிறபடியால், அவர்களுக்கு அங்கே அவசியம் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். இன்னொன்று இருக்கும் போலீஸ் ஸ்டேஷன்களில் எல்லாம் போன் வசதி செய்து கொடுக்க வேண்டும். அது மட்டுமல்ல, போலீஸ் ஸ்டேஷன் இருக்கும் ஊர்களுக்கெல்லாம், பஸ் போக்கு வரத்து ஏற்படுத்த வேண்டும். கிராமப் புறங்களில் ஆட்களை நியமிக்கும் போது, போலீஸ் ஸ்டேஷனில் பெரிய கிராமங்களுக்கு இத்தனை போலீஸ்காரர் என்று நியமிக்க வேண்டும். குற்றங்களைத் தடுப்பதுதான் பெரிய காரியம். குற்றம் ஏற்பட்ட பிறகு அதற்குப் பரிகாரம் தேடுவது அவ்வளவு நல்லதல்ல. இருக்கும் போலீஸ் ஸ்டேஷனில் ஓரிருவர் மட்டும் வைத்துவிட்டு சுற்றுப்புறக் கிராமங்களுக்கு கிராமத்திற்கு இவ்வளவு பேர்கள் என்று நிர்ணயித்து விடவேண்டும். அல்லது ஒவ்வொரு போலீஸ்காரர்களுக்கும் இத்தனை கிராமம் என்று ஏற்பாடு செய்துவிடவேண்டும். அப்படி இருந்தால் கிராமத்தில் எந்நேரமும் புகார்களை உடனடியாக அவர்கள் கவனிக்க முடியும். மக்களுக்கும் போலீசார் வருவார் என்ற தைரியம் இருக்குமாதலால், அது நல்ல நிலைமையை உண்டு பண்ணும். அப்படி கிராமங்களுக்குப் போலீசார் போய்வரும் திட்டத்தைக் கடைபிடிக்க வேண்டும். சிறிய குற்றம் செய்தாலும் நன்றாகத் தண்டிக்க சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் உள் துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தின் ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக்கிற காவல் துறை மானியத்தின் மீது எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஒட்டிச் சில கருத்துக்களை வழங்க முற்படுகிறேன். காவல் துறையைப் பற்றி மன்ற உறுப்பினர்கள், இந்த மான்யக் கோரிக்கையின் மீது மட்டுமல்லாமல், இதற்கு முன்னால் நடைபெற்ற மான்யக் கோரிக்கையின்போதும் பலபட பேசியிருக்கிறார்கள்.

13th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அண்மையில் நடந்த இந்திக் கிளர்ச்சியை ஒட்டி, நாட்டிலே நடைபெற்ற கலவரங்களையும், நாட்டிலே நடைபெற்ற வன்முறைச் செயல்களையும் நாம் உண்மையாகக் கண்டிக்கிறோம் என்றாலும், அந்தச் செய்கைகள் தமிழ் நாட்டுக்கு எப்படிப்பட்ட களங்கத்தை ஏற்படுத்தி விட்டது என்பதை எண்ணி அத்தனைபேரும் வருத்தப் படுகிறோமோ, அதே போன்று போலீஸார் கையாண்ட அத்துமீறிய துப்பாக்கிச் சூடுகளும், அத்து மீறிய அடக்குமுறைகளும் அந்தத் துறையினருக்கும், இந்த மாநில அரசுக்கும் இந்த ஆண்டு களங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

சென்ற இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னால், போலீஸ் துறையின் நிர்வாகத்தைப் பற்றிய அறிக்கை ஒன்று வைக்கப்பட்டது. அதில் "இந்த ஆண்டு துப்பாக்கிச் சூடு நடைபெறவில்லை" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. துப்பாக்கிச் சூடு எதுவும் நடைபெறாத சூழ்நிலையைப் போலீஸ் துறையினர் பூரிப்போடும் பெருமையோடும் பெருமிதத்தோடும் வரவேற்றனர், அந்தச் சூழ்நிலையை எண்ணி மகிழ்ந்தனர். சூழ்நிலை மாறி, பல துப்பாக்கிச் சூடுகள் ஏற்பட்டு, அடக்கு முறை கையாளப் பட்டு, வருந்த வேண்டிய நிலையில் இப்போது போலீஸ் துறை வைக்கப்பட்டிருக்கிறது. மிக்க வேதனை கொண்ட உள்ளத்தோடு இன்று போலீஸ் மானியக் கோரிக்கைமீது விவாதிக்கும் நிலையில் நாம் இருக்கிறோம்.

காவல் துறையைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக கழகம் என்ன கருதி வருகிறது என்பதை இந்த மன்றத்தில் நடைபெற்ற விவாதங்களின் போதெல்லாம் கழகத்தைச் சார்ந்தவர்கள் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த ஜனநாயக ஆட்சி செம்மையாக நடைபெற போலீஸ் துறையின் பணி இன்றியமையாத தேவை என்பதை இந்த மன்றத்திலே மிக மிக வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். ஒரு ஆட்சி வெறும் காட்டாட்சி என்றால், அடி ஆட்களை வைத்துக்கொண்டு முடித்து விடலாம். அல்லது சர்வாதிகார ஆட்சி என்றால், ராணுவத்தை நம்பி அடக்குமுறை மூலம் அந்த ஆட்சியை நிறைவேற்றிவிட முடியும். இந்த மன்றத்திலே இருக்கிற ஆளும் கட்சியானாலும் சரி, எதிர்க் கட்சியானாலும் சரி, ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து அந்த ஜனநாயக அடிப்படையில் கருத்துக்களுக்கு மக்களுடைய ஆதரவு வருவதன் மூலம் பணியாற்றி, அந்த ஆதரவுகள் ஏற்படுத்தும் வலுவின் அடிப்படையில் ஆட்சி அமைக்கப் பட்டு நிர்வாகம் நடைபெற வேண்டும் என்று நம்பி இருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் ஜனநாயகம் செம்மையாக நடைபெறவேண்டும். என்பதில் அழுத்தத்திருத்தமான நம்பிக்கையை வைத்திருக்கிறது. அப்படிச் செம்மையாக நடைபெறவேண்டுமென்றால், போலீஸ் துறையினுடைய பணி இன்றியமையாது தேவைப்படுகிறது என்பதைக் கழகம் நன்கு உணர்ந்திருக் கிறது. இதற்கு முன்னால், இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், போலீஸ் மான்யக் கோரிக்கை மீது பேசும்போது, போலீஸ் துறை ஆற்றிய பணிகளை மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் பாராட்டி வரவேற்றனர். 1962-ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பிறகு, இந்த மன்றம் புதிதாக அமைக்கப்பட்டபோது, மன்றத்திலே விவாதம் வந்தபோது, இருதரப் பினையும் சார்ந்த மன்ற உறுப்பினர்கள் போலீஸ் மான்யத்தின் மீது தெரிவித்திருக்கும் கருத்துக்களை ஒட்டித் தங்களுடைய அறிக்கையில் "இந்த ஆண்டு அத்தனை அரசியல் கட்சிக்காரர்களும் போலீஸ் துறையின் நடவடிக்கைகளைப் பாராட்டி இருப்பது, மிக முக்கியமாகக் குறிப்பிடவேண் டியது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால், போலீசில் இருப்பவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தினருக்கும் எந்தப் பகைமையும் இல்லை. போலீஸ் துறையினர் தங்கள் பணிகளை ஆற்றக் கூடாது என்ற எண்ணம் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் சொல்வதெல்லாம் போலீஸ் துறையினர் உண்மையோடு நடந்து கொள்ள வேண்டும், நடுநிலையில் இருந்து குற்றம் செய்பவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரிதான், யாராக இருந்தாலும் சரிதான், முறைப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், ஆளும் கட்சியின் சார்பாக சாய்தல் கூடாது ; நடு



13th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

நிலைமையில் நின்று தங்களுடைய பணிகளை ஆற்றுதல் வேண்டும் ; அமைதியைக் காக்க வேண்டும் ; அந்த வகையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், என்பதுதான்.

அண்மையில் நடைபெற்ற கலவரங்கள், வன்முறைச் செயல்கள் ஆகியவை ஏற்படுவதற்கு யார் காரணமாக இருந்தாலும், நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்திலே, சில நாட்களுக்கு முன்பாக நானே குறிப்பிட்டேன். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தவர் களாக இருந்தாலும் சரி, காங்கிரசுக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அவர்கள் வன்முறை செயல்களுக்குக் காரண மாக இருந்தால், தனி நபர்களுடைய வீடுகளைத் தாக்கினார்கள் என்றால், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தினார்கள் என்றால், மன்றத் தின் உறுப்பினர் கனம் அம்மையார் ராஜாத்தி குஞ்சிதபாதத்தின் வீட்டைத் தாக்கினவர்களாக இருந்தாலும் சரி, கனம் அங்கத்தினர் எஸ். எஸ். ராஜேந்திரன் வீட்டைத் தாக்கினவர்களாக இருந்தாலும் சரி, அந்த வன்முறைச் செயல்களில் ஈடுபட்டவர்களை, சட்டத்திற்குப் புறம்பாகச் சென்று இழிவான வன்முறைச்செயல்களைச் செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும், முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும், எடுங்கள் என்று தான் சொல்லுகிறோம் ; இந்த மன்றத்திலே தொடர்ந்து நாங்கள் வாதாடியும் வருகிறோம்.

போலீசார் தங்கள் கடமைகளை முறைப்படி ஆற்றவேண்டும் என்பதைத் தான், நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். சாதாரணப் பணியாளர்கள் போல் அல்லாமல், சேவகர் போல் அல்லாமல், இட்ட பணியை ஏற்றுச் செய்கிறவர்களாக இல்லாமல், மக்களுடைய மனப்பான்மையை அறிந்து பண்பைத் தெரிந்து செயலாற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள் காவல் துறையினர். இராணுவத்தினர் போல் அல்லாமல், சேவகர்களுக்கும் ராணு வத்தினருக்கும் இடையிலே இருந்து ஜனநாயகத்தைக் காப்பாற்றும் படை யாக, அமைதி காக்கும் படையாக, நீதியை நிலைநாட்டும்படையாகத் தங்கள் பணிகளை அவர்கள் ஒழுங்குறச் செய்துகொள்ள வேண்டும் என்று தான் வற்புறுத்தி வருகிறோம். எதிர்க் கட்சி உறுப்பினர்களாகிய நாங்கள் நாட்டிலே நடைபெற்ற குறைகளையும், குற்றங்களையும், போலீசார் எடுக்கத் தவறிய நடவடிக்கைகளையும், நிரபராதிகள் பலர் அவதிகளுக்கும் அடக்கு முறைகளுக்கும் ஆளான நிலைமைகளையும் இந்த மன்றத்தின் முன் வைக்கக் காரணம் என்னவென்றால், இந்த மன்றம் அதைக் கவனிக்கும், ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் அமைச்சரவை அதைப் பற்றிச் சிந்தனை செலுத் தும் என்பதற்காகவேயாகும். அந்தக் குறைபாடுகளை எடுத்துச் சொல் வதற்கு வேறு இடத்தில் சரியான வாய்ப்புக் கிடைக்கவில்லை. வழக்கு மன்றங்களிலே போலீஸ் துறையினருடைய அடக்கு முறைகளைச் சுட்டிக் காட்டி நீதி பெறுவது என்பது அவ்வளவு எளிதான செயலாக அமைய வில்லை, இந்த மன்றத்திலே குற்றங்களையும், குறைகளையும் எடுத்துச் சொன்னால், கனம் அமைச்சர்கள் அவற்றை ஆராய்ந்து பார்த்து, நடுநிலை யில் நின்று, நீதியை நிலைநாட்ட முற்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இது காரணம் பற்றித் தான் இந்த மன்றத்திலே குற்றங்களும், குறை களும் எடுத்து வைக்கப்படுகின்றன. அநீதிகளுக்கு எதிராகத் தக்க நட வடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த மன்றத்திலே எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் வேண்டுகோள்கள் வடிவில் பல கருத்துக் களையும், முடிவுகளையும் சொல்லியுள்ளார்கள்.

அண்மையில் நடை பெற்ற கிளர்ச்சிகளிலே ஏற்பட்ட சேதங்களைப் 1–30
பற்றியும், வன்முறைச் செயல்களைப் பற்றியும், உயிர்பலிகள் பற்றியும் எங்கள் p.m.
கட்சியைச் சார்ந்தவர்கள் மிக உருக்கமாகச் சுட்டிக்காட்டினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், நாங்கள் தெளிவுபட எல்லாவற்றையும் கூறியுள்ளோம். இன்றும் நான் சொல்கிறேன், போலீஸ் துறையினருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கும் எந்த வகையிலும் தனிப்பட்ட முறையில் தகராறு இல்லை. எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் சொல்லியதைப் போல, போலீஸார் வெள்ளைக்கார ஆட்சி இருந்தபோது,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [13th March 1965

வெள்ளையாட்சினர் இட்ட பணியை ஏற்று நடத்தியவர்கள்; ஏற்று நடத்தக் கடமைப்பட்டவர்களாவார்கள். ஆட்சி மாறும்; ஆனால் அரசுமாறாது; போலீஸ் துறை மாறாது. தங்களுடைய பொறுப்பை உணர்ந்து நடக்கக் கடமைப்பட்டவர்கள் தான் போலீஸ்காரர்கள்.

" Men may come and men may go, but I go on for ever ".

என்று டென்னிசன் என்ற ஆங்கிலப் புலவன் பாடினான். " மக்கள் வருவார்கள், மக்கள் போவார்கள், நான் என்றும் இருந்துகொண்டு இருப்பேன் என்று சிற்றாறு சிந்து பாடுவது போலப் பாடினான்.

" Ministry may come and ministry may go, but I go on for ever.".

" அமைச்சரவை வரும், அமைச்சரவை போகும்; ஆனால் நாங்கள் என்றென்றும் இருந்து நடு நிலையோடு பாடுபடக் கடமைப்பட்டவர்கள் " என்ற உணர்வின் அடிப்படையில் தான் காவல் துறையினர் பணியாற்ற வேண்டும். அதற்கான சூழ்நிலையை அரசினர் ஏற்படுத்தித் தருதல் வேண்டும். இந்த வேண்டுகோள்களைத்தான் நாங்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்தி வருகிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாங்கள் உண்மை நிலையைக் கூறிவிட்டோம். எங்களுடைய உள்ளத்தின் தூய்மையான தன்மையையும், நாங்கள் எடுத்திருக்கும் நடவடிக்கைகளையும் நாங்கள் தெளிவுபட எடுத்துச் சொல்லியும் மீண்டும் மீண்டும் ஆளும் கட்சியினர், கனம் முதல் அமைச்சர் அவர்கள் உட்பட, குற்றச்சாட்டுகளை முன்னேற்றக் கழகத்தின் மீது சாட்டிக்கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய கருத்துக்களுக்கு அமைச்சரவையிடத்திலிருந்தோ, முதலமைச்சரிடத்திலிருந்தோ நீதி கிடைக்கவில்லை என்றாலும், அதையெல்லாம் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிற மக்கள் மன்றம், இங்கே பேசப்படுகிற கருத்துக்களையும், இங்கே எடுத்துவைக்கப்படுகிற வாதங்களையும் சிந்தித்து நல்ல தீர்ப்பளிக்கும் என்ற உறுதிப்பாடு எங்களுக்கு உண்டு. இங்கிருக்கும் முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும், காங்கிரஸ் நண்பர்களிலே சிலரும் எங்களுடைய வாதங்களை ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் கூட, அவற்றை ஆராய்ந்து பார்க்கும் பொதுமக்கள் மன்றம், இங்கே எடுத்துச்சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்களைச் சிந்தித்துப் பார்க்கும் மக்கள் மன்றம் நல்ல தீர்ப்பு அளிக்கும் என்று தான் நாங்கள் கருதுகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், அது ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டுள்ள அரசியல் கட்சியாகும். எந்தக் கிளர்ச்சியைத் திராவிட முன்னேற்றக் கழகம் துவங்குவதாயிருந்தாலும், அதை வெளிப்படையாகச் சொல்லிவிட்டுத்தான் ஈடுபடுகிறது. இன்ன நேரத்தில், இன்ன இடத்தில், இன்னார், இப்படிக் கிளர்ச்சிகள் நடத்துவார்கள் என்று நாங்கள் வெளிப்படையாகச் சொல்லிவிட்டுத்தான் நடத்துகிறோம். அப்படி நடத்தப்படும் கிளர்ச்சிகளும் கூட, எங்களையே நாங்கள் வருத்திக் கொள்ளக்கூடிய முறையில் தான் ஈடுபடுகிறோம். அபபடிப்பட்ட கிளர்ச்சிகளிலே பொது மக்களை ஒரு போதும் ஈடுபடுத்துவதில்லை. இந்த விளக்கங்களையும் இந்த மன்றத்தில் நாங்கள் பல தடவைகள் எடுத்துக் கூறி வந்திருக்கிறோம். வன்முறைச் செயல்கள் நிகழ்ந்த போதெல்லாம் அவற்றை நாங்கள் கண்டித்து வந்திருக்கிறோம். அவற்றுக்குச் சிறிது கூட இடம் கொடுக்கக்கூடாது என்றும் நாங்கள் வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

நடை பெற்று முடிந்த கிளர்ச்சி எங்கே ஆரம்பித்தது, எப்படி ஆரம்பித்தது, என்பதை நாம் நன்றாக அறிந்து கொண்டிருக்கிறோம். சாதாரணமாக, போலீஸார் நடந்து கொள்ளுகிறமுறையும், ஆங்காங்கு ஏற்படுகிற சூழ்நிலைகளும் சிலபல கலவரங்களை ஏற்படுத்திவிட காரணங்களாக அமைந்து விடுகின்றன என்று பல போராட்டங்களிலிருந்து அறிந்து கொண்டிருக்கிறோம். நான் முன்பே எடுத்துச் சொன்னேன், கிளர்ச்சிகள், போராட்டங்கள் துவங்கும்போது அடுத்தடுத்து என்னென்ன நடைபெறும் என்று தெரிவதில்லை. காந்தியார் துவங்கிய போராட்டங்களிலே கூட, வன்முறைச் செயல்கள் நிகழக்கூடும் என்று மாபெரும் தலைவர்களும் எண்ணிய



13th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இல்லை. ஆனால், சூழ்நிலைகள் வன்முறைச் செயல்களுக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விடுகின்றன என்பதைப் பல்லாண்டுகளாகப் பல வாய்ப்புக்களிலே பார்த்திருக்கிறோம்.

கிளர்ச்சிகள், வன்முறைச் செயல்களுக்குப் போய் முடிவது என்பது புதிதாக இந்த மாநிலத்தில் மட்டும் இப்பொழுது நடைபெறுகிற ஒன்றாக அமையவில்லை. இந்திய துணைக் கண்டத்தின் எல்லா மாநிலங்களிலும் அந்த வன்முறைச் செயல்களுக்கான சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. மாணவர் கிளர்ச்சி ஒரிஸ்ஸாவில் எப்படிப்பட்ட வன்முறைச் செயல்களைக் கிளப்பி, எந்த அளவுக்குப் போய் நின்றது என்பதைப் பார்த்தோம். ஒரு பஸ் கண்டக்டருக்கும் பிரயாணிக்கும் ஏற்பட்ட சச்சரவு மேற்கு வங்காளத்தில் எப்படிப்பட்ட வன்முறைச் செயல்களில் கொண்டு போய் விட்டது என்பதையும் அறிந்தோம். மாணவர்கிளர்ச்சி மந்திரி சபையை ஆட்டிப்படைக்கின்ற அளவிற்கும், சட்ட மன்றத்திலே புகுந்து ஆட்சி செலுத்துகிற அளவிற்கும் சென்ற காட்சியைச் சில இடங்களில் பார்த்தோம். ஆக, இப்படி மற்ற மாநிலங்களிலும் கூட வன்முறைச் செயல்கள் ஏற்பட்டுவிடும் தன்மையைப் பார்க்கிறோம்.

" மாணவர் கிளர்ச்சி கூட திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டிவிட்டதன் பேரில்தான் நடந்தது " என்ற குற்றச் சாட்டை காங்கிரசு உறுப்பினர்களில் சிலர் எடுத்துச் சொன்னார்கள். தமிழகத்திலே மட்டுமல்ல; கேரளத்திலும், ஆந்திரத்திலும், கருநாடகத்திலும், வங்காளத்திலும், அஸ்ஸாமிலும் கூட மொழிக் கிளர்ச்சி நடை பெற்றது; வன் முறைச் செயல்களில் முடிந்தது. உணர்ச்சியை மதித்தல் வேண்டும். இருக்கும் உணர்ச்சிக்கு மதிப்புக்கொடுக்கத் தவறியதன் காரணமாகக் குழப்பங்கள் நடைபெறும் சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. உணர்ச்சிக்கு மதிப்பு அளிக்காவிட்டால் சாதாரணமாகக் கூடுகிற குழு, சில பல நடவடிக்கைகளின் காரணமாகக் கூட்டமாக மாறி சாதாரணக் கூட்டம் குழப்பக் கூட்டமாக மாறி, அதுவே கலகக் கூட்டமாக மாறிவிடுகிற தன்மைக்கும் போய்விடுகிறது. அண்மையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி சம்பந்தமாக ஏற்பட்ட சேதங்களைக் குறித்து நாம் அத்தனை பேரும் கலங்குகிறோம். பொதுச் சொத்துக் களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களைக் குறித்து வருந்துகிறோம். போலீஸ் அதிகாரிகளும், ஊழியர்களும் படுகொலைக்கு ஆளானதைக் கேட்டு மனங் கலங்குகிறோம். உயிர்ச் சேதங்கள் கவலையைத் தருகின்றன அந்தப்படியான நஷ்டங்கள் ஏற்படாமலிருக்க ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள அத்தனை பேரும் சேர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் முன்னரே எடுத்துச் சொன்னேன். அந்த முறையிலே தான், வேண்டுகோளும் விட்டேன். அரசியல் தலைவர்களையும், பல்கலைக் கழகத் துணை வேந்தர்களையும், கல்லூரிமுதல்வர்களையும், மாணவர் தலைவர் என்று கருதப்படுகிறவர்களையும் கூப்பிட்டு அவர்களை வைத்து ஒருமித்த முடிவுக்கு வந்து, அந்த முடிவுக்கு மாணவர்களையும் கட்டுப்படுத்தி, அரசியல் கட்சியினரையும் கட்டுப்படுத்தி, அந்த முடிவை வற்புறுத்துகிற நிலைமை ஏற்பட்டால் தான், நாட்டில் அமைதி ஏற்படும் என்பதைப் பணிவோடு முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தேன். அப்படித் தெரிவித்தும், முதல் அமைச்சர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் மீது கொண்டிருக்கிற அருவருப்பின் காரணமாக, எந்த வேண்டுகோள் விடுத்தாலும் கூட " நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை " என்ற தன்மையைத்தான் நிலை நாட்டி வருகிறார்கள்.

நாட்டில் அமைதியை நிலை நாட்டும் முயற்சியில், திராவிட முன்னேற்றக் கழகத்தார் எந்த வகையிலும் ஒத்துழைப்புத் தருவதற்குத் தயாராயிருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லியும் கூட, தூண்டி விட்டவர்களே மீட்பதற்கு இயலாமல் தவிக்கிறார்கள என்று சொல்லி, எங்களுடைய உள்ளத் தூய்மையை உணரமறுக்கிறார்கள். உள்ளத் தூய்மையை எடுத்துச் சொல்லியும் மறுப்பதன் காரணமாக, உள்ளபடியே எதிர்காலத்தில் ஏற்பட வேண்டிய சுமுக சூழ்நிலைகள் ஏற்படுவதற்கு இல்லாமல், ஐயப்பாட்டின் மீதே நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டு செல்லுமே தவிர அதற்கு எந்த ஒரு முடிவும் ஏற்படுவதற்கு வழி இல்லை.

கலவரம் ஏற்படுவதற்கான ஆரம்பக் கட்டத்தைப் பார்க்க வேண்டும். நேற்று கூட உதக மண்டலத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது என்று பத்திரிகைச் செய்தி அறிவிக்கிறது. அங்கே மறியல் நடைபெற்றிருக்கிறது. நான்கு மாணவர்கள் கலவரம் செய்தார்கள் என்று கைது செய்யப்பட்டுள்ளார்கள். கைது செய்யப்பட்டவர்களைப் போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருந்தார்கள். அதிலிருந்து நான் கிளர்ச்சிகள் துவங்கியிருக்கின்றன. பயங்கரமான விளைவுகள் ஏற்படுவதற்கு மாணவர்களைப் பிடித்து வைத்தது காரணமாக ஆகியிருக்கிறது. நான்கு மாணவர்களைக் கொண்டுபோய்ப் போலீஸ் ஸ்டேஷனில் அடைத்துவைத்ததும், அவர்களை விடுவிக்குமாறு மாணவர்களும் பொது மக்களும் கேட்டுக் கொண்டார்கள். கூட்டம் மணிக்கு மணி பெருகி, கடைசியில் தவறான முறையில போய் துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் கொண்டு போகும் நிலைமை ஏற்பட்டது என்று இன்று காலைப் பத்திரிகையில் காண்கிறோம். ஒருவர் சுட்டு வீழ்த்தப்படுகிற நிலைமை ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. நாங்கள் எடுத்துச் சொல்வதெல்லாம், இவ்வளவு துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிற இடங்களில் முறைப்படியான நடவடிக்கைகளை இந்த அரசு முன் கூட்டியே எடுத்திருக்குமானால், முறைப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆங்காங்கே இருக்கும் போலீஸ்காரர்கள் எடுத்திருப்பார்களானால் இத்தகைய நிலைமைகளைத் தவிர்த்திருக்க முடியும் என்பது தான். போலீஸார் எல்லா இடங்களிலுமே அக்கிரமமாக நடந்துகொண்டார்கள், எல்லா இடங்களிலுமே அவர்கள் முறை தவறி நடந்து கொண்டார்கள் என்ற குற்றச் சாட்டைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த யாரும் கூறவில்லை. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, மாநிலத்தின் எல்லாப் பெரு நகரங்களிலுமே நடைபெற்றிருக்கிறது. கிளர்ச்சிகள் எல்லாப் பெரு நகரங்களில் மட்டுமல்லாமல், சிற்றூர்களிலும் பல நகரங்களிலும் நடைபெற்றிருக்கின்றன. ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், எரிப்புக் கிளர்ச்சிகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. என்றாலும், பல இடங்களில் அதிகாரிகள் நடக்க வேண்டிய முறைப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள். கலவரம் ஏற்படும் சூழ்நிலையைத் தவிர்க்க எந்த முறையில் நடந்து கொள்ள வேண்டுமோ அந்த முறையில் நடந்து கொண்டதன் காரணமாக மிகத் திறமையாகப் பல இடங்களில் போலீஸ் அதிகாரிகள் நிலைமையைச் சமாளித்திருக்கிறார்கள். கலவரம் ஏற்படாமலும் மிகத் திறமையாகத் தடுத்திருக்கிறார்கள். அப்படித் திறமையாக நடந்துக்கொண்ட போலீஸ் அதிகாரிகளுக்கு எங்களுடைய பாராட்டைத் தரத்தான் செய்கிறோம். துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற, அடக்குமுறை நடைபெற்ற இடங்களில் மட்டும் அல்லாமல், மற்ற இடங்களிலும் ஊர்வலங்கள்—பயங்கரமான ஊர்வலங்கள்—பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் சென்ற ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவை, 25, 27 தேதிகளில் நடைபெற்றிருக்கின்றன. கோவையிலும் பெரு ஊர்வலங்கள் நடைபெற்றிருக்கின்றன என்றாலும், அவை திறமையுடன் சமாளிக்கப்பட்டிருக்கின்றன. திருப்பூர், குமாரபாளையம், பொள்ளாச்சி, திருச்செங்கோடு ஆகிய இடங்களில் மட்டும் பயங்கர துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. அங்கெல்லாம் அதிகாரிகள் விவேகத்துடன் நடந்துகொள்ள வில்லை என்று தெரிய வருகிறது. பல இடங்களில் கலெக்டர்களும் போலீஸ் அதிகாரிகளும் நடந்துகொள்ள வேண்டிய முறைப்படி நடந்து, கலவரங்களுக்கான சூழ்நிலை ஏற்படாமல் தடுத்திருக்கிறார்கள். அந்தத் திறமையை நாங்கள் பாராட்டுகிறோம்.

இப்பொழுது நடைபெற்று முடிந்த கலவரங்களில் சிலவற்றைத் தடுத்திருக்க முடியும். எல்லாவற்றையுமே தடுத்திருக்க முடியும் என்று நான் சொல்லத் தயாராயில்லை. போலீசாருடைய பணிகளைத் திராவிட முன்னேற்றக் கழகத்தார் மிகத் தெளிவாக, நன்றாக உணருகிறார்கள்.

சேலம் மாவட்டத்திலே மது விலக்குக் குற்றத்தைக் கண்டுபிடிப்பதற்காக மது காய்ச்சுகிறார்கள், கண்டுபிடிக்க வேண்டும் என்ற செய்தியின் பேரில், குறைந்த அளவு போலீசார் சென்ற நேரத்தில், மதுவைக் காய்ச்சுகிறவர்கள் **ஒன்று** சேர்ந்து ஒரு சப்-இன்ஸ்பெக்டரைக் **கொலை** செய்ததை நாங்கள் அத்துணை பேரும் வன்மையாகக் கண்டித்தோம்;



கலங்கினோம். பயங்கர சூழ்நிலையில் பணியாற்றுகின்ற போலீசாருக்குத் தக்க பாதுகாப்புத் தரவேண்டும் என்று இந்த மன்றத்தில் நானே முன்பு பேசும்போது சொன்னேன்.

அதைப்போலவே, ஈரோடுக்குப் பக்கத்திலே, காவிரி நதியைக் கடந்து, கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களைப் பிடிக்கச் சென்ற நேரத்தில், ஸப்-இன்ஸ்பெக்டரும் போலீஸ்காரர்களும் சென்ற படகு கவிழ்க்கப்பட்டு அவர்கள் உயிர்விடும் நிலைமை ஏற்பட்டது. அந்த அளவுக்குப் போலீசார் கஷ்டங்களையும் தொல்லைகளையும் அனுபவிக்கும் நிலைமையிலே இருக்கிறார்கள் என்பதை நாங்கள் உணருகிறோம். அவர்கள் திறமையோடு நடந்துகொண்ட இடத்தில் கலவரங்கள் அதிகமான அளவுக்கு ஏற்படாமல் தடுக்கப்படும் சூழ்நிலைகள் ஏற்பட்டன. பொள்ளாச்சி, திருப்பூர், குமாரபாளையம் ஆகிய இடங்களிலிருந்து வரும் மக்கள் சொல்லும் அளவிலும், நாம் உணருகின்ற அளவிலும், அங்கும் நிலைமைகளைத் தவிர்த்திருக்க முடியும். ஒரு துப்பாக்கிப் பிரயோகம் கூட ஏற்படாமல் தவிர்த்திருக்க முடியும், முயன்றிருந்தால். தக்க முயற்சிகள் மேற்கொண்டிருப்பார்களேயானால், ஒரு சிலவற்றையாவது தவிர்த்திருக்கமுடியும்.

கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசுகிறபோது, "கூடுமானவரை துப்பாக்கிப் பிரயோகத்தைத் தவிர்ப்பதில்தான் போலீசாருடைய திறமை அடங்கியிருக்கிறது" என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் போலீஸ் பெரிய அதிகாரியாகிய ஐ.ஜி. அவர்கள் கூடுமான வரையில் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தவிர்ப்பதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சுற்றறிக்கை விட்டதாகச் செய்தித் தாள் வாயிலாக அறிந்தேன். அத்து மீறிய நடவடிக்கைகளை எடுக்காமல் திறமையாகக் கூட்டத்தைக் கலைக்கிற முயற்சியில் போலீசார்கள் ஈடுபட்டு இருந்தால், சில இடங்களில் நடைபெற்றுள்ள துப்பாக்கிப் பிரயோகத்தைத் தவிர்த்து இருக்கலாம். அது பற்றி மன்றத்தில் எவ்வளவு பேசினாலும் இறந்தவர்களைக் கொண்டு வந்துவிட முடியாது. ஏற்பட்ட சேதங்களை மீட்டுவிட முடியாது. என்றாலும் எதிர்காலத்தில் இத்தகையதொரு அவல நிலை உருவாகாதவாறு தடுப்பதற்கு பயன்படக் கூடும் என்ற முறையில்தான், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சில பல கருத்துக்களை எடுத்துத் தெளிவுபடுத்தினார்கள்

போலீசார் எல்லா இடங்களிலும் தவறாக நடந்து கொண்டார்கள் என்கிற குற்றச்சாட்டை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சபை முன்பு வைக்க விரும்ப வில்லை. இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபடுவதற்கு முன்பு என்ன என்ன வகைகளைக் கையாண்டால் இது தவிர்த்திருக்கப்படும் என்பதைப் பற்றி எதிர்காலத்தை உத்தேசித்தாவது நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப் பட்டு இருக்கிறோம்.

ஒரிசாவைச் சேர்ந்த திரு. எஸ். ஜே. கோஷ் என்கிற போலீஸ் அதிகாரி, இதுபற்றி போலீஸ் இலாகாவினருக்குச் சில பல கருத்துக்களைத் தெளிவுபடச் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய கருத்தை நான் தங்கள் அனுமதியின் பேரில் இந்த மன்றத்தின் முன் எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன்.

'The guiding principles for crowd control should be—

(*i*) try to cool a crowd into an assembl yand not to inflame it into a mob ;

(*ii*) maximise your operational power ;

(*iii*) minimise the numerical opposition from the opponents;

(*iv*) free crowds in such a manner as not to allow a reassemblage.

(v) When the crowds congregate closely without order,
there is hardly any time for thought. Take your decision and act
upon it quickly with operational mobility. Remember that undue
delay or a faulty step may lead you astray, compelling you to resort
to arms which will result in loss of valuable human life. You will
then have cause for repentance and the unnecessary dead will haunt
upon you throughout your life. '

முறைப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்தால், திருப்பூரி
லும், குமாரபாளையத்திலும் இன்னும் சில பல இடங்களிலும் நடை
பெற்றுள்ள துப்பாக்கிச் சூடுகள் தவிர்க்கப்பட்டு இருக்கும் என்கிற கருத்
தைத்தான் கனம் மதியழகன் அவர்களும் அமைச்சரவையின் கவனத்
திற்குக் கொண்டு வந்தார்கள்.

சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றைக் காப்பாற்ற வேண்டியது
போலீஸ்காரர்களின் பொறுப்பு. அதை நாம் அவர்களிடத்திலேயே
முழுக்கவிட்டுவிடவேண்டும். ஆளும் கட்சியினர் குறுக்கீடு காரணமாக—
அவர்கள் வேண்டியவர்களுக்கு ஒன்று, வேண்டாதவர்களுக்கு ஒன்று
என்கின்ற ரீதியில் செயல்பட ஆரம்பித்தால் சட்டத்தையும், ஒழுங்கையும்
நன்றாகக் காத்தவர்களாக மாட்டார்கள் என்றே நாங்கள் சொல்கிறோம்.

இன்றையதினம் குற்றம் செய்தவர்களைப் பிடித்துத் தண்டிப்பதிலே
திராவிட முன்னேற்றக் கழகத்தார்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தவன், ஆகவே பிடி என்பதாக
ஆளும் கட்சியினரின் கட்டளைக்குக் கீழ்ப்பட்டுப் போலீஸ்காரர்கள் பல
நிரபராதிகளை எல்லாம் கைது செய்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதை
நாம் பார்க்கிறோம்.

ஆளும் கட்சியினர்களுடைய கொள்கைகளை, திட்டங்களை எல்லாம் எதிர்க்
கட்சிகள் அப்படியே ஒத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதற்
இல்லை. மாறுபட்ட கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஜனநாயக அமைப்பில்
சில பல வழிமுறைகள் இருக்கின்றன. அமைதியான முறையில் மறியல்
செய்வதும், கறுப்புக் கொடி காட்டுவதும், கறுப்புப் பட்டி அணிவதும்
ஜனநாயக அமைப்பில் தவிர்க்க முடியாததாகும்.

ஜனவரி 26-ஆம் தேதி முதல் இந்தி இந்திய யூனியன் ஆட்சி மொழி
என்ற ஏற்பாட்டை ஆளும் கட்சியினர் செய்திருக்கலாம். அதை எதிர்க்
கட்சியினர்களாகிய நாங்கள் ஏற்காமல் இருக்கலாம். ஆளும் கட்சியினர்
களுடைய கருத்துக்கு மக்கள் ஆதரவு கொடுக்கிறார்களா, எங்களுடைய
கருத்துக்கு ஆதரவு கொடுக்கிறார்களா என்பதை எதிர்காலம் நிர்ணயிக்க
வேண்டும்.

ஜனவரி 26-ஆம் தேதி கூட்டங்களுக்குத் தடை இல்லை. ஊர்வலங்
களுக்குத் தடை இல்லை. ஒரு மனிதன் கறுப்புச் சின்னம் கட்டிக்
கொள்வதைத் தடுக்க முடியாது. 23-ஆம் தேதி கமிஷனர் அறிக்கையில்
கூட திராவிட முன்னேற்றக் கழகம் தங்கள் வீடுகளிலே 26-ஆம் தேதி
கறுப்புக் கொடி ஏற்றிக் கொண்டு துக்க நாள் கொண்டாடுவதைப் பற்றித்
தடையில்லை, ஆனால் தெருக்களில் பொது இடங்களில் கறுப்புக் கொடி
ஏற்றுவதை நாங்கள் தடுத்து நிறுத்துவோம் என்று அறிக்கைவிட்டார்கள்.

நாங்கள் கறுப்புக் கொடி ஏற்றுவோம் என்ற நேரத்தில் ஆளும்
கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டால் அதை
அறுப்போம், அப்படிக் கறுப்புக் கொடி ஏற்றுகிற கரங்களை வெட்டுவோம்
என்பதாக எல்லாம் பேசி அறிக்கைவிட்டு இருக்கிறார்கள். அமைதி விரும்பிய
எங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் ஆர்ப்பாட்டம் நடத்திய
ஆளும் கட்சியினர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? ஆளும் கட்சி
யினர்களுக்கு ஒரு சலுகை தந்து, எதிர்க்கட்சியினர்களுக்கு அது மறுக்கப்படு
கிறது என்றால், போலீஸ் இலாகாவினர் ஆளும் கட்சியினர்களால் தவறான
வழியில் செலுத்தப்படுகிறார்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.
சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நடுநிலையில் இருந்து பாதுகாக்க வேண்டி





யவர்கள், ஆளும் கட்சியினர்களால் தவறான வழியில் தூண்டப்பட்டு எதிர்க்கட்சிகளை ஒடுக்க நடவடிக்கை எடுக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை இன்றைய தினம் இந்த மன்றத்தின் முன் எடுத்து வைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1962-ஆம் ஆண்டு விலைவாசிப் போராட்டம் நடந்தது. எங்கள் கட்சியைச் சேர்ந்த பலர் மறியல் செய்தார்கள். போலீசார் அவர்களைப் பிடித்து வழக்குத் தொடர்ந்து மூன்று மாதம், ஆறு மாதம் என்று தண்டனை வாங்கிக் கொடுத்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் ஊர்வலம் நடத்தப்பட்ட போது சுதந்திரம் காக்கும் படையினர் அதைத் தடுக்கப் போவதாக அறிவித்தார்கள். அதுமட்டும் அல்லாமல் ஊர்வலம் நடத்தப்பட்டபோது போலீசாரின் கார்களுக்கு முன்னால் நின்று தடுத்து நகரவிடாமல் செய்தார்கள். பத்திரிகைகளில் படங்கள் எல்லாம் வந்திருக்கின்றன. அந்தப் படங்களை நான் இன்னமும் வைத்துக் கொண்டிருக்கிறேன். அந்த ஊர்வலத்திற்குப் பாதுகாப்புத் தரக்கூடாது என்று சொன்னார்கள். அரசாங்கம் அன்றைக்கு அப்படி அந்த ஊர்வலத்திற்குத் தடை செய்த சுதந்திரம் காக்கும் படையினர்களில் 100, 150 பேர்களைக் கைது செய்து உள்ளே 3 நாள் வைத்து இருந்துவிட்டு அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் வெளியே விட்டுவிட்டார்கள்.

அதே சமயம் விலைவாசிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டு 3 மாதம், 4 மாதம் தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். இரண்டையும் ஒருசேர வைத்து சிந்தித்தால் ஆளும் கட்சியினர்கள் என்றால் ஒருவிதம், எதிர்க்கட்சியினர்கள் என்றால் ஒருவிதம் என்பதாகத்தான் இந்த அரசாங்கத்தினால் நடத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் தம்முடைய வார ஏட்டில் அடியில் குறிப்பு எதுவும் எழுதப்படாமல் ஒரு கார்ட்டூன் பிரசுரித்தார்கள். அது வேண்டுமென்றே பண்டித நேருவைக் கொலை செய்யவேண்டும் என்கிற உணர்ச்சியைத் தூண்டுகிற அளவுக்குப் போடப்பட்டது என்று அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. அது தம்முடைய நோக்கம் இல்லை என்றும், அம்மாதிரி கருத்தைக் கொடுத்தால் அதற்காகத் தாம் வருந்துவதாகவும், அந்தக் கார்ட்டூன் போட்டவரைத் தம்முடைய பத்திரிகையில் இருந்து நீக்கிவிட்டதாகவும் கனம் உறுப்பினர் இராம. அரங்கண்ணல் அவர்கள் மறு வாரம் சமாதான அறிக்கை கொடுத்தார்கள். இருந்தும் வழக்குத் தொடரப்பட்டது. அவர் சமாதானம் சொல்லிய பிறகும், அவர் சமாதானம் கூறி அறிக்கை வெளி வந்த பிறகும்கூட போலீஸார் அது தவறுதான் என்று வழக்குப் போட்டார்கள். ஆனால் நீதிமன்றத்தில் அந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

பெரியார் இராமசாமி அவர்கள், கத்தியை வைத்துக்கொள்ளுங்கள், பெட்ரோலை வைத்துக்கொள்ளுங்கள், நான் சொல்பவரைக் குறிபார்த்து வைத்துக்கொள்ளுங்கள் ; நான் சொல்லும் இடத்திற்குத் தீ வையுங்கள் என்று அறிக்கை விட்டார்கள். அதற்கு ஒரு நாள் கழித்து சமாதான அறிக்கையும் விட்டார்கள். இந்த இரண்டு அறிக்கைகளையும் வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமா ? எடுக்க வேண்டாமா ? என்று பரிசீலனை நடந்துகொண்டு வருகிறது என்று சொல்லப்படுகிறது. எனவே, வேண்டியவர்கள் என்றால் ஒரு வித நடவடிக்கை, வேண்டாதவர்கள் என்றால் வேறுவித நடவடிக்கை எடுக்கப்படுகின்ற முறைகெட்ட தன்மையைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிக்கிறது.

இதே மாதிரி பல இடங்களில் பல நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஏற்கனவே எடுத்துச் சொன்னேன். முழுவதையும் விளக்கிச் சொல்ல நேரம் இல்லாததால் விடுகிறேன். பல இடங்களில் கலவரங்கள் நடந்திருக்கின்றன. மதுரையிலே கழகத்தின் அலுவலகத்தில் கலவரம் நடந்திருந்திருக்கிறது. அங்கு கதவை உடைத்து உள்ளே யிருந்த மேஜை நாற்காலிகளை யெல்லாம் எடுத்து வெளியே எறிந்து உடைத்திருக்கின்றனர். அடுத்து,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [13th March 1965

தென்காசியிலே காங்கிரஸ்காரர்கள் ஊர்வலமாக வந்து கழகத்துக் கொடி மரத்தை வெட்டியதாகக் காங்கிரஸ் செய்தித்தாள்களிலேகூட செய்திகள் வெளிவந்திருக்கின்றன. காஞ்சிபுரத்திலே நாக அம்மையார் படிப்பகம் தாக்கப்பட்டிருக்கிறது. கோவையிலே திரு. எஸ். டி. சிதம்பரம் அவர்களுடைய வீடு தாக்கப்பட்டிருக்கிறது. அங்குக் கழகத் தோழ ருடைய ஆட்டோரிக்ஷா வண்டி ஒன்று கொளுத்தப்பட்டிருக்கிறது. இத் துணைக் கலவரங்களுக்கான காரணங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளில் அரசினர் இறங்கியிருக்கின்றனரா ? என்றால் இல்லை. கலகக்காரர்களைக் கண்டுபிடித்துக் கைது செய்து, வழக்குத்தொடுத்திருக்கிறார்களா ? என்றால் இல்லை.

மதுரையிலே சட்ட எரிப்புப் போராட்டத்திலே கழகத்தைச் சேர்ந்த தோழர் முத்து அவர்களும், மற்றவர்களும் ஈடுபட்டபொழுது அவர்கள் சட்ட எரிப்புக் கிளர்ச்சியில் பங்கு கொள்வதற்காக ஊர்வலமாகச் சென் றார்கள். அவர்களுக்குப் பின்னால், அந்த ஊர்வலத்திற்குப் பின்னால் போலீஸாரும் சென்றனர். ஊர்வலத்திற்குப் பின்னால், தொடர்ந்து சட்ட மன்ற எதிர் கட்சித் துணைத் தலைவர் திரு.மு. கருணாநிதி அவர்களும் மற்றவர் களும் வந்துகொண்டிருந்தார்கள். சட்ட எரிப்பிலே பங்கு பெற்றவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டது. ஆனால் அந்த நிகழ்ச்சிக்கு 2 அல்லது 3 நாட்களுக்குப் பிறகு முதலமைச்சர் அவர் கள், ஊர்வலத்திற்குப் பின்னால் குறிப்பிட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் சென்றிருக்கிறார்கள், அதைப் போலீஸார் எப்படி அனுமதித் தார்கள் என்று தெரியவில்லை எப்படி அவர்களைச் செல்ல விட்டார்கள் என்று தெரியவில்லை என்று சொன்னார்கள். அவர் கள் அப்படிச் சொன்னதற்குப் பிறகு, போலீஸார் நடவடிக்கை எடுக்க வேண்டிய அளவுக்கு ஆட்படுத்தப்பட்டனர்.

கனம் முதலமைச்சர் அவர்கள் சொல்வதைக் கேட்டு அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டிய அளவுக்கு போலீஸ் இலாகாவை இந்த அரசாங்கம் பயன்படுத்தி இருக்கிறது. போலீஸ் இலாகா பயன்படுத்தப் பட்டு வந்திருக்கிறது. அவர்கள் நல்ல நிலைமையில் பணியாற்ற விடப்படுவ தில்லை, நேர்மையை நிலை நாட்ட விடப்படுவதில்லை என்பதைத்தான் திரும் பத் திரும்ப வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நடைபெற்று முடிந்த கலவர நிகழ்ச்சிகளில் எல்லாம் திராவிட முன் னேற்றக் கழகத்தினர், கம்யூனிஸ்டுகள், மற்றும் மில் முதலாளிகள் ஈடுபட்டார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு பிறகு, முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள், அதற்கேற்றபடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற முறையில், போலீஸார் ஈடுபட்டு அவருடைய கூற்று உண்மையென்பதை நிரூபிக்கக்கூடிய முறையிலே செயல்பட்டு வருகிறார் கள். உண்மை நிலை எப்படியிருந்தாலும், முதலமைச்சர் கூற்றை உண்மை யாக்குவதற்குப் போலீஸார் தி. மு. கழகத்தினர்களை இப்பொழுது எங்கு பார்த்தாலும் கைது செய்து வருகிறார்கள்.

இந்த மன்ற எதிர்கட்சித் துணைத் தலைவர் கனம் உறுப்பினர் மு. கருணாநிதி அவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருக்கி றார்கள். அவர் மீது வழக்கு தொடுக்க இங்கு இப்பொழுது இருக்கின்ற சட்டங்கள் போதாவா? இன்றைக்கு இருக்கின்ற சட்டங்களை வைத்துக் கொண்டு, காரணங்கள் காட்டி வழக்கு மன்றங்களுக்குக் கொண்டு போய் தண்டனை வாங்கிக் கொடுப்பதற்கு இந்த ஆட்சியில் இன்றைக்கு இருக்கின்ற சட்டங்கள் போதாவா? நடைமுறையிலே சமாதான காலத்திலே என்னெ ன்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ என்ன காரியங்கள் செய்யப் பட வேண்டுமோ அதற்கேற்ற ஏராளமான சட்டங்களை அரசாங்கம் பெற்றி ருக்கின்றது. அப்படியிருக்க, 1962-வது ஆண்டிலே போர்க்காலத்தில் பிர கடனப்படுத்தப்பட்ட பாதுகாப்புச் சட்டத்தின் மூலமாக, நடவடிக்கை எடு க்கப்பட்டுள்ளது. அரசினரைப் பொறுத்த வரையில், இந்த நாட்டு மக்கள் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையைப் பொறுத்த வரையில் ஒரு அமை



13th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

திக்கால வாழ்வைத்தான் நடத்தி வருகின்றனர். அமைதியான முறையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த சமாதான காலத்திலே, பாதுகாப்புச் சட்டத்தை அமுலாக்குவது அநீதியாகும். அரசாங்கப் போக்கில் நெருக்கடி கால நிலைமை எதுவும் தென்படவில்லை. குடியரசு விழா எப்படி நடக்க வேண்டுமோ அப்படியே நடைபெறுகிறது. சுதந்திர தின விழா எப்படி நடக்கவேண்டுமோ அப்படியே சுதந்திர தின விழா நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தச் சமாதான வாழ்வு நிலையிலே, பாதுகாப்புச் சட்டத்திற்கு அவசியம் என்ன ஏற்பட்டது? எதிர் கட்சியி னரை அடக்கியொடுக்கிவிட வேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர வேறு எது காரணமாக இருக்க முடியும் ?

உள்ளபடியே குற்றவாளிகளைத் தண்டிக்க இந்தியன் பினல் கோடு இல்லையா ? வழக்குத் தொடுக்க கிரிமினல் புரோசிஜர் கோடு சட்டம் இல்லையா? இவ்வளவையும் மீறி பாதுகாப்புச் சட்டத்தைப் பிரயோகித்து அதுவும் அமைதிக்காலத்தில் பயன்படுத்தி, அதுவும் பாளையங்கோட்டைத் தனிச் சிறையில் அடைத்துவைக்கிறார்கள் என்றால், எதிர்க்கட்சியினரை அடக்குமுறையைப் பயன்படுத்தி, பயமுறுத்தல் நடவடிக்கையை மேற் கொண்டு அடக்கியொடுக்கிவிடலாம் என்பதுதான், இந்த அரசினருடைய நோக்கம் என்பதை நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வேறு சட்டங்களின்கீழ் கைது செய்தால் காரணம் சொல்ல முடியாமல் போகும், எப்படியும் அடக்கியொடுக்கவேண்டும், அச்சுறுத்த வேண்டும், காரணம் இல்லாத ஒரு சட்டத்தின்கீழ் இவர்களை அடக்கவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தைத் தவிர நியாயமான காரணம் எதுவும் இருப்ப தாகத் தெரியவில்லை. தவிர, வேறு சட்டங்களின்கீழ் நடவடிக்கை எடுத் தால் வழக்கு மன்றங்கள் இருக்கின்றன. வழக்கு மன்றங்களிலே அதற்கு ஆதாரம் காட்ட முடியாது. எனவே காரணம் காட்ட முடியாத காரணத்தால் பாதுகாப்புச் சட்டத்தின் கீழே மன்ற உறுப்பினர் களை அடைத்து வைக்கிறார்கள் என்பதை நான் இந்த மன்றத்தினருக் குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உண்மையிலேயே இந்தப் போக்கு நீடிக்குமானால், எதிர்காலத்தில் நல்ல சூழ்நிலை உருவாகாது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சென்ற, அதற்கு முன் ஆண்டுகளில் நடைபெற்ற மானியக் கோரிக்கை களின் மீது திராவிட முன்னேற்றக் கழகம் பல உருவான கருத்துக்களைச் சொல்லி வந்திருக்கிறது. போலீஸாருக்குச் சம்பள உயர்வு அளிக்கப்பட வேண்டும், சலுகைகள் தரப்படல் வேண்டும், வசதிகள் செய்யப்பட வேண் டும், அதன் மூலமாக ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். அப்பொழுதுதான் அவர்கள் தங்கள் பணிகளை நல்ல முறையிலே செய்ய முடியும்.

நடைபெற்ற துப்பாக்கிச் சூடுகள், தவிர்க்கப்படத்தக்க துப்பாக்கிச் சூடு களா? அல்லது தவிர்க்கப்பட முடியாத துப்பாக்கிச் சூடுகளா? என்பதை நீதி விசாரணை மூலம் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். கலவரங்கள் நடந்த பல இடங்களிலும் ஆர். டி. ஓ-க்கள்தான் விசாரணை செய்கிறார். சிதம்பரம் ஒரு இடத்திலேதான் பகிரங்க விசாரணை நடை பெற்று வருகிறது. மற்ற இடங்களில் அதிகாரிகள்தான் விசாரணை நடத்துகின்றனர். ஆர். டி. ஓ. விசாரணை நடத்தினால் அவர் அரசாங்கத் திற்கு அறிக்கை அனுப்புவார்.

அரசாங்கத்தினர் சில குறிப்புகளை மட்டும்தான் இந்த மன்றத்திற்குச் சொல்வார்கள். அங்கு ஏற்பட்ட சூழ்நிலைகள் முழுமையையும் தெரிவிக்கி றார்களா என்றால் இல்லை. ஆகவே, ஒரு நீதிபதியின் மூலம் விசாரணை செய்ய வேண்டும், பகிரங்க விசாரணை செய்ய வேண்டும், அப்படி விசா ரணை செய்வதின் மூலம் உண்மையைக் கண்டுபிடித்து, அந்தக் கலவரங் களிலே ஈடுபட்டவர்கள் யாராய் இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [13th March 1965

எடுக்க வசதியாக இருக்கும். அப்படிப் பகிரங்க விசாரணை நடத்துவதிலே என்ன தவறு ஏற்பட முடியும்? பகிரங்க விசாரணை நடத்தி அதன்மூலம் வெளியாகின்ற முடிவுகளை இந்த மாமன்றத்தில் வைப்பதால், இந்த மன்றத்தினர் சாதக பாதகங்களை உணர்ந்துகொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படும். அதிகாரிகள் அரசாங்கத்தினர் சொல்லுகிறபடிதான் நடக்கிறார்களோ என்ற ஐயப்பாடு பொதுமக்களிடையே இருக்கிற காரணத்தால், பகிரங்க விசாரணைகள் மூலம் இவைகளை விசாரித்து அவற்றின் முடிவுகளைப் பொது மக்களுக்குத் தெளிவாகக் கூறி அவர்களுடைய ஐயப்பாட்டைப் போக்குவதற்கு அரசு முன்வர வேண்டும்.

ஆர். டி. ஒ. வோ அல்லது மற்ற அதிகாரிகளோ விசாரணை நடத்தி அவர்களுடைய அறிக்கைகளை அரசாங்கத்தினருக்கு அனுப்பினால் "பொது மக்களின் நலனை முன்னிட்டு, நாட்டினுடைய நன்மையை முன்னிட்டு, முழு விவரங்களையும் இந்த மன்றத்தில் வைக்க முடியாது" என்ற பதிலைத்தான் நாம் அமைச்சர்களிடமிருந்து பெறமுடியும். எனவே, உயர்மட்ட நீதிபதியொருவரை நியமித்து பகிரங்க விசாரணை செய்து, அதன்மூலம் வெளியாகும் முழு முடிவுகளையும் இந்த மன்றத்தில் வைத்து பொது மக்கள் உண்மையை உணரும்படி செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோசல்ராம் அவர்கள் கூறியது போல், மதிப்பீட்டுக் குழுவிலே நாங்களும் சேர்ந்துதான் சிபாரிசு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றையெல்லாம் விரிவாகப் பேசுவதற்கு நேரம் இல்லாத காரணத்தால் விடுகிறேன்.

இப்பொழுது போலீஸ் இலாகாவினருக்குக் கொடுக்கப்பட்ட சம்பள உயர்வை வரவேற்கிறேன். ஆனால் ஒரு பக்கத்தில் போலீஸார் தவறு செய்யவில்லை என்று சொல்ல முடியாது. ஏற்கனவே, நாகர்கோவிலில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டின்மீது வந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது பதிலளிக்கும்பொழுது, கனம் முதலமைச்சர் அவர்கள், முறை தவறித்தான் போலீஸார்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

அண்மையிலே நடைபெற்ற துப்பாக்கிச் சூடுகளைப் பொறுத்து நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்து முடிவு கண்டால், மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட முடியும், கனம் முதலமைச்சர் அவர்கள் ஆழ்வார்கள், நாயன்மார்களைப் போல், "என்னடியார் அது செய்யார்" என்ற அளவுக்கு எங்கள் போலீசார் எந்தத் தவறும் செய்ய மாட்டார்கள், எந்த இடத்திலும் குற்றத்தைச் செய்ய மாட்டார்கள் என்று கூறி வருகிறார்கள்.

நீதி விசாரணை மூலமாக விசாரித்தறிந்தால் நம்பிக்கை பிறக்க முடியும். இப்போது போலீஸ்காரர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்ததை நான் மறுத்துக் கூறவில்லை. ஆனால் இப்படிப்பட்ட துப்பாக்கிச் சூடுகளை நடத்திக் காட்டினால்தான் இப்படி இன்க்ரிமெண்ட் கிடைக்க முடியும் என்ற தவறான எண்ணத்தைப் போலீசாருக்கு ஏற்படுத்தாமல் அடுத்து இப்போது வந்தி
2-00 p.m. ருக்கிற நிதிநிலை அறிக்கையில் அதனை அறிவித்திருக்கலாம். முறையாக நடந்திருக்கலாம். இப்போது அவர்களுக்கு உயர்வு கொடுத்திருப்பது இந்த மாதிரித் துப்பாக்கிச் சூடுகளைச் செய்வதற்கு ஊக்கமளிப்பதாக இருக்கிறது. அவர்களுக்குச் சம்பள உயர்வு தரப்பட வேண்டுமென்று நியாயமான முறையில் மதிப்பீட்டுக் குழுவினர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

போலீஸ்காரர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆகியோருக்கெல்லாம் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பொறுப்பு போலீஸ்காரர்களுக்கு இருக்கிறது. அவர்களுடைய குறைகள் முழுவதையும் நீக்கும் பொறுப்பை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு உணவு, உடை, வீட்டு வசதி ஆகியவற்றைச் செய்து கொடுக்க வேண்டும். அவர்களுக்கு உணவுப் பொருள்களாகவும் மற்றப் பொருள்களாகவும் தேவைகளைக் கொடுத்து விட்டால் கூட நல்லதுதான்.



13th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மகாராஷ்டிராவில் போலீஸ்காரர்களுடைய சம்பளம் 75—105, மேற்கு வங்காளத்தில் 80—122, பஞ்சாபில் 125—150, ஆனால் நம்முடைய மாநிலத்தில் 65 ரூபாயில் இருந்து 90 வரை போகிறது. இதை 85—3—130 என்ற அளவுக்காவது மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று மதிப்பீட்டுக் குழுவினர் கூறியிருக்கிறார்கள். மதிப்பீட்டுக் குழுவினர் நியாயமான கோரிக்கையின் அடிப்படையில்தான் சொல்லியிருக்கிறார்கள். இந் நிலைமைகளை எல்லாம் சீர் தூக்கிப் பார்த்து ஒரு முடிவு எடுக்கவேண்டும்.

போலீசாருடைய கடமை மிகப் பெரிது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே சென்னைப் போலீசாரின் திறமை மிக மிகப் பாராட்டத்தக்கது. தங்களுடைய பணிகளில் இருந்து விலகிச் செல்வதற்கு இடம் அளிக்காத வகையில் தங்களுடைய கடமைகளை ஆற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு லண்டன் போலீசாரைச் சிறப்பாகச் சொல்வதுண்டு. "என்ன மணி என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், போலீஸ்காரரைக் கேட்டுத் தெரிந்து கொள்", என்ற பழமொழிகூட அந்த நாட்டிலே இருக்கிறது. அந்த அளவுக்குக் கடமையை நிறைவேற்றுவதிலே கருத்துக் கொண்டவர்கள். போலீசாருடைய அந்தக் கடமையைப் பற்றி மட்டும் சுட்டிக்காட்டி முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

'The British constable is trained to do his job with courage, kindliness and dignity. That is why the people trust him and support him, and that is why no crimes cause more public anger than attacks on members of the police forces.

Perhaps a well-known British writer was not far from the truth when he described the police of his country as 'strong, quiet men, calm, unarmed, dressed in a long authority, the very embodiment of law, order and security, the wonder and admiration of Europe.'

என்று லண்டன் போலீஸ்படை பாராட்டப்பட்டிருக்கிறது. இந்த அடிப் படையிலேதான் இங்குள்ள போலீஸாரும் இயங்கவேண்டும். அவர்கள் நேர்மையாகத் தங்கள் பணிகளில் ஈடுபடுவதற்கான முறைகளை அரசினர் வகுக்க வேண்டுமென்று திரும்பத்திரும்ப வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்.

கடுமையான அடக்கு முறையினால் நாட்டிலே அமைதியற்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அமைதியற்ற சூழ்நிலையைப் பற்றி அறிய ஊர்தோறும் ஒரு அமைதிக் குழுவை ஏற்படுத்தவேண்டும். அதிலே எல்லா அரசியல் கட்சியினரும் இடம் பெறவேண்டும். அதிகாரிகள், பொது மக்கள் எல்லோரும் இடம் பெறவேண்டும். யார் யார் கலகக்காரர்கள், சமூக விரோதிகள் என்பதை இப்போது போலீஸ்காரர்கள் மட்டும்தான் தெரிந்து வைத்திருக்கிறார்கள். யார் யார் கலகக்காரர்கள் என்பதைப் பார்த்து அமைதிக் குழுவினரே தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். எதிர்காலத்தில் அமைதியான ஒரு சூழ்நிலை ஏற்பட ஒவ்வொரு நகரிலும், பேரூரிலும் அமைதிக் குழுவை ஏற்படுத்த அரசாங்கம் முற்படவேண்டும்.

"கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்"

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிறார். கடுமொழியும், கையி கந்த தண்டமும் அரசனையே தேய்க்கின்ற அரமாகிவிடும். ஆட்சியினர் எதிர்கட்சியினர் மேல் கடும் மொழிகளையும், கொடிய அடக்கு முறைகளையும் மேலும் மேலும் செலுத்துவார்களானால் அந்தத்தன்மையே அவர்களின் ஆட்சியை மேலேமேலே தேய்த்துக் கொண்டு வந்துவிடும் என்பதுறுதி. அதற்கு இடம் தராத வகையில் நேர்மையாகவும், நீதி யுடனும் போலீஸ் துறையில் நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டு மென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. SPEAKER : Can the Hon. Minister finish his reply before 2-30 p.m.?

*THE HON. SRI P. KAKKAN : Sir, I will try.

மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தில் பங்கு கொண்ட மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் நல்ல யோசனைகளைச் சொல்லி யிருக்கிறார்கள். கடைசியாகப் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் போலீஸ் இலாகாவுக்கு ஒரு மாசு வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அதை ஒத்துக் கொள்ள நான் மறுக்கிறேன் என்று இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். போலீஸ் இலாகாவின் திறமையைப் பல நாட்களுக்கு முன்பு அவர்களே பாராட்டி யிருக்கிறார்கள். தேர்தல் காலங்களில் போலீஸ்காரர்கள் நாணயமாக நடந்து கொண்டார்கள் என்று பாராட்டியிருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் நீதிக்கும், நேர்மைக்கும், உடைமைக்கும், உயிருக்கும் பாதுகாப்பாக இருந்து வருகிறார்கள். ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சி வெள்ளைக் காரன் இருந்த காலத்தில் அவர்கள் கையாண்ட அடக்கு முறையை எதிர்த்தது. அகிம்சா முறை மூலமாக இந்த நாட்டிலே சுதந்திரத்தைப் பெற்றோம். பெற்ற சுதந்திரத்தை நல்ல முறையில் பாதுகாத்து வர வேண்டும். ஜனநாயகம் நல்ல முறையில் நடந்தால்தான் சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியும் என்று பாடுபட்டு வரும்போது சுதந்திரத்திற்குப் பாதகமாக நமது நாட்டின் பக்கத்தில் அந்நியர் படையெடுப்பு இருக்கும் போது, நாட்டிலே அராஜக சக்திகளைத் தூண்டி விடுவது, சமூக விரோத சக்திகளைத் தூண்டி விடுவது, நாட்டிலே குழப்பத்தை ஏற்படுத்துவது ஆகிய செயல்களிலே ஈடுபட்டால் நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத்தான் செய்யும். இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடியாது. போலீஸார் தங்கள் கடமையை அப்போதைக்கப்போது எவ்வாறு செய்ய வேண்டுமோ அவ்வாறு உணர்ந்து செய்வார்கள். தமிழக மக்கள் பீதி யாலே எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற நிலையில் இருக்கும்போது அந்தப் பீதியைப் போக்கி நாட்டிலே அமைதியையும், மக்கள் உடைமைக்கும், உயிருக்கும் பாதுகாப்புக் கொடுக்கிற பணியிலேயும் போலீஸார் ஈடுபட்டிருக் கிறார்கள். இதனைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கு உணர்வார்கள்.

நம்முடைய மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்கள் பல முறை இந்த மன்றத்திலே இந்தியைப் பற்றிய இந்த அரசாங்கத்தின் கொள்கையைத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். "இங்கிலீஷ் என்றும் இருக்கும் ; இந்தி யைத் திணிக்க விடமாட்டோம்" என்று கூறியிருக்கிறார்கள். இதைப் பற்றி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும்கூட தங்களுடைய கட்சியை வளர்ப் பதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பல முறைகளைக் கையாண் டார்கள். முதலிலே நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். பிறகு இந்தி எதிர்ப்பு என்ற முறையில் சட்டத்தை எரிக்கிறோம் என் றார்கள். அரிசி விலையைக் குறைக்க வேண்டுமென்று போராட்டம் நடத் தினார்கள். கடைசியாக, இன்றைக்கு மாணவர்களைத் தூண்டிவிடும் முயற்சி யிலே இறங்கியிருக்கிறார்கள். எல்லா மாணவர்களும் திராவிட முன்னேற்ற கழகத்தினர் அல்லாவிட்டாலும், ஒரு சிலரையாவது அவர்கள் தூண்டி விட முற்பட்டார்கள்.

மாணவர்களே கடைசியாகச் சொல்லி விட்டார்கள். சில சமுதாய விரோதிகள் தூண்டி விட்டதால்தான் இந்த நிலை ஏற்பட்டது என்று அவர்களே தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள். நாட்டிலே அராஜகம் விளைவிக்க வேண்டுமென்று சிலர் எண்ணினார்கள். அதைத் தடுத்து நிறுத்த போலீஸ் முற்பட்டதே தவிர வேண்டுமென்றே மக்களை எந்த இடத்திலும் அவஸ் தைக்கு ஆளாக்கவில்லை. எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் துப்பாக்கிச் சூடு பற்றிச் சொன்னார்கள். போலீஸ் தங்கள் கடமையை உணர்ந்தும் தங்கள் உயிர்களைத் திரணமாக மதித்து குழப்பம் ஏற்படக் கூடாது, மக்கள் சொத்து க்கு ஆபத்து வரக்கூடாது, ரெயில்வே ஸ்டேஷன்கள் தாக்கப்படக் கூடாது, பெண்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் வரக் கூடாது என்று மக்களுக் காகப் பணி செய்தனர் போலீஸ்காரர்கள். அப்படிப் பணி செய்தபோது





இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள் எந்தளவு சித்திரவதைக்கு உள்ளானார்கள் என்று தெரியும். ஆனால் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் ஒருவரும் போலீஸ் காரர்கள், அடிப்பட்டார்கள் இறந்தார்களே, அதுபற்றி ஒரு வார்த்தை கூட இந்தப் போலீஸ் மானியத்தில் சொல்லவில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் அன்று பேசும்போது கூடக் கூறியிருக்கிறேன். வன்முறைச் செயல்களைக் கண்டித்திருக்கிறேன். இரண்டு சப்–இன்ஸ்பெக்டர்களையும், இரண்டு கான்ஸ்டேபில்களையும் கொன்றதைக் கண்டித்து அன்றே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். சேலத்தில் நடந்த தையும்பற்றிக் கண்டித்திருக்கிறேன். அதை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இன்னும் வற்புறுத்திக் கூற தயாராக இருக்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** போலீஸ் பற்றி, குறிப்பாக போலீஸ் அதி காரிகள் பற்றி நாங்கள் பகைமை கொள்ளவில்லை, அவர்கள் சேவையைப் பாராட்டுகிறோம் என்று சொல்லி விட்டு அடக்குமுறை செய்தார்கள் போலீஸ் காரர்கள். போலீஸ்காரர்கள் பெரும் இழுக்கை ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்று சொல்லும்போதுதான் இந்தப் பதிலைச் சொல்ல வேண்டியிருக்கிறது. தமிழகத்தில் பணியாற்றுகிற போலீஸ் அதிகாரிகள், குறிப்பாக போலீஸ் காரர்கள் நன்கு உணருவார்கள். அரசாங்கம் அவர்களை எவ்வளவு கண்யமாக நடத்துகிறது, அவர்கள் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் எவ்வளவு பாடுபடுகிறது, என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்கள் சேவையை நன்கு பாராட்டி வருகிறோம். அவர்கள் தங்கள் கடமையை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். பெற்ற சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நம்மைச் சார்ந்தது என்று அதிகாரிகள், போலீஸ் காரர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அதனால்தான் ஆபத்து வரும் சமயத்தில் குறிப்பாக குழப்பம் குதர்க்க வாதம் வரும்போது நிமிர்ந்து நின்று கடமையைச் செய்கிறார்கள். குறிப்பாக தங்கள் உயிர்களைப் பாதுகாக்கவும், மக்களைக் காப்பாற்றவும் சில சமயங்களில் சுட வேண்டியிருக்கிறது, சுட வேண்டி வந்திருக்கிறது. துப்பாக்கிச் சூடு செய்தார்கள், அடக்குமுறை செய்தார்கள், அக்கிரமம் செய்து விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள் எதிர்க்கட்சியினர். அவர்கள் அந்த இடத்திலிருந்து பார்த்தால்தான் தெரி யும். வேறு வழியில்லை என்றநிலை வரும்போதும், குழப்பம் வராதபடி, உயிர்களுக்கு ஆபத்துவராதபடி, திருப்பூர், பொள்ளாச்சி போன்ற இடங்களில் மக்கள் உயிருக்கும் சொத்திற்கும் நஷ்டம் வராதபடி சட்டத்தை நிலை நிறுத்த அவர்கள் ஒரு சில இடங்களில் சுட்டிருக்கிறார்களே தவிர வேண்டு மென்று நிரபராதிகள் மீது சுட வேண்டுமென்று சுடவில்லை. அந்த எண்ணம் முன்பும் இருந்ததில்லை, இப்போதும் இல்லை, இனிமேலும் இருக்கப் போவதில்லை. போலீஸ் இலாகா எவ்வளவு நீதி நேர்மையோடு நடந்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். கன்னியா குமரி ஜில்லாவில் ஷூட்டிங் நடந்தது. ஐ.ஜி. அவர்கள் அங்கு போனார்கள். நான் சொன்னேன், அவர்கள் சுட்டது அக்கிரமம்தான் என்று. அதைக் கண்டித்ததோடு மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்க ஏற்பாடு செய்தோம். அப்படி நடுநாயகமாகத்தான் அரசாங்கம் நடந்து வருகிறது. வேண்டுமென்று துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாக்க வேண்டுமென்று போலீசார் எண்ணியதில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** நிரபராதிகளைச் சுடவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் யூனிவர்சிட்டி காம்பவுண்டுக்குள்ளே இருந்தார்கள். அங்கு போய்ச் சுடவில்லையா ?

MR. SPEAKER : The matter is pending before the Court. I cannot therefore allow the question.

**கனம் திரு. பூ. கக்கன் :** மதிப்பிற்குரிய அங்கத்தினர் மதியழகன் அவர்கள் பொறுத்திருந்து கேட்க வேண்டும். வேண்டுமென்று போலீஸ் காரர்கள் நிரபராதிகளைச் சுடத்தான் வேண்டுமென்று சுடுவார்களா என்

[திரு. பூ. கக்கன்] [13th March 1965

பதைத்தான் சொல்கிறேன். அந்த எண்ணமே அவர்களுக்குக் கிடையாது. மதியழகன் அவர்கள் பொள்ளாச்சியில் 60, 70 பேர்கள் சுடப்பட் டார்கள், மதுக்கரைப் பகுதிக்குக் கொண்டுபோய் அவர்கள் புதைக்கப்பட்டார் கள் என்று சொன்னார்கள். இது உண்மைக்கு விரோதமாகச் சொல்லும் வார்த்தைகள். எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று தெரிகிறது. திருவள்ளுவரின் படம் இங்கு வைக்கப்பட்டிருக்கிறது. படத்திற்கடியில்,

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்".

என்ற நல்ல வார்த்தைகளைப் போட்டிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய மதியழகன் அவர்கள் அதைப் பார்க்கவேண்டும்.

*** *** *** ***

Sri K. A. MATHIALAGAN : Sir, on a point of order. I object to the word * * * * The Hon. Home Minister should withdraw that word.

Sri S. MADHAVAN : Sir, it is not parliamentary.

Mr. SPEAKER : The hon. Member Sri Mathialagan has already raised the point of order.

Sri S. MADHAVAN : I also wish to raise the point of order.

Mr. SPEAKER : Why should he? The hon. Member should not disturb the proceedings of the House.

Sri S. MADHAVAN : I am not disturbing the proceedings of the House.

Mr. SPEAKER : The hon. Member need not get angry and shout.

Sri S. MADHAVAN : I have got every right . . .

(There was shouting.)

Mr. SPEAKER : I cannot allow shouting in the House. If any hon. Member shouts, I will ask him to withdraw from the House. The hon. Member Sri Mathialagan has raised the point of order and the Hon. Minister will explain it. Why should there be all this trouble?

Sri P. U. SHANMUGAM : Sir, I want a clarification.

Mr. SPEAKER : No clarification is necessary.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, பொள்ளாச்சியில் 60, 70 பேர்கள் சுடப்பட்டு மதுக்கரையில் புதைக்கப் பட்டார்கள் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. நிரூபிக்கிறேன் என்று சொன்ன பிறகும் . *** விசாரணையில் அமைச்சர் அவர்கள் சொல்லிய வார்த்தை *** இந்தச் சபையின் பெருமைக்கும், கௌரவத்திற்கும் உகந்ததல்ல. ஆகவே, தயவு செய்து அவர்கள் அதை திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எதிர்க்கட்சி, அங்கத்தினர் 70 பேர்கள் என்று சொல்வது முறையா ? அவர்கள் கணக்குக் கொடுக்கிறார்கள். நாங்கள் அது சரியில்லையென்று சொல்கிறோம். அதில் என்ன தப்பு ?

***Expunged as ordered by the Chair.



13th March 1965]

Sri K. A. MATHIALAGAN : I submit that I have got every right to demand that the Hon. Minister should withdraw the word

*** *** *** ***

(At this stage Mr. Speaker asked the hon. Member Sri V. Krishnamoorthy *** the House. The hon. Member Sri V. Krishnamoorthy then withdrew from the House.)

Sri K. A. MATHIALAGAN : Sir, we will walk out of the House.

(All the Members of the Dravida Munnetra Kazhagam Party stood up and there was disturbance in the House.)

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** (தன்னுடைய இடத்திலிருந்து முன்னே வந்து கையை உயர்த்தியும், ஆட்டிக்கொண்டும்) நீங்கள் சொன்னது சரியல்ல. அது மெம்பர்களின் உரிமையைப் பாதிக்கிறது.

*** *** *** ***

(All the Members of the Dravida Munnetra Kazhagam party went out.)

* * * * *

**கனம் திரு. பூ. கக்கன் :** மதிப்பிற்குரிய அங்கத்தினர் கனம் மதியழகன் அவர்கள் பொள்ளாச்சியில் அதிகமான பேர்கள் இறந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்வது சரியல்ல என்பதைத்தான் சொன்னேன். இவ்வாறு உண்மைக்கு விரோதமாக தப்பிதமாகச் சொல்வது அழகல்ல. மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் பலர், போலீஸ்காரர்களுடைய சம்பளத்தைப் பற்றிச் சொன்னார்கள். இப்போது போலீஸ்காரர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்தவேண்டும் என்பதில் அரசாங்கத்திற்கும் அக்கறை யிருக்கிறது. உண்மையில் அரசாங்கமும் இதை உயர்த்தவேண்டு மென்று தான் எண்ணுகிறது. இதற்காக ஐ.ஜி. அவர்கள் அரசாங்கத்திற்கு ஒரு ப்ரபோசல் அனுப்பியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து சீக்கிரமாகவே முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போலீசாருக்கு வீட்டுவசதிகள் செய்து கொடுப்பதைப்பற்றியும் அரசாங்கம் கவனித்துக் கொண்டு வருகிறது. இப்போது சென்னையில் இருக்கின்ற வீடுகள் தவிர ஆவடியில் 229 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக போலீசாருக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக மத்திய அரசாங் கத்தினிடமிருந்து 1961–62-ல் 84 லட்சத்து 12 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது. இந்த அரசாங்கம் 23 லட்சம் ரூபாய் கொடுத்தது. 62–63-ல் 51 லட்சத்து 99 ஆயிரம் மத்திய சர்க்காரிடமிருந்து கிடைத்தது, 2·45 லட்சம் ரூபாய் இந்த அரசாங்கம் கொடுத்திருக்கிறது 63–64-ல் 46 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மத்திய அரசாங்கம் கொடுத்தது, இந்த அரசாங்கம் 30 ஆயிரம் கூடுதலாகக் கொடுத்தது. 64–65-ல் 18 லட்சம் மத்திய அரசாங்கம் தந்தது, நாம் 24 லட்சம் ரூபாய் கூடுதலாகப் போட்டு செலவு செய்திருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இன்னும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய வாகன வசதியைப்பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே வாகன வசதி கொடுப்பது பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது அரசாங்கம். இப்போது போலீஸ் லாரி வாங்கி கொடுத்திருக்கிறோம். மேலும் நமது நிதி நிலைமை இருப்பதற்குத் தக்கவாறு அவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை கொடுக்க இந்த அரசாங்கம் முன் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*** Expunged as ordered by the Chair.

போலீஸ்காரர்களுடைய குடும்பத்தில் அவர்களுடைய வருமானத்தை பெருக்குகின்ற அளவில், கைத்தொழில்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று அவர்களுக்கு மாதர் சங்கத்தின் மூலமாக பல தொழில்கள் செய்வதற்கான வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிறது. ஸ்பின்னிங், வீவிங், டெயிலரிங், டாய் மேக்கிங், பௌல்ட்டரி யூனிட், பீ கீப்பிங் இது போன்ற தொழில்களுக்கு வசதிகள் செய்து கொடுத்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய குழந்தைகள் ரீடிங் ரூமில் தங்கி படிப்பதற்கும் வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முக்கியமாக அவர்களுடைய உதவிக்காக இருக்கும் "பெனவலண்ட் ஃபண்ட்"-க்கு அரசாங்கத்திடமிருந்து வருடம் ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படடு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மதுவிலக்குத் திட்டத்தைப்பற்றியும், அதனுடைய செயல் முறைகளைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். இதில் ஈடுபட்டிருக்கின்ற போலீஸ் அதிகாரிகள் தங்களுடைய பெரும் பணியினை மிகவும் திறம்பட நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதில் ஈடுபட்டிருக்கின்ற அதிகாரிகள் அனைவருக்கும் அரசாங்கத்தினுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் போலீஸ் ஊழியர்களுடைய சம்பளத்தை அதிகமாக்க வேண்டும் என்று எஸ்டிமேட் கமிட்டி சிபாரிசி செய்துள்ளது. அதில் எந்த அளவுக்கு அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியும் என்பதைப்பற்றி முன்பே சொல்லப்பட்டிருக்கிறது. நான் முன்னால் குறிப்பிட்டது போல் எந்த அளவிற்கு அரசாங்கம் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த முடியும் என்பதைப்பற்றி யெல்லாம் அரசாங்கம் நிச்சயமாகப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் போலீஸுக்காக எவ்வளவு தூரம் செலவு செய்யவேண்டுமோ அந்த அளவுக்கு செலவு செய்துகொண்டுவருகிறது. 1961–62-ல் 6 கோடி 63 லட்சம்; 1962–63-ல் 6 கோடி 98 லட்சம்; 1963–64-ல் 8 கோடி 10 லட்சம்; 1964–65-ல் 8 கோடி 20 லட்சம்; 1965–66-ல் 8 கோடி 76 லட்சம் என்று வருடந் தோறும் அதிகமாகவே நிதி ஒதுக்கிவருகிறோம். இன்னும் மீண்டும் பணம் தேவைப்படுமானால், அதற்கும் நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர்—நிதி அமைச்சர் அவர்கள் ஒத்தாசை செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கனம் மாதவன் அவர்கள் பேசும்போது பண்டித நேரு அவர்கள் அடிபட்டதைப்பற்றி யெல்லாம் சொன்னார்கள். அவர்கள் எதற்காக அடிபட்டார்கள், சுதந்திரம் வாங்குவதற்காக அடிபட்டார்கள். அவ்வாறெல்லாம் கஷ்டப் பட்ட பின்னால் தான் இன்றைக்கு நாம் சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறோம். அவ்வாறு சுதந்திரத்தைப் பெற்று இன்று ஜனநாயக முறையில் அரசாங்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். அந்த முறையில் நடத்திக்கொண்டிருக்கிற அரசாங்கத்தின் போக்கு பிடிக்கவில்லை என்றால், ஜனநாயக முறையில் நடத்தப்படுகிற தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று வந்து, மெஜாரிடியாக இருந்தால் இந்தப் பக்கத்தில் வந்திருந்து கொண்டு ஆட்சியை நடத்தலாம். அதை விட்டு விட்டு தப்பிதமான முறையில், சமூகவிரோதமான முறையில் சமூக விரோதிகளைத் தூண்டிவிட்டு இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி நாற்காலியை பிடிக்க எண்ண வேண்டாம், அதற்கு இந்த அரசாங்கம் இடம் கொடுக்காது, மக்களும் இடம் கொடுக்க மாட்டார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கோசல்ராம் :** இந்த போலீஸ் நிர்வாகம் சம்பந்தமாக எஸ்டிமேட் கமிட்டி சமர்ப்பித்த ரிப்போர்ட்டை சர்க்கார் பரிசீலனை செய்ததா? இல்லையென்றால் பரிசீலனை செய்யுமா?



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எஸ்டிமேட் கமிட்டி வரம்புக்கு மேல் போலீஸ்-க்கு சம்பளம் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. பே கமிஷன் சிபாரிசு செய்வதற்கு நியமிக்கவேண்டும் என்று சொன்னால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம். சம்பள விகிதத்தை எல்லாம் அதிகப் படுத்தவேண்டும் என்று சொன்னால் அதை அரசாங்கம் கவனிப்பது இல்லை. தொடர்ந்து பே கமிஷன் என்னென்ன முறையில் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று சிபாரிசு செய்தால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம். எஸ்டிமேட் கமிட்டி சம்பளத்தைப் பற்றி யெல்லாம் சொன்னால் அதை எடுத்துக்கொள்வதற்கில்லை.

**திரு. கே. டி. கோசல்ராம் :** எஸ்டிமேட் கமிட்டிக்கு என்னென்ன அதிகாரம் இருக்கிறது என்பதை அரசாங்கம் வரையறுக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** என்னென்ன அதிகாரங்களை செலுத்தக் கூடாது என்பதை எஸ்டிமேட் கமிட்டி தெரிந்திருக்க வேண்டும். இதைப்பற்றிப் பின்னால் பேசி தெரிந்துகொள்ளலாம்.

MR. SPEAKER : As the Hon. Member Sri K. A. Mathialagan, who moved the cut motion is not in his seat, the cut motion is deemed to have been withdrawn.

The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 8,76,19,800 under Demand No. XII—Police ".

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : Before adjourning. I would like to draw the attention of the House to the fact that when I gave my ruling about the hon. Member Sri V. Krishnamoorthy, the hon. Member Sri S. J. Ramaswamy, who was not even in his seat, came half way towards the Chair and shouted. This is a clear violation of the rules of procedure. An hon. Member is within his rights to walk out of the House if he is not satisfied with my ruling. But it is highly derogatory for a legislator to behave in the manner in which the hon. Member Sri S. J. Ramaswamy has done in the present case. So, I would take such suitable action in the matter as is called for in the next sitting.

The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 15th March 1965.

The House then adjourned. 2-30 p.m

## III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

† 142. *Notification issued with G.O. Ms. No. 2434, Revenue, dated 30th September 1964 declaring that Sri Muthukumaraswamy temple, Cuddalore O.T., Cuddalore taluk, South Arcot district be subject to the provisions of Chapter VI of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959. (Laid on the Table of the House under section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959).*

## B. Reports, Notifications and other papers.

† 49. *Notification issued with G.O. Ms. No. 1758, Rural Development and Local Administration, dated 25th August 1964 amending the Madras Cottage Industries Construction and Establishment (Restrictions, Limitations and Conditions) Rules, 1960, published with the Rural Development and Local Administration Department Notification No. 242 of 1962, dated 13th March 1962, at pages 254–258 of Part V of the* Fort St. George Gazette, *dated the 21st March 1962, the same having been previously published as required by sub-section (1) of section 130 of the Madras Public Health Act*, 1939 (*Madras Act* III *of* 1939).

@ 50. *Speech of the Hon. Minister for Public Health while moving Demand No. XV—Public Health*, 1965–66.

@ 51. *Speech of the Hon. Minister for Public Health while moving Demand No. XXXVIII—Capital Outlay on Public Health.*

† Placed on the Table of the House on the 12th March 1965.
@ Circulated to members on 12th March 1965.

*Schemes for increasing vegetable production in the State.*

With a view to stepping up vegetable production in and around Madras City and the Towns of Tiruchirappalli, Madurai, Coimbatore and Tirunelveli during the National Emergency, the Government sanctioned a scheme in 1963 for increased production of vegetables in this State. This has later been extended to Kanyakumari District also. Under this scheme, vegetable seeds and seedlings and pesticides are supplied to the growers at a subsidised rate of 50 per cent of their cost. Loan assistance on personal security up to Rs. 120 per acre per vegetable crop, limited to Rs. 240 per ryot, is also available. Fertiliser mixtures are also supplied. This scheme has recently been extended to Neyveli township during November 1964. It has since been extended to areas within a three mile radius of Kumbakonam Municipality.

Besides this scheme, three more schemes have been sanctioned under the Crash Programme for increasing vegetable production, one for increased production of vegetables in the Nilgiris, Kodaikanal and Shevaroys hills, another for intensive production of vegetables in the plains in and around Vellore, Salem, Erode and Thanjavur and the third for development of potato cultivation in Kodaikanal. These schemes will be implemented during 1964–65 and 1965–66 at a total cost of Rs. 7·08 lakhs besides loans.

In addition to these schemes under implementation two schemes have been sent to the Government of India, one for vegetable seeds production and another for intensification of vegetable production in and around Madras City and Madurai and their approval is awaited.



### இணைப்பு

( 6-ம் பக்கத்தில் 230 எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வி யின் பதிலைக் காண்க.)

**இம் மாநிலத்தில் காய்கறி உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்கள்.**

தேசிய நெருக்கடி காலத்தில், சென்னை மாநகரிலும், திருச்சிராப் பள்ளியிலும், கோயம்புத்தூரிலும், திருநெல்வேலியிலும் அவற்றைச் சுற்றிலுமுள்ள பகுதிகளிலும் காய்கறி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத் துடன், 1963-ல் அரசாங்கம் ஒரு திட்டத்தை அனுமதித்தது. இது பின்னர் கன்னியாகுமரிக்கும் நீடிக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் காய்கறி பயிரிடுவோருக்கு காய்கறி விதைகள், நாற்றுகள், பூச்சிக் கொல்லிகள் முதலியன பாதி விலையில் வழங்கப்படுகின்றன. சொந்த ஜாமீன் கொடுப் பதன்மேல், காய்கறி பயிரிடப்பட்டுள்ள ஏகரா ஒன்றுக்கு ரூ. 120 வீதம் கடன் உதவி வழங்கப்படுகிறது. இதன்கீழ் ஒரு தோட்டக்காரருக்கு ரூ. 240 வரைதான் கடனுக வழங்கப்படும். இத்திட்டம் அண்மையில் (1964 நவம்பரில்) நெய்வேலி நகரமைப்புக்கும் நீடிக்கப்பெற்றது. கும்பகோணம் நகராட்சியின் 3 மைல் சுற்றளவில் உள்ள பகுதிகளிலும் இத்திட்டத்தை நிறைவேற்ற உத்தேசித்துள்ளது.

இது மட்டுமன்றி, காய்கறி உற்பத்தி அதிகரிப்புக்குரிய விரைவுத் திட்டத்தின்கீழ் (Crash Programme) மேலும் மூன்று திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவையாவன : (1) நீலகிரியிலும் கொடைக்கானலிலும், சேர்வராயன் மலைகளிலும் காய்கறிகளைக் கூடுதலாக உற்பத்தி செய்தல் ; (2) வேலூர், சேலம், ஈரோடு, தஞ்சாவூர் ஆகிய ஊர்களிலும், அவற்றைச் சுற்றிலுமுள்ள பகுதிகளிலும் உள்ள சமவெளிப் பகுதிகளில் காய்கறிகளைத் தீவிரமாகப் பயிரிடுதல்; (3) கொடைக்கானலில் உருளைக்கிழங்கு உற்பத்தியைப் பெருக்குதல், இத் திட்டங்கள் 1964–65-லும் 1965–66-லும் நிறைவேற்றப்படும். இவற்றிற்கென கடன்கள் தவிர ரூ. 7·08 லட்சம் செலவிடப்படும்.

இப்போது நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள் தவிர, வேறு இரு திட்டங்களும் இந்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்துக்காக அனுப்பப் பட்டுள்ளன. இதில் ஒன்று, காய்கறி விதைகள் உற்பத்தித் திட்டம். மற்றொன்று, சென்னை மாநகரிலும், மதுரையிலும், அவற்றைச் சுற்றிலு முள்ள பகுதிகளிலும் காய்கறிகளைத் தீவிரமாக உற்பத்தி செய்தல். இவற் றிற்காக இந்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் இன்னும் கிடைக்கவில்லை.

64894
D
V2N, 31 N65
N65.27.5

## LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATION

### IN MADRAS CITY.

Messrs. Account Test Institute, Egmore, Madras 8
Messrs. Higginbothams, Limited, Madras-2.
Messrs. New Century Book House, Madras-2
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri. S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
Messrs. The Free India Co-operatir's Agency, Madras-4.
Messrs. Palani Prachuram, Madras-5.
Messrs. The Educational Agencies, Book Sellers, Madras-15.
Messrs. Universal Book House, Moore Market. Madras-3.
Messrs. Rukmini Corporation, Vepery, Madras-7

### IN MUFASSAL OF MADRAS STATE.

Sri. E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Messrs. The Oriental Book House, Madurai.
Messrs Vivekananda Press, Printer, Publisher and Book-seller Madurai
J.J.M. Book Depot and Stationery Emporium, Madurai.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Muthamizh Manram, Mayuram.
Messrs. Bharatha Matha book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukottai, Tiruchirappalli district
Messrs. M. Palani & Co. Clock Tower, Pudukottai.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaka Nilayam Book-sellers, 10, Thana Muna Buildings Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri. V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. The Educational Supplies Company, Coimbatore (R.S. Puram)
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Messrs. Sivalinga Vilas Book Depot, Erode, Coimbatore, district.
Sri S. M. Jagannathan, Book seller and Publisher, Nagercoil, Kanyakumari district
Sri M. Palani & Co., Tiruchirappalli.
Messrs. A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
Messrs. T. Chellaram & Sons, Book-sellers and Stationers, Market, Ootacamund.
Messrs. K. M. K. Brothers, Book sellers, Ootacamund.
Messrs. Meenakshi Pathipagam, Pudukottai.

### IN OTHER STATES.

Messrs. Janatha Agencies, Book sellers, Gudur.
Messrs. Jain Agency, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Book-Lovers (Private) Limited, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING MADRAS, ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |